வெளியீடு 18-1-2006

Issued 18-1-2006

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 23, 2005—தொகுதி 84—எண் 3
Friday the 23rd September, 2005—Volume 84—No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

925
21.9.06

**23–09–2005**

**உள்ளடக்கம்**

*பக்கங்கள்*


**1. வினாக்கள்–விடைகள்—**

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 325-390

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 4, 5 மற்றும் 6) 391-596

**2. கவன ஈர்ப்பு—**

(அ) ஆதனக்கோட்டை மற்றும் கந்தர்வக்கோட்டை துணை மின் நிலையங்கள்மூலம் விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்குதல் 597-614

(ஆ) வேட்டைக்காரன்புதூர், சேத்துமடை பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் நியமனம் 614-618

**3. அறிக்கைகள் அளித்தல்—**

(அ) மனுக்கள் குழு 619

(ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு 619

**4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

(அ) தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 619-620

(ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2005 620-621

(இ) தமிழ்நாடு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு, 2005 622

பக்கங்கள்

4. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** தொடர்ச்சி

(ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 — 623

(உ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 — 624-625

(ஊ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 — 625-626

(எ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 — 626-627

(ஏ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 — 627-629

5. **அறிவிப்புகள்—**

(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 (ஆ.இ.) — 622

(ஆ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 (ஆ.இ.) — 624

(இ) கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2005–2006, வெட்டுத் தீர்மானங்கள் அளிப்பது குறித்து — 641

6. **அரசினர் சட்டமுன்வடிவு (திரும்பப் பெறுதல்)—**

மதராஸ் பல்கலைக்கழகம் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு, 2005 — 629-635

7. **கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2005–2006, அளித்தல்—**

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 635-641

8. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 641-642

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## புரட்டாசி 7 பார்த்திப – திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 செப்டம்பர் 23, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு"

தவறாது விளையும் விளைநிலங்களும், பொதுநலம் பேணும் சான்றோர்களும், குறைபாடு இல்லாத செல்வர்களும் ஒருங்குசேர்ந்து இருப்பதே நாடாகும்.

## 1. வினாக்கள் – விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 21, திரு. எஸ்.எம். சீனிவேல், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

21—

### புதிய கால்வாய்

***72104—திரு. எஸ்.எம். சீனிவேல்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலம் பிரதான கால்வாய் செக்காணூரணி, புளியங்குளம் கால்வாயிலிருந்து வடபழஞ்சி கிராமம், கரடிப்பட்டி கிராமம், மேலக்குயில்குடி கிராமம், கீழக்குயில்குடி கிராமம் ஆகிய கிராமங்கள் பாசனம் பெறும் வகையில் புதிய கால்வாய் அமைக்கும் திட்டம் இந்த நிதியாண்டில் துவங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அரசின் மறுபரிசீலனையில் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** மாண்புமிகு தங்கத் தாரகை, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, திருமங்கலம் பிரதான கால்வாய் செக்காணூரணி, புளியங்குளம் வழியாக என்னுடைய தொகுதிக்கு ஒரு கிலோமீட்டர் அருகிலுள்ள வடபழஞ்சி கிராமம், கரடிப்பட்டி கிராமம், மேலக்குயில்குடி கிராமம், கீழக்குயில்குடி கிராமம், அடைக்கம்பட்டி, முத்துப்பட்டி, ஆலம்பட்டி, தட்டானூர், ஓந்திமலை, பெருமாள்மலை ஆகிய கிராமங்கள் பாசனம் பெறும் வகையில புதிய கால்வாய் அமைக்கும் திட்டம் இந்த நிதியாண்டில் துவங்க அரசு முன்வருமா? மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு மாண்புமிகு எங்களுடைய அருமை அண்ணன் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய உத்தரவின்பேரில், சென்னை, தலைமைப் பொறியாளர் அவர்களுடைய மதிப்பீட்டின்பேரில், 30-3-2003 அன்று மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 816.50 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் வகையில் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இப்பணியைத் துவங்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாக அண்ணன் அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் பிரதான கால்வாய், செக்காணூரணி, புளியங்குளம் கால்வாயிலிருந்து வடபழஞ்சி கிராமம், கரடிப்பட்டி கிராமம், மேலக்குயில்குடி கிராமம், கீழக்குயில்குடி கிராமம் ஆகிய கிராமங்கள் பாசனம் பெறும் வகையில் புதிய கால்வாய் அமைக்க, மதுரை, பொதுப் பணித் துறை, திட்டம் மற்றும் வடிவமைப்பு கோட்டம் மூலம் ரூ.113.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒத்திசைவிற்காக அனுப்பப்பட்டது. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் 9–9–2005 நாளிட்ட கடிதத்தில் மேற்படி கண்மாய்களுக்கு பாசன வசதி, திருமங்கலம் நீட்டிப்பு பிரதான கால்வாயின்மூலம் வழங்குவது இயலாத நிலையில் உள்ளது என்பதால், இத்திட்டத்தைக் கைவிடலாம் என பரிந்துரை செய்துள்ளார். இருப்பி[illegible] பொறியாளர், மதுரை மற்றும் தலைமைப்

காப்பகம்
22699
சென்னை 600 008



பொறியாளர் (திட்ட உருவாக்கம்) ஆகியோர் மாவட்ட ஆட்சியரின் செயற்குறிப்பை ஆராய்ந்து வருகின்றனர். அவர்களின் கருத்தினைப் பெற்று அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சீனிவேல்.

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், அருமை அண்ணன் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 22, திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**22—**

## பட்டா வழங்குதல்

*** 72755—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு நகரம், ராஜாஜிபுரத்தில் நகராட்சிக்குட்பட்ட புறம்போக்கு நிலத்தில் சுமார் 100 ஆண்டுகளாக வாழ்ந்து வரும் ஏழை, எளிய அருந்ததியர்களுக்கு அவர்கள் குடியிருக்கும் இடத்திற்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு நகரம், ராஜாஜிபுரம் கிராமக் கணக்குகளில் வார்டு 'சி' பிளாக்–14, நகரளவை எண்கள் 36 முதல் 282 வரை உள்ள குடியிருப்புப் பகுதி. இப்பகுதி முழுவதும் நகரளவையில் தனி நபர்களின் அனுபோகத்தின்படி உட்பிரிவு செய்து மனைத் தீர்வை ஏற்படுத்தி பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. இது தவிர, இப்பகுதியில் நகரளவை எண் 34–ல் 4463.3 சதுர மீட்டர் பரப்பில், மனைத் தீர்வை பட்டா எண் 4976–ன்படி "ஆணையர், ஈரோடு நகராட்சி" என தாக்கலாகி உள்ளது. இதன் ஒரு பகுதியில் 75 குடும்பத்தினர் குடிசை போட்டும், வீடு கட்டியும் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வருகின்றனர்.

[2005 செப்டம்பர் 23

ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதி நகராட்சிக்குச் சொந்தமானது என்பதால் தற்போது வீட்டு மனைப் பட்டா வழங்க இயலாத சூழ்நிலை இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக அந்த அரிஜன மக்கள் அங்கே குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கு வேறு பகுதியில் ஏதாவது இடம் வாங்கி, மாற்றுப் பகுதியில் பட்டா வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? மாண்புமிகு அம்மா அவர்களின் அரசில் ஈரோடு தொகுதியில் 2000-க்கு மேற்பட்ட பட்டாக்கள் வழங்கி இருக்கின்றோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தப் பகுதியில் வாழ்கிற மக்களுக்கும் இடம் தேர்வு செய்து பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10.05

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஈரோடு நகராட்சிப் பகுதியில் இருக்கின்ற ஏழையெளிய மக்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென்று கோரிய வினா எழுப்பியிருந்தார்கள். ஈரோடு நகராட்சியினுடைய தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அரசுக்கு அனுப்பி வைத்தால் அதன்மீது அரசு அளவில் முடிவு எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேறு இடங்களில் அங்கு குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. கே.எஸ். தென்னரசு:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. வெங்கடாஜலம்.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சி, பஞ்சந்தாங்கி ஏரி, கே.பி. கரடு பகுதிகளில் 50, 60 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து வரும் மக்களுக்கு சேலம் மாநகராட்சி நிர்வாகம் பட்டா வழங்குவதற்காக தீர்மானம்



2005 செப்டம்பர் 23]

நிறைவேற்றியுள்ளது. அந்தப் பகுதி மக்களுக்கு பட்டா வழங்க அம்மாவினுடைய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல நகராட்சிகளில் இன்று 50 ஆண்டுகாலம், 60 ஆண்டுகாலமாக குடியிருக்கிற மக்கள் பட்டா கேட்டு மனுக்கள் கொடுத்ததற்குப் பிறகும் அவர்களுக்கு பட்டா கொடுக்கப்படாமல் இருந்து வருகிறது என்றும் பல நேரங்களில் நகராட்சி நிர்வாகம் அவர்களை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர்களை பயமுறுத்தி விடுவதும், அவர்கள் உடனே நீதிமன்றத்திற்குப் போய் தடை வாங்குவதும். இப்படி காலம் காலமாக இந்தமாதிரி ஒரு நிலை ஏற்பட்டுக் கொண்டிருப்பதால், 50 ஆண்டுகாலம், 60 ஆண்டுகாலமாக வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுடைய நிலையை பரிசீலித்து, நம்முடைய நாட்டிலே பொதுத் தேர்தல் நெருங்கி இருக்கிற இந்த நேரத்தில், அந்த மக்களுக்கு பட்டா கொடுப்பதற்கான ஒரு பிரத்தியேக நடவடிக்கை என்ற முறையில் இந்த அரசு எடுத்து, அந்த ஏழை மக்களுக்கு உதவி செய்வதற்கு முன்வருமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓர் உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிற தமிழகத்தினுடைய முதலமைச்சர் என்றைக்குமே தேர்தலை மனதில் வைத்து எந்தத் திட்டங்களையும் அவர்கள் உருவாக்குவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நீண்ட நெடிய காலத்திற்கு, எதிர்காலங்களில், வருங்கால சந்ததியினருக்கு பயனளிக்கிற வகையில்தான் அவர்களுடைய திட்டங்களும், செயல்பாடுகளும் இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே உறுதியாக சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரி இருக்கின்ற பகுதிகள் ஆட்சேபணை இல்லாத பகுதியாக இருந்தால், அவர்கள் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்ந்தால் அரசு விதிமுறைகளின்படி பட்டா கொடுக்க

[2005 செப்டம்பர் 23

நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோல பல்வேறு நகரங்களிலும், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடங்களில் 100 ஆண்டுகளுக்கு மேலாகவே தங்களுடைய இல்லங்களை வைத்து வாழ்ந்து வருகிற அந்த ஏழை மக்களுக்கு ஒன்று. பட்டா வழங்க வேண்டும்; அப்படி வழங்குவதற்கு இயலாத நிலை இருக்குமாயின், அவர்களுக்கு ஒரு மாற்று இடம் தயார் செய்து கொடுத்ததற்குப் பிறகு, அவர்களுடைய இடங்களை அப்புறப்படுத்துவதற்குண்டான முடிவான கொள்கை முடிவினை இந்த அரசு எடுப்பதற்கு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்து மாவட்டங்களிலும் இம்மாதிரியாக வீட்டுமனைகள் சிலபல பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்து அரசு நிலங்களில் நீண்டகாலமாக குடியிருந்து வருகின்றார்கள். அவைகளையெல்லாம் வரன்முறைப்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை தரவேண்டுமென்று அறிவுறுத்தியதன் அடிப்படையில் அறிக்கைகள் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் வந்து கொண்டிருக்கின்றன. இன்னும் ஓரிரு மாதங்களில் அம்மா அவர்கள் ஒரு நல்ல செய்தியை நாட்டுக்கு அறிவிப்பார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு நகரப் பகுதிகளில், கிராமப்புறப் பகுதிகளில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான, வருவாய்த் துறைக்குச் சொந்தமான இடங்களில் நீண்ட காலமாக வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். அதிலே பட்டா இல்லாமல் அவதிப்படக்கூடிய சூழ்நிலை இருந்து வருகிறது. குறைந்தபட்சம் 10 ஆண்டு காலம் அல்லது 15 ஆண்டு காலம் ஓரே இடத்தில் குடியிருந்தால் அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கலாம் என்று அரசு ஒரு கொள்கை முடிவை எடுத்து வழங்குவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



2005 செப்டம்பர் 23]

முற்பகல் 10–10

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அரசின் ஆய்வில் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. உரிய நடவடிக்கை கூடிய விரைவில் எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலேயும், நகர்ப்புறங்களிலேயும் பட்டா வழங்குகிறபோது இன்னும் வெள்ளையர் ஆட்சிக் காலத்திலே போடப்பட்ட அந்தச் சட்டங்களையே ரெவின்யு துறை பின்பற்றி வருகிறது. மேய்ச்சல் நிலம், சமுதாய நிலம், போன்ற நிலங்களை நத்தம்சாரி என்கின்ற அந்தப் பிரிவின்கீழே மாற்றி, அந்த மக்கள் நீண்ட காலமாக—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல 50 ஆண்டுகளுக்கு மேலாக— குடியிருந்துவரக்கூடிய அந்த இடங்களிலே அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு ஒரு சட்டத் திருத்தத்தை அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்களா? அப்படிக் கொண்டு வருகிறபோது, அரசு புறம்போக்கு நிலங்களில் அங்கு ஏற்கெனவே இருக்கக்கூடிய, ஆக்கிரமிப்பு என்று சொல்லக்கூடிய அந்த வார்த்தையை மாற்றி, அவர்களுக்கும் குடியுரிமை வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய வகைப்பாட்டில், பல்வேறு வகைப்பாட்டின்கீழ் வருகின்ற நிலங்கள் அனைத்தையும் இலவசமாக நாம் வீட்டுமனைப் பட்டா கொடுப்பதற்கு முன்பாக அவற்றை நத்தமாக மாற்றித்தான் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி பல்வேறு வகையான கோரிக்கைகள் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நேரடியான கவனத்திற்கு வந்ததன் அடிப்படையில், இந்தப் பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வைக் காணவேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவுறுத்தியதன் அடிப்படையில் அந்தப் பணி தீவிரமாக ஆய்வு செய்யப்பட்டு, இன்னும் ஓரிரு மாதங்களில் நல்ல தீர்வு எடுக்கப்படும் என்பதனை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன்.

[2005 செப்டம்பர் 23

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 27–3–2000-ல் ஏற்கெனவே அரசு புறம்போக்கு இடங்களிலே வீடு கட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களுக்கு 10 ஆண்டுகளோ அவர்கள் அந்தப் பகுதியிலே நகரப் பகுதியாக இருந்தாலும் சரி, கிராமப் பகுதியாக இருந்தாலும் சரி, அவர்கள் வீடு கட்டி வாழ்ந்து வருவார்களேயானால், அவர்களுக்குப் பட்டா கொடுக்கலாம் என்ற ஓர் அரசாணை பிறப்பிக்கப்பட்டது. —(குறுக்கீடு) 10 ஆண்டு; பிறகு 20 ஆண்டுகூட extension கொடுத்தார்கள்—ஆனால், நகரப் பகுதிகளிலே 24 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருவாய் உள்ளவர்களுக்கு அந்த இலவச வீட்டுமனைப் பட்டாவைக் கொடுக்க முடியாது என்ற ஒரு தடை இருக்கிற காரணத்தாலும், கிராமப் பகுதிகளிலே 12 ஆயிரம் ரூபாய்க்கு மேலே வருவாய் இருக்கக்கூடியவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா கொடுக்க முடியாது என்கிற காரணத்தாலும், அந்தப் பட்டா வழங்குகிற பணி முழுமையாக நகரப் பகுதிகளிலே நடைபெறாமல் போய்விட்டது. தமிழகம் முழுமையிலும் நகரப் பகுதிகளிலே சாதாரணமாக ஒருவர் 30x20 இடத்தைப் பிடித்துக் கொண்டிருந்தாலும்கூட, அது ஒரு இலட்சம் அல்லது இரண்டு இலட்சம் ரூபாய் மதிப்பீடு guidelines பிரகாரம் அந்த value வருகிற காரணத்தினாலே அவர்கள் பட்டா பெறமுடியாத ஒரு சூழல் தமிழகம் முழுமையிலும் வந்து சேர்ந்துவிட்டது. பேரூராட்சிப் பகுதிகளிலும், நகராட்சிப் பகுதிகளிலும் வீடு கட்டி வாழ்ந்து கொண்டிருக்கிற ஏழை எளிய மக்கள், அந்த அரசாணையை அவர்கள் முழுமையாகப் பயன்படுத்தி, பட்டா பெறமுடியாத ஒரு சூழல் ஏற்பட்டுவிட்ட காரணத்தினாலேதான், மாண்புமிகு அமைச்சரவர்கள், ஏற்கெனவே இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது தடை செய்யப்பட்ட அல்லது வீட்டுமனை கொடுக்க முடியாத இடமாக இருந்தாலும்கூட—காரணம், வீடு கட்டி பல ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருக்கிற அவர்களை இனி அரசு அப்புறப்படுத்தி, பிறகு அவர்களைக் காலி செய்யக்கூடிய ஒரு சூழல் இல்லாத நிலையைப் புரிந்துகொண்டு, எப்படியாவது அவர்களுக்கே அதை நீங்கள் கிரையம் இல்லாமல் அல்லது ஏதாவது குறைந்த தொகையை மட்டும் fix செய்து, அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுப்பதற்கு, குறிப்பாக நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளிலே, மாநகராட்சிப் பகுதிகளிலே இந்த நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2005 செப்டம்பர் 23]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவசமாக வீட்டுமனைகள் கொடுக்கப்படுகின்ற அந்த நோக்கமே, ஏழை எளிய மக்களுக்கு, வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்கின்ற மக்களுக்கு, அவர்கள் கிராமப்புறங்களில் வாழ்ந்தால் 16 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக ஆண்டு வருமானம் இருப்பவர்களுக்கும், நகர்ப்புறங்களைப் பொறுத்தமட்டில் 24 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக ஆண்டு வருமானம் இருப்பவர்களுக்கும், நகர்ப்புறங்களில் ஒன்றரை சென்ட் நிலமும், கிராமப்புறங்களில் 3 சென்ட் நிலமும் இலவசமாக வீட்டுமனைப் பட்டா கொடுப்பதற்கு அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் கூறியதுபோல், கடந்த தி.மு.க. ஆட்சியில் ஆட்சேபணைக்குரிய இடங்களில் இருக்கின்றவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டார்கள். அவற்றில் கிராமப்புறங்களில் இருப்பவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. நகர்ப்புறங்களில் இருப்பவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்ற கருத்தினைச் சொன்னார்கள். அரசினுடைய கவனத்திற்கும் இது வந்திருக்கின்றது. அதில் இன்னும் சில குறைபாடுகள் இருப்பதும் அரசின் கவனத்திற்கு வந்திருக்கின்றது. அந்தமாதிரி கடந்த தி.மு.க. ஆட்சியில், ஆட்சேபணைக்குரிய இடங்களில் பட்டா வழங்குகின்றபோது, ஆட்சேபணைக்குரிய பகுதியில் 100 வீடுகள் இருக்குமேயானால், தனக்கு வேண்டியவர்களுக்கு மட்டும், அங்கே இருப்பவர்களுக்கு மட்டும் பட்டா வழங்கி, மீதி இருப்பவர்களுக்கு பட்டா மறுக்கப்படுகின்ற சூழ்நிலை இருப்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அவற்றையும் தீவிரமாகப் பரிசீலனை செய்து அனைவரும் . . . (குறுக்கீடு)

முற்பகல் 10–15

**திரு. இ. புகழேந்தி:** கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. Question hour –ல் charge செய்யக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் நேரடியாக அப்படிச் சொல்லவில்லை. நேரடியாகக் குற்றச்சாட்டு எதுவும் சொல்லவில்லை. அவர் ஒரு statement–தான் சொல்கின்றார். (குறுக்கீடு) அவர் ஒரு statement–தான் சொல்கின்றார். அப்படி ஒரு சூழ்நிலை இருக்கின்றது என்று சொல்லி, சொல்கின்றார். அதில் ஒன்றும் தவறு இல்லையே. (குறுக்கீடு) அப்படி ஒரு சூழ்நிலை இருக்கின்றது என்று சொல்கின்றாரே தவிர, நேரடியாக குற்றச்சாட்டு சொல்லவில்லை.

[2005 செப்டம்பர் 23

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** முழுமையாகக் கேட்டுவிட்டுச் சொல்லட்டும்.

**திரு. இ. புகழேந்தி:** அவர் குற்றச்சாட்டு சொல்கின்றார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, அமைச்சர் குற்றச்சாட்டே சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. புகழேந்தி, அமைச்சருடைய வாக்கியங்களை நீங்கள் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** உட்காருங்கள், நான் சொல்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி ஒரு சூழ்நிலை இருக்கின்றது, வேண்டியவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டிய சூழ்நிலை வந்துவிடுகின்றது என்று. அப்படித்தான் சொல்கின்றார். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலில் எந்தத் தவறும் இல்லை. நான் ஆதாரங்களை வைத்துக்கொண்டுதான் சொல்லிக் கொண்டிருக்கின்றேன். என்னுடைய தொகுதியில் கெங்குவார்பட்டி பேரூராட்சிப் பகுதியில் ஆட்சேபணைக்குரிய நீர்நிலைப் புறம்போக்காக இருந்த ஸ்ரீராம்புரம் என்ற ஊரில் கிட்டத்தட்ட 100 வீடுகள் இருக்கின்றன. அடுத்தடுத்து இருக்கின்ற வீடுகளில் அவர்களுக்கு வேண்டிய, தி.மு.க. கட்சிக்காரர்களுக்கு மட்டும் அந்தப் பகுதிகளில் இருக்கின்ற விதியை விலக்கி பட்டா வழங்கப்பட்டிருக்கின்றது. அங்கிருக்கின்ற மற்றக் கட்சிக்காரர்களுக்கு பட்டா வழங்கவில்லையென்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்) ஆகவே இம்மாதிரியான... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி ஓர் அறிக்கையில் ஏற்கெனவேகூட அமைச்சர் சொல்லியிருக்கின்றார். ஏற்கெனவேகூட சட்டமன்றத்தில் அமைச்சர் சொல்லியிருக்கின்றார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் சொல்கின்றேன். இம்மாதிரியான பிரச்சினைகள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, உட்காருங்கள். அவர் ஒரு கருத்தைச் சொல்கிறார், மறுப்பதற்கு வாய்ப்பு இருந்தால் நீங்கள்



2005 செப்டம்பர் 23]

மறுத்துச் சொல்லுங்கள். அதில் ஒன்றும் இல்லை. உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஆதாரத்தை நான் சபாநாயகரிடம் கொடுக்கின்றேன். சட்டப் பேரவைத் தலைவரிடம் நான் ஆதாரங்களை வழங்குகின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தி.மு.க. உறுப்பினர்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஆதாரங்களைக் கொடுக்கின்றேன் என்று சொன்ன பிறகு ஏன் நின்று கொண்டிருக்கின்றீர்கள்?

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்று கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்டதனாலே மாண்புமிகு அமைச்சர் பதில் சொன்னார். (குறுக்கீடு) திரு. பரிதி, ஏற்கெனவே அமைச்சர் குறிப்பிட்ட வாக்கியத்தில் தி.மு.க. ஆட்சி என்று சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) வேண்டியவர்கள் என்ற பதத்தைப் பயன்படுத்தி, தி.மு.க. ஆட்சி என்று அவர்கள் சொல்லவில்லை. அவர் சொன்னது, அப்படிக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது என்று சொன்னார்கள். நீங்கள் எழுந்து கேட்ட காரணத்தாலே, அவர்கள் அதற்கு விளக்கம் சொல்கின்றார்கள். (குறுக்கீடுகள்) ஏற்கெனவே அவர் சொன்னபோது, நீங்கள் எதிர்க்காமல் இருந்திருந்தால், அவர் அந்த ஆதாரத்தைச் சொல்லியிருக்கமாட்டார். நீங்கள் கேட்டதற்காக, உங்களுக்கு விளக்கம் சொல்வதற்காகச் சொல்கின்றார்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் ஆதாரத்தை பேரவைத் தலைவரிடம் கொடுக்கின்றேன். (குறுக்கீடுகள்) நான் ஆதாரத்தை அவரிடம் கொடுக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, உட்காருங்கள். அமைச்சர் பேசி முடித்துவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய ஆதாரத்தை நான் உங்களிடம் தருகின்றேன்.

**திரு. இ. புகழேந்தி:** கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது.

[2005 செப்டம்பர் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, நீங்கள் சொல்வது எனக்குப் புரிகின்றது. கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு கூடாது என்பது மரபு. அவை மரபு. அவை விதி. அதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். நீங்கள் உட்காருங்கள். அமைச்சரவர்கள் ஏற்கெனவே சொன்ன பதிலில், அவர்கள், இப்படி ஒரு சூழ்நிலை இருக்கின்றது என்கின்ற வகையிலேதான் சொன்னார்கள். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று சொன்னார்கள். நீங்கள் வாக்கியத்தைக் கவனித்துப் பாருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் வாக்கியத்தைக் கவனித்துப் பாருங்கள். அவர் சொன்ன வாக்கியத்தில் அப்படித் தவறாகச் சொல்லவில்லை. குறையாகச் சொல்லவில்லை. நீங்கள் எழுந்து கேட்டதனாலே, அவர் அதற்கு விளக்கம் சொல்வதற்காகச் சொல்கின்றார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், யாராவது ஒருவர் சொல்லுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய கருத்தின்படி, கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டுகளோ, வேறு வகையான எந்தவிதமான மரபுக்கு மீறலாகவோ, விதிகளுக்கு மீறலாகவோ இருக்கக் கூடாது என்று நீங்களும் இப்போது சொன்னீர்கள். நாங்களும் ஏற்றுக்கொள்கின்றோம். ஆக, இது கேள்வி பதில் நேரமாக இருப்பதால், மீண்டும் அவர், திராவிட முன்னேற்றக் கழகம் என்று பெயரைப் பயன்படுத்தி இருப்பதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும், உங்களுடைய வாக்கியத்தின்படியே. ஆகவே அதை நீக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கின்றோம். எனவே, குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. இல்லையென்றால் பதில் சொல்லுகின்ற வாய்ப்பைத் தாருங்கள். நான் பதில் சொல்லவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, உட்காருங்கள். திராவிட முன்னேற்றக் கழகம் என்பது ஒன்றும் தவறான வார்த்தை இல்லை.

**திரு. இ. புகழேந்தி:** இல்லை, இல்லை, திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது குற்றம் சாட்டியது தவறு. நாங்கள் பட்டா கொடுப்பதில் தவறு செய்யவில்லை. எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் பட்டா கொடுக்கப்பட்டது. பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. தி.மு.க. சார்பில் எந்தத் தவறும் செய்யவில்லை.

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொன்னதும் பதிவு செய்யப்படுகிறது. உங்களுடைய தகவலும் பதிவு செய்யப்படுகிறது.



2005 செப்டம்பர் 23]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் சொன்னதுபோல், அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கொடுத்தால் மகிழ்ச்சிதான். ஆனால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள், கிராமப்புற மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது, நகரப் பகுதி மக்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்று அவர்களேகூடச் சொன்னார்கள். (குறுக்கீடு) இல்லை. அவர்கள் சொன்னார்கள். சொன்னீர்களா, இல்லையா நீங்கள்? சரி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. ஞானசேகரன் சொன்னதற்குத்தான் பதில் சொல்கிறார். இதில் பிரச்சினையை நீங்கள் வளர்க்க வேண்டாம். புகழேந்தி, பதில் சொல்லியிருக்கிறார். அதோடு முடியுங்கள். (குறுக்கீடுகள்) கேள்வி கேட்கிறீர்களா? கேள்வி கேட்கிறீர்களா?

**டாக்டர் க. பொன்முடி:** நகர்ப்புறப் பகுதிகளிலேயும் அப்பொழுது கொடுக்கப்படாததற்குக் காரணம் வருமான வரி அதிகமாக இருந்தது என்ற காரணம்தான். (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, நான் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிக்கை சமர்ப்பிக்கின்ற நேரம் அல்ல இது. இது கேள்வி நேரம். புகழேந்தி ஒரு கேள்வி கேட்டார். அதற்கு அமைச்சர் பதில் சொன்னார். புகழேந்தி அதற்கு ஒரு விளக்கம் சொல்லியிருக்கிறார். அதோடு முடிந்தது. அமைச்சர் அவர்கள் பேசி முடியுங்கள். உட்காருங்கள். பொன்முடி, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். அதிலே விளக்கம் சொல்வதற்கெல்லாம் நேரம் கிடையாது. அமைச்சர் பேசி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி உட்காருங்கள். என்னுடைய அனுமதி இல்லாமல் பேசக்கூடாது. உட்காருங்கள். பொன்முடி, தயவுசெய்து உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருமான வரம்பு விதிமுறைகளின்படி, அதிகமாக இருந்தால், அவர்கள் கிராமப்புறங்களில் வசித்தாலோ, நகர்ப்புறங்களில் வசித்தாலோ கொடுக்க முடியாது. இதுதான் அரசு விதி என்பதை

[2005 செப்டம்பர் 23

நான் மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, வறுமைக் கோட்டிற்குள் வாழ்கின்ற மக்கள் யாராக இருந்தாலும், ஒரு நல்ல அரசு எந்தவிதப் பாகுபாடுமில்லாமல் அனைவருக்கும் கொடுப்பதுதான் சரியான தீர்வு என்பதனை மாண்புமிகு அம்மா அவர்கள் நன்றாகவே உணர்ந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில், வீட்டுமனைப் பட்டா வேண்டி மனு செய்திருக்கின்றவர்களுக்கு, வருகின்ற இன்னும் ஓரிரு மாதங்களில் ஒரு நல்ல தீர்வு ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 23, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**23—**

## செயற்கைக்கோள் துணை நிலையம்

*** 34353—செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கணினி மென்பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழில்முனைவோர், பன்னாட்டு நிறுவனங்களை எளிதில் அணுகும் வகையில், செயற்கைக்கோள் துணை நிலையம் ஒன்றை காவனூரில் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்வின் அடித்தளத்தில் துன்பப்பட்டுக்கிடக்கின்ற மக்களைக் காப்பாற்றுவதற்கும், அறிவியல் தமிழ் வளர்த்து, அவர்களை முன்னேற்றுவதற்கும் வாழ்விக்க வந்த வான்மழையாம் எங்கள் தங்கத் தாரகை அம்மா அவர்களை வணங்கி என் வினாவைத் தொடர்கின்றேன்.



2005 செப்டம்பர் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கணினி மென்பொருள் உற்பத்தியில் தனியார் பங்கும் முக்கியம் என்பதால், நமது தமிழக அரசு இதில் அதிக அக்கறை கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் கணினி மென்பொருள் உற்பத்தியினால் அதிக வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதால், கணினி மென்பொருள் உற்பத்தியாளர்களுக்கு உதவ வேண்டியது அவசியமாகிறது. எனவே, எனது தொகுதியான பேரணாம்பட்டு தொகுதியில் ஆலங்காயம் ஒன்றியம், காவனூரில் செயற்கைக்கோள் துணை நிலையம் ஒன்று அமைப்பதற்கு கணினியைத் தன் கை நிலையில் வைத்திருக்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த உறுதியான நடவடிக்கைகள் காரணமாக, தெளிவான கொள்கைகள் வெளியிடப்பட்டன. வலிமையான உட்கட்டமைப்பு அடித்தளம் அமைக்கப்பட்டது. வசதியான ஆற்றல் உள்ள நிலைமை, ஏராளமான திறமைபெற்ற மனித ஆற்றல். அமைதியான வாழ்க்கைச் சூழ்நிலை, வலிமையாக செயல்படுத்தப்பட்டுள்ள சட்டம் மற்றும் ஒழுங்கு, முரண்பாடற்ற தொழில் உறவுகள், முழு வளர்ச்சியடைந்த வணிக நாகரிகம், குறைந்தபட்சச் செலவுகள் மற்றும் அதிக இலாபகத் தன்மை—இந்தச் சூழ்நிலைகள் காரணமாக, நம்முடைய தமிழ்நாடு, குறிப்பாக—Chennai is the destination of choice—என்கின்ற அடிப்படையிலே இன்றைக்கு வேகமாக தகவல் தொழில்நுட்பத் துறையில் வளர்ந்து கொண்டிருக்கிறது. நம்முடைய அம்மா அவர்கள் பொறுப்பேற்பதற்கு முன்பாக, 2001–க்கு முன்பு, 3,115 கோடி ரூபாயிலே இருந்த மென்பொருள் ஏற்றுமதி, இன்றைக்கு 10,730 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கின்றது. அதேபோன்று, 2001–க்கு முன்பாக 200–க்குக் குறைவாக இருந்த நிறுவனங்கள், இன்றைக்கு top ten நிறுவனங்கள்கூட தமிழ்நாட்டிற்கு வந்து, தகவல் தொழில்நுட்பவியல் துறை நிறுவனங்களை அமைத்து, மென்பொருள் ஏற்றுமதி செய்து, கிட்டத்தட்ட 1266 நிறுவனங்கள் தமிழ்நாட்டிலே வரப்பெற்றிருக்கின்றன. எனவே, சென்னை மட்டுமல்லாமல், அடுக்கடுக்காக, இரண்டாம் அடுக்காக, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, மதுரை போன்ற மாநகரங்கள் தகவல் தொழில்நுட்பவியல் துறையிலே வளர்ச்சியடைய வேண்டுமென்ற ஒரு நிலை எடுக்கப்பட்டு, அதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு, வேகமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

[2005 செப்டம்பர் 23

முற்பகல் 10-25

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய தொகுதிக்குட்பட்ட பகுதியிலே ஒரு செயற்கைக்கோள் துணை நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். எனவே, வருங்காலத்தில் அது inevitable, நிச்சயமாக அது அமைக்கப்படும் என்பதிலே எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால், மாநகரங்களிலே இப்போது நாம் concentrate செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, சேலம், வேலூர், திருப்பூர், ஈரோடு மற்றும் திண்டுக்கல் ஆகிய நகரங்களில் இந்திய மென்பொருள் பூங்கா நிறுவனத்தினர், அதாவது Software Technology Park of India-STPI செயற்கைக்கோள் துணை நிலையங்களை அமைத்துள்ளனர். மேலும், நிலைய அமைப்புகளை, அதாவது point of presence திருநெல்வேலியிலும், சென்னையிலும் இந்திய மென்பொருள் பூங்கா நிறுவனத்தினர், அதாவது Software Technology Park of India அமைத்துள்ளனர். எனவே, வருங்காலத்தில் அங்கேயுள்ள அந்த நிலைமைகளை எல்லாம் ஆராய்ந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபடி தனியார்கள்கூட முன்வருவார்களேயானால் நம்முடைய STPI-க்கு இதுகுறித்து நிச்சயமாக எழுதப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி சி. கனகதாரா.

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணினி மென்பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவோருக்கு செயற்கைக்கோள் துணை நிலையம் ஒன்று அமைக்கப்படுமேயானால், தமிழகத்தின் பெருமை மட்டுமல்லாமல், பன்னாட்டு நிறுவனங்களுடன் போட்டி போடக்கூடிய ஒரு சூழ்நிலை தமிழகத்தில் நிலவும். அதிக அளவு வேலைவாய்ப்பு பெருகும். எனவே, வானிலை ஆராய்ச்சி மையம் உள்ள என்னுடைய காவனூர் பகுதியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து அடுத்த ஆண்டாவது செயற்கைக்கோள் துணை நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை புரிகின்றது. தகவல் தொழில்நுட்பத் துறையைப் பொறுத்தவரையிலே அது அதிகமான நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகிற துறை. எனவே, கிட்டத்தட்ட இந்த நான்கரை ஆண்டு காலத்தில்,



2005 செப்டம்பர் 23]

கிட்டத்தட்ட இரண்டரை இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. அடுத்த இரண்டு ஆண்டு காலத்திலும், அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக இன்னும் இரண்டு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகள் நிச்சயமாக உருவாகும். எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இல்லையென்று நான் சொல்லவில்லை. சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து STPI-க்கு எழுதப்படும் என்றுதான் சொன்னேன். Positive பதில்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே சட்டமன்றத்தில் அமைச்சர் அவர்கள் சென்ற முறை சொல்கிறபோது, கோவையில் Tidel Park ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். இப்போது விளைவு என்னவென்று சொன்னால், பக்கத்திலே எல்லாம் நிலத்தினுடைய விலை ஏறியுள்ளது. அதுதான் மிச்சம். Real Estate-காரர்களுக்கு நல்ல இலாபம். ஆனால், இன்றுவரை Tidel Park ஆரம்பிப்பதற்கு எந்தவிதமான அறிகுறியும் கோவையிலே தென்படவில்லை. எனவே, அதை விரைவில் ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாம் நிலை நகரங்களை முன்னேற்ற வைக்கும்பொருட்டு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் 29.8 ஏக்கர் நிலம் எல்காட் நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எல்காட் நிறுவனத்தால் கோயம்புத்தூர் தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் பணி தொடங்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பப் பகுதியில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்கும்பொருட்டு, கோயம்புத்தூரிலே பாரதியார் பல்கலைக்கழகத்திலே, பாரதியார் பல்கலைக்கழக எல்காட் நகரம் பணி தொடங்கப்பட உள்ளது. நம்முடைய Confederation of Indian Industry அவர்களையே நீங்கள் கேட்டுப் பாருங்கள். கிட்டத்தட்ட நான்கு கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. அந்த மருத்துவக் கல்லூரிக்குச் சொந்தமான இடத்தைப் பொறுத்தவரையிலே access, Approach Road ஒரு traffic நிறைந்த பகுதியாக இருப்பதாலே அந்த இடத்திலே ஒரு பாலம் வேண்டும் என்பது அவசியமாக இருக்கின்றது. மூன்று கருத்துகள் C.E.-இடத்திலே சொல்லப்பட்டிருக்கின்றன; மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன; எனவே, விரைந்து முடிப்பதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் நிச்சயமாக எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 செப்டம்பர் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இலட்சக்கணக்கான இளைஞர்கள் கணினி பாடம் படித்துவிட்டு வேலைவாய்ப்பு இல்லாமல் உலக நாடுகளை நாடிச் செல்கிற அவலநிலை இருக்கிறது. அப்படி இருக்கிறபோது, தமிழகத்தில் மென்பொருள் உற்பத்தியை சுயமாகத் தொடங்குவதற்கு முன்வருகின்ற படித்த இளைஞர்களுக்கு, நம்முடைய தமிழக அரசு அவர்களை ஊக்குவிப்பதற்கும், அவர்கள் சுய காலில் நின்று சம்பாதிப்பதற்கும் ஏதுவாக திட்டங்களை உருவாக்குவதற்கு தமிழக அரசிடம் திட்டம் இருக்கிறதா? அப்படி ஏதேனும் நம்முடைய அரசு முன்வந்து தமிழக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு அம்மா அவர்கள் I.T. Policy வெளியிட்டிருக்கிறார்கள். நம்முடைய அந்த Policy-யினுடைய நகலை நான் இங்கே தருகின்றேன். Web site-ல்கூட அவர் நிச்சயமாகப் பார்த்துக்கொள்ளலாம். அதிலே தெளிவாக குறிப்பிட்டிருக்கிறோம். ஒரு large scale-அதாவது பெரிய அளவில், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் ஆரம்பித்தால் என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகின்றன, அதைப்போல நடுத்தர தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் ஆரம்பித்தால் என்னென்ன அவர்களுக்கு சலுகைகள் வழங்கப்படுகின்றன என்ற கருத்தையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைப்பதற்கு நம்முடைய இளைஞர்கள் முயற்சிக்க வேண்டும். அதன்மூலம் அவர்கள் முயற்சிக்கின்றவகையில் நிச்சயமாக அவர்களுக்கு அம்மா அவர்களுடைய அரசு முழுமையான அளவிற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வளர்ந்து வருகின்ற சூழ்நிலையில் இன்றைக்குத் தனியாருக்கு அரசு உதவி செய்யலாமேயொழிய, அரசே முழுமையான அளவிற்கு எல்லாவற்றையும் எடுத்து நடத்துவது என்பது ஒரு சிரமமான காரியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன்.



2005 செப்டம்பர் 23]

*முற்பகல் 10-30*

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலே இரண்டாவது கட்ட மென்பொருள் பூங்கா சம்பந்தமான பிரச்சினை தொடர்ந்து விவாதிக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு முறையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது இரண்டாவது கட்டமாகத் தொடங்கும் மென்பொருள் பூங்கா, அநேகமாக கோவையில் உறுதிசெய்யப்பட்டுவிட்டது என்று தொடர்ந்து சொல்லி வருகின்றார்கள். ஆனால், இப்போது மூன்று விதமான கருத்துருக்கள் வந்திருப்பதாகவும், அவற்றை மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு போயிருப்பதாகவும் சொல்கிறார்கள். உண்மையில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குப் பின்புறத்தில் உள்ள இடம்தான் எல்லா நிலைகளிலும் அந்த மென்பொருள் பூங்கா அமைவதற்குப் பொருத்தமான இடம் என்பதனாலே போதுமான எல்லா infrastructures-ம் அங்கு இருப்பதனாலேதான் முதலாவதாக அது தேர்வு செய்யப்பட்டது. ஆகவே, பாலம் ஒரு பெரிய பிரச்சினையே இல்லை. மிகப்பெரும் அளவில் மருத்துவக் கல்லூரி இருக்கிறது; எல்லா பொறியியல் கல்லூரிகளும் அந்தப் பீளமேடு பகுதியிலேதான் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்த இடத்தைத் தேர்வு செய்வதற்கு முன்னுரிமை கொடுத்து, முதலாவது பகுதியாகக் கருதி, ஏற்கெனவே எடுக்கப்பட்ட ஆரம்பக் கட்டப் பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றி, அந்த இடத்திலே பூங்கா அமைவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அந்த இடத்திலேதான் அமையப்பெறும். அதிலே எந்தவித மாறுபட்ட கருத்தும் இல்லை. ஆனால், நான் மூன்று கருத்துருக்கள் என்று சொன்னதிலே ஒன்று, மருத்துவக் கல்லூரி வளாகத்திலே, அதாவது அந்த ELCOT-க்கு transfer பண்ணிய இடத்திலே நிச்சயமாக உருவாகும். அங்கு பாலம் கட்டுவதற்கு ஒரு delay, அதாவது கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகின்ற சூழ்நிலைகூட இருக்கின்றது. அதுகூட தவிர்க்கப்பட வேண்டும். அது ஒரு long run-ஆக இருக்கட்டும். எனவே, இடைப்பட்ட காலத்திலே, திரு. நரேன் கார்த்திகேயன் அவர்களுடைய ஓர் இடம், அவருக்குச் சொந்தமான ஓர் இடம் வருகிறது. அந்த இடத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்

அவர்கள் பேசி, ஒரு வழி ஏற்படுத்திக் கொடுத்தால் பாலத்தின் வழியாக செல்வதைவிட அந்த வழியாகச் சென்றுகூட அந்த இடத்தை அடைவதற்கு ஒரு access easy-ஆக இருக்கும் என்ற ஒரு கருத்து வைக்கப்பட்டது. அதையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆராய்வதாகச் சொல்லி இருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்லாமல் இந்த இரண்டு இடங்களுக்கும் முன்பாகவே நம்முடைய Women Development Corporation அதாவது, பெண்கள் முன்னேற்றக் கழகத்திற்குச் சொந்தமான ஓர் இடம் இருக்கிறது. எனவே, அந்த இடத்திலும்கூட நாம் ஆரம்பிப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கிறதா? அந்த இடத்தை நாம் ELCOT-க்கு transfer பண்ண முடியுமா என்பது குறித்துக்கூட கருத்துகள் கேட்டிருக்கிறோம். எனவே, இந்த மூன்று நிலைகளிலும் தீவிரமாக அதைச் செயல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை என்பதுதான் தமிழகத்தின் இரண்டாவது நகரம் என்று கருதப்படுகின்ற ஒரு நிலையில் அங்கு கிராமப்புறங்களிலே எந்தவிதமான தொழிலும் இல்லாத சூழ்நிலையில் இன்றைக்கு மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுகின்ற முயற்சி நடந்து கொண்டிருக்கின்றது. அதிலே மதுரையை ஒட்டி தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு உரிய நிலையை அரசு எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டாம் நிலை நகரங்களில் மதுரையும் வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கோரிக்கை வருங்காலங்களிலே நிச்சயமாக நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 24, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.





**24—**

### நீதிமன்றக் கட்டடம்

*** 72759—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவியில் நீதிமன்றக் கட்டடம் கட்டப்படுவதற்கு இந்த ஆண்டு முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்தப்பட்ட விடை. திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவியில் நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு ஆண்டு முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு கோரி மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவி சிறப்பு ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில், மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராக பொறுப்பேற்ற பின்பு பேருந்து நிலையம், வணிக வளாகம், காவல் நிலையம், தீயணைப்பு நிலையம், பள்ளிக்கூட கட்டடங்கள், மருத்துவக் கட்டடங்கள், பாலங்கள், நீர்தேக்கத் தொட்டி போன்ற பல பணிகளுக்கு உத்தரவிடப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். என்னுடைய 3-02-2002-ல் சட்ட மானியக் கோரிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்தின்போது பதிலளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மாவினுடைய அரசால் மைய அரசிற்கு ரூ.140 கோடிக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு அனுப்பப்பட்டிருக்கின்றது என்றும், அது கிடைக்கப்பெற்றவுடன் என்னுடைய கோரிக்கை

[2005 செப்டம்பர் 23

நிறைவேற்றப்படும் என்றும் தெரிவித்திருந்தார். ஆகவே, மைய அரசுக்கு அனுப்பப்பட்ட மதிப்பீடுகளின் நிலை என்ன, அது அனுமதிக்கப்பட்டிருக்கிறதா என்பதையும், அது காலதாமதமாக நடைபெறுவதால் மைய அரசுக்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நினைவூட்டுக் கடிதங்கள் ஏதேனும் அனுப்பி இருக்கிறதா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஒப்புதல் பெற்று 140 கோடி ரூபாய்க்கு மத்திய அரசினுடைய அனுமதி கோரி கடிதம் எழுதியிருந்தோம். அதில் 70 கோடி ரூபாய் அவர்கள் ஒதுக்கீடு செய்தால் நிச்சயமாக 61 திட்டங்கள் உடனடியாக நிறைவேற்றப்பெறும் என்று இந்தச் சட்டமன்றத்தில் அறிவித்திருந்தோம். ஆனால், அவர்கள் அதற்கு மறுபடியும் ஒரு revised proposal கேட்டிருக்கின்றார்கள். எனவே, revised proposal 206 கோடி ரூபாய்க்கு இங்கிருந்து அனுப்பப்பட்டிருக்கின்றது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தத் தொகுதியில்கூட மாண்புமிகு உறுப்பினர் கோரியபடி 1,97,30,000 ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் மற்றும் விருந்தினர் மாளிகை ஆகியவை கட்டுவதற்கு செயற்குறிப்பு மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, மத்திய அரசு 50 சதவிகிதம் நிதி ஒதுக்கீடு செய்கின்றபட்சத்தில் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவி தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் அமைக்கும் பணிக்கு மதிப்பீடுகள் தயார்செய்யப்பட்டு, 197.30 இலட்சங்களுக்கு மைய அரசிற்கு அனுப்பப்பட்டு, 18–01–2005 ஆம் நாளில் சென்னை உயர் நீதிமன்றப் பதிவாளர் அவர்கள் அரசிற்கு நிதி ஒதுக்கீட்டிற்கும், நிர்வாக அனுமதிக்கும் கடிதம் அனுப்பியிருக்கிறார் — எனவே, மாண்புமிகு அம்மாவுடைய அரசு இந்த ஆண்டு top priority என்ற அடிப்படையில் முதன்மைப்படுத்தி சேரன்மகாதேவி



2005 செப்டம்பர் 23]

தொகுதிக்குட்பட்ட நீதிமன்றக் கட்டடத்திற்கு முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, top priority கொடுக்கப்பட வேண்டும் என்கின்ற அந்தக் கருத்தில்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு revised proposal 206 கோடி ரூபாய்க்கு, அதாவது 103 கோடி ரூபாய் மாநில அரசு ஒப்புதல் அளிக்க தயாராக இருக்கின்றது; எனவே, மத்திய அரசு 103 கோடி ரூபாய் ஒப்புதல் அளிக்கின்ற பட்சத்தில், 61 திட்டங்கள், தவிர நம்முடைய திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவியில் 1,97,30,000 ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்; அதுமட்டுமல்ல திருநெல்வேலி மாவட்டத்தில் வள்ளியூரில் ஓர் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் ரூபாய் 3,91,00,000/–; நாங்குநேரியில் District Munsif-*cum*-Judicial Magistrate Court ரூபாய் 1,52,00,000/–; சிவகிரியில் District Munsif-*cum*-Judicial Magistrate Court ரூபாய் 1,32,00,000/– இந்தச் செலவில் நிச்சயமாக அமைப்பதற்கு top priority கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிலேயிருந்து வருகின்ற நிதியை எதிர்பார்த்து, மாநில அரசினுடைய நிதியில் இந்தக் கட்டடங்கள் எல்லாம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். ஏற்கெனவே, என்னுடைய தொகுதியிலேயும் அப்படி ஒரு கட்டடம் வரவேண்டும் என்று அவர்களிடத்திலே நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசிற்கு கடுமையான நிதி நெருக்கடி இருக்கின்ற சூழ்நிலையிலும்கூட, உயர் நீதிமன்றத்தால் அனுப்பப்படுகின்ற அந்தக் கருத்துருக்களை பரிவோடு பரிசீலித்து அவ்வப்போது நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணைகளைப் பிறப்பித்து வருகின்றார்கள். இதுவரையிலே, எந்த ஓர் ஆட்சிக் காலத்திலேயும் இல்லாத அளவிற்கு நீதிமன்றக் கட்டடங்களுக்கு அதிகமான அளவிற்கு முக்கியத்துவம் கொடுத்து கட்டடங்களை எழுப்பிய ஒரே முதலமைச்சர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி). கிட்டத்தட்ட இந்த நான்கு ஆண்டு காலத்தில் மட்டும்

[2005 செப்டம்பர் 23

நூறு கோடி ரூபாய்க்கு மேலே கட்டடங்கள் கட்டுவதற்கு அம்மா அவர்கள் உத்தரவிட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும், இன்றைக்கு அழகிய கட்டடங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்றால் அதற்கு முழு முதற் காரணம் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இன்றைக்கு சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய மதுரை கிளை 65 கோடி ரூபாயிலே கட்டப்பட்டிருக்கின்றது. விழுப்புரம் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் 9,62,00,000 ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கின்றது. ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் 9,82,00,000 ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கின்றது. வேலூர்–திருப்பத்தூரிலே ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் 4,97,00,000 ரூபாயில் கட்டப்பட்டிருக்கின்றது. தேனியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் 3,90,00,000 செலவில் கட்டப்பட்டு வருகின்றது. Judicial Academy 4,50,00,000 செலவில் கட்டப்பட்டு முடிக்கப்பட்டிருக்கின்றது. தமிழ் நாட்டிலுள்ள நீதிமன்றக் கட்டடங்கள், ஆண்டாண்டுக் காலமாக எத்தனையோ அரசாங்கங்கள் இருந்தும்கூட, அந்த நீதிமன்றக் கட்டடங்களைப் பழுது பார்க்கவேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் வந்தது கிடையாது. எனவே, அந்த நீதிமன்றக் கட்டடங்களைக்கூட பழுது பார்க்க வேண்டும் என்ற ஓர் உயர்ந்த மனப்பான்மையுடன் 7.50 கோடி ரூபாயை நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்து இன்றைக்கு அனைத்து நீதிமன்றக் கட்டடங்களும் பழுது பார்க்கப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இது எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு இந்த நான்கு ஆண்டு காலத்தில் 100 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம் என்று சொன்னால், 206 கோடி ரூபாயை இந்தச் சட்டமன்றத்திலே அம்மாவினுடைய ஒப்புதல் பெற்று அன்றைக்கே சொன்னோம், பாதி, கிட்டத்தட்ட 50 சதவீதம் அளவிற்கு மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யத் தயாராக இருக்கின்றது. மத்திய அரசு, உங்களுடைய பங்கு என்ன? வாக்குகள் வாங்கி டெல்லிக்குச் சென்றவர்கள் 100 கோடி ரூபாய் வாங்கிக் கொடுத்தால் அடுத்த ஓராண்டு காலத்திலேயே நிச்சயமாக 61 திட்டங்கள், 61 கட்டடங்கள் பிரம்மாண்டமாக உருப்பெறும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரத்திலே குற்றவியல் மற்றும் உரிமையியல்



2005 செப்டம்பர் 23]

நீதிமன்றங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினாரே அது எந்த நிலையில் இருக்கிறது? பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதா அல்லது ஒப்பந்தம் தரப்பட்டிருக்கிறதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் இப்போது நில உடைமை உரிமை மாற்றம் நிலுவையில் இருக்கின்றது. எனவே, உரிமை மாற்றம் செய்த பிறகு நிச்சயமாக அதற்குப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட வேண்டுமென்று பல ஆண்டுகளாக கோரிக்கைகள் இருந்து வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்த ஆண்டு அதைக் கட்டிக் கொடுப்பதற்கு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு 50 சதவீதம் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கு ஒப்புதல் அளித்து, 50 சதவீதம் நிதி ஒதுக்கீடு கோரி மத்திய அரசாங்கத்திற்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்திலே நிறைய நீதிமன்றக் கட்டடங்கள் வாடகைக் கட்டடங்களாக இருக்கின்றன. உதாரணத்திற்கு காஞ்சிபுரம் மாவட்டத்திலே, என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற திருக்கழுக்குன்றம், ஆலந்தூர், உத்திரமேரூர் போன்ற பகுதிகளில் நீதிமன்றங்கள் வாடகைக் கட்டடங்களிலே இயங்குகின்றன. இவற்றிற்கெல்லாம் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே என்னுடைய பதிலில் சொல்லியிருக்கின்றேன். ஒரு தொலைநோக்குப் பார்வையோடுதான் மாண்புமிகு அம்மா அவர்களால் இதுபோன்ற கோரிக்கைகள்

[2005 செப்டம்பர் 23

ஒவ்வொன்றாக எழுப்பப்படக் கூடாது, ஒரே ஆண்டிலே 61 திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டுமென்ற ஒரு பார்வையோடு மத்திய அரசாங்கத்திற்கு ஒரு concrete proposal அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. எனவே, மத்தியிலே நீங்கள் இருக்கின்றீர்கள். நீங்கள் அங்கே வாதாடி பெற்றுத் தந்தால் 103 கோடி ரூபாய் நாங்கள் இங்கே ஒதுக்குவதற்குத் தயாராக இருக்கின்றோம். ஓராண்டிலே கட்டிவிடலாம். இதிலே மாறுபட்ட கருத்தில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.ஏ. ஹக்கீம்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களுடைய சொந்தத் தொகுதி திருமங்கலம். அந்த ஊரில்தான் நானும் பிறந்திருக்கிறேன். தொகுதி மதுரையாக இருந்தாலும்கூட நாங்கள் இருவர் பிரதிநிதித்துவம் என்ற முறையில் ஏற்கெனவே பல முறை திருமங்கலத்திற்குண்டான ஒரு Sub-court–க்கு அது எல்லா வகையிலும் பொருத்தமாக – அமைச்சரிடத்திலே நாங்கள் மனுவும் கொடுத்திருக்கிறோம்; வேண்டுதல் தெரிவித்திருக்கிறோம். ஏற்கெனவே, இரண்டு முறை நான் பேரவையில் பேசியிருக்கிறேன். இதுபோக, 900 cases pending என்று இருக்கிறது. 100 இருந்தால் போதும். ஒரு District Munsif Court–லிருந்து appeal–க்குச் செல்வதற்கு, Sub-court–க்கு 100 cases இருந்தால் போதும் என்றிருக்கிறது. ஆனால், 100 cases இல்லாத பல நீதிமன்றங்களுக்கு, பல ஊர்களுக்கு அவை promotion என்ற அடிப்படையில் Sub-court வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், வருடத்திற்கு 900 வழக்குகள் நிரந்தரமாக இருக்கக்கூடிய திருமங்கலம் District Munsif Court–ல் ஏற்கெனவே இடமும் தெரிவிக்கப்பட்டு, எந்தவிதமான தடையும் இல்லை என்ற சூழ்நிலையில் அங்கே ஒரு Sub-court உடனடியாக மிக விரைவில், பேரவைத் தலைவருடைய சொந்தத் தொகுதி, எங்களுடைய தொகுதி என்ற அடிப்படையில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை விரைவிலே செய்து முடிக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்குமானால் அதைச் செய்துத் தர வேண்டும்; ஆவன செய்யுமா மாண்புமிகு அம்மாவினுடைய அரசு என்று பேரவைத் தலைவர் வாயிலாக பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியது போல ஒரு கிராமத்திற்கு, ஓர் ஊருக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்பது மிக மிக அவசியம். ஆனால், வழக்காடுபவர்கள் 15 கிலோ மீட்டர், 20 கிலோ மீட்டர் செல்வது என்பது ஒரு பெரிய விஷயமல்ல. எனவே, நம்முடைய



2005 செப்டம்பர் 23]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது இருக்கின்ற இடத்திலிருந்து எவ்வளவு தூரத்திற்கு அவர்கள், வழக்காடுபவர்கள் செல்கின்றார்கள், எவ்வளவு வழக்குகள் அந்த ஊரிலே இருக்கின்றன, இந்தத் தன்மைகளையெல்லாம் பார்த்து உயர் நீதிமன்றத்திடம் கருத்து கேட்டு, அம்மாவிடம் சமர்ப்பிக்கப்பட்டு ஆணை பெறப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 25, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**25—**

## உயர்மட்டக் குழு

***42843—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு வங்கிகள் மற்றும் நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஊதியம், இதர சலுகைகள் நிர்ணயம் செய்யவும், பணியாளர்களைத் தேர்வு செய்யவும் உயர்மட்டக் குழு அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கூட்டுறவு வங்கிகள் மற்றும் நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் இதர சலுகைகளை நிர்ணயம் செய்யவும், பணியாளர்களை தேர்வு செய்யவும் உயர்மட்டக் குழு அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

முற்பகல் 10–45

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் செயல்படுகின்ற, மாநில அளவிலே செயல்படுகின்ற தலைமைக் கூட்டுறவு வங்கி, வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, மாவட்ட அளவிலே செயல்படுகின்ற மத்திய கூட்டுறவு வங்கிகள், நகர, கிராம அளவிலே செயல்படுகின்ற கிராம தொடக்க வேளாண்மை வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கிகள்,

[2005 செப்டம்பர் 23

ஆகிய வங்கிகளிலே பணிபுரியும் ஊழியர்கள், பொதுவாகத் தங்களுடைய சலுகைகள், சம்பள நிர்ணயம் போன்ற கோரிக்கைகள் வைப்பதற்கு, ஆங்காங்கே தனித்தனியான நிர்வாக அமைப்பு அடிப்படையிலே இருக்கின்ற காரணத்தினால், ஒன்று மாநில கூட்டுறவு பதிவாளர் அவர்களிடம் கோரிக்கை வைக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது; அல்லது அரசிடம் கோரிக்கை வைக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. பொதுவாக அரசினுடைய பிரதான திட்டமான பொது விநியோகத் திட்டத்தை, கிராம நிர்வாக அளவிலே, கூட்டுறவு வங்கிகள் செயல்படுத்துகின்ற சூழ்நிலையில், அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை வைப்பதற்கு, தமிழக அரசின் தலைமையின்கீழ் என்ற அளவிலான ஒரு குழு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து அரசு பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள், மற்ற எந்தத் தலைவர்களையும்விட, அரசுப் பணியாளர்களுக்கு அள்ளித் தருவதிலே கடையேழு வள்ளல்களை விடவும் தலைசிறந்தவர் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே இருக்கிற விவரம் என்னவென்றால், 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளில், விதி எண் 149-ன்படி ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும், அதன் பணியாளர்கள், பணி நிலைத் திறன், ஊதியம், இதர சலுகைகள், பணியாளர்கள் எண்ணிக்கை, ஒழுங்குமுறை விதிகள் தொடர்பான சிறப்பு துணை விதிகள் அரசின் ஒப்புதல் பெற்று அமைத்து இருக்க வேண்டும். ஆனால், சென்ற காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுடைய காலத்தில், சில தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், நகர வளர்ச்சி வங்கிகள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் போன்றவற்றினுடைய சம்பளங்களை, அதனுடைய தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், பல்வேறு வகையாக உயர்த்தி, அந்த அமைப்புகள் எல்லாம் சீர்கெட்டுப் போகத்தக்க ஒரு சூழ்நிலையை உருவாக்கி விட்டார்கள். இன்னும் சொல்லப்போனால், சில தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளினுடைய செயலாளர்களுடைய சம்பளம், அந்த அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய சம்பளத்தைவிட கூடுதலாக, இன்னும் கூடுதலாகச் சொல்லப்போனால், மாநிலத்தினுடைய கூட்டுறவு வங்கிகளை நிர்வகிக்கிற மாநிலப் பதிவாளரினுடைய சம்பளத்தைவிட கூடுதலான சம்பளம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளினுடைய செயலாளர்களுக்கு கடந்த



2005 செப்டம்பர் 23]

காலத்தில் சில உள்நோக்கங்களோடு, தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுடைய காலத்தில், வழங்கப்பட்டதன் காரணமாக அதுகுறித்து பல்வேறு வழக்குகள், நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்ற காரணத்தினால் அந்த வழக்குகள் முடிவுற்றவுடன் அதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்று சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், இங்கே நீண்டதொரு விளக்கத்தை அளித்து இருக்கின்றார்கள். கூட்டுறவுச் சட்டம் விதி 149 என்பது, பொதுவாக கூட்டுறவு நிறுவனங்களிலே பணி புரிகின்ற ஊழியர்களுக்கு எதிரான ஒரு விதியாக அமைந்து இருக்கின்றது. அதைப் பரிசீலனை செய்து, அந்த விதியை எதிர்காலத்திலே தளர்த்த வேண்டும் என்ற அடிப்படையிலேயும், அதிலும் மாநிலப் பதிவாளர் ஒருவரே நிர்ணயம் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை இருப்பதன் காரணமாக, அவர்களுடைய பல்வேறு கோரிக்கைகளை நிர்ணயம் செய்வதற்கு எதிர்காலத்திலாவது அதற்கான ஒரு தலைமை அளவிலே அமைப்பை உருவாக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலப் பதிவாளருக்குக்கீழ், அந்த அந்த மாவட்டங்களிலே இணைப் பதிவாளர்கள் என்றும், அவர்களுக்குக்கீழ் துணைப் பதிவாளர்கள் என்றும் தனித்தனியாக நிர்வாக அமைப்புகளுக்காகத் தக்க சீரான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. பொதுமக்களுக்கும், கூட்டுறவு வங்கிகளிலே டெபாசிட் செய்பவர்களுக்கும், லேவாதேவி செய்பவர்களுக்கும் பாதுகாப்பாகத்தான் விதி எண் 149 என்பது அமல்படுத்தப்பட்டுள்ளது. அத்தகைய விதி இருக்கும்போதே அந்த விதிக்குப் புறம்பாக சென்றகாலத்தில், தேர்வு செய்யப்பட்ட தலைவர்கள் காலத்தில் 4,497 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே, 3,000 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நசிந்துபோகத்தக்க அளவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் செயல்பட்டதற்கு காரணமே அந்த விதிக்குப் புறம்பாக நடந்ததுதான் என்கின்ற தகவலைச் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 26, திரு. பி.கே.டி. நடராஜன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

[2005 செப்டம்பர் 23

26—

## பசு பாதுகாப்பு மையம்

*** 37491—திரு. பி.கே.டி. நடராஜன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், அருள்மிகு கோபிநாத சுவாமி கோயிலில் பசு பாதுகாப்பு மையம் ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன். (அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், அருள்மிகு கோபிநாத சுவாமி திருக்கோயில் மலைக்கோயிலாக இருப்பதாலும், அனைத்து பொருட்களையும் மலைக்குத் தலைச்சுமையாக கொண்டுசெல்ல வேண்டியிருப்பதாலும் போதிய நிதி வசதிகள் இல்லாத நிலை உள்ளதாலும், இத்திருக்கோயிலில் பசு பாதுகாப்பு மையம் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

**திரு. பி.கே.டி. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி என் வினாவைக் கேட்கிறேன். எனது ஆத்தூர் சட்டமன்ற தொகுதி, ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் மிகப் பழமை வாய்ந்ததும், மிகவும் பிரசித்தி பெற்றதுமான அருள்மிகு கோபிநாத சுவாமி திருக்கோயிலுக்கு ஏராளமான பக்தர்கள் வருகை தந்து நேர்த்திக் கடனாக பசு மாடுகள், காளை மாடுகளை மாதம் ஒன்றுக்கு 100 மாடுகள் வரை வழங்கி வருகின்றார்கள்.

அருள்மிகு கோபிநாத சுவாமி திருக்கோயிலுக்கு அருகில் உள்ள பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலுக்கும், மதுரை



2005 செப்டம்பர் 23]

மீனாட்சி அம்மன் திருக்கோயிலுக்கும், மதுரை அழகர் கோயிலுக்கும் மாதம் ஒன்றுக்கு 150 மாடுகள் வரை நேர்த்திக் கடனாக பக்தர்கள் செலுத்தி வருகின்றார்கள்.

இந்த பிரசித்தி பெற்ற நான்கு கோயில்களுக்கும் நேர்த்திக் கடனாக விடுகின்ற அனைத்து மாடுகளும் வெகுதூரத்தில் உள்ள திருநெல்வேலி கோசாலைக்கு மாதம் 500 மாடுகள் வரை அனுப்பி வைக்கப்படுகின்றன. அதிக தூரத்தில் உள்ள திருநெல்வேலிக்கு அனுப்புகின்ற நேரத்தில் இடைத்தரகர்கள்மூலம் சில தவறுகள் நடப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன.

அருள்மிகு மதுரை மீனாட்சியம்மன் கோயில், மதுரை அழகர் கோயில், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில், அருள்மிகு கோபிநாத சுவாமி திருக்கோயில் ஆகிய நான்கு கோயில்களுக்கும் மையமாகத் திகழ்கின்ற—அருள்மிகு கோபிநாத சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமாக நிலங்கள் அதிகம் உள்ளது; பழனி கோயிலுக்கும் அதிகமான நிலங்கள் உள்ளது. ஆகவே, பசுவதை தடையைப் பொறுத்தமட்டிலும், பசுமாடுகளைக் காப்பதிலும் மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் எடுத்துக்காட்டாக உள்ள காரணத்தால், இந்த நான்கு கோயில்களுக்கும் மையமாக உள்ள அருள்மிகு கோபிநாத சுவாமி கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் கோசாலை, அதாவது பசுக்கள் பாதுகாப்பு மையம் அமைப்பதற்கு நடப்பு நிதியாண்டில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி, ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு கோபிநாத சுவாமி திருக்கோயிலில் கோசாலை அமைக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.கே.டி. நடராஜன்:** மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக மரியாதைக்குரிய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 27, திரு. ஆர். சாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர். (சிரிப்பு) ரொம்ப நெகிழ்ந்துவிட்டார் அவ்வளவுதான்.

[2005 செப்டம்பர் 23

27—

## பக்தர்களுக்குத் தங்கும் விடுதி

*** 72830—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்குத் தங்கும் விடுதி கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக தற்போது 5 தங்கும் அறைகளும், 3 சிறிய மண்டபங்களும் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. இது தவிர பக்தர்கள் வசதிக்காக 23 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதலாக தங்கும் விடுதிகள் `திருக்கோயில் நிர்வாகம்மூலம் கட்டுவதற்கான செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மேலூர் தொகுதியிலுள்ள அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலுக்கு தமிழ்நாட்டில் இருந்து பல இலட்சக்கணக்கான பக்தகோடிகள் வந்து தரிசனம் செய்கிறார்கள். அங்கு சிறப்பு வாய்ந்த தீர்த்தம் ஒன்று இருக்கிறது. அந்தத் தீர்த்தம் ஆடுவதற்காக தமிழ்நாட்டில் இருந்து மட்டுமல்லாமல் பிற மாநிலங்களிலிருந்தும் பல்வேறு பக்தகோடிகள் வந்து தீர்த்தம் ஆடிக் கொண்டிருக்கிறார்கள், தரிசனம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அங்கே தங்குவதற்கு இடமில்லை. அழகர் கோயிலிலிருந்து மதுரை ஏறத்தாழ 30 கிலோ மீட்டர் தூரம் இருப்பதால், அங்கிருந்து தங்கி இங்கு வந்து தரிசனம் செய்வதற்கு பக்தகோடிகள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய இந்த 4½ ஆண்டு ஆட்சிக் காலத்தில் எல்லாத் திட்டங்களையும் மேலூர் தொகுதியில் முழுவதும் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்கள் அம்மா அவர்கள். இந்த



2005 செப்டம்பர் 23]

பக்தகோடிகள் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்து கொண்டிருக்கிறார்கள்; பல்வேறு மாநிலங்களிலிருந்தும், வெளிநாட்டவர்கள்கூட வந்து அந்தத் தீர்த்தம் ஆடி தரிசனம் செய்து கொண்டிருக்கிறார்கள். கள்ளழகர் திருக்கோயிலில் தங்கும் விடுதி கட்டுவதற்கான இடம் அதிகமாக உள்ளது. அந்தக் கோயிலின் மலை அடிவாரத்தில், குற்றாலம், ஊட்டி போன்ற இடத்திலே காட்டேஜ் கட்டினால் எப்படி இருக்குமோ அதேபோன்ற தோற்றம் அங்கே இருக்கிறது. அங்கே கோயிலுக்கு அதிக நிதி வருவாயும் இருந்து கொண்டிருக்கிறது. கோயில் நிதியை வைத்தே காட்டேஜ், தங்குவதற்கு விடுதிகள் கட்டினால் கோயிலுக்கு வருமானம் வரும், பக்தகோடிகளும் தரிசனம் செய்வதற்காக தங்கி, நல்லமுறையில் தரிசனம் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், நம்முடைய அம்மா அவர்களுடைய நல்லாட்சி நடந்து கொண்டிருக்கிற இந்த வேளையில் இந்த ஒரு கோரிக்கையை நிறைவேற்றித்தர முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், பட்டியலைச் சேர்ந்த திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயிலின் ஆண்டு வருவாய் இரண்டு கோடியே 90 இலட்சம் ரூபாய் ஆகும். இத்திருக்கோயிலில் சித்திரைத் திருவிழா மற்றும் ஆடித் தேர்த் திருவிழா ஆகியவை பிரசித்தி பெற்றவையாகும். இத்திருக்கோயிலில் பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக 5 தங்கும் அறைகளும், 3 சிறிய மண்டபங்களும் தற்போது பயன்பாட்டில் இருந்து வருகின்றன. மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின் அடிப்படையில் தற்சமயம் 9.5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கான மண்டபம் ஒன்று கட்டப்பட்டு பணி நிறைவடையும் நிலையில் உள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையினுடைய அடிப்படையில் மீண்டும் 23 இலட்சம் ரூபாய் செலவில் 15 தங்கும் விடுதிகள் கட்டுவதற்கு இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையின்படி தங்கும் அறைகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் கூறியதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா.

**திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகப் பிரசித்தி பெற்றதும், ஆயிரம் ஆண்டுகள் பழமையானதுமான தஞ்சை பெரிய கோயில் உள்ளது. அதனைத் தரிசிக்க வருகிற பக்தர்களுக்கு, பார்க்க வருகிற பயணிகளுக்கு இதுவரையிலும் தங்கும் விடுதி வசதி அங்கே இல்லை. தொல்பொருள் துறை பாதுகாப்பில் இல்லாத அரசு இடத்தில் அத்தகைய தங்கும் விடுதியைக் கட்டிட அரசு முன் வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் மூலமாக இருக்கின்ற காரணத்தினால், தமிழக அரசு தலையிடுவதற்குத் தடைகள் இருக்கின்ற காரணத்தினால் . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கென தனியாக விடுதி கட்ட வேண்டிய அவசியம் இல்லை. உலகத் தமிழ் மாநாடு 1995 ஆம் ஆண்டு அங்கே நடைபெற்றபோது ஏராளமான ஓட்டல்கள் புதிதாக அங்கே கட்டப்பட்டன. ஆகவே, பலவிதமான தங்கும் விடுதிகள் தஞ்சாவூரில் ஏற்கெனவே உள்ளதால், புதிதாக விடுதி கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 28, திரு. கா.தி. இளையகண்ணு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**28—**

## பள்ளியைத் தரம் உயர்த்துதல்

*** 37446—திரு. கா.தி. இளையகண்ணு:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) ஏற்காடு தொகுதி, வெள்ளிக்கவுண்டனூர் பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஏற்காடு தொகுதியில் உள்ள வெள்ளிக்கவுண்டனூரில் இயங்கி வரும் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப் பள்ளி, 25–5–2005 ஆம் நாளிட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அரசாணை (நிலை) எண் 79–ன்படி உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்காடு தொகுதி வெள்ளிக்கவுண்டனூர் பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளியைத் தரம் உயர்த்த வேண்டுமென்ற பல ஆண்டுகாலமான கோரிக்கையை ஏற்று நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தங்கத் தாரகை, தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆட்சியிலே நிறைவேற்றிக் கொடுத்தமைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 29, திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**29—**

## இலவசப் பட்டா

*** 41425—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, குறிச்சி பேரூராட்சியிலுள்ள மாச்சம்பாளையம், ஈச்சனாரி, குனியமுத்தூர் பேரூராட்சியிலுள்ள இடையர்பாளையம்

ஆகிய பகுதிகளிலுள்ள ஆதிதிராவிட மக்களுக்கு இலவசப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம். இடையர்பாளையம் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க குனியமுத்தூர் கிராமத்தில் க.ச.296/1, 2 காலைகளில் 2.47.0 எக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டதை எதிர்த்து நில உரிமையாளர்கள் வழக்குத் தொடர்ந்து 27-12-2002-ல் நிரந்தர தடையாணை பெற்றுள்ளதால், பட்டா வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. மேற்படி தடையாணையை நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்படி தடையாணை நீக்கம் செய்யப்பட்டவுடன், இடையர்பாளையம் பகுதியில் உள்ள ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மாச்சம்பாளையம் மற்றும் ஈச்சனாரி கிராமத்தில் வசித்துவரும் ஆதிதிராவிட மக்களுக்குப் பட்டா வழங்க நிலக் கையக நடவடிக்கை எதுவும் நிலுவையில் இல்லை. வீட்டுமனை கோரி விண்ணப்பங்கள் கொடுக்கும் பட்சத்தில் அவர்களுக்குப் பட்டா வழங்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான பேரூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட குறிச்சி சிறப்பு நிலைப் பேரூராட்சி மற்றும் குனியமுத்தூர் சிறப்புநிலைப் பேரூராட்சிகளை — தற்சமயம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்னுடைய சொந்தத் தொகுதியிலே இரண்டு நகராட்சிகளாக அமைத்துக் கொடுத்தமைக்கும், மேலும் குனியமுத்தூர் மூன்றாம் நிலை நகராட்சி, குறிச்சி மூன்றாம் நிலை நகராட்சியிலே இருக்கின்ற ஏறத்தாழ இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன் பெறுகின்ற வகையிலே ஒற்றைக்கால் மண்டபத்திலே 230 கே.வி. துணை மின் நிலையம், அனைத்துப் பகுதியினுடைய பொதுமக்களுக்கும் தங்குதடையின்றி மின்சாரம் கிடைப்பதற்கு வசதியாக, சுமார் 26 கோடி ரூபாயிலே அமைத்துக் கொடுத்து திறந்து வைத்தமைக்கும் தமிழக முதல்வர் இதய தெய்வம் தங்கத் தாரகை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எனது தொகுதி மக்களுடைய சார்பிலே கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குனியமுத்தூர் மூன்றாம் நிலை நகராட்சி மற்றும் குறிச்சி மூன்றாம் நிலை நகராட்சியிலே உள்ள ஆதிதிராவிட பொதுமக்கள்



இலவசமாக தங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட வேண்டுமென்று கோருகிறார்கள். குனியமுத்தூர் கிராமத்திலே நிலம் கையகப்படுத்தப்பட்டதை எதிர்த்து நில உரிமையாளர்கள் வழக்குத் தொடர்ந்து நிரந்தரத் தடையாணை பெற்றுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்துள்ளார்கள். (மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகின்றது.

**திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மேற்படி நகராட்சியில் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக, தாழ்த்தப்பட்ட பொதுமக்கள் வாடகை இடத்தில்தான் குடியிருந்து வந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, மக்களுடைய நலனைக் கருதி, நம்முடைய இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசிடம் பட்டா வழங்குவதற்குத் தடையாக உள்ள தடையாணையை நீக்குவதற்கு ஏதாவது திட்டம் உள்ளதா என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சரிடத்திலே நான் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுமனைப் பட்டா கோரி விண்ணப்பங்கள் வருகின்றபோது, வீட்டுமனைக்கு தேவையான, தகுதியான இடத்தை தேர்வு செய்து, அதற்கான நில உரிமையாளர்களை அணுகி, நிலத்தை கையகம் செய்வது சில நேரங்களில் இதுபோன்ற நில உரிமையாளர்கள் வழக்குத் தொடர்ந்த காரணத்தால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நிலத்தை கையகம் செய்கின்ற அந்த நடவடிக்கைகளை பேச்சுவார்த்தை மூலமாக நிலம் கையகம் செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டு, அதன்பேரில் இப்போது பேச்சுவார்த்தை மூலமாக நிலம் கையகம் செய்யப்பட்டு, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுபோன்ற வழக்குகள் நீதிமன்றத்திற்குச் செல்கின்ற சூழ்நிலையில் நாம் நீதிமன்றத்திற்குப் போகிறவர்களை அழைத்துப் பேசி, பேச்சுவார்த்தை மூலம் தடுப்பது ஒன்று. இரண்டாவது, அப்படி நீதிமன்றம் செல்கின்றபோது, நீதிமன்றத்தில் நாம் வழக்குத் தொடுத்து, வெற்றி பெற போராடித்தான் அது சம்பந்தப்பட்ட வழக்குகளை நாம் தீர்வுக்குக் கொண்டுவர முடியும் என்பதை இந்த நேரத்தில் மிக்க பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள 3 ஆம் நிலை

நகராட்சியினுடைய பகுதியில் மட்டுமல்லாமல் என்னுடைய தொகுதிக்குட்பட்ட கோவை மாநகராட்சியிலுள்ள ஆதிதிராவிட பொதுமக்கள் அன்றாடம் கூலி வேலைக்குச் சென்றுதான் தங்கள் குடும்பத்தை மிகவும் சிரமப்பட்டு நடத்திக் கொண்டு வருகின்றார்கள். ஆகவே, மேற்படி இடங்களில் வாழ்ந்து வருவதால், அரசின் மூலமாக எதிர்காலத்தில் தங்களுக்கு பட்டா கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, பொதுமக்கள் அரசின் மூலமாக பட்டாவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற இந்தக் காலக்கட்டத்தில், நகராட்சிப் பகுதியில் மற்றும் கோவை மாநகராட்சி பகுதியிலுள்ள மக்களுக்கு இலவசமாக வீட்டுமனைப் பட்டா எந்த இடத்தில் வழங்கினாலும், அந்த இடத்திற்குப் போவதற்கு அந்த மக்கள் தயாராக இருக்கின்றார்கள். ஆகவே, மேற்படி நகராட்சிப் பகுதிகளிலும், மாநகராட்சிப் பகுதிகளிலும் இலவசமாக பட்டா கொடுப்பதற்கு அரசிடம் ஏதாவது சிறப்புத் திட்டம் இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியபடி வீட்டுமனைப் பட்டாக்கள் கேட்டு, ஒரு குடும்பத்தில், ஒரு வீட்டில் இரண்டு, மூன்று குடும்பங்கள் கூட்டுக் குடும்பங்களாக இருப்பவர்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து வருகின்ற அப்படிப்பட்ட குடும்பத்தினருக்கு, அரசு மூலமாக இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டுமென்று, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் பேரில்தான், இப்போது தகுதியான இடங்களைத் தேர்வு செய்து, அது மாநகராட்சிப் பகுதியாக இருந்தாலும் சரி அல்லது நகராட்சிப் பகுதிகளாக இருந்தாலும் சரி, தகுதியான இடங்களை தேர்வு செய்து, அந்த இடத்தினுடைய நில உரிமையாளர்களை அணுகி, பேச்சுவார்த்தை மூலம் நிலம் கையகம் செய்து, நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்து, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றது. அப்படி தகுதியான இடங்கள் இருந்தும், நில உரிமையாளர்கள் கொடுப்பதற்கு மறுப்பார்களேயானால், மாநகராட்சிப் பகுதி அல்லது நகராட்சிப் பகுதிக்கு அருகிலுள்ள பகுதிகளில் அந்த இடங்களை பார்வையிட செய்து, அந்த நில உரிமையாளர்களிடம் பேசி, அதன்மூலமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கு நில உரிமையாளர்கள் சம்மதம் தெரிவிப்பார்களேயானால், அவர்களிடத்தில் பேசி சந்தை மதிப்பு இல்லாமல், இன்றைய அரசினுடைய மதிப்பின்



பேரில், அரசினுடைய மதிப்பிற்குட்பட்டு, நிலத்தின் உரிமையாளரிடம் பேசி, அதன்மூலமாக அவர்களுக்கு நிலத்தைப் பெற்று, தகுதியான பயனாளிகளுக்கு, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த மாநகராட்சிப் பகுதியிலோ அல்லது நகராட்சிப் பகுதியிலோ இடம் இருந்தால், தகுதியான இடமாக இருந்தால், நில உரிமையாளர்களிடத்தில் பேசலாம். இல்லையென்றால், நகராட்சிப் பகுதிக்கு அருகில் உள்ள கிராமப் பகுதியை ஒட்டிய பகுதியாகவோ, ஓரமாக இருக்கின்ற கிராமப் பகுதியாக இருந்தாலும், தகுதியான இடங்களைப் பார்வையிட்டு, அந்த தகுதியான இடங்களைத் தேர்வு செய்து, அந்த நில உரிமையாளர்களிடத்தில் பேசி, கண்டிப்பாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

*முற்பகல் 11–05*

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு இலவச பட்டா வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு, தனியார் தடை வாங்கி வழக்குகள் பல ஆண்டு காலமாக நிலுவையில் இருக்கின்றன. அந்த .வழக்குகளை விரைவிலே முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அரசு முன்வருமா என்பதோடு நிறைய ஆதிதிராவிட மக்களுடைய சுடுகாடுகள் எல்லாம் இன்றைக்கு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு ஆதிதிராவிட மக்களுக்கு சுடுகாடே இல்லை என்கின்ற நிலை உருவாகி வருவதைத் தடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைக்கு ஏற்ப கண்டிப்பாக ஆய்வு செய்து, எங்கெல்லாம் மயானப் பகுதியாக இருந்தாலும் சரி, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டிய இடங்களாக இருந்தாலும் சரி விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. கணேசன்.

**திரு. வி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மங்களூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டு இருக்கக்கூடிய திட்டக்குடி வட்டத்தில் டி. அகரம் என்கின்ற கிராமத்தில்

ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு 10 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலாகிறது. அதனை உடனடியாக அந்த ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவாரா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி கேள்வி கேட்டால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட நலத் துறையின் மூலமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குடியிருப்பு மனை வாங்கிக் கொடுக்கின்ற அந்தத் திட்டத்தின் அடிப்படையில் கிராமப்புறத்திலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற, ஒதுக்கப்பட்ட இடத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த ஆதிதிராவிடர்களைப் போக்குவரத்து வசதி படைத்திருக்கின்ற அந்தப் பகுதிகளுக்கு இடம் மாற்றம் செய்கிறபொழுது, நிலம் கையெடுப்பு செய்கிறபோது அந்த நிலத்தினுடைய இடமதிப்பீடு கூடியிருக்கின்ற காரணத்தினால் நிலத்தினுடைய உரிமையாளர்கள் நீதிமன்றங்களுக்குச் சென்று தடை வாங்கிவிடுகிறார்கள். இன்றைக்கு அமைச்சர் அவர்கள் அளிக்கின்ற பதிலிலே பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்று சொன்னாலும் நாளுக்கு நாள் நிலத்தினுடைய மதிப்பீடு கூடி வருகிற காரணத்தினால் ஏற்கெனவே அரசு நிர்ணயித்திருக்கிற விலை என்பது போதாத விலையின் காரணமாகவே இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படாமல் தடைபட்டு நின்று கொண்டிருக்கிறது. அதை எல்லாம் அரசு ஆய்வு செய்து மீண்டும் நிலத்தினுடைய, வாங்குகின்ற அந்த இட மதிப்பீடுகளை அதிகப்படுத்துவதன்மூலம் அந்த நிலத்தை வாங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? அப்படி வாங்குகிறபோது அந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குரிய நடவடிக்கை எடுப்பாரா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆய்வு செய்யும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 30, திரு. சி. இராசேந்திரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**30—**

## காகித ஆலை

***1918—திரு. சி. இராசேந்திரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் ஒரு காகித ஆலை தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூரில் காகித ஆலை தொடங்குவதற்குத் தேவையான வசதிகள் இல்லாததால் அங்கு ஒரு காகித ஆலை தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. இராசேந்திரன்.

**திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் என்னுடைய பணிவான வணக்கத்தைச் சமர்ப்பிக்கிறேன். தஞ்சை மாவட்டம் முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பி வாழ்கின்ற மாவட்டம். கடந்த காலங்களில் தஞ்சையை உயர்த்திய கரிகால்சோழன் கல்லணையைக் கட்டி வைத்தது போல, இராஜராஜசோழன் தஞ்சை பெரிய கோயிலைக் கட்டி வைத்தது போல, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சி காலத்தில் உலகத்திலே, முதன் முதலாக பல்கலைக்கழகத்தைக் கொண்டு வந்து தஞ்சையை உயர்த்திக் காட்டினார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு தஞ்சையிலே நடத்தி 20 ஆண்டு (மேசையைத் தட்டும் ஒலி) காலத்திற்குப் பின்னாலே வளர்ச்சி அடைய வேண்டிய தஞ்சையை உயர்த்திக் காட்டினார்கள். அதற்குப் பின்னால், இன்றையதினம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 9 ஆம் தேதி நலத் திட்டங்களைத் தொடங்கி வைக்கின்றபொழுது, 1962 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மருத்துவக் கல்லூரி மிகவும் மோசமான நிலையில்

இருந்தது; 'நான் மண்ணின் மைந்தன்' என்று சொல்லி ஆட்சி நடத்தியவர்கள் எல்லாம் அந்த மருத்துவக் கல்லூரி பக்கம் திரும்பிப் பார்க்காத நேரத்தில் அந்த மருத்துவக் கல்லூரிக்கு 30 கோடியே 46 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மருத்துவக் கல்லூரி ஒளிவிடுவதற்கு ஒளி விளக்காய் திகழ்ந்தவர் அம்மா அவர்கள். விவசாயிகளுடைய நலம் காக்கின்ற அரசாக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உழவர்களுக்குப் பாதுகாப்புத் திட்டத்தை வழங்கியிருக்கிறார்கள். விவசாயிகளுடைய நலம் காக்கின்ற அரசாக இன்றையதினம் வட்டித் தள்ளுபடியை செய்து கொடுத்து விவசாயிகளுடைய உள்ளத்திலே பால் வார்த்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீண்ட நாள் கோரிக்கையாக சொன்னதையே செய்வோம், செய்வதையே சொல்வோம் என்று சொல்லி, நாட்டு மக்களை எல்லாம் ஏமாற்றி வந்தவர்களைவிட, கேட்காமலேயே வாரி வழங்கி, எட்டாவது வள்ளலாக திகழ்ந்த புரட்சித் தலைவரின் வாரிசாக ஒன்பதாவது வள்ளலாக இன்றையதினம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கரும்புக்கு டன்னுக்கு 1,014 ரூபாயை வாரி வழங்கி பால் வார்த்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட விவசாயிகள், இன்றைய தினம் மாற்றுத் தொழில் செய்வதற்கு வேறு வழியில்லாமல் இருக்கிறார்கள். தஞ்சை மாவட்டம் விவசாயத்தை நம்பி வாழ்கின்ற மாவட்டமாகும். அந்த தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற வைக்கோலைப் பயன்படுத்தி காகிதத் தொழிற்சாலை உருவாக்க முடியும். அந்தக் காகிதத் தொழிற்சாலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இன்றைய தினம் விவசாயிகளைப் பொறுத்த வரை, உழவுத் தொழிலுக்கு மாடுகளைப் பயன்படுத்தி வந்த காலம் மாறி, இயந்திரத்தை பயன்படுத்துவதால் மாடு வளர்ப்பு குறைந்திருக்கிறது. விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற வைக்கோல் இன்றைய தினம் வீணாகின்றது. அந்த வைக்கோலைப் பயன்படுத்தி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு, தஞ்சை மாவட்டத்தினுடைய ஒளி விளக்காக திகழ்ந்து கொண்டிருக்கின்ற அம்மா அவர்கள், கருணை உள்ளத்தோடு, கருணைத் தாயாக உள்ள (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவினுடைய அரசானது, பரிசீலனை செய்து மீண்டும் காகிதத் தொழிற்சாலை அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காகித ஆலை தொடங்க வேண்டுமென்று





சொன்னால், குறைந்தபட்சம் ஒரு இலட்சம் டன் capacity உள்ள தொழிற்சாலை தொடங்கினால்தான் அது இலாபகரமாக அமைய முடியும். அப்படி ஒரு இலட்சம் டன் capacity உள்ள காகித ஆலை தொடங்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு 1,000 கோடி ரூபாய் மூலதனம் தேவைப்படுகிறது. அது மட்டுமல்ல. 700 ஏக்கர் நிலமும் தேவைப்படுகிறது. நிலமானது, வழிபாட்டுத் தலங்கள், முக்கியமான பொது இடங்கள், நகர்ப்புறங்களிலிருந்து வெகு தொலைவில் இருக்க வேண்டுமென்பது மத்திய அரசினுடைய ஒரு வழிகாட்டுதல் முறை இருந்துகொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல. மிக முக்கியமான பிரச்சினை இன்றைக்கு நாட்டிலே ஏற்பட்டிருக்கிற தண்ணீர் பிரச்சினை. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குடிதண்ணீருக்காக வீராணத்திலிருந்தே இன்றைக்கு 700 கோடி ரூபாய்க்கு மேலாக செலவிட்டு, சென்னைக்கு தினசரி குடிதண்ணீர் தந்து கொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட இந்தச் சூழ்நிலையில் நாள் ஒன்றுக்கு 50,000 கன மீட்டர் தண்ணீர் இந்த காகித ஆலைக்குத் தேவைப்படுகிறது. இதை ஆழ்குழாய்கள் அமைத்தோ, வேறு எந்த வழியிலோ தர வேண்டும். இந்தமாதிரிச் சூழ்நிலையில் அந்தத் தண்ணீரைப் பெறுவதற்கு கடினமான ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல வைக்கோலை வைத்துப் பயன்படுத்த வேண்டுமென்று சொன்னாலும், ஒரு இலட்சம் டன் capacity உள்ள காகித ஆலை தொடங்குவதற்கு, ஆண்டு ஒன்றுக்கு 5 இலட்சம் டன் வைக்கோல் தேவைப்படுகிறது. மூங்கில் ஆனாலும் சரி, கரும்புச் சக்கையானாலும் சரி, 5 இலட்சம் டன் கரும்புச் சக்கைத் தேவைப்படுகிறது. ஆக, இப்படிப்பட்ட சூழ்நிலையில், பணமும், தண்ணீரும் தேவைப்படுகின்ற சூழ்நிலையில், இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில், தஞ்சாவூரில் காகித ஆலை தொடங்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை வருத்தத்துடன் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் நிச்சயமாக இந்த அரசால் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, தஞ்சை

[2005 செப்டம்பர் 23

மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், தஞ்சை, திருவாரூர், நாகை ஆகிய மூன்று மாவட்டங்களும் ஒன்றுபட்ட மாவட்டமாக இருந்தது. முற்றிலும் விவசாயத்தையே நம்பி இருக்கக்கூடிய மாவட்டம் அது. எந்தத் தொழிலுமே இல்லாத மாவட்டமாகவும் அது இருக்கிறது. ஆகவே, தொழிலே இல்லாத அந்த ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் தொழில் தொடங்குவதற்குரிய முயற்சி எடுக்கப்பட வேண்டுமென்று பல முறை கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அவையிலே நானும் பேசியிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்து, 'மனம் இருந்தால் மார்க்கம் உண்டு' என்று சொன்ன அடிப்படையிலே விரைவாக ஒரு திட்டத்தை தீட்டுவதற்கான முயற்சி எடுத்து, தொழிலே இல்லாத அந்த தஞ்சை மாவட்டப் பகுதியிலே, விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு எந்தத் தொழில் தொடங்கலாம் என்று ஆய்வு செய்வதன் மூலமாக தொழிலைத் தொடங்குவதற்குரிய ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன; அதைச் செய்வதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராசேந்திரன். (குறுக்கீடு) அவர் கேட்கட்டும். திரு. இராசேந்திரன்.

**திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் மாவட்டத்தின் சார்பாக நன்றியினைச் சமர்ப்பிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகவும் தாயுள்ளத்தோடு இதை மறு பரிசீலனை செய்து தஞ்சாவூர் மாவட்டத்திற்கு தந்திருப்பதற்கு மாண்புமிகு வைத்திலிங்கம் அவர்களும், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் அம்மாவிற்கு என்றென்றும் நன்றிக் கடன்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்ட மக்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி முதல்வர் அம்மா அவர்களுக்கு வாழ்நாள் பூராவும் பாரம்பரியமாக நன்றிக் கடன்பட்டவர்கள். இந்த நன்றியை என்றைக்கும் மறக்கமாட்டார்கள் என்று கூறிக்கொண்டு அமர்கின்றேன்.



2005 செப்டம்பர் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 31, திரு. பி.ஆர். சுந்தரம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

முற்பகல் 11–15

**31—**

**தீவன விதைகள்**

***3247—திரு. பி.ஆர். சுந்தரம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கால்நடைக்கு தீவனமாக பயன்படும் பசும்புல், கூபாப்புல், பூனாட்சி போன்ற புல் வகைகளின் விதைகளை மானிய விலையில் கால்நடை வளர்ப்போருக்கு வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளுக்குத் தீவனமாக பயன்படும் பசும்புல், கூபாப்புல், பூனாட்சி போன்ற புல்வகை விதைகளை மானிய விலையில் கால்நடை வளர்ப்போருக்கு கால்நடை பராமரிப்புத் துறையினரால் வழங்குவதற்கான திட்டங்கள் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் இருந்த பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு 1 ரூபாய் உயர்த்தி, பால் நுகர்வோருக்கு விலையை உயர்த்தாமல் ஏழையெளிய விவசாயிகளின் வயிற்றிலே பாலை வார்த்தவர் தங்கத்தாரகை எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்கு பல்வேறு சலுகைகளை அளித்தவர், இன்றைக்கு கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1,014 ரூபாயை அறிவித்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அம்மா அவர்கள் அறிவித்த பால் கொள்முதல் விலை உயர்வின் காரணமாக தமிழ்நாட்டில் மாடுகள், எருமைகள் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன. வளர்ந்து வருகின்ற மாடுகளின் எண்ணிக்கை அதிக அளவில் இருப்பதாலும், கடும் வறட்சியின் காரணமாகவும் மாட்டுத் தீவனம் கிடைப்பது அரிதாக உள்ளது. அதனால் கால்நடைகளை சரியாக பராமரிக்க முடியாமல் விவசாயிகள் அவதியுறுகிறார்கள். இவற்றையெல்லாம் கருத்திலே கொண்டு விவசாயிகள் மேலும்

பயனடையும் வகையில், நான் கேள்வியில் கேட்ட பசும்புல், கூபாப்புல், பூனாட்சி போன்ற புல்களின் விதைகளை கால்நடை வளர்ப்போருக்கு மானிய விலையில் அளிக்க அம்மா அவர்களிடம் எடுத்துக்கூறி அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்று சொல்வார்கள். ஆனால், கேட்காமலும், தட்டாமலும் தமிழகத்திலே இருக்கின்ற ஏழையெளிய மக்களுக்காக பல்வேறு சாதனைகளை தினந்தோறும் அள்ளிக்கொடுத்த எங்களுடைய இதய தெய்வம் தங்கத்தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த வாயில்லாத ஜீவன்களுக்காக நீங்கள் கேட்டபடி பசும்புல், கூபாப்புல், பூனாட்சி போன்ற புல் வகைகளை, அந்த விதைகளை உங்களுக்கும், நேற்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.கா. மணி அவர்கள் பெண்ணாகரம் தொகுதியிலே இருக்கின்ற ஆடுகள் வளர்ப்போர் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொன்னார்களே, ஆகவே, அவர்களுக்கும் வேண்டிய அளவு மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலமும், எங்களுடைய கால்நடை பராமரிப்புத் துறையின் மூலமும், தேவையான புல் விதைகளை வளர்த்து தேவையான அளவு உங்களுக்கு இலவசமாகக் கொடுப்பதற்கு எங்களுடைய இதய தெய்வம் தங்கத்தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறறிவு உள்ள மக்கள்மீது மட்டுமே இரக்கம் காட்டுபவர் அல்ல எங்கள் அம்மா அவர்கள். கடந்த வாரம் சாலையிலே அடிபட்டுக்கிடந்த ஆட்டுக்குட்டியின்மீது கருணை காட்டி உடனடியாக அதற்கு சிகிச்சை அளித்து (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் பராமரிக்க அதன் உரிமையாளருக்கு உரிய தொகையையும் அளிக்க உத்தரவிட்டவர்தான் மனித நேயமிக்க தங்கத்தலைவி அம்மா அவர்கள். இன்று மானிய விலையில் பசும்புல், கூபாப்புல், பூனாட்சி போன்றவைகள் உற்பத்தி செய்து தருவதற்கு அரசு பரிசீலனை செய்யும் என்று கூறியதற்கு அமைச்சர் அவர்களுக்கும், அம்மா அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இந்தத் திட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு வாய்ப்பளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதுபோல் தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் இந்த வாய்ப்பினை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளிப்பார்கள், கொடுப்பார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 32, டாக்டர் திருமதி ரோகிணி, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**32—**

### மயில்கள் சரணாலயம்

***33763—டாக்டர் திருமதி ஆ. ரோகிணி:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, விராலிமலை முருகன் கோயிலில் உள்ள மயில்களைப் பாதுகாக்க சரணாலயம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளத்தூர் தொகுதி, விராலிமலை முருகன் கோயிலில் மயில்களைப் பாதுகாக்க சரணாலயம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*முற்பகல் 11-20*

**டாக்டர் திருமதி ஆ. ரோகிணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளத்தூர் தொகுதி, விராலிமலை அருள்மிகு முருகன் திருக்கோயில் வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தலம் ஆகும். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதரால் பாடப்பெற்ற சிறப்புமிக்க தொன்மையான திருத்தலம் ஆகும். விராலிமலையில் தேசிய பறவையாகவும், முருகனின் வாகனமாகவும் திகழ்கின்ற மயில்கள் நிறைந்து இருந்தன. ஆனால், தற்போது போதிய பாதுகாப்பின்மையால் மயில்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து வருகிறது. விராலிமலையில் போதிய மழையின்மையாலும் மயில்கள் தங்குவதற்கு புதர்கள் குறைந்து விட்டதாலும், உணவைத் தேடி மயில்கள் நீண்டதூரம் செல்கின்றன.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டுமே இருந்த மயில்கள் தற்போது திருச்சி, தஞ்சை, சிவகங்கை மாவட்டங்களுக்கும் செல்கின்றன. மேலும், விளை நிலங்களில் சென்று நெல் மணிகளை உண்பதைவிட அதிக அளவு சேதப்படுத்தவும் செய்கின்றன. இதனால் விவசாயிகளும் பாதிக்கப்படுகின்றனர். மேலும், சமூக விரோதிகள் சிலரால் மயில்கள் உணவுக்காகவும், மருந்துக்காகவும் வேட்டையாடப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மயில்களைப் பாதுகாக்க விராலிமலையில் சரணாலயம் அமைக்கும் திட்டம் இல்லையென்று சொன்னார்கள். ஆனாலும், தமிழக மக்களிடம் மட்டுமல்லாமல் விலங்குகளிடத்திலும் அன்பும், அக்கறையும் கொண்டு யானைகளுக்கும் முகாம் அமைத்துப் பாதுகாத்து வரும் கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாட்சியில் தேசியப் பறவை மயில்களைப் பாதுகாக்க விராலிமலையில் சரணாலயம் அமைக்கும் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**டாக்டர் திருமதி ஆ. ரோகிணி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்குப் பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *33*, திருமதி சி.எம். சூரியகலா, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**33—**

## உணவுப் பொருள் வழங்குதல்

***40542—திருமதி சி.எம். சூரியகலா:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவல் துறை காவலர்களுக்கு பிரதிமாதம் வழங்கப்படும் ரேஷன் போல வனத் துறை காவலர்களுக்கும் வழங்க அரசு முன்வருமா?





(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) காவல் துறை காவலர்களுக்கு பிரதிமாதம் வழங்கப்படும் ரேஷன் அரிசி போல வனத் துறை காவலர்களுக்கும் வழங்கும் உத்தேசம் இப்போது அரசிடம் இல்லை.

**திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு நாளும் புரட்சிகரமான திட்டங்களை அறிவித்து சாதனை படைக்கும் எங்கள் அம்மாவின் பாதம் தொட்டு வணங்கி என்னுடைய வினாவைத் தொடர்கிறேன். நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது பாதுகாப்பு. இந்திய நாடு ஒரு தீபகற்ப நாடு. இந்த நாட்டினுடைய இயற்கை வளத்தைப் பாதுகாத்தால்தான், இயற்கையாகப் பெய்யக்கூடிய மழை, தட்ப வெப்ப நிலைகள் எல்லாம் சீராக இருக்கும். அப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தால்தான் வேளாண் உற்பத்தி, விவசாயிகளின் வாழ்க்கை ஆகியவை பாதுகாக்கப்படும். எல்லாத் துறைகளிலும் தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்ற பெரும் முயற்சி எடுத்து வெற்றி கண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் துரித நடவடிக்கைக்கு ஏதுவாக இயற்கை வனச் சூழ்நிலைகளைப் பாதுகாக்க வனக் காவலர்கள் பெரிதும் உதவுகிறார்கள். வனத் துறை இரவு, பகல் பார்க்காமல் தனது பணியைச் சிறப்பாகச் செய்வதால், விலை உயர்ந்த மரங்கள், அரிய வகை விலங்குகள், மூலிகைகள், இசைக்குப் பெயர் போன மூங்கில்கள் பாதுகாக்கப்படுகின்றன. வனங்கள் பாதுகாக்கப்பட்டால்தான் சுற்றுச்சூழல் நன்றாக இருக்கும். வனக் காவலர்கள் காட்டை அழிக்கும் தேசத் துரோகிகளிடமிருந்து வனத்தைக் காப்பாற்றி வருகிறார்கள். அவர்களது கடின உழைப்பைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் காவல் துறைக்கு வழங்கியுள்ளது போல, வனத் துறை சரகர்களுக்கு ஜீப் மற்றும் உடனுக்குடன் தொடர்புகொள்ள செல்போன்கள் மற்றும் சரணாலயங்களைப் பாதுகாத்துக்கொள்ள ஒவ்வொருவருக்கும் பைனாகுலர் மற்றும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த – காவல் துறையில் பணியாற்றும் காவலர்களுக்கு ரேஷன் பொருட்களை சலுகை விலையில் வழங்குவது போல, வனக் காவலர்களுக்கும் ரேஷன் பொருட்களை சலுகை விலையில் வழங்க தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

[2005 செப்டம்பர் 23

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஆக்கபூர்வமான ஆலோசனை. ஆகவே, இது நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்; நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சி.எம். சூரியகலா.

**திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 34, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**34—**

## பத்மநாபபுரம் கோட்டை

***18730—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, வரலாற்றுச் சிறப்பு மிக்க பத்மநாபபுரம் கோட்டையின் சுவர்களில் பழுது ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் சீரமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதியில் அமைந்திருக்கின்ற பத்மநாபபுரம் கோட்டை தொல்லியல் துறையின் வசம் இல்லை. இருப்பினும், உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, அந்தச் சுற்றுச் சுவரைப் பராமரிப்பது பற்றி அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் தலைமையில் நடைபெற்று வருகின்ற இந்த நல்லாட்சியில் எனது பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதியில் உதயகிரி கோட்டையைப் பழுது பார்த்து, புனரமைக்க ரூபாய் 20 இலட்சம் ஒதுக்கீடு செய்து தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றியினைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எனது தொகுதியில் பழுதடைந்து மிகவும் மோசமாக இருந்து வரும் வரலாற்றுச் சிறப்பு மிக்க பத்மநாபபுரம் கோட்டையைப் பழுது பார்க்கும் பணி ஆய்வில் உள்ளது என்று அறிவித்ததற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, அரசின் ஏதாவது ஒரு சிறப்புத் திட்டத்தின்கீழ் மேற்படி பணியினை விரைந்து அரசு செயல்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.





முற்பகல் 11–25

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 35, திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**35—**

## அரசு தொழில்நுட்பக் கல்லூரி

***22532—திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனியில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தேனியிலே ஒரு அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 செப்டம்பர் 23

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் தங்கத் தாரகை அம்மா அவர்களை வணங்கி, இந்தியாவில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றி வரும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், விவசாயிகளுக்குக் கரும்புக்கு டன் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 1,014 ரூபாய் வழங்கியதற்கும், விவசாயிகள் கூட்டுறவுக் கடன்கள் பெற்றதில் 2006 வரை வட்டி, அபராத வட்டிகளைத் தள்ளுபடி செய்தமைக்கும், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு குறு விவசாயிகளுக்கு உழவர் பாதுகாப்புத் திட்டம் கொண்டு வந்தமைக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மாவட்டத்திலுள்ள அனைத்து விவசாயிகளின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் மிகவும் பின்தங்கிய மாவட்டமான தேனி மாவட்டத்தை முன்னோடி மாவட்டமாகவும், மாண்புமிகு அம்மா அவர்களின் தொகுதியான ஆண்டிப்பட்டியை இந்தியாவின் முதன்மைச் சட்டமன்றத் தொகுதியாகவும் மாற்றிய மாண்புமிகு அம்மா அவர்கள், தேனியில் அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரியும், அரசு கலைக் கல்லூரியும் அமைத்தும், பெண்களுக்கான தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தும், மாவட்ட விளையாட்டு அரங்கம், மாவட்ட நீதிமன்றக் கட்டடம், மகளிர் தொழிற்பயிற்சி நிலையம், மகளிர் குழுக்களுக்குப் பல்வேறு நலத் திட்டங்கள் வழங்கியும், அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சிப் பணிகளைத் துரிதமாக செய்து முடித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மாவட்ட மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தேனி தொகுதியில் 1978–ல் தொடங்கப்பட்ட தந்தைப் பெரியார் வாய்க்கால் மற்றும் பி.டி.ஆர். வாய்க்கால் திட்டத்தில் சென்ற வருடம் வரையிலும் வருடந்தோறும் செப்டம்பர் 15–ல் திறக்கின்ற தண்ணீரினை இந்த வருடம் 23 நாட்களுக்கு முன்னதாக விவசாயப் பொது மக்களின் கோரிக்கையினை ஏற்று, 22–08–2005 அன்று திறந்து, சுமார் 5,126 ஏக்கர் விவசாய நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சுகின்ற நிலையினை ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மிகவும் பின்தங்கிய மாவட்டமான தேனி மாவட்டத்திலுள்ள மாணவ, மாணவிகள் அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் பயில்வதற்கு மதுரை சென்று பயிலுகின்ற சூழ்நிலையினை மாற்ற, மாண்புமிகு அம்மா அவர்களின் மாவட்டமான தேனி மாவட்டத்தில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2005 செப்டம்பர் 23]

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தற்போது 239 தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அதிலே கிட்டத்தட்ட 80 ஆயிரம் ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் இருக்கின்றன. இந்த ஆண்டு நடைபெற்ற அந்தப் பொறியியல் கல்லூரி மாணவர்கள் சேர்க்கையிலே, ஒற்றைச் சாளர முறையில் தேர்வு நடைபெற்றதற்குப் பிறகு 11,051 காலி இடங்கள் இருக்கின்றன. தனியார் கல்லூரிகளிலே அந்த Management Quota–விலே தற்போது 6 ஆயிரம் இடங்கள் காலியாக இருக்கின்றன. அதுமட்டுமல்ல; தேனி மாவட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட அந்த மாணவர் சேர்க்கையிலே இருக்கின்ற மொத்த இடங்கள் 420. இதுவரை சென்ற ஆண்டு சேர்க்கையிலே, 420 இடங்களிலே 285 இடங்கள் காலியாக இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலையிலே ஒரு கல்லூரி ஆரம்பிக்கவேண்டும் என்றால், நிலம் நீங்கலாக 10 கோடி ரூபாய் மதிப்பீடு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இந்த ஆண்டு இப்போது 5,000 கூடுதலான இடங்களை இன்றைக்கு A.I.C.T.E. ஒதுக்கியிருக்கின்றது. ஆகமொத்தம், 23 ஆயிரம் இடங்கள் இந்த ஆண்டு மட்டும் காலியிடங்களாக தற்போது இருக்கின்ற நிலையிலே, புதியதாக தொழில்நுட்பக் கல்லூரி ஆரம்பிக்கின்ற வினா எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 36, திரு. எஸ். நடராஜன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**36—**

## பால் கூட்டுறவுச் சங்கம்

***41486—திரு. எஸ். நடராஜன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியத்தில் பால் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியத்தில், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்கக் கோரி பொது மக்களிடமிருந்து

[2005 செப்டம்பர் 23

வேண்டுகோள் மனு எதுவும் பெறப்படாத நிலையில், சங்கம் அமைக்க இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்திலேயே நாட்ராம்பள்ளி சட்டமன்றத் தொகுதி மிகவும் வறட்சியான தொகுதியாகும். இந்தத் தொகுதியில் கந்திலி ஊராட்சி ஒன்றியத்தில் 39 சிற்றூராட்சிகள் உள்ளன. இந்தச் சிற்றூராட்சிகளில் உள்ள மக்கள் பீடித் தொழில், ஊதுபத்தி தயார் செய்யும் தொழில் மற்றும் கறவை மாடுகளை வைத்து பால் உற்பத்தி செய்து ஜீவனம் செய்து வருகிறார்கள். இந்த ஒன்றியத்தில், அரசு 5 இடங்களில்தான் பால் உற்பத்தியாளர் சங்கத்தின்மூலம் சுமார் 3 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்து வருகின்றது. மேலும், சுமார் 20 ஆயிரம் லிட்டர் பால் தனியார் நிறுவனங்கள் கொள்முதல் செய்து, அதுவும் குறைந்த விலைக்குக் கொள்முதல் செய்து, பால் உற்பத்தியாளர்களுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் பணம் பட்டுவாடா செய்யாமல் ஏமாற்றி வருகின்றார்கள். இதைக் கருத்தில்கொண்டு, அரசு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தை அதிகமாகக் கூட்டி, மக்களுக்கு உதவி புரிவார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11–30*

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் கிராமப் பகுதியிலே எங்கெங்கெல்லாம் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் அமைக்க கோரிக்கை வைக்கப்படுகிறதோ, அதை உடனடியாக ஏற்றுக்கொண்டு சங்கங்கள் அமைத்திட வேண்டும் என்கிற உத்தரவை எங்களுக்கு இட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, கடந்த காலங்களில் சுமார் 1,017 கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றிலே குறிப்பாக 345 மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு, அவற்றிலே உற்பத்தி செய்யப்படுகிற பாலைக் கொள்முதல் செய்வதிலே, தடையில்லாமல் செயல்படுத்தப்படுகிறது. அதுபோல, நம்முடைய உறுப்பினர் அவர்கள் கோரியபடி அந்தப் பகுதிகளிலிருந்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க பால் உற்பத்தியாளர்களிடத்திலிருந்து கோரிக்கை வரப்பெற்றால் நிச்சயமாக அம்மா அவர்களுடைய அரசு சங்கங்களைப் பதிவு செய்வதோடு, அவர்கள் கொடுக்கிற அவ்வளவு பாலையும் கொள்முதல் செய்யும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 செப்டம்பர் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் அக்ரஹாரம் ஊராட்சியில் தென்றல் நகர், மள்ளப்பள்ளி ஊராட்சியில் டோல்கேட், கொத்தனப்பள்ளி என்ற இடங்களில் B சென்டர் என்று உருவாக்கி பால் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. பால் உற்பத்தி அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அந்த சென்டரில் இப்போது பால் வாங்குவதை நிறுத்தி வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த சென்டர் தொடர்ந்து பால் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்தப் பகுதியைக் குறிப்பிட்டு தகவல் தெரிவிக்கப்பட்டால் நிச்சயமாக அந்தப் பகுதியில் மட்டுமல்ல, மனுக்கள் மூலமாக, எந்தெந்த இடங்களிலிருந்து சங்கங்கள் அமைக்க கோரிக்கை வைக்கப்படுகிறதோ, நிச்சயமாக அதை அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றித் தரும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 37, திரு. மு. கார்த்தி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**37—**

## ஏரிகளை ஆழப்படுத்துதல்

*** 69639—திரு. மு. கார்த்தி:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதி, கன்னங்குறிச்சி மற்றும் பள்ளப்பட்டி ஏரிகளை ஆழப்படுத்தி மீன்கள் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கன்னங்குறிச்சி மற்றும் பள்ளப்பட்டி ஏரிகளை அவ்வூராட்சி ஒன்றியம் தூர்வாரி ஆழப்படுத்திய

[2005 செப்டம்பர் 23

பின்னர், மீன் வளர்க்க மீன் துறையை அணுகும்பட்சத்தில், மீன் வளர்க்கத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படும்.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கேட்கப்பட்டு மிக நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. இப்போது சேலம் மாநகராட்சியைப் பொறுத்தவரையில் பள்ளப்பட்டி பகுதியிலே மாநகராட்சி மூலமாக பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுவதற்காக பள்ளப்பட்டி ஏரியைப் பயன்படுத்துவதற்காக இந்தத் திட்டம் தீட்டப்பட்டு வருகிறது. இன்றைக்கு பள்ளப்பட்டி ஏரியைப் பொறுத்தவரை, 44 ஏக்கர் நிலப் பரப்பு உள்ளது. அந்த 44 ஏக்கர் நிலப்பரப்பிலே, 40 ஏக்கர் சேலம் மாநகராட்சியினுடைய பாதாள சாக்கடைத் திட்டம் அபிவிருத்தி செய்வதற்காக இந்தத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. மீதி இருக்கின்ற 4 ஏக்கர் பரப்பளவிலே மாநகரக் காவல் துறை ஆணையாளர் அலுவலகம் கட்டுவதற்காக ஏற்பாடு நடந்து கொண்டிருக்கின்றது. இன்றைக்கு தமிழகம் முழுவதும் உச்ச நீதிமன்றத்தினுடைய உத்தரவின் அடிப்படையிலே ஏரிகளிலே எந்தக் கட்டடமும் கட்டக்கூடாது என்ற சூழ்நிலையிலே, ஆக்கிரமிப்புகளை இடித்துக்கொண்டு வருகிற சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆனால், இந்தப் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுவதற்காக அரசு, சேலம் மாநகராட்சி பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு பல கோடி ரூபாய் நிதியொதுக்கி, அதைக் கட்டுவதற்கான பணி, கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுக்காலத்திற்கு மேலாக, தாமதமாக நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அரசு ஒரு தெளிவான முடிவெடுத்து, ஒன்று, இந்த ஏரிப் பரப்பளவில் அதைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமா; அல்லது, அந்த ஏரியில் மீண்டும் தண்ணீர் நிற்பதற்கு ஆவன செய்யுமா என்பதற்கு ஒரு விரிவான விளக்கம் தரவேண்டும். அதேபோல், கன்னங்குறிச்சி ஏரியைப் பொறுத்தவரை, இன்றைக்கு ஏற்காட்டிலிருந்து வருகின்ற மழை நீர் அத்தனையும் அந்த ஏரியின் சுமார் 70 ஏக்கர் பரப்பளவிலே தேக்கப்பட்டு, கிட்டத்தட்ட 8 சதுர கிலோமீட்டர் பரப்பளவிற்கு அந்தத் தண்ணீரை விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலை இருக்கின்றது. அந்த ஏரியிலே தண்ணீர் வந்து நிற்பதற்குத் தடையாக நிறைய ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. ஆகவே, அந்த ஆக்கிரமிப்புகளை நீக்கி, மீண்டும் அந்த ஏரியிலே தண்ணீர் வருவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*



2005 செப்டம்பர் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மீன்வளத் துறை அமைச்சரிடம் கேட்கிற கேள்வியாகக் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வளத் துறையைப் பொறுத்தளவிலே, உள்நாட்டு மீன் வளத்தை மேம்படுத்துவதற்காக புதியதாக குளங்கள் அமைக்கப்பட வேண்டுமென்றால், ஒரு ஐந்து ஹெக்டேர் அளவிற்கு நீங்கள் மேம்படுத்தவேண்டுமென்று நினைத்தால், ஒரு ஹெக்டேருக்கு 40,000 ரூபாய் மானியமும், அந்த மீன் குஞ்சு மற்றும் உரம் வளர்ப்பதற்கு ஒரு ஹெக்டேருக்கு 6,000 ரூபாய் பணமும் கொடுக்கப்படுகின்றது. தனியார்கள் அதுபோன்று அமைக்கவேண்டுமென்று நினைத்தால், அதற்கு அரசினிடத்திலே மனு கொடுத்தால் அது சம்பந்தமான உதவிகள் கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இன்றைக்கு கன்னங்குறிச்சி ஏரியைப் பொறுத்தவரை அரசு நடவடிக்கை எடுத்து அதிலே மீன்களை வளர்ப்பதற்கு முயற்சி செய்யவேண்டும். ஏனென்றால் ஏற்கெனவே அதிலே மீன்களை வளர்த்துக் கொண்டிருந்தார்கள். இப்போது அங்கே ஆக்கிரமிப்புகள் இருக்கின்ற காரணத்தால் அதைச் செய்ய முடியவில்லை. ஆகவே, அரசு இந்தப் பள்ளப்பட்டி ஏரி மற்றும் கன்னங்குறிச்சி ஏரி பரப்பிலே மீண்டும் தலையிட்டு அதிலே ஆக்கிரமிப்புகளை அகற்றி, அந்தப் பகுதியிலே தண்ணீரை சேகரித்து வைத்து, மீன் வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகளை நீங்கள் தொடர்பு கொண்டு கேட்டால் அதற்கான உதவிகள் உங்களுக்குச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 38, திரு. ஏ.எஸ். கண்ணன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

38—

## துப்புரவுப் பணி

***3764—திரு. ஏ.எஸ். கண்ணன்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துப்புரவுப் பணி தனியாரிடம் ஒப்பந்த அடிப்படையில் விடப்பட்டுள்ளதை அரசிடத்தில் கொண்டு வருவதற்கு திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சியில் மண்டலம் 6, 8 மற்றும் 10 துப்புரவுப் பணி தனியாரிடம் 7 ஆண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையிலே விடப்பட்டுள்ளது. எனவே, அக்காலக் கெடுவுக்குள் மீண்டும் அந்தப் பணியை சென்னை மாநகராட்சி எடுத்துக்கொள்ள இயலாது.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள 12,500 சிறப்பு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சிகளிலும், 130 நகராட்சிகளிலும், 6 மாநகராட்சிகளிலும் சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் இந்தத் துப்புரவுப் பணியைச் செய்கிறார்கள். இந்தத் துப்புரவுப் பணியில் பணிபுரிகின்ற இவர்களுக்கு எந்தவித சலுகையும் கிடைக்காமல் இருந்தது. ஆனால் 1983, 1984-ல் மரியாதைக்குரிய திரு. எச்.பி.என். ஷெட்டி அவர்கள் அதிகாரியாக இருந்தபோது நான் சார்ந்திருக்கின்ற சங்கத்தின்மூலம் பல கோரிக்கைகள் வைத்து அன்றைக்கு அந்தத் துப்புரவுப் பணியாளர்களுக்குப் பல சலுகைகள் வழங்கப்பட்டன. அடுத்து வந்த ஆட்சியாளர்கள் துப்புரவுப் பணி நிரந்தரம் என்பது நீக்கப்பட்டு தொகுப்பூதிய பணி என்று தந்தார்கள். மூன்று வருடங்களுக்குப் பிறகு அது நிரந்தரம் செய்யப்படும் என்று சொன்னார்கள். இப்போது ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் கழித்து ஏழு வருடங்களுக்கு மேலாக 20,000 துப்புரவுத் தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல் இன்றைக்கு குறைந்த ஊதியத்தில் அவதிபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு உத்தியோகம்



கிடைக்கும் என்ற நிலை இருந்ததைக்கூட மாற்றி இன்றைக்கு துப்புரவுப் பணி தனியாரிடம் விடப்பட்டிருக்கிறது. தயவுசெய்து அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பணி கிடைக்கின்ற இந்த துப்புரவுப் பணியை தனியார் துறையில் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் திட்டத்தை – எல்லா துறைகளிலும் மறுபரிசீலனை செய்கின்ற அரசு – இந்தத் தனியார் துறைக்கு விடப்பட்டிருக்கின்ற அந்தத் திட்டத்தையும் மாற்ற மறுபரிசீலனை செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், திருநெல்வேலி மாநகராட்சிகளில் ஒரு பகுதியிலும், திருவொற்றியூர், அம்பத்தூர், ஆலந்தூர், தாம்பரம், தேனி அல்லி நகரம், காரைக்குடி, சிவகாசி, இராஜபாளையம், திருவண்ணாமலை, ஆம்பூர், தென்காசி, கடையநல்லூர், தூத்துக்குடி, நாகர்கோயில், விருதுநகர், அருப்புக்கோட்டை, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய நகராட்சிகளில் ஒரு சில பகுதிகளிலும் துப்புரவுப் பணி தனியார்வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது பணியில் இருக்கும் துப்புரவுப் பணியாளர்களுக்கு வேலை இழப்பு ஏதும் ஏற்படவில்லை. நகரமைப்பு உள்ளாட்சி நிறுவனங்களில் காலியாகவுள்ள துப்புரவுப் பணியிடங்களில்தான் தனியார்வசம் துப்புரவுப் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு துப்புரவுப் பணி தனியார்வசம் ஒப்படைக்கப்பட்டதால் நகராட்சிக்கு 20 முதல் 30 சதவீதம் வரை செலவு குறைவாக ஏற்பட்டுள்ளது. ஆகவே, துப்புரவுப் பணியாளர்கள் எந்தவிதத்திலும் பாதிக்காத வண்ணம் தனியாரிடம் ஒப்படைக்கப்படுகின்ற பகுதிகளில் இருக்கின்ற துப்புரவுப் பணியாளர்களை மாற்றி மற்ற பகுதிகளிலே அவர்களைப் பணி நியமனம் செய்து அங்கே அவர்களுக்கு பணி வழங்கப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து மேலும் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகள் முழுமையாக வழங்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் தங்கள் வாயிலாக வேண்டுகோள் விடுக்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிரந்தரப் பணி அரசு ஊழியம் கிடைப்பது இந்தத் திட்டத்தின்மூலம் பறிக்கப்படுகிறது. ஆதலால், அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

[2005 செப்டம்பர் 23

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுமையும் இருக்கின்ற துப்புரவுப் பணியாளர்கள் ஒரு நாளைக்கு வேலை நிறுத்தம் செய்தால் ஊரே நாறிவிடும். அப்படிப்பட்டவர்கள் இன்றைக்கும் தற்காலிக துப்புரவுப் பணியாளர்களாக பல ஆண்டு காலம் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களை இந்த அரசு உடனடியாக நிரந்தரம் செய்து அவர்களுக்கு நல்லதொரு எதிர்காலத்தை உருவாக்கித் தர முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகம் முழுவதும் காலியாக இருக்கின்ற இடங்களிலே 12,618 கிராம ஊராட்சிகளிலே அங்கே மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக துப்புரவுப் பணிகள் மேற்கொண்டு செய்யப்படுகிறது. சிறப்புச் சிற்றூராட்சிப் பகுதிகளிலே திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தின் வாயிலாக எங்கு பணியிடங்கள் காலியாக இருக்கின்றனவோ அந்தப் பகுதியில் மட்டும்தான் அவர்களை வைத்து அந்தப் பகுதி சுத்தம் செய்யப்படுகிறது. ஆகவே, பணியில் இருக்கின்ற பணியாளர்களுக்கு முழுமையாக எந்த பாதிப்பும் இல்லாத வண்ணம் இன்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது அவர்களைப் பாதுகாத்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் பல்வேறு நகராட்சிகள், மாநகராட்சிகளில் துப்புரவுப் பணியாளர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. குறிப்பாக என்னுடைய வந்தவாசி தொகுதியிலே தேவைக்கு மிகக் குறைவாகத்தான் வந்தவாசி நகராட்சியிலே துப்புரவுத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே புதிதாக துப்புரவுத் தொழிலாளர்களை அதிக அளவில் தேர்ந்தெடுக்க வேண்டிய இந்த நிலையிலே பல்வேறு இடங்களில் ஒப்பந்த அடிப்படையில் புதிதாக துப்புரவுப் பணிக்கென்று தொழிலாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதிலே என்ன நிலைமை என்றால் ஒப்பந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கிறபோது ஒப்பந்ததாரர்கள் போட்டிக்காக மிகக் குறைந்த புள்ளியிலே அந்த ஒப்பந்தத்தில் நுழைகிறார்கள். பிறகு அதிலே ஒப்பந்த அடிப்படையிலே வேலை செய்கிற துப்புரவுத் தொழிலாளர்களுக்கு



2005 செப்டம்பர் 23]

மிகக் குறைந்த அளவிலே ஊதியம் கொடுக்கிறார்கள். இதனால் என்னவாகிறது என்றால், துப்புரவுத் தொழிலுக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்படக்கூடிய வாய்ப்பு தடுக்கப்படுகிறது. மாறாக ஒப்பந்த அடிப்படையிலே நியமிக்கப்பட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு அதிகப்படியான வேலைப்பளுவைக் கொடுத்து, அவர்களுடைய வேலை சுரண்டப்படுகிறது. துப்புரவுத் தொழிலாளர்கள் – ஒப்பந்த அடிப்படையிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களது வாழ்க்கை நிலை மிகவும் பின்னுக்குத் தள்ளப்படுகிறது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு, மகளிருக்கு இலவசமாக விவசாய நிலம் கொடுத்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவிகளுக்கு மிதிவண்டி கொடுத்திருக்கிறார்கள். ஆதிதிராவிட மாணவர்களுக்கு முழு மானியத்துடன் கல்விக் கடன் உதவித் தொகையைக் கொடுத்து இன்றைக்கு தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய ஆதிதிராவிட மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்திருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) தாய் உள்ளத்தோடு தாழ்த்தப்பட்ட மக்களை அணுகக் கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒப்பந்த அடிப்படையிலே துப்புரவுத் தொழிலாளர்கள் நியமிக்கப்படுவதால் அவர்களுடைய வாழ்க்கைத்தரம் நசுக்கப்படுவதோடு, புதிதாக வேலைக்குச் சேர்வதற்கான வாய்ப்பும் தடுக்கப்படுகிறது என்பதை உணர்ந்து அந்த நிலைமையை மாற்றி நிரந்தரத் தொழிலாளர்களை தேர்ந்தெடுப்பதற்கு வகை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து மக்களையும் பாதுகாத்துக் கொண்டிருக்கின்ற தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தக் கோரிக்கையையும் பரிசீலிப்பார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் செ.கு. தமிழரசன்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவுதான் தனியார் துறைக்கு இந்தத் துப்புரவுத் தொழிலை தாரைவார்த்துத் தந்தாலும், மனிதக் கழிவுகளை, மலக் கழிவுகளை, அகற்றுகிற மகத்தான தியாகப் பணியிலே மனமொற்றி ஈடுபட்டிருக்கின்றவர்கள் இந்தத் துப்புரவுத் தொழிலாளர்கள். கடந்த ஆட்சியின்போது, 50–க்கு மேற்பட்டவர்கள் எங்கெல்லாம் துப்புரவுத் தொழிலில் ஈடுபடுகிறார்களோ, அவர்கள் நிரந்தரப் பணியாளர்களாக

நியமிக்கப்பட வேண்டும் என்று இருந்த தொழிலாளர் நலச் சட்டத்தை சென்னை மாநகராட்சி நீங்கலாக, என்ற ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, அதைப் படிப்படியாக தமிழக நகராட்சிகள், மாநகராட்சிகள் எல்லாவற்றிலுமே அந்தத் திருத்தம் இல்லாமலேயே, இப்போது ஒப்பந்த அடிப்படையில் தருகின்ற நிலைமை இன்றைக்கு வந்திருக்கிறது. ஆகவே, சென்னை மாநகராட்சி நீங்கலாக என்ற அந்தச் சட்டத் திருத்தத்தை மீண்டும், சென்னை மாநகராட்சி உள்பட எங்கெல்லாம் 50 துப்புரவுத் தொழிலாளர்களுக்கு மேலே நியமிக்கப்படுகிற அவசியம் இருக்கிறதோ, அங்கெல்லாம் அவர்கள் பணி நிரந்தரப்படுத்தப்படும் தொழிலாளர்களாக நியமிக்கப்படவேண்டுமென்கின்ற அந்தத் தொழிலாளர் சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவார்களா? துப்புரவுத் தொழிலாளர்களுக்கு, துப்புரவு செய்கிற அவர்களுக்கு மாநகராட்சிகளிலே வசிப்பதற்கு இடம் கிடையாது. அவர்களுக்கு ஒரு குடியிருப்பை வாயற்ற அந்தத் தொழிலாளர்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு வழங்குமா என நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 39, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**39—**

## உள் விளையாட்டு அரங்கப் பணி

***67927—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாநகராட்சியின்மூலம் உப்பிலிபாளையம் பகுதியிலுள்ள ஜி.வி. குடியிருப்புப் பகுதியில் கட்டப்படுவதாக திட்டமிடப்பட்டுள்ள உள் விளையாட்டு அரங்கப் பணிகளை விரைவில் நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?



**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியின்மூலம் உப்பிலிபாளையம் பகுதியிலுள்ள ஜி.வி. குடியிருப்புப் ப்குதியில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

*முற்பகல் 11–45*

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் இன்றைக்கு விளையாட்டு வீரர்கள் சாதனை புரிந்து வருகிறார்கள். கோவையிலே ஒருசில தனியார் துறையின் மூலமாகக் கட்டப்பட்ட உள் விளையாட்டு அரங்கம் இருந்தாலும்கூட, அரசு மூலமாகவோ அல்லது மாநகராட்சி மூலமாகவோ ஒரு விளையாட்டு அரங்கம்கூட இல்லை. கோவையில் 19 வயதிற்குட்பட்ட ஷட்டில்காக் வீரர்கள் சர்வதேச ரீதியாக, இன்றைக்கு ஈடுபட்டு வருவதை இந்து பத்திரிகையும், தினமணி பத்திரிகையும் மிகப் பெரிய அளவிலே புகைப்படம் போட்டு, பேட்டி கண்டு விரிவாக எழுதி வருகிறது. இருந்தாலும்கூட, அங்கே ஓர் உள் விளையாட்டு அரங்கம் இன்றுவரை கட்டி முடிக்கப்படவில்லை. கட்டுவதற்கு ஒருவேளை ஜி.வி. residential area-விலே இடம் இல்லாவிட்டாலும்கூட, நம்முடைய சிறைச்சாலையிலே பயன்படுத்தாத இடம் நிறைய இருக்கிறது. அங்கேயாவது அல்லது நான் மிகவும் சிரமப்பட்டு, Registrar-General–னுடைய அனுமதியைப் பெற்று, பாம்புகள் நிறைந்த அந்தப் பழைய நீதிமன்ற வளாகத்தைச் சுத்தம் செய்து வைத்த பின்னாலே, அங்கே நான்கு ஏக்கர் நிலம் இருக்கிறது; அதிலேயாவது, ஓர் உள் விளையாட்டு அரங்கத்தைக் கட்டுவதற்கு, அரசு முன்வருமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதோடு, கேரள மாநிலத்திலே, ஒவ்வொரு மாவட்ட தலைநகரத்திலேயும், ஓர் உள் விளையாட்டு அரங்கம் இருக்கிறது; ஆனால், தமிழ்நாட்டிலே, அவ்வாறு இல்லை. ஆகையினாலே, இங்கே Volley Ball, Basket Ball, Shuttlecock, Badminton, Table Tennis, Ring Tennis போன்ற விளையாட்டுகளை விளையாடுவதற்கு, ஓர் உள் விளையாட்டு அரங்கம் மிக மிக அவசியம். அதைக் கட்டித் தருவதோடு, அமைந்திருக்கிற விளையாட்டுப் பல்கலைக்கழகத்திலே விளையாட்டு வீரர்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுமென்று கேட்டு, அரசு என்னுடைய கோரிக்கைகளையெல்லாம் பரிசீலித்து, கோவையிலே இருக்கிற சர்வதேச ரீதியான விளையாட்டு வீரர்களுக்கும் மரியாதை செய்யுமா என்பதை உங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[2005 செப்டம்பர் 23

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்ட விளையாட்டுக் குழுவின், *5–7–2002*–இல் நடைபெற்ற கூட்டத்தில், இளைஞர்களுக்கிடையே விளையாட்டு உணர்வினை ஊக்குவிக்கும் விதத்தில், கோவை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் விளையாட்டு அரங்கங்கள் அமைப்பது குறித்துத் தீர்மானம் நிறைவேற்றியதன் அடிப்படையில், கோவை மாவட்ட ஆட்சித் தலைவரால், கோவை மாநகராட்சி ஆணையருக்கு, *11–8–2002*–இல் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, கோவை மாநகராட்சியின்மூலம் ஓர் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, கோவை மாநகராட்சியால், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்குக் கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால், மைய அரசின் திட்டக் குழுவால், *2005–2006* ஆம் நிதியாண்டில், விளையாட்டு அரங்கங்கள் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை எனவும், *1–4–2005* முதல், அந்தந்த மாநில அரசுகளே அந்தத் திட்டங்களை நிறைவேற்றலாம் எனவும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தெரிவித்ததன்பேரில், உப்பிலிபாளையம் பகுதியிலுள்ள, ஜி.வி. குடியிருப்புப் பகுதியில், கோவை மாநகராட்சிக்குச் சொந்தமான காலியிடம், மொத்தம் *4.60* ஏக்கரிலே, *1.65* ஏக்கர் பரப்பிலே, ஓர் உள் விளையாட்டு அரங்கத்தைக் கோவை மாநகராட்சியின் பொது நிதியிலேயிருந்து, ரூ.*120* இலட்சம் மதிப்பீட்டிலே அமைத்திட, திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்கான ஆலோசகரை நியமிப்பதற்காக, நகராட்சி நிர்வாக ஆணையரிடம் அனுமதி கோரி, *17–9–2005*–லே கோவை மாநகராட்சி ஆணையரால் கடிதம் அனுப்பப்பட்டது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பணியின்மீது, அதற்குண்டான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜி.வி. residential area–விலே, இதைக் கட்டுவதற்கு, ஜி.வி. residential area, நகரின் மையப் பகுதியிலே இருப்பதாகச் சொல்ல முடியாது. ஒருவேளை, அங்கே அதைக் கட்ட முடியவில்லை என்று சொன்னால், நகரின் மையப் பகுதியான சிறைச்சாலை வளாகத்திலே, அதை விரைவாகக் கட்டி முடிக்க, அரசோ அல்லது மாநகராட்சியோ முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.



2005 செப்டம்பர் 23]

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, ஆய்வு செய்து முடிவெடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *40*, திரு. து. நெப்போலியன், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்.

**40—**

## விளையாட்டுத் திடல்

***66629—திரு. து. நெப்போலியன்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம், இராஜமங்கலம் பகுதியில் விளையாட்டுத் திடல் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லிவாக்கம், இராஜமங்கலம் பகுதியில் விளையாட்டுத் திடல் ஏற்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லிவாக்கம் பகுதியில், இராஜமங்கலத்தில், வடக்கு ஜெகன்னாத நகர், மூன்றாவது தெருவில், சுமார் *3* கிரவுண்டு மதிப்பிற்குண்டான இடம், சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இடம். அது, சிறுவர் விளையாட்டுத் திடல் என்று ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்குப் பெயர்ப் பலகை மட்டும் வைக்கப்பட்டுள்ளது. அதை, உடனடியாக விளையாட்டுத் திடலாக அரசு அமைத்துத் தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிக்கு உட்பட்ட இடம் என்பதனால், மாநகராட்சி, விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு, அந்த இடத்தைத் தந்தால், விளையாட்டு மைதானம் அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 செப்டம்பர் 23

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி வில்லிவாக்கம் தொகுதி, ஆசியாவிலேயே பெரிய தொகுதி. என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட இராஜமங்கலத்தில், சுமார் 2.5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கும் சிறுவர்கள், இளைஞர்கள் விளையாடுவதற்கு ஒரு விளையாட்டுத் திடலோ, விளையாட்டு மைதானமோ, முதியவர்கள் நடை பயிற்சி செய்வதற்குண்டான இடமோ ஏதுமில்லை. இந்தச் சிறுவர் விளையாட்டுத் திடல் என்ற ஒரு பெயர்ப் பலகை மட்டும் வைக்கப்பட்டு, அதில் எந்தவிதமான வசதியும் செய்து தரப்படாமல் இருக்கிறது. அதற்கு உடனடியாக அரசு, மாநகராட்சிக்கு ஆணை வழங்க வேண்டும், விளையாட்டுத் திடலாக அமைத்துக் கொடுப்பதற்கு. அதுமட்டுமல்லாமல், இவ்வளவு மக்கள் வாழ்கின்ற பகுதியிலே குறைந்தது 10 விளையாட்டுத் திடல்களாவது இருக்க வேண்டும். அதற்கேற்றாற்போல் அந்தப் பகுதியிலே பொதுக் கழிப்பிடங்கள் 2, 2 கிரவுண்டில் பழுதடைந்து, பயன்படுத்தப்படாமல் உபயோகப்படாமல் இருக்கிறது. அதை அந்தப் பகுதி மக்கள், உடனடியாக இடித்துவிட்டு விளையாட்டுத் திடலாக அமைத்துக் கொடுக்கும்படி கோரிக்கை வைத்துள்ளார்கள். அரசு உடனடியாகப் பார்வையிட்டு அதைச் செய்து தருமா? அதேபோல இராஜமங்கலத்தில் கால்நடை அரசு மருத்துவமனை ஒன்று உள்ளது. அதிலும் நிறைய காலி இடங்கள் உள்ளன. அதிலும் ஒரு விளையாட்டுத் திடல் அமைத்துத் தருமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11–50*

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு திறந்தவெளி விளையாட்டு அரங்கம், ஒரு வெளி விளையாட்டு அரங்கம், ஒரு நீச்சல் குளம் மற்றும் ஓர் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வட்டத் தலைநகரத்திலும் ஒரு சிறு விளையாட்டு அரங்கமும் உருவாக்கப்பட வேண்டும் என்பது மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் கொள்கையாகும். மாண்புமிகு உறுப்பினர், வில்லிவாக்கம் தொகுதியில் வட்டத் தலைநகரத்தில் 7 ஏக்கர் நிலம் அரசுக்குத் தந்தால், ஒரு சிறு விளையாட்டு அரங்கம் சுமார் 40 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும். மற்ற வினாக்களுக்கு தனி வினா எழுப்பினால் பதில் தரப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 செப்டம்பர் 23]

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்
## (பட்டியல்கள் 4, 5 மற்றும் 6) @
## (நான்காவது பட்டியல்)

**1—**

### சாலை புதுப்பித்தல்

**வினா எண் 40246—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு-ஓமலூர், மணப்பாக்கம்—ஒத்திவாக்கம் சாலையைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இச்சாலையினை, நபார்டு வங்கியிடமிருந்து பெறவிருக்கும் நிதி ஆதாரத்தைப் பொறுத்து முன்னுரிமை அடிப்படையில் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**2—**

### தார்ச் சாலை

**வினா எண் 42467—திருமதி எஸ். கனிதா சம்பத்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதி, திருப்போரூர் ஒன்றியத்தில் அடங்கிய மாம்பாக்கம் முதல் திருப்போரூர் சாலையை தார்ச் சாலையாக அமைத்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் சாலையானது 2004-2005 ஆம் ஆண்டின் பராமரிப்புப் பணிகளின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2005 செப்டம்பர் 23

ரூ.26.00 இலட்சத்திற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகளை துரிதமாக முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**3—**

## சட்டக் கல்லூரி துவங்குதல்

**வினா எண் 71469—திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையில் சட்டக் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**4—**

## நியாயவிலைக் கடைகளுக்குக் கட்டடம்

**வினா எண் 44372—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆலங்காடு ஊராட்சி, குடமுரட்டி, சியாளம் ஊராட்சி, எடமணல் ஊராட்சியிலுள்ள வரிசைபத்து மற்றும் கொடியம்பாளையம் ஊராட்சிகளிலுள்ள நியாயவிலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 செப்டம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆலங்காடு ஊராட்சியில் குடமுரட்டி பகுதியைச் சேர்ந்த 75 குடும்ப அட்டைகள் மேற்படி ஊராட்சியில் உள்ள ஆலங்காடு முழுநேர நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குடமுரட்டியில் நியாயவிலைக் கடை கட்டடம் கட்டும் நிலை எழவில்லை.

கொடியம்பாளையம் கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தால் கொடியம்பாளையம் ஊராட்சியில் 225 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாயவிலைக் கடை செயல்பட்டு வருகிறது. மேற்படி நியாயவிலைக் கடை, ஊராட்சி ஒன்றியத்தால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள பொது இடத்தில் இயங்கி வருகிறது. இந்த நியாயவிலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

கொள்ளிடம் ஒன்றியம், வரிசைபத்து கிராமத்தில் நியாயவிலைக் கடை ஏதுமில்லை. வரிசைபத்து கிராம குடும்ப அட்டைகள் 1.5 கி.மீ. தொலைவிலுள்ள எடமணல் நியாயவிலைக் கடையில் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி நியாயவிலைக் கடைக்கு கிராமிய நலத் திட்டங்களின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படின் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சியாளம் ஊராட்சியில் உள்ள நியாயவிலைக் கடை பகுதிநேரக் கடையாகும். இக்கடை 345 குடும்ப அட்டைகளுடன் சியாளம் ஊராட்சியின் கட்டடத்தில் வாடகையின்றி செயல்படுகிறது.

**5—**

## குடும்ப அட்டை வழங்குதல்

**வினா எண் 45725—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 23

(அ) சீர்காழி ஒன்றியம், காரைமேடு ஊராட்சி, கன்னிகோவில் தெரு 12 ஆதிதிராவிட குடும்பங்களுக்கு குடும்ப அட்டை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி வட்டம், காரைமேடு ஊராட்சி, கன்னிகோவில் தெருவில் வசிக்கும் 12 ஆதிதிராவிட குடும்பங்களுக்கும் குடும்ப அட்டைகள் அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட்டுவிட்டன.

**6—**

## முன்பண உதவி

**வினா எண் 53975—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் உள்ள கூட்டுறவு வங்கிக்கு தலைமைக் கூட்டுறவு வங்கியிலிருந்து முன் பணம் கொடுத்து உதவ அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

(இ) எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தலைமைக் கூட்டுறவு வங்கி கோயம்புத்தூர் மாவட்டம் வால்பாறையிலுள்ள கூட்டுறவு வங்கிக்கு நேரடியாக கடன்களாகவோ, முன்பணங்களாகவோ கொடுத்து உதவுவதற்கு வங்கியின் விதிகளில் இடமில்லை.

(ஆ) தலைமைக் கூட்டுறவு வங்கி, விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி தொடர்பான பல்வேறு காரியங்களுக்காக கடன்கள் மற்றும் முன்பணங்களை மறுநிதியுதவியாக ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள மத்திய கூட்டுறவு வங்கி மூலமாகவே வழங்க இயலும்.



2005 செப்டம்பர் 23]

விவசாய மற்றும் விவசாயமில்லாத பல்வேறு காரியங்களுக்கு தலைமைக் கூட்டுறவு வங்கி தனது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தும், தேசிய வங்கியிடமிருந்து (NABARD) மறுநிதியுதவி பெற்றும் 22 மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக குறுகிய காலக் கடன்களாகவும், மத்திய காலக் கடன்களாகவும் வழங்கி வருகிறது. எனவே, நகரக் கூட்டுறவு வங்கிகள் தங்களுக்குத் தேவைப்படும் நிதியுதவியை கடன்களாகவோ, காசுக் கடன்களாகவோ அவை சார்ந்துள்ள மாவட்டத்திலுள்ள மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாகவே பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் இது தொடர்பாக பல்வேறு திட்டங்களும் நடைமுறையில் உள்ளன.

(இ) கேள்வி எழாது.

**7—**

## மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம்

**வினா எண் 54595—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி பொதுநல நிதியிலிருந்து தாதகாபட்டி மகப்பேறு மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி பொதுநல நிதியில் ரூ.16,082/- மட்டுமே இருப்பு உள்ளதால் தாதகாபட்டி மகப்பேறு மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்ட நிதி உதவி செய்ய வாய்ப்பில்லை.

(ஆ) எழவில்லை.

**8—**

## வைப்புத் தொகை

**வினா எண் 57327—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 23

(அ) சேலம் மாவட்டத்தில் மத்திய கூட்டுறவு வங்கியின் 2003 ஆம் ஆண்டு டிசம்பர் வரை மூலதனம் எவ்வளவு?

(ஆ) 2003 ஆம் ஆண்டு மட்டும் பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட வைப்புத் தொகை (டெபாசிட்) எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் மத்திய கூட்டுறவு வங்கியில் 2003 ஆம் ஆண்டு டிசம்பர் வரை மூலதனம் ரூ.1,02,902.36 இலட்சம்.

(ஆ) 2003 ஆம் ஆண்டு மட்டும் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட வைப்புத்தொகை ரூ.28,292.52 இலட்சம்.

**9—**

### பண்டகசாலைகள்

**வினா எண் 59449—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் என்.டி.சி. ஆலைகளில் இயங்கிவரும் பண்டகசாலைகள் மூடப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மண்டலத்தில் என்.டி.சி. ஆலைகளில் இயங்கி வந்த ஊழியர் கூட்டுறவு பண்டகசாலைகள் நல்ல முறையில் செயல்படாததாலும் பண்டகசாலைகள் நலிவடைந்து உறுப்பினர்கள் ஆலை நிர்வாகத்திடமிருந்து விருப்ப ஓய்வு பெற்றுச் சென்றுவிட்டதாலும், மூடப்பட்டுள்ள பண்டகசாலைகளை திறந்து செயல்படுத்த சாத்தியக் கூறுகள் இல்லை.



2005 செப்டம்பர் 23]

**10—**

### நியாயவிலைக் கடை அமைத்தல்

**வினா எண் 61729—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மடவாமேடு கிராமத்தில் புதியதாக நியாயவிலைக் கடை கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மடவாமேடு கிராமத்தில், மடவாமேடு மீனவர் கூட்டுறவுச் சங்கம் மூலமாக ஏற்கெனவே ஒரு நியாயவிலைக் கடை இயங்கி வருகிறது.

(ஆ) இந்த நியாயவிலைக் கடைக்கு கட்டடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**11—**

### மத்திய கூட்டுறவு கிளை வங்கி

**வினா எண் 63813—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசலில் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்றை திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 செப்டம்பர் 23

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**12—**

**மண்ணெண்ணெய் வழங்குதல்**

**வினா எண் 65110–திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்வராயன்மலை, சங்கராபுரம், கள்ளக்குறிச்சி, சின்னசேலம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள கிராமங்களில் மண்ணெண்ணெய் பற்றாக்குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கல்வராயன்மலை, சங்கராபுரம் ஊராட்சி உள்ளடங்கிய சங்கராபுரம் வட்டம் மற்றும் சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம் உள்ளடங்கிய கள்ளக்குறிச்சி வட்டத்திற்கு மொத்த மண்ணெண்ணெய் தேவை முறையே 247 கி.லி. மற்றும் 329 கி.லி. ஆகும். விழுப்புரம் மாவட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு 2,100 கிலோ லிட்டரில் சங்கராபுரம் வட்டத்திற்கு 216 கிலோ லிட்டரும் கள்ளக்குறிச்சி வட்டத்திற்கு 288 கிலோ லிட்டரும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. தற்போது எரிவாயு இணைப்பு பெற்றவர்களின் குடும்ப அட்டைகளில் அதற்கான விவரம் பதிவு செய்யும் பணி முடுக்கி விடப்பட்டு நடைபெற்று வருகிறது. இப்பணி முழுமை பெறும் போது மண்ணெண்ணெய் தேவை குறையும். தற்போது ஒதுக்கீடு செய்யப்படும் மண்ணெண்ணெயின் மூலம் பெரும்பான்மையான நுகர்வோரின் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

மத்திய அரசிடம் இருந்து முழுத் தேவையை பூர்த்தி செய்யும் அளவில் மண்ணெண்ணெய் பெறப்படும் சமயத்தில் அனைத்து நகர்களுக்கும் குறைபாடின்றி மண்ணெண்ணெய் வழங்கப்படும்.



2005 செப்டம்பர் 23]

**13—**

**நியாயவிலைக் கடைக்குக் கட்டடம்**

**வினா எண் 65637–திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கைலாபுரம் ஊராட்சியில் நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கயிலாயபுரம் ஊராட்சி என்பது கைலாபுரம் ஊராட்சியாகும். கைலாபுரம் ஊராட்சியில் நியாயவிலைக் கடை ஏதும் செயல்படவில்லை. கைலாபுரம் கிராமத்தில் 227 குடும்ப அட்டைகளும், கைலாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்படும் மத்தியம்பட்டி காலனியில் உள்ள முழுநேரக் கடையுடன் இணைக்கப்பட்டு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கைலாபுரம் ஊராட்சியில் நியாயவிலைக் கடை ஏதும் செயல்படாததால் புதிதாக நியாயவிலைக் கடை கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

**14—**

**நியாயவிலைக் கடைக்குக் கட்டடம்**

**வினா எண் 65638–திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், காட்டேரி ஊராட்சி, இலக்கம்பட்டி காலனியில் நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 செப்டம்பர் 23

விடை—

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், காட்டேரி ஊராட்சி, இலக்கம்பட்டி காலனியில் நியாயவிலைக் கடை ஏதும் செயல்படவில்லை. இலக்கம்பட்டி காலனியில் உள்ள 172 குடும்ப அட்டைகளும், பாவக்கல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் இலக்கம்பட்டி நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. இலக்கம்பட்டி நியாயவிலைக் கடை மொத்தம் 417 குடும்ப அட்டைகளுடன் முழுநேரக் கடையாக பஞ்சாயத்துக் கட்டடத்தில் வாடகையின்றி இலவசமாக செயல்பட்டு வருகிறது. இலக்கம்பட்டி காலனியில் நியாயவிலைக் கடை ஏதும் செயல்படாத நிலையில் புதிய கட்டடம் ஏதும் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

15—

## கடனுதவி

**வினா எண் 67326—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002-2003, 2003-2004 ஆம் ஆண்டுகளில் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வேளாண் விளைபொருள் ஈட்டுக் கடனுதவி எவ்வளவு வழங்கப்பட்டது?

(ஆ) பயனாளிகள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வேளாண் விளைபொருள் ஈட்டுக் கடனுதவி வழங்கப்பட்ட விவரம் பின்வருமாறு:

| வருடம் | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 2002-2003 | ரூ.77.19 |
| 2003-2004 | ரூ.53.48 |



2005 செப்டம்பர் 23]

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் 2002-2003ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஈட்டுக் கடனுதவிமூலம் 89 பயனாளிகளும், 2003-2004 ஆம் ஆண்டில் 195 பயனாளிகளும் ஈட்டுக் கடன்மூலம் பயன்பெற்றுள்ளனர்.

16—

## அருள்மிகு கண்ணி அம்மன் கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 56653—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, எடமணல் மற்றும் ஆச்சாள்புரம் ஊராட்சிகளிலுள்ள கண்ணி அம்மன் கோயிலை புதியதாக கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், எடமணல் அருள்மிகு கண்ணி அம்மன் கோயில் இலாகா கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் புதுப்பித்தல் பணிக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில் திருப்பணி திட்டத்தின்கீழ் ரூ.25,000/- அனுமதிக்கப்பட்டுள்ளன. திருப்பணி வேலைகள் 70% முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகளையும் முடித்து விரைவில் கும்பாபிஷேகம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

17—

## கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 56689—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 23

(அ) சீர்காழி தொகுதி, குன்னம் ஊராட்சியிலுள்ள பத்ரகாளியம்மன் கோயிலைப் புதிதாக கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், குன்னம், அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயில் இலாகா கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் புதுப்பித்தல் பணிக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில் திருப்பணி திட்டத்தில் ரூ.25,000/-க்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி திருக்கோயில் மதிப்பீடு கும்பகோணம் உதவி ஆணையர் உத்தரவுப்படி அறங்காவலர் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு, ரூ.25,000/-க்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. திருப்பணி வேலைகள் 70% முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகளை முடித்து விரைவில் கும்பாபிஷேகம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**18—**

## அருள்மிகு ஆதிபராசக்தி கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 56739—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், மருதங்குடி ஊராட்சி, ஆலஞ்சேரியிலுள்ள ஆதிபராசக்தி கோயிலைப் புதியதாக கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சீர்காழி ஒன்றியம், மருதங்குடி ஊராட்சி, ஆலஞ்சேரியிலுள்ள



2005 செப்டம்பர் 23]

ஆதிபராசக்தி திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இவற்றின் நிர்வாகம் கிராம பொதுமக்கள் பொறுப்பில் உள்ளது. இத்திருக்கோயில் துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ. 25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால் மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

**19—**

## கோயில்கள் கட்டுதல்

**வினா எண் 56756—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, அகரம் வட்டாரம், திருப்பணி வட்டாரம் தெருவில் கட்டி முடிக்கப்படாமல் உள்ள அருள்மிகு ஸ்ரீமுருகன் கோயில் மற்றும் மேலத் தெருவிலுள்ள அருள்மிகு முனீஸ்வரன் கோயில்களைக் கட்டி முடிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, அகரம் வட்டாரம், திருப்பணி வட்டாரம் தெருவில் கட்டி

[2005 செப்டம்பர் 23

முடிக்கப்படாமல் உள்ள அருள்மிகு ஸ்ரீமுருகன் கோயில் மற்றும் மேலத் தெருவிலுள்ள அருள்மிகு முனீஸ்வரன் திருக்கோயில் ஆகியவை ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளன. இவற்றின் நிர்வாகம் கிராம பொதுமக்கள் பொறுப்பில் உள்ளது. இத்திருக்கோயில்கள் துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதி இல்லாத திருக்கோயில்களாகும். அரசால் வழங்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டிய நிலையில், மேற்காணும் திருக்கோயில்களுக்குத் தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

**20—**

## கோயில் கட்டுதல்

**வினா எண் 56758—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆணைக்காரன் சத்திரம் ஊராட்சி, அனுமந்தபுரம் தெரு மற்றும் சிங்கார காளியம்மன் கோயில்களுக்கு கோயில் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், கொள்ளிடம் ஒன்றியம், ஆணைக்காரன் சத்திரம், அனுமந்தபுரம் தெரு, மற்றும் சிங்கார காளியம்மன் திருக்கோயில்கள் ஆதிதிராவிடர் வாழும்



2005 செப்டம்பர் 23]

பகுதியில் உள்ளன. இவற்றின் நிர்வாகம் கிராம பொதுமக்கள் பொறுப்பில் உள்ளது. இத்திருக்கோயில்கள் துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயில்களாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஓர் ஆலயத்திற்கு தலா ரூ .25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில் சீர்காழி தொகுதியில் உள்ள எல்லாத் திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயில்களுக்குத் தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

**21—**

## திருக்கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 56765—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, நெப்பத்தூர் ஊராட்சியில் குறைவளூர் தெருவிலுள்ள லெட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலைப் புதிதாக கட்டுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, நெப்பத்தூர் ஊராட்சியில் குறைவளூர் தெருவில் அருள்மிகு உக்கிரநரசிங்கப்பெருமாள் திருக்கோயில் என்ற பெயரில் பட்டியலில்

[2005 செப்டம்பர் 23

சேராத, கும்பகோணம் உதவி ஆணையர் பிரிவிற்குட்பட்ட திருக்கோயில் உள்ளது. இதன் நிர்வாகம் திரு. என். கிருஷ்ணமூர்த்தி என்ற பரம்பரை அறங்காவலர் நிர்வாகத்தில் உள்ளது. சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ளவாறு நெப்பத்தூர் ஊராட்சியில் குறைவளூர் தெருவில் அருள்மிகு லெட்சுமி நாராயணப் பெருமாள் என்ற திருக்கோயில் இல்லை. அருள்மிகு உக்கிரநரசிங்கப்பெருமாள் திருக்கோயில்தான் உள்ளது. இத்திருக்கோயிலின் திருப்பணி வேலைகள் திருக்கோட்டியூர் சௌமிய நாராயணப்பெருமாள் டிரஸ்டின் மூலம் உபயமாக மேற்கொள்ளப்பட்டு 7-2-1999-ல் மகாசம்ப்ரோஷணம் நடைபெற்றுள்ளது.

**22—**

## கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 57034–திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, தாண்டவன்குளம் ஊராட்சியில் பிரதான சாலையிலுள்ள மகா காளியம்மன் ஆலயம், உச்சிமகா காளியம்மன் ஆலயம் மற்றும் அண்ணா நகரிலுள்ள கன்னியம்மன் கோயிலைப் புதியதாகக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், தாண்டவன்குளம் ஊராட்சியிலுள்ள பிரதான சாலையிலுள்ள மகா காளியம்மன் ஆலயம், உச்சிமகா காளியம்மன் திருக்கோயில் மற்றும் அண்ணா நகரில் உள்ள கன்னியம்மன் திருக்கோயில்கள் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளன. இதன் நிர்வாகம் கிராமப் பொதுமக்கள் பொறுப்பில் உள்ளது. இத்திருக்கோயில்கள் துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயில்களாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஓர் ஆலயத்திற்கு தலா ரூ. 25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும்



2005 செப்டம்பர் 23]

சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லாத் திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயில்களுக்குத் தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

**23—**

## ஆலயம் புதுப்பித்தல்

**வினா எண் 57042–திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல் ஊராட்சி, அம்பேத்கர் நகரிலுள்ள பொன்னியம்மன் கோயில் மற்றும் ஸ்ரீவரதராஜபெருமாள் ஆலயத்தைப் புதிதாகக் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல் ஊராட்சி, அம்பேத்கர் நகரில் உள்ள பொன்னியம்மன் மற்றும் வரதராஜபெருமாள் திருக்கோயில்கள் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளன. இதன் நிர்வாகம் கிராமப் பொதுமக்கள் பொறுப்பில் உள்ளது. இத்திருக்கோயில்கள் துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயில்களாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஓர் ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு

வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லாத் திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயில்களுக்குத் தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

**24—**

## திருக்கோயில் கட்டுதல்

**வினா எண் 57047—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வேட்டங்குடி ஊராட்சி, கூழையாரிலுள்ள ஸ்ரீகாளியம்மன் திருக்கோயிலைக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், வேட்டங்குடி ஊராட்சி, கூழையாரிலுள்ள ஸ்ரீகாளியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இதன் நிர்வாகம் கிராம பொதுமக்கள் பொறுப்பில் உள்ளது. இத்திருக்கோயில் துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஓர் ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்குத்





திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லாத் திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்குத் தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

**25—**

## கோயில் குளம் தூர் வாருதல்

**வினா எண் 58350—திரு. ப. அரசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஸ்ரீவீரமாகாளி அம்மன் கோயில் குளத்தை தூர் வாரி தெப்ப உற்சவம் செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம் மற்றும் நகர், அருள்மிகு வீரமாகாளி அம்மன் திருக்கோயில் திருக்குளத்தில் நீர் நிறைந்துள்ளதால் தூர் வார இயலாத நிலை உள்ளது. 2005 ஆம் ஆண்டில் ஆடி மாதம், ஆடிப் பெருவிழாவின்போது, 18 ஆம் நாளில் தெப்ப உற்சவம் நடத்தப்படும்.

**26—**

## கோயில் கட்ட நிதியுதவி

**வினா எண் 58698—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, 16-வது வார்டு கீழத் தென்பாதியிலுள்ள ஸ்ரீகாளியம்மன் கோவில் கட்டுவதற்கு நிதியுதவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், 16-வது வார்டு, கீழத் தென்பாதியில் உள்ள ஸ்ரீகாளியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இத்திருக்கோயிலின் நிர்வாகம் கிராமப் பொதுமக்கள் பொறுப்பில் உள்ளது. இத்திருக்கோயில் துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ் ' ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஓர் ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லாத் திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்குத் தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

**27—**

## கோயில் கட்ட நிதி உதவி

**வினா எண் 59672—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், பெருந்தோட்டம் ஊராட்சி, அகரபெருந்தோட்டத்திலுள்ள திருமுடி சாஸ்தா அய்யனார் கோயில் கட்ட நிதி உதவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, பெருந்தோட்டம் ஊராட்சி, அகர பெருந்தோட்டத்தில் உள்ள திருமுடி சாஸ்தா அய்யனார் கோயில் திருவெண்காடு அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோயிலின் உபகோயிலாகும். மேற்படி திருக்கோயில் திருப்பணிகள் முடிக்கப்பட்டு 22-1-1996-ல் குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது. 12 ஆண்டுகள் நிறைவடையாத நிலையில் குடமுழுக்கு தற்போதைக்குத் தேவையில்லை. மேலும், இத்திருக்கோயில் சட்டபிரிவு 46 (3)-ன்கீழ் உள்ள திருக்கோயிலின் உபகோயிலாக இருந்து வருவதால், திருப்பணி நிதியுதவி வழங்கத் தேவையில்லை.

**28—**

## ஆலயம் கட்டுதல்

**வினா எண் 59673—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, நெம்மேலி கிராமத்தில் கன்னிகாபரமேஸ்வரி ஆலயம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், நெம்மேலி கிராமத்தில் உள்ள கன்னிகாபரமேஸ்வரி திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இதன் நிர்வாகம் கிராமப் பொதுமக்கள் பொறுப்பில் உள்ளது. இத்திருக்கோயில் துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ் ஆதிதிராவிடர்

மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 2.50 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஓர் ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லாத் திருக்கோயிலுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்குத் தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

**29—**

## கோயில் கட்ட நிதியுதவி

**வினா எண் 59880—திரு நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, வரதம்பட்டு ஊராட்சி, நடுத்திட்டு தெருவில் உள்ள மாணிக்க நாச்சியார் அம்மன் கோயில் கட்ட நிதியுதவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை தொகுதி, வரதம்பட்டு ஊராட்சி, நடுத்திட்டு தெருவிலுள்ள மாணிக்க நாச்சியார் அம்மன் ஆலயம் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இதன் நிர்வாகம் கிராமப் பொதுமக்கள் பொறுப்பில் உள்ளது. இத்திருக்கோயில் துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 2,50 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஓர்



ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லாத் திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்குத் தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

**30—**

## கோயிலில் ஊருணிகள் மராமத்து

**வினா எண் 61550—திரு. ப. அரசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, நாகுடி ஊராட்சி, நாகுடி பிள்ளையார் கோயில், மாணவநல்லூர் மாரியம்மன் கோயில், விஜயபுரம் ஊராட்சி, பிள்ளையார் கோயில் மற்றும் ஏகபெருமாளூர் ஊராட்சி, ஏழுமுக காளியம்மன் கோயில் ஊருணிகளை மராமத்து செய்து, படித்துறை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், நாகுடி ஊராட்சி, நாகுடி அருள்மிகு பிள்ளையார் திருக்கோயில் முன்புறம் உள்ள திருக்குளத்தின் மேல் கரையில் இரண்டு படித்துறைகள் உள்ளன. இத்திருக்குளம் வேலைக்கு உணவு திட்டத்தின்கீழ் தூர் வாரிச் செப்பனிடப்பட்டு தற்போது பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மாணவநல்லூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு அருகில் அமைந்துள்ள திருக்குளத்தில் தண்ணீர் அதிகமாக உள்ளது. பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. விஜயபுரம் அருள்மிகு

[2005 செப்டம்பர் 23

பிள்ளையார் திருக்கோயிலின் குளத்தின் தென்கரையில், ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள படித்துறை புதியதாக ஊராட்சி மூலம் கட்டப்பட்டு வருகிறது. குளத்தில் நீர் நிறைந்து கிராம மக்கள் பயன்பாட்டில் உள்ளது. ஏகபெருமாளூர் அருள்மிகு ஏழுமுக காளியம்மன் திருக்கோயிலின் திருக்குளம், 2003-2004 ஆம் ஆண்டு தூர் வாரப்பட்டு, படித்துறை கட்டப்பட்டு தற்போது குளத்தில் நீர் நிரம்பி உள்ளது. பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**31—**

## கோயில் திருக்குளம் சீரமைத்தல்

**வினா எண் 61613—திரு. ப. அரசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குலமங்கலம் அருள்மிகு பெருங்காரையடி மீண்ட அய்யனார் கோயில் திருக்குளத்தைச் சீரமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், குலமங்கலம், அருள்மிகு பெருங்காரையடி மீண்ட அய்யனார் திருக்கோயிலின் திருக்குளம் ஊராட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டு ரூ.1,00,000 மதிப்பீட்டில் தூர் வாரப்பட்டு, கிராம மக்களின் சார்பில், திருக்குளத்தின் நான்கு கரை சுவர்களும் கட்டி சீர் செய்யப்பட்டுள்ளது.

**32—**

## மகளிர் சுய உதவிக் குழுவிற்குக் கடனுதவி

**வினா எண் 51947—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் மகளிர் தொழில் முனைவோர் கடன் வழங்கப்பட்டதா?

(ஆ) சீர்காழி தொகுதியில் கடன் வாங்கியவர்கள் எத்தனை பேர்?



2005 செப்டம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். நாகப்பட்டினம் மாவட்டத்தில் மே 2004 முடிய மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தொழில் தொடங்கி செய்வதற்காக 4,827 சுய உதவிக் குழுக்களுக்கு மொத்தம் கடன் தொகை ரூ.2439.89 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) சீர்காழி தொகுதியில் மே 2004 முடிய 675 சுய உதவிக் குழுக்களுக்குக் கடனாக மொத்தம் ரூ. 382.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**33—**

## தள்ளுபடி தொகை

**வினா எண் 38730—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள சர்வோதய சங்கங்கள் மற்றும் கதர் நிறுவனங்களுக்கு அரசு அளிக்கப்பட வேண்டிய தள்ளுபடித் தொகை எவ்வளவு நிலுவையில் உள்ளது?

(ஆ) அதனை உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1996-97 முதல் 1999-2000 வரையிலான ஆண்டுகளுக்கு சர்வோதய சங்கங்களுக்கு வழங்கப்பட வேண்டிய தள்ளுபடித் தொகை மொத்தம் ரூ.18,02,40,069 ஆகும். அவற்றில் ரூ.15 கோடி 2004-2005 ஆம் நிதியாண்டில் விடுவிக்கப்பட்டது. எஞ்சிய நிலுவைத் தொகை தணிக்கைச் சான்றுகள் கிடைக்கப்பெற்ற பின்பு வழங்கப்படும். அதைப்போல் 2000-2001-ல் ரூ. 5.00 கோடியும், 2001-2002-ல் ரூ. 5.00 கோடியும் தள்ளுபடி முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. 2002-2003, 2003-2004 ஆம் ஆண்டுகளுக்கு தணிக்கைச் சான்றுகள் கிடைக்கப்பெற்ற பின்பு தள்ளுபடி மானியம் வழங்கப்படும்.

34—

## ஆதிநவீன ஒலிபெருக்கிகள் தயாரித்தல்

**வினா எண் 55386—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகர், பெத்தானியாபுரம் எல். ஜான் சேவியர், இராஜா ஆகிய இரு சகோதரர்கள் கைகளினாலேயே அதிநவீன ஸ்பீக்கர்களை, ஜப்பான் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித் தயாரித்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை நகர், பெத்தானியாபுரம் எல். ஜான் சேவியர், இராஜா ஆகிய இரு சகோதரர்களும் "சகா ஆடியோஸ் என்ற பெயரில், எண் 6, சாமிக்கண்ணு தெரு, பெத்தானியாபுரம், மதுரை-6" என்ற முகவரியில் ஸ்பீக்கர்கள் தயார் செய்து விற்பனை செய்து வருகின்றனர். "சூப்பர் டோன் ஸ்பீக்கர்" என்ற வணிகச் சின்னத்தின் பெயரில் முற்றிலும் கையினால் தயார் செய்கின்றனர். முன் அனுபவத்தினாலும் தொழில் முன்னேற்றம் அடைய வேண்டும் மற்றும் தனித்தன்மை வெளிப்பட வேண்டும் என்ற ஆர்வத்தில் உழைத்து வருகின்றனர். ஜப்பான் தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்தவில்லை. மேலும் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியில் ரூ.4 இலட்சம் கடன் பெற்று இத்தொழில் செய்து வருகிறார்கள். இவர்களின் அலுவலகத்திற்குத் தற்காலிக சிறுதொழில் பதிவுச் சான்று வழங்கப்பட்டுள்ளது.

35—

## கூலியாளர்கள் நியமனம்

**வினா எண் 65051—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையாளிப்பாரா—



(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, கதர் சர்வோதய சங்கத்தில் கதர் துணியை உற்பத்தி செய்ய போதுமான கூலியாளர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சர்வோதய சங்கங்கள் அனைத்தும் மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையத்தினால் அங்கீகரிக்கப்பட்டு அதன் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது. எனவே கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் கதர் சர்வோதய சங்கத்தில் கதர் துணியை உற்பத்தி செய்ய போதுமான கூலியாளர்களைத் தமிழக அரசால் நியமிக்க சாத்தியமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

36—

## ஆதிதிராவிடர் மாணவர்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தல்

**வினா எண் 53594—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அரசு கல்லூரி மாணவர் விடுதியில் ஆதிதிராவிடர் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 192, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 20-8-2003-ன்படி 2003-2004 ஆம் கல்வியாண்டில் சேலம் மாவட்டத்திற்கு சேலம் கல்லூரி மாணவர் விடுதி உட்பட 3 கல்லூரி விடுதிகளுக்கு மொத்தம் 100 மாணவ / மாணவியர்களைக் கூடுதலாக சேர்த்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

[2005 செப்டம்பர் 23

37—

## குடிநீர் வசதி

**வினா எண் 56589–திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாநகர், நிர்மலா கல்லூரி எதிரில் மற்றும் வால்பாறையிலுள்ள தாழ்த்தப்பட்ட மாணவிகள் தங்கும் விடுதிக்குப் போதுமான குடிநீர் வசதி செய்து தர நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

கோவை மாநகர், நிர்மலா கல்லூரி எதிரில் மற்றும் வால்பாறையில் உள்ள மாணவிகள் விடுதிகளில் தற்போது குழாய்மூலம் குடிநீர் வசதியும் மற்றும் ஆழ்குழாய்க் கிணறுமூலம் குடிநீர் வசதியும் போதுமானதாக உள்ளது.

38—

## ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிக்குக் கட்டடம்

**வினா எண் 66736–திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர் மலை தொகுதி, பரமத்தி வேலூரில் உள்ள ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கபிலர் மலை தொகுதி, பரமத்தி வேலூரில் உள்ள ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்ட 6-1-2005 அன்று உரிய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.



2005 செப்டம்பர் 23]

39—

## தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 42123–திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் நாமககல் மாவட்டத்தை முன்னுரிமை அடிப்படையில் இந்த ஆண்டு தேர்வு செய்ய அரசு பரிந்துரை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திற்கு நாமக்கல் மாவட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் இரண்டு திட்டங்கள் மத்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. முதல் திட்டத்தின்கீழ் ரூ.204.20 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 5,105 எக்டேர் சேந்தமங்கலம் வட்டாரத்தில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு முடிக்கும் தருவாயில் உள்ளது. இரண்டாவது திட்டத்தில் 6,159 எக்டேர் கொல்லிமலை வட்டாரத்தில் ரூ.369.54 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் தரிசு நில மேம்பாட்டுப் பணிக்காக சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், புதியதாக நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில் சுமார் 6,063 எக்டேர் பரப்பளவில் மத்திய அரசின் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்ய கருத்துரு ஒப்புதலுக்காக மத்திய அரசுக்கு ஜனவரி 2005-ல் அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

40—

## பயிற்சி நிலையம்

**வினா எண் 65102–திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் 2003-2004 ஆம் ஆண்டில் எத்தனை இடங்களில் விவசாயிகளுக்குப் பயிற்சி நிலையம் தொடங்கப்பட்டது?

(ஆ) அதில் பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் தொகுதியில் 2003-2004 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்குப் பயிற்சி நிலையம் ஏதும் வேளாண்மைத் துறையினரால் தொடங்கப்படவில்லை. சங்கராபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டத்தைச் சார்ந்தது. விழுப்புரம் மற்றும் கடலூர் இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து உழவர் பயிற்சி நிலையம் திண்டிவனத்தைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. சங்கராபுரம் தொகுதியில் பயிர் நுட்பங்களை விவசாயிகளுக்கு 2003-2004 ஆம் ஆண்டு தீவிர பருத்தி பெருக்குத் திட்டத்தின்கீழ் 100 விவசாயிகளுக்கும் (பொது 50 எண்கள், ஆதிதிராவிடர் 50 எண்கள்) மற்றும் ஒருங்கிணைந்த தானிய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஐ.பி.எம். பயிற்சி 150 விவசாயிகளுக்கு (பொது 120 எண்கள், ஆதிதிராவிடர் 30 எண்கள்) அளிக்கப்பட்டது.

**41—**

### மண் பரிசோதனைக் கூடம் அமைத்தல்

**வினா எண் 65479—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம்-2 தொகுதி, கொண்டப்பநாயக்கன்பட்டியில் வேளாண்மைத் துறை சார்பாக மண் பரிசோதனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது, சேலத்தினைத் தலைமையிடமாகக் கொண்டு மண் பரிசோதனை நிலையம் ஒன்று இயங்கி வருகின்றது. அந்நிலையம், சேலம் மாவட்டம் முழுவதுமுள்ள விவசாயிகளுக்குப் பயனளிக்கும் முறையில் செவ்வனே இயங்கி வருகின்றது. எனவே இதைத் தவிர இன்னுமொரு மண் பரிசோதனை நிலையம் அமைக்க திட்டம் ஏதுமில்லை.



**42—**

### சோளம் பயிரிடுதல்

**வினா எண் 67425—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் எவ்வளவு ஏக்கர் பூமியில் சோளம் பயிரிடப்பட்டுள்ளது?

(ஆ) சோளம் மேலும் பயிரிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 2004-2005 ஆம் நிதியாண்டில் வால்பாறை தொகுதியில் 1,312 எக்டேர் பரப்பில் சோளம் பயிரிடப்பட்டுள்ளது.

(ஆ) 2005-2006 ஆம் நிதியாண்டில் மேலும் கூடுதலாக 500 எக்டேர் பரப்பில் சோளம் பயிரிட விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**43—**

### மக்காச்சோளம் உற்பத்தி ஊக்குவிப்பு

**வினா எண் 67896—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மக்காச்சோளம் உற்பத்தி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

2002-2003 ஆம் ஆண்டில் தமிழகத்தில் ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் மாற்றுப் பயிர் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக தமிழகத்தில் 2003-2004 மற்றும் 2004-2005 ஆண்டுகளில் மக்காச்சோளம் பயிர் அதிக பரப்பளவில் பயிரிடப்பட்டு வருகிறது. இதுகாறும் சுமார் ஒரு இலட்சம் எக்டேர் பரப்பளவிலேயே பயிர் செய்யப்பட்டு வந்த மக்காச்சோளம் 2004-2005-ல் சுமார் 2 இலட்சம் எக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டு

வருகிறது. மக்காச்சோளம் குறைந்த நீரைக் கொண்டு அதிக வருவாய் ஈட்டும் ஒரு பயிராக விவசாயிகளால் பெருமளவில் வரவேற்கப்படுகிறது. மேலும், மக்காச்சோளம் உற்பத்தியை தமிழகத்தில் ஊக்குவிக்கும் பொருட்டு மத்திய அரசு உதவியுடன் செயல்பட்டு வரும் ஐசோபாம் மக்காசசோளம் திட்டம் ரூ.25.67 இலட்சம் செலவில் 2004-05 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டது. இதில் மக்காச்சோளம் விதை உற்பத்தி மற்றும் விநியோக மானியம், வட்டார செயல் விளக்கம், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல் விளக்கம் விவசாயிகள் பயிற்சி, வேளாண் கருவிகள் மற்றும் பயிர் பாதுகாப்பு கருவிகள் மானியத்தில் வழங்குதல் ஆகியவை செயல்படுத்தப்பட்டன. இதனிடையில் விவசாயிகளுக்கு விதைக்கும் காலத்திலேயே கொள்முதல் விலையினை அறிவித்து ஊக்குவிக்க ஒப்பந்த சாகுபடி முறையினை தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் சுமார் 1,000 எக்டேர் பரப்பளவில் வேளாண்மைத் துறை அறிமுகப்படுத்தி உள்ளது. இத்திட்டத்தின்மூலம் விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட விலையில் மக்காச்சோளத்தை குவிண்டாலுக்கு ரூ.525 வீதம் நாஃபெட் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்து உடனடியாக பணம் பட்டுவாடா செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 2005-06 ஆம் ஆண்டில் இத்திட்டம் மேலும் அதிக பரப்பளவில் செயல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு வருகிறது.

44—

## மனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 34699—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை தொகுதி, சாளையூர் கிராமத்தில் அதிக அளவில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு குடியிருப்புக்கு பட்டா கிடைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், சாளையூர் கிராமத்தில் 40 பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட குடும்பத்தினர் குடியிருந்து வருகிறார்கள். இவர்களில் வீடற்ற பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த 10 நபர்களுக்கு தின்னபட்டி கிராமம் க.ச. 69 (நத்தம் சர்வே எண்86)-ல் பட்டா எண் 397/1414 முதல் 406/1414 வரை 10 பட்டாக்கள் உடுமலை வருவாய் வட்டாட்சியரால் 30-11-2004 அன்று வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 30 குடும்பத்தினருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க தகுதியான புறம்போக்கு நிலம் இல்லை. இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட மனைப் பிரிவுகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதை முன்னிட்டு, நில எடுப்பு நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்து உத்தரவிடப்பட்டுள்ள நிலையில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவது தொடர்பான நிலமெடுப்பு நடவடிக்கைகள் 2001 ஆம் ஆண்டு முதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.



45—

## இலவச மனைப்பட்டா

**வினா எண் 54008—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை நகரில் சலவைத் தொழிலாளர்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட மனைப் பிரிவுகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதை முன்னிட்டு, நில எடுப்பு நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் பட்டுக்கோட்டை நகரில் சலவைத் தொழிலாளர்களுக்கு இலவச மனைப்பட்டா தற்போது வழங்க இயலாது.

46—

## பட்டா வழங்குதல்

**வினா எண் 60230—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலை வட்டம், உடுமலை ஒன்றியம், தளி பகுதியில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான சுமார் 4 ஏக்கர் நிலத்தை பத்திரமாக மாற்றி பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

ஏற்கெனவே பட்டா வழங்கப்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகள் அளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதால் புதிதாக நிலப் பட்டா வழங்கும் திட்டம் இத்துறையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே, தளி பகுதியில் தற்போது பட்டா வழங்க சாத்தியமில்லை.

47—

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 63968—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எருக்கூர் கிராமத்திலுள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட மனைப் பிரிவுகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதை முன்னிட்டு, நில எடுப்பு நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எருக்கூர் கிராமத்திலுள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க தற்போது இயலாது.

48—

## வான்கோழி வளர்ப்புத் திட்டம்

**வினா எண் 62876—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுமூலம் வான்கோழி வளர்ப்புத் திட்டத்தினை ஊக்குவிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) உடுமலை வட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுமூலம் வான்கோழி வளர்ப்புத் திட்டத்தினை ஊக்குவிக்கும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

(ஆ) எழாது.

[2005 செப்டம்பர் 23

49—

## வான்கோழி குஞ்சுகளை மானிய விலையில் வழங்குதல்

**வினா எண் 64742—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் ஆர்வமுள்ள உள்ளூர் விவசாயிகளுக்கு வான்கோழி குஞ்சுகளை மானிய விலையில் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) வான்கோழி குஞ்சுகளை மானிய விலையில் வழங்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

50—

## கோழிகள் வளர்க்க நிதியுதவி

**வினா எண் 64743—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் மத்திய அரசின் உதவித் திட்டத்தின்கீழ் வனராஜா மற்றும் கிரிராஜா இன கோழிகளை வளர்க்க நிதியுதவி அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மத்திய அரசின் உதவித் திட்டத்தின்கீழ் வனராஜா மற்றும் கிரிராஜா இன கோழிகளை வளர்க்க 2004-2005 ஆண்டுக்கு



2005 செப்டம்பர் 23]

காட்டுப்பாக்கம் கோழிப் பண்ணைக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் மத்திய அரசின் உதவித் திட்டத்தின்கீழ் வனராஜா மற்றும் கிரிராஜா இன கோழிகளை வளர்க்க அரசு நிதியுதவி அளிக்க வாய்ப்பு இல்லை.

(ஆ) எழாது.

51—

## நவீன விற்காட்டல் அமைத்தல்

**வினா எண் 65436—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி நகரில் கால்நடைகளுக்கான நவீன விற்காட்டல் உற்பத்தி மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) பதிவு பெறாத இறைச்சிக் கூடத்தில் மிகக் குறைவான அளவில் ஆடு மற்றும் கோழிகள் வெட்டப்படுவதால், கள்ளக்குறிச்சி நகரில் நவீன விற்காட்டல் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) எழாது.

52—

## கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம்

**வினா எண் 65465—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதி, குரங்குசாவடியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடம் கட்டவும் மற்றும் நவீன கருவிகள் வழங்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* குரங்குசாவடி பகுதியில் உள்ள நாசோதிப்பட்டி கால்நடை மருந்தகம் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இது தவிர கூடுதல் கட்டடங்கள் கட்டுவது குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. கால்நடை மருந்தகத்தில் போதுமான நவீன கருவிகள் உள்ளன. ஆதலால் புதிய கருவிகள் வாங்குவது குறித்து கேள்வி எழவில்லை.

**53—**

### கோழிப்பண்ணை அமைக்க கடனுதவி

**வினா எண் 65719—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு கோழிப்பண்ணை அமைப்பதற்கு கடனுதவி வழங்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு கோழிப்பண்ணை அமைப்பதற்கு கடனுதவி வழங்க அரசிடம் திட்டம் எதுவும் இல்லை.

*(ஆ)* எழாது.

**54—**

### சாலை செப்பனிடல்

**வினா எண் 66474—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





*(அ)* கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, டாப்சிலிப் உட்பகுதிகளில் உள்ள பழுதடைந்துள்ள அனைத்து சாலைகளையும் செப்பனிட அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கோவை மாவட்டம், பொள்ளாச்சி வன உயிரின கோட்டம், வால்பாறை தொகுதியைச் சார்ந்த டாப்சிலிப் உட்பட்ட பகுதியில் உள்ள வனச் சாலைகளில் 2004-2005 ஆம் நிதியாண்டின் திட்ட ஒதுக்கீட்டில், இந்திராகாந்தி தேசியப் பூங்கா அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டதில் 5.00 கி.மீ. நீளமுள்ள வனச் சாலைகளை செப்பனிடும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள 58 கி.மீ. நீளமுள்ள சாலைகளை செப்பனிட தேவையான நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் வனத் துறைமூலம் அனைத்து சாலைகளையும் செப்பனிட பணிகள் மேற்கொள்ளப்படும்.

**55—**

### தொழிற்சாலைகள்

**வினா எண் 67227—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களிலுள்ள மிகவும் அபாயகரமான கழிவுகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டத்தில் மிகவும் அபாயகரமான கழிவுகளை வெளியேற்றும் தொழிற்சாலைகள் ஐந்தும் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஒரு தொழிற்சாலையும் இயங்கி வருகின்றன. கோவை மாவட்டத்தில் உள்ள 5 தொழிற்சாலைகளில் 4 தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும்

சயனைடு கழிவுகள் தொழிற்சாலை வளாகத்திற்குள்ளேயே நச்சுத்தன்மை நீக்கப்பட்டபின், பாதுகாப்பாக சேமிக்கப்பட்டு வருகிறது. எஞ்சிய ஒரு தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் ஈயக்கழிவுகள் மறுசுழற்சி செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திற்குச் சொந்தமான திருவாளர்கள் கார்டைட் பாக்டரி (cordite factory) அமைந்துள்ளது. இத்தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் வெடிமருந்து கழிவுகள் அவ்வப்பொழுதே தொழிற்சாலை வளாகத்திற்குள்ளே பாதுகாப்பாக எரிக்கப்படுகிறது.

**56—**

## விடுகள்

**வினா எண் 39334—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* 2001-2002-ல் காஞ்சிபுரம் மாவட்டத்தில் வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின்மூலம் கட்டப்பட்டுள்ள வீடுகள் எத்தனை?

*(ஆ)* எவ்வளவு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* 2001-2002 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 7 வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்மூலம் ரூ.99.25 இலட்சம் நிதியுதவியுடன் 177 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

**57—**

## கட்டட அனுமதி

**வினா எண் 65527—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாநகரில் உள்ளூர் திட்டக் குழுமம் (எல்.பி.ஏ.) கட்டட அனுமதி வழங்குவதில் முறைகேடுகள் நடப்பதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?





**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் உள்ளூர் திட்டக் குழுமம் அலுவலகத்தில் கட்டட திட்ட அனுமதிகள் வழங்கப்படுவதில் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை. முறைகேடுகள் பற்றிய புகார் மனு ஏதும் இதுவரை பெறப்படவில்லை. புகார் மனுக்கள் அனுப்பப்பட்டால் அவற்றை பரிசீலனை செய்து முறையாக நடவடிக்கை மேற்கொள்ளும் வாய்ப்புகள் சேலம் உள்ளூர் திட்டக் குழுமம் அலுவலகத்தில் உள்ளன. மேலும், மேற்காணும் அலுவலகத்தில் அவ்வப்போது ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**58—**

## நிதி ஒதுக்கீடு

**வினா எண் 65776—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* உடுமலை நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதி மூலம் சாலைப் பணி செய்ய நிதி ஒதுக்கீடு உள்ளதா?

*(ஆ)* அதற்கென்று தகுதிகள் உள்ளதா?

*(இ)* ஆம் எனில், எப்போது ஒதுக்கீடு செய்யப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ)* நகர் ஊரமைப்புத் துறையின் துவக்க முதலீட்டு நிதி உதவித் திட்டத்தின்கீழ் நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து பொதுவாக உள்ளாட்சிகளில் சாலை அமைப்புப் பணி செய்ய நிதி ஆதாரம் உள்ளது.

*(ஆ)* இதற்கென்று சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகள் அந்த நகருக்கான முழுமைத் திட்டம் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்களில் இனங்கண்டுள்ள / உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டச் சாலைகள் அமைப்பதற்கும் அல்லது சாலை இடம் கையகப்படுத்தி சாலை

அமைப்பதற்கும் உரிய திட்ட மதிப்பீடு, வரைபடம் ஆகியவற்றைத் தயாரித்து செலவினத்தில் 50 சதவீதத்தை உள்ளாட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்காகவும் 50 சதவீதம் தொகை நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து மானியமாக வழங்குமாறு நகர் ஊரமைப்பு ஆணையரைக் கேட்டுக்கொள்ளும் மன்றத் தீர்மானத்துடன் உத்தேசங்கள் அனுப்பப்பட்டால், நகர் ஊரமைப்பு ஆணையரால் நடவடிக்கை மேற்கொள்ள வாய்ப்பு உள்ளது.

(இ) முழுமைத் திட்டம் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டத்தில் கண்டுள்ள உத்தேசங்கள், உடுமலை நகராட்சி ஆணையரிடமிருந்து பெறப்படுமெனில், அவை, நகர் ஊரமைப்புத் துறையினரால் பரிசீலிக்கப்பட்டு நகர் ஊரமைப்பு வாரியக் குழுவின் ஒப்புதல் பெற்று செலவினத்தில் 50 சதவீதம் அல்லது ரூ.20.00 இலட்சம் இவற்றில் எது குறைவோ, அத்தொகை நகர் ஊரமைப்பு நிதியிலிருந்து உள்ளாட்சிக்கு விடுவிக்கப்படும்.

**59—**

### நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதி

**வினா எண் 67975—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகர், கோட்டை மாரியம்மன் கோயில் பகுதியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் கடைகள், வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்க நகர் ஊரமைப்புத் துறை வளர்ச்சி நிதி ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகராட்சி பகுதியில் போக்குவரத்து மேம்பாட்டு திட்டங்கள் பல செயல்படுத்த திட்ட உத்தேச மதிப்பீட்டில் 75% தொகை மானியமாக நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து (அதிக பட்சமாக ரூ.50 இலட்சம்) வழங்கவும் மீதம் தேவைப்படும் 25% தொகையினை



மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவு செய்து திட்டங்களை நிறைவேற்றவும் அரசாணை (நிலை) எண் 409, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்: 15-12-2003-ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

(ஆ) இது குறித்து தேவையான உத்தேசங்களை அனுப்பும்படி சேலம் மாநகராட்சி ஆணையர் அவர்களை நகர் ஊரமைப்பு ஆணையர் கேட்டுள்ளார். உத்தேசங்கள் கிடைத்ததும் நிதி உதவி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**60—**

### விரிவுரையாளர் பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 27159—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் காலியாகவுள்ள விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிதாக பணியிடங்களை நிரப்ப அரசளவில் தடையாணை உள்ளதாலும், பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் மானியத்தை 2002-2003 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அளவிலே நிலைநிறுத்த கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் காலியாகவுள்ள விரிவுரையாளர் பணியிடங்களை தற்போது நிரப்ப அரசளவில் நடவடிக்கை ஏதுமில்லை.

**61—**

### அரசு கலைக் கல்லூரி

**வினா எண் 43201—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 23

(அ) கடலூர் மாவட்டம், வடலூர் பேரூராட்சியைச் சேர்ந்த வடலூரில் அரசு கலைக் கல்லூரி ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை

**62—**

## பட்டப்படிப்பு கட்டணம் குறைத்தல்

**வினா எண் 64648—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு கலைக் கல்லூரிகளில் இளங்கலைப் படிப்பு மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பு கட்டணங்களை குறைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

அரசு கலைக் கல்லூரிகளில் இளங்கலைப் படிப்பு மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பு கட்டணங்களை குறைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**63—**

## உலகத் தமிழ்ச் சங்கம்

**வினா எண் 65994—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் தொடங்க அரசு முன்வருமா?



2005 செப்டம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்தை ஏற்படுத்தும் பணியினை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைத்து அரசாணை (ப) எண் 240, தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள்: 31-12-2002-ல் ஆணையிடப்பட்டுள்ளது. மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் ஏற்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட 14.15 ஏக்கர் நிலத்தை தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றுமாறு, மதுரை மாவட்ட ஆட்சியரை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. பொதுப் பணித் துறை வழி இந்நிலப் பகுதியில் "மதுரை உலகத் தமிழ்ச் சங்கம்" என்று பெயர் பலகை வைக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் கேட்டுக் கொண்டபடி, மதுரை பொதுப் பணித் துறை செயற்பொறியாளர் உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தைச் சுற்றிலும் சுற்றுச் சுவர் கட்டுவதற்காக ரூ. 25.30 இலட்சம் செலவுக்கான மதிப்பீடும், உலகத் தமிழ்ச் சங்கம் கட்டடம் கட்டுவதற்காக ரூ12.57 கோடிக்கான மதிப்பீட்டினையும், மழைநீர் வடிகால் வாய்க்கால் கட்டும் பணிக்கு ரூ. 21.50 இலட்சத்திற்கான மதிப்பீட்டினையும் அனுப்பி வைத்துள்ளார். அவை, பொதுப் பணித் துறையின் அறிவுறுத்தலின்படி, தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளருக்கு அனுப்பப்பட்டு, பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) கருத்துருவைப் பெற்று அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளது. மேலும், உலகத் தமிழ்ச் சங்கம் தொடக்கப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.15.00 இலட்சம் வழங்குமாறு, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் அரசைக் கேட்டுக்கொண்டதில், அரசு ரூ.10.00 இலட்சம் வழங்கக் கருதி, தவணை ஒன்றுக்கு ரூ. 5.00 இலட்சம் வீதம் இரண்டு தவணைகளாக அரசாணை (நிலை) எண் 82, தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள்: 25-3-2004 மற்றும் அரசாணை (நிலை) எண் 363, தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள்: 09-12-2004-ல் மொத்தம் ரூ. 10.00 இலட்சம் ஒப்பளித்து வழங்கப்பட்டுள்ளது.

**64—**

## விளையாட்டுப் பல்கலைக்கழகம்

**வினா எண் 71452—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 23

தமிழ்நாட்டில் விளையாட்டுப் பல்கலைக்கழகம், எங்கு, எப்போது துவங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு உடற்பயிற்சி கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், சென்னை எல்லைகளுக்குள்ளோ அத்தகைய எல்லைகளைச் சுற்றியுள்ள நூறு கிலோ மீட்டர் சுற்றளவிற்குள்ளோ அமையும் வகையில், இப்பல்கலைக்கழகத்திற்கான சட்டமுன்வடிவு 31-7-2004 அன்று தமிழக சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. இதனை, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக மேதகு ஆளுநர் அவர்கள் அனுப்பியுள்ளார்கள். குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டதும் பல்கலைக்கழகம் துவங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**65—**

## பால் பண நிலுவைத் தொகை

**வினா எண் 25646—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், குமாரசாமிபட்டி பால் உற்பத்தியாளர் சங்கம், பால் உற்பத்தியாளர்களுக்கு குறித்த காலத்தில் பால் பணம் வழங்காமல் நிலுவையிலுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்நிலுவைத் தொகையை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குமாரசாமிபட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு 15-03-2005 நாள்வரை நிலுவைப் பால் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.



2005 செப்டம்பர் 23]

**66—**

## கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம்

**வினா எண் 57100—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வடரெங்கம், அரசூர் மற்றும் மாதானம் ஊராட்சிகளில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி சட்டப் பேரவை தொகுதிக்குப்பட்ட வடரெங்கம், அரசூர் மற்றும் மாதானம் ஊராட்சிகளில், வடரெங்கம் ஓர் ஒதுக்குப்புறமான கிராமம் ஆகும். அந்த கிராமம் பால் வழித்தடத்திலிருந்து மிகவும் தொலைவில் இருப்பதால் அந்தப் பகுதியில் சங்கம் அமைக்க இயலாது. மேலும், அரசூர் மற்றும் மாதானம் ஊராட்சிகளில் முறையே விளந்திடசமுத்திரம் மற்றும் கடவாசல் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பால் கொள்முதல் செய்து வருகின்றன. வடரெங்கம், அரசூர் மற்றும் மாதானம் ஊராட்சி கிராமங்களில் மிகக் குறைந்த அளவே பால் உற்பத்தியாகிறது. மேற்கண்ட ஊராட்சியில் பசு, எருமை இனங்கள் குறைந்த அளவே உள்ளன. வடரெங்கம், அரசூர் மற்றும் மாதானம் கிராமங்கள் ஒன்றிய பால் வழித்தடத்தில் அமையவில்லை. மேற்கண்ட ஊராட்சிகளில் அதற்கு அருகில் உள்ள சங்கம் பால் கொள்முதல் செய்து வருவதால் அக்கிராமங்களில் சங்கம் அமைப்பதால் இலாபகரமாக செயல்பட வாய்ப்பில்லை. எனவே, மேற்கண்ட கிராமங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**67—**

## கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம்

**வினா எண் 57103—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயில் மற்றும் கொள்ளிடத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி சட்டப்பேரவை தொகுதிக்குட்பட்ட வைத்தீஸ்வரன்கோயில் கிராமத்தில் தனியாக ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஏற்கெனவே துவக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது. இதே தொகுதியில் கொள்ளிடம் கிராமம், நாகப்பட்டினம் மாவட்ட எல்லையின் கடைசியில் உள்ளது. அங்கே மிகவும் குறைந்த அளவே கறவை மாடுகள் உள்ளதால் பால் உற்பத்தி மிகவும் குறைந்த அளவே உள்ளது. மிகக் குறைந்த நபர்களிடம் பசு, எருமை இனங்கள் உள்ளன. கொள்ளிடம் கிராமத்தில் சங்கம் அமைத்தால் பால் கொள்முதல் செய்வதற்கு பால் வழித்தடம் இல்லை. கொள்ளிடம் கிராமத்திற்கு அருகில் வேறு சங்கங்கள் உள்ளன. கொள்ளிடம் கிராமத்தில் சங்கம் அமைத்தால் இலாபகரமாக செயல்பட வாய்ப்பில்லை. எனவே, மேறபடி கிராமங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**68—**

## ஆவின் சங்கங்கள் புதுப்பித்தல்

**வினா எண் 63384–திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டத்தில் கொமரலிங்கம், சாமராயப்பட்டி, பெருமாள்புதூர், கொழமம், மடத்துக்குளம், சுண்டக்காம்பாளையம் ஆகிய இடங்களில் செயலிழந்த ஆவின் சங்கங்களை புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்தில் கொமரலிங்கம், சாமராயப்பட்டி, பெருமாள்புதூர், கொழமம், மடத்துக்குளம் மற்றும் சுண்டக்காம்பாளையம் ஆகிய ஆறு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்பட்டுள்ளன. எனவே, மீண்டும் மேற்படி சங்கங்களைப் புதுப்பித்து செயல்படுத்தும் வாய்ப்புகள் இல்லை.





**69—**

## பால் கொள்முதல்

**வினா எண் 63546–திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, மூக்கனூர் ஊராட்சி, புதூர் மூக்கனூர் கிராமத்தில் பால் கூட்டுறவுச் சங்கம் மூலம் பால் கொள்முதல் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதி, மூக்கனூர் ஊராட்சி, புதூர் மூக்கனூர் கிராமத்தில் ஏற்கெனவே செயல்பட்டுவந்த பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் செயலிழந்து சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னர் கலைக்கப்பட்டது. சங்கம் கலைக்கப்பட்டு 5 ஆண்டுகளுக்கு மேலாகியும் சங்கத்தை நடத்த யாரும் முன்வராத காரணத்தால், புதூர் மூக்கனூர் கிராமத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் மூலம் பால் கொள்முதல் செய்யும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**70—**

## பால் உற்பத்தியாளர் சங்கம்

**வினா எண் 64498–திரு. ப. அரசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, அத்தானி, சுப்பிரமணியபுரம், கண்டிச்சங்காடு, வல்லவாரி, பூவத்தக்குடி மற்றும் தீயத்தூரில் பால் உற்பத்தியாளர் சங்கம் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதியில் உள்ள அத்தானி, சுப்பிரமணியபுரம், கண்டிச்சங்காடு, வல்லவாரி, பூவத்தக்குடி மற்றும் தீயத்தூர் கிராமங்களில் மொத்தம் 770 கறவை மாடுகள் உள்ளன. சுமார் 650 லிட்டர் பால் உள்ளூரிலேயே விற்பனை செய்யப்படுகிறது. சுமார் 650 பேரிடம் பசுக்கள்தான் உள்ளன. 20 பேரிடம் மட்டுமே எருமைகள் உள்ளன. மேற்கண்ட கிராமங்களில் சங்கம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளான தண்ணீர், மேய்ப்பதற்கான நிலம், புல் மற்றும் கொள்முதல் செய்யப்படும் பாலை ஒன்றியத்திற்கு விற்பனைக்காக எடுத்துச்செலல பால் வழித்தடம் ஏதும் இல்லை. மக்கள் அவ்வூரில் உள்ள டீக்கடை மற்றும் கிராம அளவில் உபயோகப்படுத்தும் அளவுக்கு தகுந்தாற்போல்தான் ஒரு சிலர் பால் மாடு வைத்து பால் கறவை செய்து உள்ளூரில் விற்பனை செய்து வருகின்றனர். எனவே, மேற்கண்ட கிராமங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**71—**

## பால் உற்பத்தியாளர் சங்கம்

**வினா எண் 64510—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஏம்பல், அரிமளம், ஒக்கூர், ஆவுடையார்கோவில், கடையாத்துப்பட்டி, குளத்தூர், ஒத்தக்கடை, பெருங்காடு மற்றும் மேலப்பட்டில் பால் உற்பத்தியாளர் சங்கம் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, ஏம்பல், அரிமளம், ஒக்கூர், ஆவுடையார்கோவில், கடையாத்துப்பட்டி, குளத்தூர், ஒத்தக்கடை, பெருங்காடு மற்றும் மேலப்பட்டில் மொத்தம் 272 கறவை இனங்கள் உள்ளன. அதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் பால் 650 லிட்டர் உள்ளூரிலேயே விற்பனை செய்யப்படுகிறது. மேற்குறிப்பிட்ட கிராமங்களில் சங்கம் அமைத்தால் பாலை எடுத்துச் செல்ல பால் வழித்தடம் ஏதும் இல்லை. 1985-1986-ல் இக்கிராமங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டு செயல்படாமல் துவங்கிய நிலையிலேயே செயலிழந்துவிட்டது. கூட்டுறவுச் சங்கத்தினை எவரும் ஏற்று நடத்த முன்வரவில்லை. எனவே, மேற்கண்ட கிராமங்களில் சங்கம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.



**72—**

## ஆவின் பாலகம் அமைத்தல்

**வினா எண் 66007—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவிலில் 'ஆவின் பாலகம்' கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில் பகுதி, தஞ்சாவூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தால் இயக்கப்படும் பால் வழித்தடங்களில் அமையப் பெறாத காரணத்தாலும், வைத்தீஸ்வரன்கோவில் இவ்வொன்றியத்திலிருந்து வெகு தொலைவில் உள்ளதாலும், தஞ்சாவூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் பாலக நடைமுறைச் செயல்பாடுகள் மற்றும் நிதி நிலைமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வைத்தீஸ்வரன் கோவில் பகுதியில் 'ஆவின் பாலகம்' அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

**73—**

## குடியிருப்புகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 61588—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, பொன்னகரம், வடக்கு புதுக்குடி, வடக்கு அம்மாப்பட்டினம், கட்டுமாவடி மற்றும் கோட்டைப்பட்டினம் முதலிய இடங்களிலுள்ள மீனவர் குடியிருப்புகளைப் பழுதுபார்த்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

மீனவர்களுக்கு அரசு இலவசமாகக் கட்டிக் கொடுக்கும் தொகுப்பு வீடுகள் பராமரிப்புப் பணிகள் யாவும் சம்பந்தப்பட்ட பயனாளிகளால் சொந்த செலவில் மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே, அறந்தாங்கி தொகுதி, பொன்னகரம், வடக்கு புதுக்குடி, வடக்கு அம்மாப்பட்டினம், கட்டுமாவடி மற்றும் கோட்டைப்பட்டினம் முதலிய இடங்களிலுள்ள மீனவர் குடியிருப்புகளைப் பழுதுபார்க்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**74—**

## ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

**வினா எண் 13467–திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பேரூராட்சி, சுண்ணாம்புக்காரத் தெருவில் குடிநீர் வசதி இல்லாததால், இங்கு ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் சிறப்பு சிற்றூராட்சியில் சுண்ணாம்புக்காரத் தெருவில் விசைப்பம்பு அமைக்கும் பணி முடிவுற்று அதன்மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**75—**

## திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள்

**வினா எண் 27673–டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் குண்ணாண்டார்கோயில் மற்றும் புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளின் விவரம் என்ன?

(ஆ) செலவு செய்யப்பட்ட தொகையின் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் குண்ணாண்டார்கோயில் மற்றும் புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளின்கீழ் பல்வேறு இடங்களில் பாலம் கட்டுதல், சிமெண்ட் சாலை அமைத்தல், கழிவுநீர் வாய்க்கால் அமைத்தல், ஊரணி மேம்பாடு செய்தல், மெட்டல் சாலை அமைத்தல், ஊரக நூலகம் கட்டுதல், பயணிகள் நிழற்குடை கட்டுதல், பள்ளிக் கட்டடம் கட்டுதல், அங்காடி கட்டடம் கட்டுதல், சமையல்கூடம் கட்டுதல், தொலைக்காட்சி அறை கட்டுதல், தடுப்புச் சுவர் கட்டுதல், உயர்நிலைப் பள்ளி மகளிருக்கான கழிவறை கட்டுதல், வரத்துவாரி மேம்பாடு செய்தல், குளம் மராமத்து, மடை மராமத்து, மகளிர் சுகாதார வளாகம் கட்டுதல், கிராம நிர்வாக அலுவலர் கட்டடம் மற்றும் ஆழ்குழாய்க் கிணறு மற்றும் பராமரிப்பு செய்தல், தொடக்கப் பள்ளி மராமத்து, தொகுப்பு வீடுகள் கட்டுதல், கச்சா வீடுகள் கட்டுதல், தொகுப்பு வீடுகள் பழுதுபார்த்தல் போன்ற பல்வேறு பணிகள் குண்ணாண்டார்கோயில் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.2,03,94,039/-ம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.55,19,439/-ம் செலவு செய்து, பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**76—**

## குளம் தூர் வாருதல்

**வினா எண் 29228–திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழையப்பாளையம் ஊராட்சியிலுள்ள கரிக்குளத்தை தூர்வாரி சீர்செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழையப்பாளையம் ஊராட்சியிலுள்ள கரிக்குளம் ரூ.40,000/- மதிப்பீட்டில் 2004-2005 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய் (சிறப்புக் கூறு) வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் தூர்வாரப்பட்டுள்ளது.

**77—**

**குளம் தூர் வாருதல்**

**வினா எண் 29241—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி, கொள்ளிடம் ஒன்றியம் அகர எலத்தூரிலுள்ள குளத்தை தூர்வாரி (அய்யனார் குளம்) பொது மக்கள் பயன்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அகர எலத்தூரிலுள்ள அய்யனார்கோயில் குளம் 2002-2003 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய் திட்டத்தின்கீழ் ரூ.30,000/- மதிப்பீட்டில் தூர் வாரப்பட்டுள்ளது.

**78—**

**சிமெண்ட் களம் அமைத்தல்**

**வினா எண் 29477—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பச்சைப்பெருமா நல்லூரில் சிமெண்ட் களம் அமைக்கும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒரு ஊராட்சிக்கு ஒரு சிமெண்ட் களம் கட்டித்தருவது என்ற அடிப்படையில், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பச்சைபெருமாநல்லூர் ஊராட்சியிலுள்ள அரசாலமங்கலம் கிராமத்தில் இலுப்படி என்ற இடத்தில் 2003-2004 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய்-II திட்டத்தின்கீழ் ரூ.60,000/- மதிப்பீட்டில் சிமெண்ட் களம் அமைத்துத் தரப்பட்டுள்ளது.

**79—**

**சுய உதவிக் குழுவிற்குக் கட்டடம்**

**வினா எண் 30546—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஓலையாம்புத்தூர் ஊராட்சியிலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஓலையாம் புத்தூர் ஊராட்சியில் 2003-2004 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய்-I திட்டத்தில் ரூ. 100/- இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் சுய உதவிக் குழுவிற்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

**80—**

**கடனுதவி**

**வினா எண் 31188—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் மகளிர் சுய உதவிக் குழுவில் எவ்வளவு பேருக்கு 2001-2002 ஆம் ஆண்டு கூட்டுறவு வங்கிமூலம் வியாபாரம் செய்ய கடனுதவி வழங்கப்பட்டது?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியைச் சார்ந்த எடப்பாடி, கொங்கணாபுரம் மற்றும் மகுடஞ்சாவடி ஒன்றியங்களில் 2001-2002 ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு மகளிர் சுய உதவிக் குழுவில் 49 நபர்களுக்கு ரூ. 34.30 இலட்சங்கள் கூட்டுறவு வங்கிகள் மூலம் வியாபாரம் செய்திட கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | ஊராட்சி ஒன்றியம் | 2001-02 ஆம் ஆண்டில் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு கடன் வழங்கப்பட்ட விவரம் | |
|---|---|---|---|
| 1 | எடப்பாடி | 11 நபர்கள் | ரூ. 7.70 இலட்சம் |
| 2 | கொங்கணாபுரம் | 23 நபர்கள் | ரூ. 16.10 இலட்சம் |
| 3 | மகுடஞ்சாவடி | 15 நபர்கள் | ரூ. 10.50 இலட்சம் |
| | மொத்தம் | 49 நபர்கள் | ரூ. 34.30 இலட்சம் |

**81—**

## ரேஷன் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 33266—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், கெங்கம்பிராம்பட்டி ஊராட்சி, அப்பிநாயக்கன்பட்டியில் பகுதி நேர ரேஷன் கடைக்கு கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், கெங்கம்பிராம்பட்டி ஊராட்சியில் அப்பிநாயக்கன்பட்டியில் பகுதி நேர ரேஷன் கடை மட்டுமே உள்ளது. எனவே, பகுதி நேர ரேஷன் கடைக்கு கட்டடம் கட்டும் திட்டம் இல்லை.

**82—**

## ஏர்மோஷன் குழாய்

**வினா எண் 39146—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, பீக்கிலிப்பட்டி கிராமத்திற்கு உருளைக்குடியிலிருந்து வரும் குடிநீர் குழாய்களை ஒழுங்குபடுத்தி குழாயின் தேவைப்படும் பகுதியில் ஏர்மோஷன் குழாய் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், உருளைக்குடி ஊராட்சியைச் சார்ந்த பீக்கிலிப்பட்டி குடியிருப்பிற்கு தற்போது உருளைக்குடி குடியிருப்பிலிருந்து, நீரேற்றுக் குழாய்கள் மூலம் குடிநீர் எடுத்துச் செல்லப்பட்டு மக்களுக்கு சீராக விநியோகிக்கப்படுகிறது. உருளைக்குடியிலிருந்து 1 கி.மீ. தூரத்திற்கு மேடு பள்ளம் அதிகமில்லாத சீரான பாதையில் நீரேற்றுக் குழாய் அமைக்கப்பட்டுள்ளதால், அதில் ஏர் வால்வு (ஏர்மோஷன் குழாய்) பொருத்தப்பட வேண்டிய அவசியம் இல்லை.

[2005 செப்டம்பர் 23

83—

### மகளிர் சுய உதவிக் குழுவிற்குக் கட்டடம்

**வினா எண் 39780—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஊராட்சி ஒன்றியம், பெருமங்கலம் கிராமத்திலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், பெருமங்கலம் ஊராட்சி மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

84—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 40038—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், பெருங்கொண்டான்விடுதி ஊராட்சியில் குடிநீர் தட்டுப்பாடு உள்ளதால், ஆழ்குழாய் கிணற்றுடன் கூடிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், பெருங்கொண்டான்விடுதி ஊராட்சியில் உள்ள எட்டு



2005 செப்டம்பர் 23]

குடியிருப்புகளில் பெருங்கொண்டான்விடுதி, காட்டுப்பட்டி, மந்தகுடி, கொம்பியன் விடுதி, குப்புடையான்பட்டி, கூழையன்விடுதி ஆகிய 6 குடியிருப்புகள் மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசை திட்டங்கள் மூலம் போதுமான அளவு குடிநீர் வசதி பெற்று வருகின்றன. மீதம் உள்ள 2 குடியிருப்புகளில் கணேஷ் நகர் குடியிருப்பில் ஒரு கையிறைப்பான் மூலமும், மற்றொரு குடியிருப்பான ஆர்.சுத்திவிடுதி குடியிருப்பில் ஒரு சிறு மின்விசைத் திட்டத்தின்மூலம் அத்தியாவசியத் தேவைக்குரிய குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேல்நிலை தொட்டி கட்டும் திட்டம் ஏதுமில்லை.

85—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 40098—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், நத்தம்பெண்ணை ஊராட்சி, சிலோன் காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியத்தைச் சார்ந்த சிலோன் காலனி குடியிருப்பு, திருமலைராய சமுத்திரம் ஊராட்சியில் உள்ளது. 2003-2004 ஆம் நிதியாண்டில் திருமலைராயசமுத்திரம் ஊராட்சியிலுள்ள சிலோன் காலனி, இந்திரா நகர், சிலுவாப்பட்டி ஆகிய மூன்று குடியிருப்புகளுக்கும் பயன்பெறும் வகையில் ரூ. 9.50 இலட்சம் செலவில் 30,000 லிட்டர் மேல்நிலை தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு பயனில் உள்ளது.

[2005 செப்டம்பர் 23

86—

## நெற்களம்

**வினா எண் 40783—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், அகணி ஊராட்சி, அகணி வடக்குத் தெருவிலுள்ள நெற்களம் பழுது நீக்கம் செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், அகணி ஊராட்சியில் அகணி வடக்குத் தெருவிலுள்ள நெற்களம் பழுது நீக்கம் செய்வதற்கு தற்சமயம் செயல்பாட்டில் உள்ள திட்டங்களில் வழிவகை இல்லை. எனவே இப்பணியினை செய்து தர இயலாது.

87—

## கொசு ஒழிப்பு

**வினா எண் 43108—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகராட்சி மற்றும் சிறுப்பூர் பேரூராட்சியில் கொசுத் தொல்லையை ஒழிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை நகராட்சிப் பகுதி மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, நகரின் கீழராஜவீதியில் இருந்து கிழக்கு பக்கம் காமராஜபுரம், போஸ் நகர், மச்சுவாடி, கீழ 4, 5, 6, 7 ஆம் வீதிகள், காந்தி நகர் பகுதிகள் போன்ற இடங்களில் நகராட்சி கொசு ஒழிப்புப் பிரிவில் பணிபுரியும் 5 கொசு மருந்து பணியாளர்களைக் கொண்டு காலையில் கொசுப்புழு மருந்து, கைத்தெளிப்பான் மூலம் அடிக்கப்பட்டு வருகிறது. பிற்பகலில் சாக்கடை சுத்தம் செய்யும் பணியும் செய்யப்பட்டு வருகிறது. புகைப்பான் மூலமாக நகரின் 30 வார்டுகளிலும், டெக்னிக்கல் மாலக்கியான் மருந்து மாலை நேரங்களில் அடிக்கப்பட்டு நகரில் கொசுத் தொல்லையைப் போக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2005 செப்டம்பர் 23]

மேலும், புதுக்கோட்டை மாவட்டம், சிறுப்பூர் சிறப்பு நிலை ஊராட்சியில் (பேரூராட்சி) துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு கொசு மருந்து சுழற்சி முறையில் தெளிக்கப்பட்டு வருகிறது. மேலும் சுகாதாரத் துறை மூலம் இரசாயன புகை (கெமிக்கல்) அடித்தும் கொசுத் தொல்லை ஒழிக்கப்படுகிறது.

88—

## அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

**வினா எண் 43567—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு அரசு எவ்வளவு நிதி ஒதுக்கியது?

(ஆ) எத்தனை பணிகள் மேற்கொள்ளப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அரசு ரூ. 321.421 இலட்சம் நிதி ஒதுக்கியது. 180 பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

89—

## சுய உதவிக் குழுவிற்கு கட்டடம்

**வினா எண் 45771–திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, மங்கைமடம் ஊராட்சி, காந்தி நகர் ஆதி திராவிட மகளிர் சுய உதவிக் குழுவிற்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, மங்கைமடம் ஊராட்சி, காந்தி நகர் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு, 2003-2004 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய்-1 திட்டத்தின்கீழ் ரூ. 1.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடம் கட்டித்தரப்பட்டுள்ளது.

**90—**

## சமுதாயக் கூடம்

**வினா எண் 46860—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சியில் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயில் சிறப்பு சிற்றூராட்சியில் விளக்குமுக்கு தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 5,00,000/- செலவில் சமுதாயக் கூடம் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு 30-6-2004-ல் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால் 7,500 பொதுமக்கள் பயன்பெறுகிறார்கள்.





**91—**

## சமுதாயக் கூடம் அமைத்தல்

**வினா எண் 49948—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, 2-வது வார்டு, மீனாட்சிபுரம் வீதி மற்றும் அம்பேத்கர் திடலில் சமுதாயக் கூடங்கள் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிறப்பு சிற்றூராட்சிகளில் சமுதாயக் கூடங்கள் ஏற்படுத்தித் தர அரசு மானியம் வழங்கும் திட்டம் எதுவும் இல்லை. எனவே அரசு நிதி வாயிலாக சமுதாயக் கூடங்கள் கட்டித்தர வாய்ப்பு இல்லை. எனவே, வேட்டைக்காரன்புதூர் சிறப்பு சிற்றூராட்சியில் பொது நிதியில் போதிய நிதி வசதி இல்லாததால் சமுதாயக் கூடங்கள் அமைக்கும் வாய்ப்பு இல்லை.

**92—**

## நகரியல் பயிற்சி நிலையம்

**வினா எண் 50018—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உள்ளாட்சித் துறையில் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிலையம் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டும், நகராட்சி நிர்வாகம் தொடர்பான

ஆய்வுகளுக்கெனவும் 26-11-1981 முதல் கோயம்புத்தூரில் 'தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்' தொடங்கப்பட்டு இன்றளவும் செம்மையாக செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிறுவனத்தில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் அனைத்து உயர்நிலை அலுவலர்களுக்கும் தேவையான பயிற்சி வழங்கப்பட்டு வருவதுடன், நகராட்சி நிர்வாகத் துறையின் நிர்வாகத்தை மேம்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆய்வுப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

**93—**

## கட்டட வசதி

**வினா எண் 51926—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடரங்கம் சின்னத்தெரு, திருக்கருகாவூர், சட்டநாதபுரம் ஊராட்சியில் சூரக்காடு ஆகிய இடங்களில் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடரங்கம் ஊராட்சியில் ஒரு மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஓர் ஊராட்சிக்கு ஒன்று மட்டுமே என்பதால், சின்னத் தெருவில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டிக் கொடுக்க இயலாது. திருக்கருகாவூர் ஊராட்சியில் 2002-2003 ஆம் ஆண்டில் ஒரு மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. சட்டநாதபுரம் ஊராட்சியில் ஒரு மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஓர் ஊராட்சிக்கு ஒரு கட்டடம் மட்டும் கட்டிக் கொடுக்கப்படுவதால் சூரக்காடு கிராமத்தில் கட்டடம் கட்டிக் கொடுக்க இயலாது.



**94—**

## சுய உதவிக் குழுவிற்குக் கட்டடம்

**வினா எண் 51937—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மகாராஜபுரம் ஊராட்சி, தேவநல்லூரிலுள்ள வடக்கு ஆதிதிராவிடர் காலனி சுய உதவிக் குழுவிற்குக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மகாராஜபுரம் ஊராட்சியில் 2003-2004 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தின்கீழ் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஓர் ஊராட்சிக்கு ஒரு கட்டடம் மட்டுமே தற்போது கட்டிக் கொடுக்கப்படுவதால், மகாராஜபுரம் ஊராட்சி, தேவநல்லூர் வடக்குத் தெரு, ஆதிதிராவிடர் காலனி, மகளிர் சுய உதவிக் குழுவிற்குக் கட்டடம் கட்டித் தர இயலாது.

**95—**

## ஆயில் எஞ்சின் வழங்குதல்

**வினா எண் 51938—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, மருதங்குடி ஊராட்சி, மருதங்குடி முல்லை மகளிர் சுய உதவிக் குழுவிற்கு ஆயில் எஞ்சின் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆயில் எஞ்சின் வழங்கிடும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லாததால், சீர்காழி தொகுதி, மருதங்குடி ஊராட்சி, மருதங்குடி முல்லை மகளிர் சுய உதவிக் குழுவிற்கு ஆயில் எஞ்சின் வழங்க இயலாது.

**96—**

## ஆழ்குழாய் பழுதுபார்த்தல்

**வினா எண் 53022—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, 17-வது வார்டில் உள்ள ஆழ்குழாய் பழுது பார்க்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேட்டைக்காரன்புதூர் சிறப்பு சிற்றூராட்சி 17-வது வார்டில் உள்ள ஆழ்குழாய் பழுது பார்க்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.

**97—**

## மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம்

**வினா எண் 53717—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், உமையாள்பதி ஊராட்சியிலுள்ள வினயக்குடி கிராமத்திற்கு மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், உமையாள்பதி ஊராட்சியில் 2003-2004 ஆம் ஆண்டில் ஒரு மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் ஓர் ஊராட்சிக்கு ஒரு மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் மட்டுமே கட்டப்படுவதால், உமையாள்பதி ஊராட்சி, வினயக்குடி கிராமத்திற்கு மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டித்தர இயலாது.

**98—**

## குழாய் இணைப்பு நீட்டித்தல்

**வினா எண் 54317—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் பேரூராட்சி, 15-வது வார்டில் புது வெள்ளாளர் தெருவில் குழாய் இணைப்பு நீட்டிப்புச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2005 செப்டம்பர் 23

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருக்கழுக்குன்றம் 15-வது வார்டில் குழாய் இணைப்பு நீட்டிக்கப்பட்டு 4 குடிநீர்ப் பொதுக் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், 87 புதிய வீட்டுக் குடிநீர் இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. புதியதாக புது வெள்ளாளர் தெருவில் குடிநீர் குழாய் இணைப்புகள் அமைக்கத் தேவை ஏற்படவில்லை.

**99—**

**கதிரடிக்கும் களம்**

**வினா எண் 54393—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், உமையாள்பதி ஊராட்சியில் குளத்திங்கநல்லூர், மேலக்கரை, மகாராஜபுரம் ஊராட்சி, தேவநல்லூர் கீழத் தெருவிற்கும் மற்றும் மகாராஜபுரம் ஊராட்சிக்கும் கதிர் அடிக்கும் களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம் உமையாள்பதி ஊராட்சி, புதுக்குளம் என்ற இடத்தில் எஸ்.ஜி.ஆர்.ஒய். 2000-2003-ன்கீழ் ரூ. 60,000/- மதிப்பீட்டில் நெற்களம் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. ஓர் ஊராட்சிக்கு ஒன்று மட்டுமே கட்டிக் கொடுக்கப்படுவதால் மேற்படி ஊராட்சி குளத்திங்கநல்லூர் மேலக்கரையில் நெற்களம் கட்டிக் கொடுக்க இயலாது. மேலும், மகாராஜபுரம் ஊராட்சியில் மந்தைவெளி என்ற இடத்தில் 2003-2004 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தில் நெற்களம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.



2005 செப்டம்பர் 23]

**100—**

**மகளிர் சுகாதார வளாகம்**

**வினா எண் 54843—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகராட்சி, கன்னாரத் தெரு, தாவார் தெரு, 105-வது பகுதி, வெள்ளாண்டி வலசை, க. புதூர் 5-வது பகுதி ஆகிய இடங்களில் மகளிர் சுகாதார வளாகம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகராட்சியில், கன்னாரத் தெருவில் பெண்கள் பொதுக் கழிப்பிடமும், வெள்ளாண்டி வலசு பகுதியில் இரண்டு ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்களும், க.புதூர் 5-வது பகுதியில் மகளிருக்கான சுகாதார கழிப்பிடங்களும் உள்ளன. மேற்கண்ட பெண்கள் பொதுக் பொதுக் கழிப்பிடங்கள் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன.

தாவரந்தெரு 10-வது பகுதியில் மகளிர் சுகாதார வளாகம் கட்டுவதற்குப் போதுமான இடவசதி இல்லை.

[2005 செப்டம்பர் 23

## ஐந்தாவது பட்டியல்

1—

### அத்தியாவசியப் பொருட்கள் வழங்கல்

**வினா எண் 49239—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், சன்னாசிநல்லூர் கிராமம், தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்குக் குடும்ப அட்டையும், அத்தியாவசியப் பொருட்களும் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், செந்துறை வட்டம், சன்னாசிநல்லூர் கிராமத்தில் 2001 ஆம் ஆண்டில் தீ விபத்து ஏற்பட்டபோது பாதிக்கப்பட்ட 12 குடும்பங்களுக்கு 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு, ஜனவரி 2005 முதல் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் இன்றியமையாப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

2—

### கடனுதவி

**வினா எண் 57690—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு வங்கிகள் குறுகிய காலக் கடன்கள், மத்திய காலக் கடன்கள் மற்றும் நீண்ட காலக் கடன்கள் ஆகியவை விவசாயிகளுக்கு வழங்கப்படும்போது, வழங்கப்படும் நோக்கம் நிறைவேற்றப்படுகிறதா என்பது கண்காணிக்கப்படுகிறதா?

(ஆ) இதில் உள்ள இடர்பாடுகள் யாவை?



2005 செப்டம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) கூட்டுறவு வங்கிகள்மூலம் வழங்கப்படும் அனைத்துக் கடன்களும் அவை வழங்கப்பட்ட பின்னர் அவற்றின் பயன்பாடு குறித்து மத்திய கூட்டுறவு வங்கிகள் களப்பணி அலுவலர்களால் கண்காணிக்கப்படுகிறது. மேலும், தலைமைக் கூட்டுறவு வங்கியிலிருந்து ஆய்வுக்காக வரும் அலுவலர்களும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும், நேரடியாகவும் மத்திய கூட்டுறவு வங்கிகள் வழங்கிய பல்வேறு கடன்களின் பயன்பாடுகள் குறித்து அவ்வப்போது சில கடன்கள் தேர்வு செய்யப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பயன்பாடுகள் சரிவர இல்லையெனில், இது குறித்து மத்திய கூட்டுறவு வங்கிக்கு தெரிவிக்கப்பட்டு மேல் நடவடிக்கைக்குப் பரிந்துரைக்கப்படுகிறது. இது தவிர, கூட்டுறவுத் துறையின் தணிக்கை அதிகாரிகளும் அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். மேலும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்மூலம் வழங்கப்படும் நகைக் கடன்கள் மற்றும் பயிர்க் கடன்கள் சரிபார்க்க வகை செய்யும் சில ஆணைகளும் தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(ஆ) கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து நிலவி வரும் வறட்சியினால் வழங்கப்பட்ட கடன்கள், வழங்கப்பட்ட காரணங்களுக்காக அன்றி, பிற காரணங்களுக்காகவும் செலவிடப்படுகின்றன. இக்காரணத்தால் தவணை தேதியில் கடன்கள் திருப்பிச் செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளன.

3—

### கடன் வழங்கும் பகுதி எல்லை

**வினா எண் 67709—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை நகர்ப்புற கூட்டுறவு வங்கியின் கடன் வழங்கும் பகுதியின் எல்லையை மீறி கடன் கொடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

4—

## நியாயவிலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 68206—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்மாபுரம் ஒன்றியம், கொல்லிருப்பு கிராமத்தில் நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், கம்மாபுரம் ஒன்றியம், கொல்லிருப்பு கிராமத்தில் முழுநேர நியாயவிலைக் கடையோ அல்லது பகுதிநேர நியாயவிலைக் கடையோ செயல்படாத நிலையில் நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

5—

## நியாயவிலைக் கடைகளுக்குக் கட்டடம்

**வினா எண் 69473—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதியில் உள்ள வாடகைக் கட்டடத்தில் இயங்கும் நியாயவிலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதியில் 14 நியாயவிலைக் கடைகள் வாடகைக் கட்டடத்தில் செயல்படுகின்றன. அரசின் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டால் மேற்படி 14 நியாயவிலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6—

## நெல் கொள்முதல் நிலையத்திற்கு கட்டட வசதி

**வினா எண் 72934—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, திருப்புனவாசல், மீமிசல், நாகுடி, சுப்ரமணியபுரம், அமரசிம்மேந்திரபுரம், அத்தாணி, தாழனூர், அமரடக்கி, வல்லவாரி, மேற்பனைக்காடு ஆகிய இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, திருப்புனவாசல், மீமிசல், நாகுடி, சுப்ரமணியபுரம், அமரசிம்மேந்திரபுரம், அத்தாணி, தாழனூர், அமரடக்கி, வல்லவாரி, மேற்பனைக்காடு ஆகிய இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு நிதி ஒதுக்கீடு ஏதும் தற்சமயம் செய்யவில்லை.

7—

## நெல் கொள்முதல் நிலையத்திற்குக் கட்டட வசதி

**வினா எண் 72944—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, அம்பலவானேந்தல், நிலையூர், பொன்பேத்தி, கரூர், துரையரசபுரம், பெருங்காடு, ஆளப்பிறந்தான், திருநெல்லிவயல், காரக்கோட்டை, கரகத்திக்கோட்டை ஆகிய நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, அம்பலவானேந்தல், நிலையூர், பொன்பேத்தி, கரூர், துரையரசபுரம், பெருங்காடு, ஆளப்பிறந்தான், திருநெல்லிவயல், காரக்கோட்டை, கரகத்திக்கோட்டை ஆகிய நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு ஏதும் தற்சமயம் கிடைக்கப் பெறவில்லை. இனிவரும் நிதியாண்டுகளில் நேரடி கொள்முதல் நிலையக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு பெறப்படுமானால் மேற்காணும் பணிக்காக மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

**8—**

## அருள்மிகு பிடாரி அம்மன் ஆலயத்திற்குக் குடிநீர் வசதி

**வினா எண் 62923—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் பேரூராட்சி, இலுப்பூர் அருள்மிகு பிடாரி அம்மன் ஆலயத்திற்குக் குடிநீர் வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

முதன்மைத் திருக்கோயிலான அருள்மிகு பொன் காசிநாதர் திருக்கோயில் மற்றும் உட்கடை அருள்மிகு கல்யாண வெங்கடேச பெருமாள் திருக்கோயில் மற்றும் அருள்மிகு தரம் தூக்கி பிடாரி அம்மன் திருக்கோயில் ஆகிய ஆலயங்களில் இலுப்பூர் பேரூராட்சியின் குடிநீர் இணைப்புகள் பெறப்பட்டுள்ளன. மேலும், இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு எவர்சில்வர் டிரம்மில் குடிநீர் வசதிகள்





வழங்கப்பட்டுள்ளன. மேலும், பிடாரி அம்மன் என்ற தரம் தூக்கி பிடாரி அம்மன் திருக்கோயிலில் சிறு மின் விசை இழுப்பான் வசதியுடன் குடிநீர்த் தொட்டி வைக்கப்பட்டு பக்தர்களுக்குக் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

**9—**

## அன்னதானத் திட்டம்

**வினா எண் 70161—திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகக் கோயில்களில் வழங்கப்படும் அன்னதானத் திட்டத்தை அனைத்து ஊராட்சிகளிலுள்ள கோயில்களுக்கும் விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழக திருக்கோயில்களில் வழங்கப்படும் அன்னதானத் திட்டத்தை ஊராட்சிகளிலுள்ள திருக்கோயில்களிலும் விரிவுபடுத்திட தற்போது நடவடிக்கை ஏதும் இல்லை.

**10—**

## பனை ஓலை தொழிற்பயிற்சி நிலையங்கள்

**வினா எண் 64277—திரு. ப. அரசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஒக்கூரில், கரூர், ஆவுடையார்கோவில், நெய்வத்தளி, கீழச்சேரி, துரையரசபுரம், பஞ்சுத்தி, ஆளப்பிறந்தான், எட்டியத்தளி, மேலப்பட்டி, கட்டுமாவடி, புதுக்குடி, அம்பலவானேந்தல், ராஜேந்திரபுரம், அத்தாணி, நாட்டுமங்கலம், மஞ்சக்கரை, வல்லவாரி, பூவத்தக்குடி, குருந்திரக்கோட்டை மற்றும் மேற்பனைக்காடு கிராமங்களில் பனை ஓலை தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைத்துத் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

இல்லை.

11—

**தொழிற்பயிற்சி நிலையங்கள்**

**வினா எண் 64455–திரு. ப. அரசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, கிருஷ்ணாஷிபட்டினம் அம்மாப்பட்டினம், மணமேல்குடி, காரக்கோட்டை, திருப்புனவாசல், தீயத்தூர், நாகுடி, நிலையூர், அமரடக்கி மற்றும் விளானூர் ஆகிய இடங்களில் தொழிற் பயிற்சி நிலையங்களை அமைத்துத் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

இல்லை.

12—

**பாய் முடையும் தொழிற்பயிற்சி நிலையம்**

**வினா எண் 66481–திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் வேட்டைக்காரன் புதூர் சிறப்புநிலை ஊராட்சி, சேத்துமடை மற்றும் வால்பாறையில் பாய் முடையும் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) வேட்டைக்காரன்புதூர் சிறப்புநிலை ஊராட்சி, சேத்துமடை மற்றும் வால்பாறையில் பாய் முடையும் தொழிற்பயிற்சி நிலையம் துவங்குவதற்குத் திட்டம் எதுவும் தமிழ்நாடு கிராமத் தொழில் வாரியத்தில் இல்லை.



(ஆ) வினா எழவில்லை.

13—

**வீட்டுமனைப் பட்டா**

**வினா எண் 54696–திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, அங்களக்குறிச்சி ஊராட்சி, ஜெ.ஜெ. நகரில் பாதி பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கி, பாதி பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, பொள்ளாச்சி வட்டம், அங்களக்குறிச்சி கிராமம், க.ச. 201/1பி மற்றும் க.ச. 202/2 ஆகிய அங்களகளில் 5.00 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 200 காலைகளில் மனையிடங்கள் அமைக்கப்பட்டு, 200 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. சில நபர்கள் பொது உபயோக இடத்தில் வீடு கட்டியுள்ளனர். சிலர் வேறு நபர்களுக்கு வழங்கிய வீட்டுமனையிடத்தில் குடியுள்ளனர். சிலர் நிபந்தனைகளை மீறி கிரயம் பெற்றுள்ளனர். இவற்றை முறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் பட்டா பெறாது வீடு கட்டிய நபர்கள் உரிய சான்றுடன் விண்ணப்பம் கொடுத்த பின்னர் தகுதியின் அடிப்படையில் முறைப்படுத்தி பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

14—

**சிறப்புக்கூறு திட்டம்**

**வினா எண் 62694–திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உருவாக்கப்பட்ட சிறப்புக்கூறு திட்டம் கோவை மாவட்டத்தில் செயல்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கோவை மாவட்டத்தில் தாட்கோமூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மத்திய சிறப்பு நிதியின்கீழ் 1982 ஆம் ஆண்டு முதல் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிதியில் ஒவ்வோர் ஆண்டும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வங்கிக் கடனுடன் தாட்கோ மானியம் வழங்கப்படுகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் தாட்கோ மத்திய சிறப்பு நிதித் திட்டத்தில் மானியத்துடன்கூடிய கடன் அளிக்கப்பட்ட விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை | மானியம் (ரூ. இலட்சத்தில்) | பயனாளியின் பங்கு | வங்கி கடன் | மொத்தம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | தனி நபர் கடன் | 486 | 46.06 | 7.02 | 65.14 | 118.22 |
| 2 | சுய தொழில் குழுக்களுக்கு கடன் | 132 | 56.14 | 7.84 | 47.84 | 111.83 |
| 3 | சுயதொழில் குழுக்களுக்கு சுழல் நிதி | 316 | 31.50 | .. | 47.25 | 78.75 |
| 4 | மாவட்ட ஆட்சியரின் நன்கொடை விருப்ப நிதி | 310 | 15.55 | .. | .. | 15.55 |
| | **மொத்தம்** .. | **1244** | **149.25** | **14.86** | **160.24** | **324.35** |



## 15— தொழிற்பேட்டை அமைத்தல்

**வினா எண் 64135–திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமைலாடி ஊராட்சியில் சிப்காட் மூலம் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசின் கொள்கைப்படி, சிப்காட் நிறுவனம் நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகளை அமைக்க சுமார் 500 முதல் 2500 ஏக்கர் நிலப்பரப்பில் தொழில் வளாகங்களை (Industrial Complexes) உருவாக்கி வருகிறது. சிப்காட் நிறுவனம் இதுவரை 17 தொழில் வளாகங்கள்/தொழில் பூங்காக்களைத் தமிழகத்தில் 12 மாவட்டங்களில் உருவாக்கியுள்ளது. சீர்காழி தொகுதியின் அருகிலுள்ள கடலூரில் சிப்காட் நிறுவனம் ஏற்கெனவே தொழில் வளாகத்தை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. மேற்குறிப்பிட்ட 17 தொழில் வளாகங்களில் தொழிற்சாலைகள் துவங்க போதுமான தொழில் மனைகள் உள்ளதால், தற்போது புதிதாக தொழில் வளாகங்களை உருவாக்குவதற்கான வாய்ப்பு சாத்தியமற்றது என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. சீர்காழி தொகுதி, திருமைலாடி ஊராட்சியில் சிப்காட் தொழிற்பேட்டைகள் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை. இப்பகுதியில் தொழில் முனைவோர்கள் அருகிலுள்ள கடலூர் தொழில் வளாகத்தில் தொழில் தொடங்கலாம் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

## 16— வீரிய ஒட்டுக் கனி வகை மரங்கள்

**வினா எண் 42914–திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002-2003 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் எவ்வளவு விவசாயிகளின் பட்டா நிலங்களில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் எவ்வளவு ஏக்கரில் வீரிய வகை ஒட்டுக் கனி வகை மரங்கள் நடப்பட்டன?

(ஆ) இதற்காக அரசு எவ்வளவு நிதி ஒதுக்கியது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், 2002-2003 ஆம் ஆண்டில் 3,562 ஏக்கர் பரப்பில் 2,861 விவசாயிகளின் பட்டா நிலங்களில் வீரிய ஒட்டுக் கனி வகை மரங்கள் நடப்பட்டன.

(ஆ) இதற்கென அரசால் ஒதுக்கப்பட்ட நிதி ரூ. 210 இலட்சம் ஆகும்.

**17—**

## கதிர் அடிக்கும் இயந்திரம்

**வினா எண் 44038–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2002-2003 ஆம் ஆண்டில் கதிர் அடிக்கும் இயந்திரம் வாங்க எத்தனை விவசாயிகளுக்கு வங்கியில் கடன் பெற அரசு பரிந்துரை செய்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

2002-2003 ஆம் ஆண்டில் கதிர் அடிக்கும் இயந்திரம் வாங்க எந்த விவசாயிக்கும் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக பரிந்துரைக்கப்படவில்லை.

**18—**

## நெல் அறுவடை இயந்திரம்

**வினா எண் 58311–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் வேளாண் பொறியியல் அலுவலகத்தில் எத்தனை நெல் அறுவடை இயந்திரங்கள் விவசாயிகளுக்கு வாடகைக்கு விடப்படுகிறது?

(ஆ) என்ன வாடகைக்கு அந்த இயந்திரம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகங்களில், நெல் அறுவடை இயந்திரம் ஏதும் இல்லை.

இருப்பினும், இத்துறையில் உள்ள 4 நெல் அறுவடை இயந்திரங்கள் பின்வரும் அலுவலகங்களில் உள்ளன:—

(1) உதவி செயற்பொறியாளர் (வே.பொ.) மதுராந்தகம்

(2) உதவி செயற்பொறியாளர் (வே.பொ.) மதுரை

(3) உதவி செயற்பொறியாளர் (வே.பொ.) ஈரோடு

(4) உதவி செயற்பொறியாளர் (வே.பொ.) திருச்சி

சேலம் மாவட்டத்தில் நெல் அறுவடை இயந்திரங்கள் கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் மேற்கண்ட அலுவலகங்களில் உள்ள இயந்திரங்களைக் கொண்டு பணி மேற்கொள்ளப்படும்.

(ஆ) நெல் அறுவடை இயந்திரத்தின் வாடகை ஒரு மணிக்கு ரூ.1,100/-. (ரூபாய் ஆயிரத்து நூறு மட்டும்)

**19—**

## சொட்டு நீர்ப்பாசன சிறப்புப் பயிற்சி

**வினா எண் 60747–திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப்பாசனம் குறித்து சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சொட்டு நீர்ப்பாசனம் ஒரு தொழில்நுட்பமிக்க திட்டமாகையால், விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டியது அத்தியாவசியமாகக் கருதப்பட்டு, சொட்டு நீர்ப்பாசனக் கருவிகளை அமைத்துக் கொடுக்கும் நிறுவனங்கள் மூலமாகவும், வேளாண்மைப் பொறியியல் துறையில் பொறியாளர்களின் மேற்பார்வையில் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

20— [2005 செப்டம்பர் 23

## சிறுபாசனத் திட்டப் பணிகள்

**வினா எண் 61846—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உடுமலை வட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் சிறுபாசனத் திட்டப் பணிகள் செய்யப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

உடுமலை வட்டத்திற்குத் தேவைப்படும் சிறுபாசனத் திட்டப் பணிகள் யாவும் உதவி செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) பொள்ளாச்சி அலுவலகம் மூலமாக செய்யப்படுகிறது. மேலும் விவசாயிகளின் தேவைக்கேற்ப உதவி செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) கோயம்புத்தூர், திருப்பூர் போன்ற அலுவலகங்களிலிருந்தும் சிறுபாசனத் திட்டக் கருவிகள் வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

21—

## வேளாண் உபகரணங்கள்

**வினா எண் 63064—திரு. டி.பி. பொன்னம்பலம்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்ட வேளாண் உபகரணங்கள் நிறுத்தி வைக்கப்பட்டதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது மீண்டும் இத்திட்டத்தை அரசு தொடங்கும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பு நிதி ஆண்டில் (2004-05-ல்)



2005 செப்டம்பர் 23]

வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் ரூ. 150.00 இலட்சம் செலவில் மானிய விலையில் வேளாண் உபகரணங்கள் வழங்க அரசு ஆணை வழங்கியுள்ளது. எனவே இத்திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

22—

## ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல்

**வினா எண் 63794—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதியில் வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் விவசாயிகளுக்கு மானியத்துடன் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

23—

## வேம்பு கலந்த மருந்து

**வினா எண் 66273—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் வேம்பு கலந்த மருந்து பருத்தி விவசாயிகளுக்கு முழு மானியத்துடன் வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் வேம்பு கலந்த மருந்து பருத்தி விவசாயிகளுக்கு முழு மானியத்துடன் வழங்கும் திட்டம் ஏதுமில்லை.

**24—**

## இலவச பூச்சிக்கொல்லி மருந்து

**வினா எண் 66281—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் பருத்திச் செடிகளுக்கு பூச்சிகளால் சேதம் ஏற்படாமல் தடுக்க பூச்சிக்கொல்லி மருந்து இலவசமாக வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் பருத்திச் செடிகளுக்கு பூச்சிகளால் சேதம் ஏற்படாமல் தடுக்க பூச்சிக்கொல்லி மருந்து இலவசமாக வழங்கும் திட்டம் தற்போது ஏதுமில்லை.

எனினும், பருத்தி பெருக்குத் திட்டத்தின்கீழ் 50% மானிய விலையில் பருத்திச் சாகுபடியாளர்களுக்கு உயிரியல் பூச்சிக்கொல்லி மருந்துகள் வழங்கப்படுகின்றன.

**25—**

## விண்ணப்பங்கள்

**வினா எண் 66922—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) வால்பாறை தொகுதியில் உள்ள விவசாயிகளிடமிருந்து காட்டாமணக்கு நட விருப்பம் தெரிவித்து, நீர்வடிப் பகுதி மற்றும் நீர்வடி அல்லாத பகுதியில் இருந்து அரசுக்கு வந்த விண்ணப்பங்கள் எவ்வளவு?

(ஆ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள விவசாயிகளிடமிருந்து காட்டாமணக்கு நட விருப்பம் தெரிவித்து, நீர்வடிப் பகுதி மற்றும் நீர்வடி அல்லாத பகுதியில் இருந்து இதுவரை விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை.

**26—**

## பாசனத் திட்டம்

**வினா எண் 69075—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாசனத் திட்டங்களுக்கு நபார்டு வங்கியிலிருந்து தொகை பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தைக் குறைக்க அரசால் நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வேளாண்மைப் பொறியியல் துறையினைப் பொறுத்தமட்டில் பாசனத் திட்டங்கள் ஏதும் செயல்படுத்தப்படுவதில்லை. எனினும் வேளாண்மைப் பொறியியல் துறையால் விவசாயிகளின் நிலங்களில் அமைக்கப்படும் சொட்டுநீர் மற்றும் தெளிப்புநீர்ப் பாசனத்திற்கென ரூ.50.00 கோடியில் திட்டக் கருத்துரு தயாரிக்கப்பட்டு நபார்டு வங்கிக்கு அனுப்பப்பட்டது. நபார்டு வங்கியின் திட்ட ஆய்வுக் குழு பல்வேறு மாவட்டங்களில் திட்டம் செயல்படுத்தும் பகுதிகளை ஆய்வு செய்து, பின்னர் திட்டக் கருத்துருவினை நபார்டு வங்கியின் மும்பை தலைமை அலுவலகத்திற்குப் பரிந்துரைத்துள்ளனர். இத்திட்டத்தினைப்

பொறுத்தமட்டில் காலதாமதம் எதுவும் ஏற்படவில்லை. நபார்டு நிதி உதவிக்குக் காத்திராமல் அரசே நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**27—**

## விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 17780—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, நரசமங்கலம் கிராமத்தில் பல்லாண்டு காலங்களாக குடியிருந்து வருவோருக்கு இதுவரை வீட்டுமனைப் பட்டா வழங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம் மற்றும் திருத்தணி சட்டமன்றத் தொகுதி, நரசமங்கலம் கிராமத்தில் குடியிருக்கும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு கொட்டையூர் கிராமத்தில் புல எண் 753/3-ல் 0.34 சென்ட், புல எண் 753/6-ல் 0.54 சென்ட், புல எண் 753/11-ல் 0.67 சென்ட், புல எண் 754/1-ல் 0.87 சென்ட் மற்றும் புல எண் 754/2-ல் 1.02 சென்ட் ஆக 3.44 ஏக்கர் நிலம் பிற்பட்டோர் நலத் துறைமூலம் நில எடுப்பு செய்து வீட்டுமனைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு 98 தகுதியான நரசமங்கலம் மற்றும் கொட்டையூர் கிராம மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

**28—**

## இலவச விட்டுமனைப் பட்டா

**வினா எண் 36087—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, களர் கிராமத்தில் மசூதிக்குச் சொந்தமான இடத்தில் நீண்ட காலமாக வசித்து வருபவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்கீழ் நில எடுப்பு மூலமாக வீட்டுமனைகள் வழங்கும் திட்டம் தற்போது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே, நாட்ராம்பள்ளி தொகுதி, களர் கிராமத்தில் வசிப்பவர்களுக்கு தற்போது இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

**29—**

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 43941—திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஒன்றியம், திடுமல்புதூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியத்தில், கபிலர்மலை, சோளசிராமணி ஆகிய கால்நடை மருந்தகங்களும், பாண்டமங்கலம், நாகபாளையம், கொத்தமங்கலம் ஆகிய கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும் தற்போது அரசுத் துறையின்கீழ் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்களை மட்டுமே தரம் உயர்த்த நடவடிக்கை

மேற்கொண்டு வருகிறது. ஆதலால், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திடுமல்புதூர் கிராமத்தில் எந்த ஒரு கிளை நிலையமும் செயல்படாத நிலையில், அங்கு நேரடியாக புதிதாக ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

**30—**

## ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள்

**வினா எண் 53693—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அதில் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட மானியங்கள் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 32 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

(ஆ) கடந்த 5 ஆண்டுகளாக ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானியம் எதுவும் அரசால் வழங்கப்படவில்லை.

**31—**

## கால்நடை கிளை மருத்துவமனை

**வினா எண் 65266—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, பிலிசின்னம்பாளையம் ஊராட்சியில் அரசு கால்நடை மருத்துவமனையின் கிளை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம் வால்பாறை தொகுதி, பிலிசின்னம்பாளையம் ஊராட்சியில் கால்நடைகள் குறைவாக உள்ளன. இதன் அருகில் 3 கி.மீ. தூரத்தில் சமத்தூர் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் அளிக்கப்பட்டு வரும் சிகிச்சைப் பணிகள் பிலிசின்னம்பாளையம் ஊராட்சியில் உள்ள கால்நடைகளுக்குப் போதுமானதாக உள்ளன. மேலும் மாநில திட்டக் குழு புதிய கால்நடை கிளை நிலையங்கள் துவக்கிட விதித்துள்ள தடை ஆணை இன்னமும் அமலில் உள்ளதாலும், மேலும் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க விதிக்கப்பட்ட அரசின் தடை ஆணை அமலில் உள்ளதாலும் பிலிசின்னம்பாளையம் ஊராட்சியில் ஒரு புதிய கால்நடை கிளை நிலையம் தோற்றுவிக்க தற்போது வாய்ப்பில்லை.

**32—**

## கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம்

**வினா எண் 65414—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, வெள்ளிமலையிலுள்ள கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் தொகுதி, வெள்ளிமலையில் உள்ள கால்நடை மருந்தகத்திற்கு 1989-ல் நிரந்தரக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. அக்கட்டடத்திலுள்ள பழுதுகள் தற்சமயம் நீக்கப்பட்டு கால்நடை மருந்தகம் நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

33—

**கால்நடை மருத்துவமனையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 65431—திரு. ஆர். கிருஷ்ணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் அரசு கால்நடை மருத்துவமனையைப் புதுப்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அந்தியூர் அரசு கால்நடை மருந்தகத்திற்கு 2004-05 ஆம் ஆண்டு ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறையினரால் பழுதுகள் சீர் செய்து புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

34—

**கால்நடை மருந்தகத்திற்குப் புதிய கட்டடம்**

**வினா எண் 66000—திரு. ப. மோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சின்னசேலம் ஒன்றியம், அனுமனந்தல் கால்நடை மருந்தகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

சின்னசேலம் ஒன்றியம், அனுமனந்தல் கால்நடை மருந்தகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



35—

**நடமாடும் கால்நடை மருந்தக ஊர்தி**

**வினா எண் 66334—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை இடங்களில் நடமாடும் கால்நடை மருந்தக ஊர்தி செயல்பட்டு வருகிறது?

(ஆ) கால்நடை மருந்தக ஊர்தி எந்த முறையில் செயல்பட்டு வருகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் (1) அருநூத்துமலை, (2) கருமந்துறை, (3) பச்சமலை, (4) ஏற்காடு, (5) சேலம் கால்நடை மருந்தக வளாகம் ஆகிய கேந்திரங்களில் நடமாடும் கால்நடை மருந்தக ஊர்திகள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) நடமாடும் கால்நடை மருந்தக ஊர்தி, வாரத்தில் 5 நாட்களாக திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை குறிப்பிட்ட ஊர்களில் காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை செயல்பட்டு வருகிறது. மேலும் கால்நடை மருந்தக ஊர்திமூலம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தல், கருவூட்டல் செய்தல், பூச்சி மருந்து கொடுத்தல், தடுப்பூசி போடுதல் போன்ற பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

36—

**கால்நடை மருத்துவமனையை விரிவுபடுத்துதல்**

**வினா எண் 69396—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, புத்தனாம்பட்டி கால்நடை மருத்துவமனையை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) முசிறி தொகுதி புத்தனாம்பட்டி கால்நடை மருந்தகத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

**37—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 69624—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்மாபுரம் ஒன்றியம், கொல்லிருப்பு கிராமத்தை மையமாகக் கொண்டு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கடலூர் மாவட்டம், கம்மாபுரம் ஒன்றியம், கொல்லிருப்பு கிராமத்தை மையமாகக் கொண்டு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் தற்போது திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

**38—**

**கால்நடை மருந்தக ஊர்தி**

**வினா எண் 70226—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) பெண்ணாகரம் தொகுதியில் நடமாடும் கால்நடை மருந்தக ஊர்தி வழங்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) பெண்ணாகரம் தொகுதியில் நடமாடும் கால்நடை மருந்தக ஊர்தி வழங்கிட அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

**39—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 70314—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம்-2 தொகுதியில் உள்ள கன்னங்குறிச்சியில், கால்நடை மருத்துவமனை ஒன்று அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம்-2 தொகுதி, கன்னங்குறிச்சி கிராமத்திற்கு அருகில் 2 கி.மீ. தூரத்தில் மிட்டா அய்யம்பெருமாம்பட்டி கால்நடை கிளை நிலையமும், 7 கி.மீ. தூரத்தில் வீராணம் கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருகிறது. இவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் சிகிச்சைப் பணிகள் இப்பகுதியில உள்ள கால்நடைகளுக்குப் போதுமானதாக உள்ளது. மேலும் தற்பொழுது துறையின்கீழ் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆதலால் சேலம்-2 தொகுதி, கன்னங்குறிச்சி கிராமத்தில் நேரடியாக ஒரு புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

[2005 செப்டம்பர் 23

40—

## கால்நடை மருத்துவமனைக்கு மருந்துகள்

**வினா எண் 70945—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி அரசு கால்நடை மருத்துவமனைக்கு 2004 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கால்நடை மருந்துகள் மதிப்பு எவ்வளவு?

(ஆ) இந்த மருத்துவமனைக்கு போதுமான உயிர்காக்கும் மருந்துகள் வழங்கப்பட்டுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் கட்டுப்பாட்டின்கீழ் எடப்பாடி கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. 2004-2005 ஆம் ஆண்டில் ஓமலூர் கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் உள்ள கால்நடை நிலையங்களுக்கு பொது மருந்துகள் என்ற தலைப்பின்கீழ் ரூ.18,85,910.38/-க்கும், தீவிர சுகாதார பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ரூ.99,838.80/-க்கும் கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ரூ.3,00,468.71/-க்கும் மருந்துகள் தமிழ்நாடு மருத்துவப் பணி கழகத்தின் மூலம் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) எடப்பாடி கால்நடை மருந்தகத்துக்கு போதுமான உயிர்காக்கும் மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

41—

## கிளை நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 72359—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆயிங்குடி கால்நடை கிளை நிலையத்தை மருந்தகமாக தரம் உயர்த்தும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



2005 செப்டம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை. கால்நடை கிளை நிலையங்களை கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு இடம்பெறும்பொழுது, ஆயிங்குடி கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்த பரிசீலிக்கப்படும்.

42—

## மரங்களைப் பாதுகாத்தல்

**வினா எண் 63834—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, முதலைமேடு ஊராட்சி, இ. அளக்குடி ஊராட்சிகளைச் சேர்ந்த வனத் துறை கட்டுப்பாட்டிலுள்ள 450 ஏக்கர் நிலத்தில் இயற்கையாக வளரும் கருவேல மரங்களும், நாட்டு மரங்களும் சமூக விரோதிகளால் அழிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, முதலைமேடு மற்றும் இ. அளக்குடி ஊராட்சிக்குட்பட்ட முதலைமேடு வன வட்டாரம் (126.16 ஏக்கர்) மற்றும் அளக்குடி வன வட்டாரம் (452 ஏக்கர்) ஆகியவை 1973-லேயே காப்புக் காடுகளாக அறிவிக்கப்பட்டு வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. அவற்றில் பறவைகள் மற்றும் காற்றினால் அடித்து வரப்பட்டு தூவப்பட்ட விதைகள் மூலம் இயற்கையாக மரம் வளர்கிறது. இவை மனிதனால் விதைக்கப்பட்ட விதைகளிலிருந்தோ, நடப்பட்ட செடிகளிலிருந்தோ உண்டாவதில்லை. அவற்றில் 1978 முதல்

2001 வரை 162.18 ஏக்கர் பரப்பில் சவுக்கு மற்றும் பல இனத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. வளர்க்கப்பட்ட மரங்கள் ஏதும் வெட்டப்படவில்லை. மேற்படி பகுதியில் பெரிய கருவேல மரங்கள் ஏதுமில்லை. மேலும் சமூக விரோதிகளால் திருட்டுத்தனமாக மரங்கள் ஏதும் வெட்டப்படவில்லை. வனத் துறை மூலம் காப்பு காடுகள் நன்றாக பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

**43—**

## தேக்கு மரக் கன்றுகள்

**வினா எண் 64759—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் விளை நிலங்களில் மரங்களை வளர்க்க இலவசமாக தேக்கு மரக் கன்றுகளை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதியில் விளை நிலங்களில் மரங்களை வளர்க்க இலவசமாக தேக்குக் கன்றுகளை வழங்கிட திட்டம் ஏதும் இல்லை. இருப்பினும் தஞ்சாவூர் வன விரிவாக்க மையத்தில் பலதரப்பட்ட 10,000 நாற்றுகள் கீழ்க்கண்ட விவரப்படி உற்பத்தி செய்யப்பட்டுள்ளன:—

| வரிசை எண் | உற்பத்தி செய்யப்பட்டுள்ள மரங்களின் நாற்றுகள் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | புங்கன் | 1200 |
| 2. | வேம்பு | 500 |
| 3. | பிலானிக்ஸ் | 700 |
| 4. | சைமரூபா | 600 |
| 5. | தேக்கு | 7,000 |
| | மொத்தம் .. | 10,000 |





நல்ல முறையில் மரக் கன்றுகளை வளர்க்கக்கூடிய விவசாயிகளைத் தேர்வு செய்து அவர்கள் மரம் வளர்க்கக்கூடிய நிலங்களைப் பார்வையிட்டு திருப்திகரமாக இருந்தால் மட்டும் அவர்களுக்கு இலவசமாக வழங்கக்கூடிய மரக் கன்றுகளை வழங்கவும், மரம் நடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) 2004-2005 ஆம் வருடத்தில் தஞ்சாவூர் வன விரிவாக்க மையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 7,000 தேக்கு நாற்றுகளில் 3,000 நாற்றுகள் இதுவரை வழங்கப்பட்டது போக மீதம் 4,000 தேக்கு நாற்றுகள் நன்கு பராமரிக்கக்கூடிய விவசாயிகளுக்கு அவர்கள் மரம் வளர்க்கக் கூடிய நிலங்களைப் பார்வையிட்டு வழங்கப்படத் தயார் நிலையில் உள்ளன.

**44—**

## காடு வளர்ப்புத் திட்டம்

**வினா எண் 65439—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்ராயன் மலைப் பகுதிகளில் ஜப்பான் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் (டேப்) திட்டப் பணிகளை செயல்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கல்ராயன் மலைப் பகுதிகளில் தமிழ்நாடு காடு வளர்ப்புப் பணிகளை செயல்படுத்த மொத்தம் 170 கிராமங்கள்/குக்கிராமங்கள் உள்ளன. அவற்றில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்ட நிலை-1-ல், 1997 முதல் 2004 முடிய 57 கிராமங்களில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காப்புக் காட்டினுள் அமைந்துள்ள இக் கிராமங்களில் சுமார் 19,248 ஹெக்டேர் பரப்பளவிற்கு நடவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன. நடவுப்

பணிகள் மற்றும் கிராம நலப் பணிகளுக்காக மொத்தம் ரூபாய் 19.23 கோடி செலவிடப்பட்டுள்ளது. நீர்வள ஆதார கட்டமைப்புப் பணிகளின்கீழ் 561 தடுப்பணைகளும், 34 கசிவு நீர்க் குட்டைகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 57 கிராம வனக் குழுக்கள் உருவாக்கப்பட்டு 121 சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 2005-06 ஆம் ஆண்டில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்-2-ன்கீழ் 7 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு சுமார் 1,450 ஹெக்டேர் பரப்பில் தோட்டப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் பகுதி 1-ல் மேற்கொள்ளப்பட்ட பணிகளான மண்வளப் பாதுகாப்புப் பணிகளும் மற்றும் இதர கிராம நலப் பணிகளும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டப் பகுதி-2-ல் மேற்கொள்ளப்பட உள்ளன.

**45—**

## நஷ்ட ஈடு

**வினா எண் 66472—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வீடுகள் மற்றும் மாணிக்க எஸ்டேட் பள்ளியின் கதவு ஜன்னல்களை யானைகள் இடித்ததற்கு நஷ்டஈடு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மாணிக்க எஸ்டேட் தொழிலாளர் வீடுகள் மற்றும் பள்ளியின் கதவு ஜன்னல்களை காட்டு யானைகள் இடித்தது சம்பந்தமாக உரிய ஆவணங்களும், சான்றுகளும் கிடைக்கப்பெற்றால் நிவாரணம் வழங்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.



**46—**

## குடியிருப்புப் பகுதிக்குப் பாதுகாப்பு

**வினா எண் 66480—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், வால்பாறைத் தொகுதி, வால்பாறை குடியிருப்புப் பகுதிக்கு யானைகள் வருவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

காட்டு யானைகள் குடியிருப்புப் பகுதிகளுக்கு வராமல் தடுத்து விரட்டியடிக்க வன உயிரினம் கையாளுவதில் அனுபவம் மற்றும் சாதுரியமிக்க வனப் பணியாளர்கள், யானை காவடி, மாவூத்தன் மற்றும் வேட்டைத் தடுப்பு முகாமில் பணியாற்றும் மலைவாழ் மக்களைக் கொண்டு சிறப்பு அதிரடி நடவடிக்கைக் குழு அமைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. துறை யானைகள் (கும்கி யானைகள்) வரவழைக்கப்பட்டு காட்டு யானைகள் காட்டுக்குள் விரட்டியடிக்கப்படுகின்றன. குடியிருப்புப் பகுதிகளில் யானைக்கு விருப்ப உணவான வாழை, கரும்பு, தீவனப் பயிரான கவூதிமாலா புல் போன்றவை பயிரிட வேண்டாம் என குடியிருப்பு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. குடியிருப்புப் பகுதிக்கு அருகிலுள்ள ரேசன் கடை, சத்துணவு மையங்களில் அரிசி, சர்க்கரை, உப்பு போன்ற உணவுப் பொருட்களிலிருந்து வரும் ஈரப்பதமான காற்றினால் வருகின்ற ஒரு விதமான வாடையானது காட்டு யானைகளை கவர்ந்திழுப்பதால் மேற்படி கடைகள், மையங்களுக்கு தக்க அறிவுரை வழங்கி உணவுப் பொருட்களை கிடங்குகளில் பாதுகாப்பாக வைக்க தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

47—

## "டேப்" திட்டம்

**வினா எண் 67139—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதி அமராவதி திருமூர்த்திமலைப் பகுதியில் "டேப்" திட்டத்தில் கிராமம் தத்தெடுக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) உடுமலை வட்டம், உடுமலை, திருமூர்த்திமலை, அமராவதி பகுதிகளில் வரும் சின்னக்குமாரபாளையம், லிங்கமாவூர் ஆகிய இரு கிராமங்கள் திட்டக் கிராமங்களாக தேர்வு செய்து தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் 2-ன்கீழ் 2005-2006 ஆம் ஆண்டில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஒவ்வொரு திட்டக் கிராமத்திலும் 250 ஹெக்டேர் பரப்பில் சுமார் 29.00 இலட்சம் செலவில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

48—

## சுற்றுச்சூழல் மறுசீரமைப்புத் திட்டம்

**வினா எண் 67955—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகர், 60-வது கோட்டத்தில் உள்ள தலையூத்து மலைக கோயிலில், சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு முன்னோடி திட்டத்தை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகர், 60-வது கோட்டத்தில் உள்ள தலையூத்து மலைக் கோயிலில் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு முன்னோடி திட்டத்தை செயல்படுத்துவது சம்பந்தமான கருத்துரு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு பதில் எழவில்லை.

49—

## கழிப்பிடம்

**வினா எண் 68825—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், வால்பாறை தொகுதிமேம்பாடு நிதியில் "மங்கிபால்ஸ்" பகுதியில் கட்டிய கழிப்பிடத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

கோவை மாட்ட ஆட்சித் தலைவரின் ந.க.எண் 4912/2002/அ2, நாள் 27-3-2003-ல் வழங்கப்பட்ட நிர்வாக ஒப்புதலின்படி, வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு நிதியிலிருந்து இந்திராகாந்தி வன உயிரின உய்விடம், பொள்ளாச்சி சரகம், "மங்கிபால்ஸ்" மற்றும் ஆழியாறு சோதனைச் சாவடி பகுதியில் தலா ரூ.2.00 இலட்சம் வீதம், ஆண்கள் மற்றும் பெண்களுக்காக, தனித்தனியே 7 கழிப்பிடங்கள் கட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

50—

## நிதி ஒதுக்கீடு

**வினா எண் 63554—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 23

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதிக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள் கட்ட வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டும் திட்டம் ஏதும் தற்போது வாரியத்தின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

51—

## சாலை அமைத்தல்

**வினா எண் 64655—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டம், மரூர்பட்டி வீட்டுவசதி குடியிருப்புகள் அருகிலும், உடுமலை, கொழமம் வழி மலையாண்டி கவுண்டனூர் கிழக்கு புறமும் பாதை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) உடுமலை வட்டம், மரூர்பட்டி வீட்டு வசதி குடியிருப்புகள் அமைந்துள்ள திட்டப் பகுதியில் ஏற்கெனவே சாலைகள் அமைக்கப்பட்டுவிட்டன. எனவே, மேற்கண்ட பகுதியில் புதிதாக சாலைகள் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை. மேலும், உடுமலை கிராமம் வழி மலையாண்டி கவுண்டனூர் கிழக்கு புறம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் திட்டப் பகுதியில் இல்லை.

(ஆ) எழவில்லை.



2005 செப்டம்பர் 23]

52—

## தொகுப்பு வீடுகளைப் புதுப்பித்தல்

**வினா எண் 65514—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதி, கோட்டை அண்ணா நகரில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் 2-வது தொகுதி, கோட்டை அண்ணா நகரில் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளுக்கு சீரமைப்புப் பணிகள் செய்ய திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

53—

## ஆசிரியர்களுக்கு வீடுகள்

**வினா எண் 66300—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறையில் உள்ள வரட்டுப்பாறை ஊராட்சி ஒன்றிய ஆசிரியர் பள்ளி, வில்லோணி லோயர் டிவிசன் ஆரம்பப் பள்ளி மற்றும் உருளிக்கல் டாப் டிவிசன் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு குடியிருக்க வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறையில் உள்ள வரட்டுப்பாறை ஊராட்சி ஒன்றிய ஆசிரியர் பள்ளி, வில்லோணி லோயர் டிவிசன் ஆரம்பப் பள்ளி மற்றும் உருளிக்கல் டாப் டிவிசன் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் குடியிருக்க வீடுகள் கட்டித்தரும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

**54—**

## ஆசிரியர் குடியிருப்பு கட்டுதல்

**வினா எண் 66305—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறையில் உள்ள செலாளிப்பாறை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி அருகில் மற்றும் மாணிக்கா எஸ்டேட் பழையகாடு ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிக்கு அருகில் ஆசிரியர் குடியிருப்பு கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறையில் உள்ள செலாளிப்பாறை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி அருகில் மற்றும் மாணிக்கா எஸ்டேட் பழைய காடு ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிக்கு அருகில் ஆசிரியர் குடியிருப்புகள் கட்டித்தரும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.





**55—**

## ஆசிரியர் குடியிருப்பு

**வினா எண் 66309—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறையில் உள்ள நடுமலை பகுதி மற்றும் புதுத்தோட்டம் பகுதியிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிக்கு அருகில் ஆசிரியர் குடியிருப்பு கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறையில் உள்ள நடுமலை பகுதி மற்றும் புதுத்தோட்டம் பகுதியிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிக்கு அருகில் ஆசிரியர் குடியிருப்புகள் கட்டித்தரும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) எழவில்லை.

**56—**

## ஆசிரியர்களுக்கு விடுகள்

**வினா எண் 66311—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி, அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, அய்யர்பாடி ரோப்வே ஸ்டேசன் அருகில் மற்றும் பச்சமலை ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு குடியிருக்க வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி, அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, அய்யர்பாடி ஸ்டேசன் அருகில் மற்றும் பச்சமலை ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் குடியிருக்க வீடுகள் கட்டித்தரும் திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) எழவில்லை.

**57—**

## ஆசிரியர் குடியிருப்புகள்

**வினா எண் 66318—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் உள்ள வாட்டர்பால் எஸ்டேட் உதவி பெறும் நடுநிலைப் பள்ளி மற்றும் ஊமாண்டி முடக்கு ஆரம்பப் பள்ளிக்கு அருகில் ஆசிரியர் குடியிருப்புகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் உள்ள வாட்டர்பால் எஸ்டேட் உதவி பெறும் நடுநிலைப் பள்ளி மற்றும் ஊமாண்டி முடக்கு ஆரம்பப் பள்ளிக்கு அருகில் ஆசிரியர் குடியிருப்புகள் கட்டித்தரும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) எழவில்லை.





**58—**

## வீடுகள் கட்டும் திட்டம்

**வினா எண் 66657—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதியில் உயர் வருவாய், நடுத்தர வருவாய் மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்கு வீட்டு வசதி திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) செங்கல்பட்டு தொகுதியில் உயர் வருவாய், நடுத்தர வருவாய் மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்கு வீட்டு வசதி திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**59—**

## முதுகலை வகுப்பு

**வினா எண் 20453—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் வரலாற்றுத் துறைக்கு முதுகலை வகுப்பு துவங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த கல்வியாண்டு முதல் துவங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அனைத்து அரசு கலைக் கல்லூரிகளும், பலகலைக் கழக உறுப்புக் கல்லூரிகளாக மாற்றப்பட்டு விட்டன. எனவே, இதுபற்றி இக்கல்லூரி இணைந்துள்ள திருவள்ளுவர் பலகலைக்கழகம்தான் முடிவெடுக்க வேண்டும். விருத்தாசலம் கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் எம்.ஏ. வரலாறு முதுகலைப் பாடத்தினை 2005-2006 ஆம் கல்வியாண்டில் சுயநிதி அடிப்படையில் துவக்க ஏற்கெனவே அக்கல்லூரி முதல்வரால் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.*

**60—**

### பதவி உயர்வு

**வினா எண் 39285—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உதவி தொடக்கக் கல்வி அலுவலர்களை பணி மூப்பின் அடிப்படையில் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களாக நியமிக்க கருத்துரு ஏதேனும் அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

*இல்லை.*

*உதவித் தொடக்கக் கல்வி அலுவலரின் பணி நிலையும், நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணி நிலையும் ஒரே தன்மை கொண்டவை ஆனால், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்களுக்கு அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் 25% மற்றும் அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் 50% கொண்டு பதவி உயர்விலும், தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம்மூலம் நேரடி நியமனமாக 25% நிரப்பப்படுகின்றது. அதனால் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களை மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களாக பதவி உயர்வு வழங்க இயலாது.*





**61—**

### தடையின்மைச் சான்றிதழ்

**வினா எண் 47639—திரு. வி.கே. லட்சுமணன்:** *மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தரச் சான்றிதழ் பெற்றும், பல்கலைக்கழக மானியக் குழுவும், பல்கலைக்கழகமும் இசைந்து தமிழக அரசு தடையின்மைச் சான்றிதழ் வழங்காததால், தன்னாட்சி உரிமை பெறாத கல்லூரிகள் எவை?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

*பத்தாவது திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி கல்லூரிகளுக்கு தன்னாட்சி வழங்குவதற்காக பல்கலைக்கழக மானியக் குழு அமைத்துள்ள தெரிவுக் குழுவில் (Short Listing Committee) மாநில அரசின் பிரதிநிதிகள் இருப்பர். எனவே, கல்லூரி தன்னாட்சி தகுதி நிலை வழங்க மாநில அரசின் தடையின்மைச் சான்றிதழ் தனியாக தேவைப்படவில்லையாதலால், வினா எழவில்லை.*

**62—**

### ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல்

**வினா எண் 50431—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பாரதியார் பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

*(அ) நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

(ஆ) பாரதியார் பல்கலைக்கழகத்தில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டு, நேர்காணலும் நடத்தி தகுதியான நபர்கள் தேர்வுக் குழுவின்மூலம் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதுகுறித்து உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளதால் தேர்வு செய்யப்பட்டவர்களின் விவரம் இதுவரை வெளியிடப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**63—**

## தேர்வு மையம்

**வினா எண் 62209—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, முசிறியில் அமைந்துள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடப்பாண்டில் ப்ளஸ் 2 மாணவிகள் தேர்வு எழுத தேர்வு மையம் ஏற்படுத்தித்தர அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, முசிறியில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மார்ச் 2005 மேல்நிலைத் தேர்வுக்கு 12 ஆம் வகுப்பு மாணவிகள் தேர்வு எழுத தேர்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

**64—**

## கண்காணிப்புக் குழு அமைத்தல்

**வினா எண் 65458—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள தனியார் கல்லூரிகளில் சேர்க்கைக் கட்டணம் கூடுதலாக மாணவ, மாணவிகளிடம் வசூலிக்கப் பெறுவதை கண்காணிக்க அரசு குழு ஒன்று அமைக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவிகளிடமிருந்து அரசு நிர்ணயம் செய்த கல்விக் கட்டணங்களுக்குமேல் கூடுதலாக கட்டணங்கள் வசூலிக்கப்படுவதாக புகார்கள் ஏதும் வரப்பெறவில்லை. எனவே, குழு அமைக்கும் உத்தேசமில்லை.

**65—**

## தமிழ் மொழியை முழுமையாகப் பயன்படுத்துதல்

**வினா எண் 65523—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு சார்பு நிறுவனங்களில் தமிழை முழுமையாகப் பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு சார்பு நிறுவனங்களில் தமிழை முழுமையாகப் பயன்படுத்திட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், மாநகராட்சிகள், தன்னாட்சி நிறுவனங்கள், வாரியங்கள், கழகங்கள் மற்றும் இணையங்கள் ஆகியவற்றின் தலைமை அலுவலகங்களைத் தமிழ் வளர்ச்சி இயக்குநர் ஆய்வு செய்கிறார். மேலும் சார்பு நிறுவனங்களின் மண்டல/மாவட்ட சார்நிலை அலுவலகங்களை மண்டலத் தமிழ் வளர்ச்சி துணை இயக்குநர்களும், மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்களும் ஆய்வு செய்கின்றனர். ஆய்வுகளின்போது காணப்படும் குறைகளுக்கேற்ப தலைமை அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. அரசின் ஆணைகளுக்கேற்ப இந்த அலுவலகங்களில் தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சு இயந்திரம் 50:50 என்ற அளவில் இருக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
226995
சென்னை-600 008
நூலகம்

66—

## அரசு அருங்காட்சியகம்

**வினா எண் 66287–திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் உள்ள டாப்சிலிப் பகுதியில் அரசு அருங்காட்சியகம் ஒன்றை ஏற்படுத்த முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறையில் உள்ள டாப்சிலிப் பகுதியில் அரசு அருங்காட்சியகம் ஏற்படுத்தும் நோக்கம் தற்போது இல்லை.

67—

## முறைகேடுகளைத் தடுக்க நடவடிக்கை

**வினா எண் 66886–திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், திருப்பூர் வணிக வரித் துறை அலுவலகத்தில் முறைகேடுகள் நடந்து வருவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் செயலாக்கப் பிரிவில், சுழலும் படையில் பணிபுரியும் மூன்று அலுவலர்களின்மீது பெறப்பட்ட புகாரின்





அடிப்படையில் அவர்கள் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டதோடு மட்டுமின்றி அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

பொதுவாக, துறை அலுவலர்கள்மீது தொடுக்கப்படும் புகார் மனுக்களின்மீது சம்பந்தப்பட்ட துணை ஆணையர்களின் கருத்துரையினைப் பெற்று நிர்வாக நலன் கருதியும், செம்மையான நிர்வாகத்தினைக் கருத்தில் கொண்டும் தேவைப்படும் இனங்களில் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தண்டனைகள் வழங்கப்பட்டோ அல்லது இடமாற்றம் செய்யப்பட்டோ ஆணைகள் வழங்கப்படுகின்றன.

68—

## வங்கி மூலம் படிப்புக் கடன்

**வினா எண் 70348–திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவிகளுக்கு வங்கி மூலம் படிப்புக் கடன் எளிதாகக் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவிகளுக்கு வங்கி மூலம் படிப்புக் கடன் பெறுவது தொடர்பாக நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படுவதில்லை. கடனுதவி தேவைப்படும் மாணவர்கள் அந்தந்த கல்லூரி முதல்வர்கள் மூலம் சம்பந்தப்பட்ட வங்கிகளை அணுகினால், வங்கிகள் தங்கள் விதிகளுக்கு உட்பட்டு மாணவர்களுக்கு கடனுதவி அளிக்கும்.

[2005 செப்டம்பர் 23

69—

### பல்தொழில்நுட்பப் பயிலகம்

**வினா எண் 70653—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பொள்ளாச்சியில் பல்தொழில்நுட்பப் பயிலகம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) தற்போது அரசுத் தரப்பில் பொள்ளாச்சியில் புதியதாக அரசு பாலிடெக்னிக் கல்லூரி துவங்க வாய்ப்புகள் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

70—

### மீன்பிடித்து விற்க அனுமதி

**வினா எண் 65718—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, சோலையாறு அணையில் மீன்பிடித்து விற்பதற்கு அரசு அனுமதி வழங்க ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியிலுள்ள சோலையாறு அணையில் மீன் துறை நீர்த்தேக்க மீன்வளத் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் தேவையான தரமான மீன் குஞ்சுகள் இருப்பு செய்து மீன்பிடிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

(ஆ) எழாது.



2005 செப்டம்பர் 23]

71—

### மீன் உலர்களம்

**வினா எண் 71036—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், கீழமூவர்கரை மீனவ மக்களுக்கு மீன் உலர்களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் ஏற்கெனவே ரூ. 182 இலட்சம் செலவில் மொத்தம் 10 இடங்களில் மீனவர் அங்காடிகள் கட்டவும், மேலும் 9 இடங்களில் ஏலக்கூடம் மற்றும் உலர்களம் நிறுவிடவும் அரசாணை (நிலை) எண் 102, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள்: 26-6-2000-ல் ஆணைகள் வழங்கப்பட்டு அதன்படி கட்டுமானப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. இதைத் தவிர, சீர்காழி ஒன்றியம், கீழமூவர்கரை மீனவ மக்களுக்கு மீன் உலர்களம் அமைக்க திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

72—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 10802—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, மாக்கனூர் கிராமத்தில் நடப்பாண்டில் கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, ஒண்ணப்ப கவுடன் அள்ளி ஊராட்சி, மாக்கனூர் குடியிருப்பிற்கு 60,000 லிட்டர் மேல்நிலை

நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்பு திட்டம் உள்ளது. மேலும் நான்கு கையிறைப்பான் திட்டங்களும் பயனில் உள்ளன. இக்குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகைக்கு 1911. தற்போது பயனில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியே போதுமானதாகும்.

**73—**

**நிதியுதவி**

**வினா எண் 12448—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் பெண்களின் கழிப்பிட வசதிக்காக நீர் வசதியுடன் கூடிய கழிப்பிடங்கள் கட்ட நிதியுதவி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி நகராட்சியில், எடப்பாடி நகரில் சட்டமன்றத் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ், நான்கு சுகாதார வளாகங்களும், உலக வங்கி நிதியுதவியுடன் நான்கு சுகாதார வளாகங்களும் நீர் வசதியுடன் கூடிய நவீன கழிப்பிடங்களாகக் கட்டப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

**74—**

**சூளா அடுப்பு அமைத்தல்**

**வினா எண் 14543—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் புகையில்லா அடுப்புத் திட்டத்தின்கீழ் சூளா அடுப்பு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆமெனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நடப்பு ஆண்டில் சூளா திட்டம் நடைமுறையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**75—**

**சந்தைக்கு அடிப்படை வசதிகள்**

**வினா எண் 15287—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் சந்தைக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் சிறப்பு நிலை ஊராட்சியில் சிறப்பு நிலை ஊராட்சிக்குச் சொந்தமான சந்தை ஏதும் இல்லை. எனவே, சந்தைக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பது தொடர்பான கேள்வி எழவில்லை.

**76—**

**மேல்நிலைத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 15615—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 23

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், கீழச்சேரி பள்ளக் காலனியில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடம்பத்தூர் ஒன்றியம், பள்ளக் காலனியை உள்ளடக்கிய கீழச்சேரி கிராமக் குடியிருப்பிற்கு ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பு மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

**77—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 22425—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், சித்தூரில் உள்ள மேல்நிலைத் தொட்டி குடிநீர், மக்கள் தொகை பெருக்கத்தினால் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அங்கு மேலும் ஒரு மேல்நிலைத் தொட்டி இலட்சம் லிட்டர் கொள்ளளவில் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி ஒன்றியம், சித்தூர் ஊராட்சி, சித்தூர் பகுதிக்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு பதிலாக இராசிபுரம்—எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம்



2005 செப்டம்பர் 23]

ஏற்கெனவே இக்குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, அங்கு புதியதாக மேல்நிலைத் தொட்டி கட்ட அவசியம் எழவில்லை.

**78—**

## ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

**வினா எண் 23490—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோனசமுத்திரம் ஊராட்சி, கன்னியாம்பட்டி மேல்நிலைத் தொட்டியில் இருந்து குடிநீர் விநியோகிக்கப்படுகிறதா?

(ஆ) இல்லை எனில், குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) குடிநீர் பற்றாக்குறை இருந்தால் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், கோனசமுத்திரம் ஊராட்சிக்கு உட்பட்ட கன்னியாம்பட்டி குடியிருப்புக்கு ஆழ்துளைக் கிணற்றை ஆதாரமாகக் கொண்டு இக்குடியிருப்பிலுள்ள மேல்நிலைத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் கொங்கணாபுரம் வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்தும் கன்னியாம்பட்டி மேல்நிலைத் தொட்டிக்கு காவிரி குடிநீரும் ஏற்றப்பட்டு போதுமான அளவு விநியோகிக்கப்பட்டு வருகிறது. எனவே, இக்குடியிருப்பில் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

79—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 25214—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, ஒகேனக்கல் கிராமத்தில் சிறு மின்விசைத் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தருமபுரி மாவட்டம், கூத்தப்பாடி ஊராட்சி, ஒகேனக்கல் குடியிருப்பில் இரண்டு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன் கூடிய இரண்டு மின்விசைத் திட்டங்கள் மூலம் தேவையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்பிற்கு தற்போது செயலில் உள்ள திட்டமே போதுமானதாக உள்ளது.

80—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 25786—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கலப்பம்பாடி ஊராட்சி, செஞ்சிமலைக்காடு கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கலப்பம்பாடி ஊராட்சி, செஞ்சிமலைக்காடு குடியிருப்பின் மக்கள் தொகை 25 ஆகும். இக்குடியிருப்பின் மக்கட்தொகை மிகவும் குறைவாக உள்ளதாலும் இக்குடியிருப்பிற்கு ஏழு கையிறைப்பான்கள் மற்றும் சிறுமின்விசைத் திட்டம் ஆகியவை மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுவதாலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க இயலாது.

81—

## மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 27294—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், காளிகவுண்டன்பாளையம் ஊராட்சி, மொட்டாண்டிபாளையத்தில் மேல்நிலைத் தொட்டி கட்டி காவிரி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, காளிகவுண்டன்பாளையம் ஊராட்சியைச் சார்ந்த மொட்டாண்டிபாளையம் குடியிருப்புக்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் ஏற்கெனவே மொட்டாண்டிபாளையத்தில் அமைக்கப்பெற்ற 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து காவிரி நீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் எழவில்லை.

[2005 செப்டம்பர் 23

**82—**

**குடிநீர் வழங்கல்**

**வினா எண் 27817—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், பக்கநாடு ஊராட்சி, மேட்டுத் தெரு பகுதி மேல்நிலைத் தொட்டி மூலம் குடிநீர் விநியோகிப்பதில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) அங்கு குடிநீர் வழங்க அரசு தக்க நடவடிக்கைக்கு உத்தரவிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி ஒன்றியம், பக்கநாடு ஊராட்சி, மேட்டுத் தெரு குடியிருப்புக்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு 31-3-2003 முதல் காவிரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**83—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 29325—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சிறுப்பாக்கம் தொகுதி, அச்சிறுப்பாக்கம் ஒன்றியம், திம்மாபுரம் ஊராட்சி, திம்மாபுரம் காலனி தெருவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2005 செப்டம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அச்சிறுப்பாக்கம் தொகுதி, அச்சிறுப்பாக்கம் ஒன்றியம், திம்மாபுரம் காலனி குடியிருப்பிற்கு ஒரு கையிறைப்பான் மற்றும் குடிநீர் நீட்டிப்பின் மூலமும், 2003-2004 ஆம் நிதியாண்டில் பகுதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் சிறு மின்விசைத் திட்டத்தின் மூலமும் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

**84—**

**குடிநீர் வழங்கல்**

**வினா எண் 29330—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சிறுப்பாக்கம் தொகுதி, அச்சிறுப்பாக்கம் ஒன்றியம், உத்தமநல்லூர் ஊராட்சி, சிறுமுக்காடு ஆதிதிராவிடர் தெருவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி காலனி மக்களுக்கு குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுப்பாக்கம் ஒன்றியம், திருமுக்காடு ஊராட்சியில் உள்ள திருமுக்காடு ஆதிதிராவிட காலனிக்கு 2003-2004-ல் மக்கள் பங்கேற்புடன் பகுதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

85—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 29565—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கண்டர்குலமாணிக்கம் ஊராட்சி, அருந்ததியர் தெரு, காங்கேயன் பாளையம் மற்றும் பூசாரிகாடு ஆகிய பகுதிகளில் ஆழ்துளைக் கிணறு அமைத்து குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம், கண்டர்குலமாணிக்கம் ஊராட்சியிலுள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் இராசிபுரம்—எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தனியே ஆழ்துளைக் கிணறு அமைக்கும் அவசியம் இல்லை.

86—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 40396—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதியில் கிராமங்களில் குடிநீர் மிகவும் கெட்டு விட்டதால், சுத்தமான குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதியில், புழல் ஊராட்சி ஒன்றியத்தில் ஆறு கிராம ஊராட்சிகளுக்கு தொலைதூர நீராதாரங்கள் (Distance source) மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சென்ற நிதியாண்டில் (2003-2004) இத்தொகுதியில் மேலும் 10 குடியிருப்புகளுக்கு குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. மீதமுள்ள, பகுதியாக குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகளுக்கு படிப்படியாக குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

87—

## ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

**வினா எண் 41497—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளி ஒன்றியம், அழிஞ்சிக்குளம், அரப்பாண்டகுப்பம், ஜெயபுரம் ஊராட்சியில் குடிநீர் தட்டுப்பாடு மிகுதியாக இருப்பதால் ஆழ்துளைக் கிணறு அமைத்து குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதிக்குட்பட்ட அழிஞ்சிக்குளம் மற்றும் அரப்பாண்டகுப்பம் குடியிருப்புகளுக்கு முறையே 60,000 லிட்டர் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

பணியாண்டபள்ளி ஊராட்சியைச் சார்ந்த ஜெயபுரம் குடியிருப்பிற்கு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் செயலாக்கப்பட்டுள்ளது. மேலும் புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் இணைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**88—**

## ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

**வினா எண் 41520—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, ஆத்தூர்குப்பம் ஊராட்சி, ஜங்களபுரம், பி. மோட்டூர் கிராமத்திற்கு ஆழ்துளைக் கிணறு அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, ஆத்தூர்குப்பம் ஊராட்சி, ஜங்களபுரம் குடியிருப்புக்கு இரண்டு 30,000 லிட்டர் மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, மேற்படி குடியிருப்பில் கூடுதலாக ஆழ்துளைக் கிணறு அமைக்கும் திட்டம் ஏதுமில்லை. மோட்டூர் குடியிருப்புக்கு இரண்டு கையிறைப்பான் திட்டம் மூலம் அத்தியாவசியத் தேவைக்கு போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் வசதியற்ற குடியிருப்புகள் தேர்வு செய்யப்பட்டு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால் அடுத்து வரும் நிதியாண்டுகளில் முன்னுரிமை மற்றும் தகுதி அடிப்படையில் பி. மோட்டூர் குடியிருப்பிற்கு போதுமான நீராதாரம் அமைத்து குடிநீர்த் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.





**89—**

## பயணிகள் நிழற்குடை

**வினா எண் 41881—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு நகராட்சி, பழைய பேருந்து நிலையத்தில் பயணிகள் நிழற்குடை அமைத்துக் கொடுக்க அரசிடம் கருத்துரு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டு நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் ஒரு சிறிய பயணிகள் நிழற்குடை உள்ளதால், புதியதாக நிழற்குடை அமைத்துக் கொடுக்கும் கருத்துரு நகராட்சியில் ஏதுமில்லை.

**90—**

## சிறு மின்விசைத் திட்டம்

**வினா எண் 54069—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, பணியாண்டப்பள்ளி ஊராட்சி, வாலூர் நடுப்பட்டறை வட்டத்தில் சிறு மின்விசைத் திட்டம் மூலம் மினி டேங்க் அமைத்து குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, பணியாண்டப்பள்ளி ஊராட்சியில் உள்ள வாலூர் நடுப்பட்டறை பகுதிக்கு வாலூர் குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பு செய்து போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் இப்பகுதிக்கு சிறு மின்விசைத் திட்டம் செயல்படுத்தும் அவசியம் எழவில்லை.

**91—**

## நெற்களம் அமைத்தல்

**வினா எண் 55472—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், கலக்கமங்கலம், நெம்மலிக்காடு, ஏகணிவயல் தெற்கு, சந்தமனை, வெள்ளாட்டுமங்கலம், ஆடலைகாலபைரவபுரம் கிராமம், தேடாக்கி, மைவயல் கிராமம் மற்றும் மாணவநல்லூரில் சிமெண்ட் நெற்களம் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சிக்கு ஒரு நெற்களம் அமைக்கும் திட்டத்தின்படி கலக்கமங்கலம், நெம்மலிக்காடு, ஏகணிவயல் தெற்கு, சந்தமனை, வெள்ளாட்டுமங்கலம், ஆடலைகாலபைரவபுரம், தேடாக்கி, மைவயல் மற்றும் மாணவநல்லூர் கிராமங்களில் உள்ள ஊராட்சிகளில் நெற்களம் அமைக்கப்பட்டுள்ளது.

**92—**

## சிமெண்ட் நெற்களம் அமைத்தல்

**வினா எண் 55481—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், வேம்பங்குடி கிழக்கு, மேற்பனைக்காடு கிழக்கு, திட்டக்குடி, வேம்பங்குடி மேற்கு, நெய்வத்தனி, பாண்டிக்குடி, அலஞ்சிராங்காடு மற்றும் மன்னக்குடியில் சிமெண்ட் நெற்களம் அமைத்து தரும் திட்டம் அரசிடம் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சிக்கு ஒரு நெற்களம் கட்டுதல் என்ற அரசின் திட்டப்படி வேம்பங்குடி கிழக்கு, மேற்பனைக்காடு கிழக்கு, திட்டக்குடி, வேம்பங்குடி



மேற்கு, நெய்வத்தனி, பாண்டிக்குடி, அலஞ்சிராங்காடு, மன்னக்குடி கிராமங்களில் உள்ள ஊராட்சிகளில் சிமெண்ட் நெற்களம் அமைக்கப்பட்டுள்ளது.

**93—**

## சிமெண்ட் நெற்களம்

**வினா எண் 55766—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், விஜயபுரம் தெற்கு, மங்களநாடு மேற்கு, அமரசிம்மேந்திரபுரம், கொல்லக்காடு, மருதங்குடி, வல்லவாரி, ஆதிதிராவிடர் காலனியில் சிமெண்ட் நெற்களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சிக்கு ஒரு நெற்களம் கட்டுதல் என்ற அரசின் திட்டப்படி விஜயபுரம் தெற்கு, மங்களநாடு மேற்கு, அமரசிம்மேந்திரபுரம், கொல்லக்காடு, மருதங்குடி, வல்லவாரி, ஆதிதிராவிடர் காலனி கிராமங்கள் உள்ள ஊராட்சிகளில் சிமெண்ட் நெற்களம் அமைக்கப்பட்டுள்ளது.

**94—**

## கழிவறைக் கட்டடம்

**வினா எண் 57113—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரம் மற்றும் சீர்காழி நகர் 15-வது வார்டு கீழத் தெருவில் வசிப்பவர்களுக்குக் கழிவறை கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகராட்சிக்குட்பட்ட சீர்காழி நகர் 15-வது வார்டு கீழத் தெருவில் சுலாப் இன்டர்நேஷனல் என்ற தன்னார்வ அமைப்பின் மூலம் கழிவறை கட்டப்பட்டு, நகராட்சியின் பராமரிப்பிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி கழிவறைக்கு நிலத்தடி நீர் குறைந்து தண்ணீர் வசதி இல்லாமல் உள்ளதால், தண்ணீர் வசதி செய்து கழிவறையின் பழுதகற்ற நகராட்சி பொது நிதியில் ரூ. 80,000/- ஒதுக்கீடு செய்து, ஒப்பந்தப்புள்ளி 9-7-2004-ல் நகராட்சியில் பெறப்பட்டுள்ளது. கழிவறையின் பழுதகற்றி பொது மக்களின் உபயோகத்திற்கு விடப்படும்.

**95—**

## குளம் தூர்வாரும் பணி

**வினா எண் 59192—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், கோவை மாநகரில் உள்ள வாலங்குளத்தையும், உக்கடத்தில் உள்ள குளத்தையும் தூர்வாரி ஆழப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை சிறுதுளி இயக்கத்தினர் பொதுப் பணித் துறையின் மூலம் கோவை மாநகரில் உள்ள வாலங்குளம் மற்றும் உக்கடத்தில் உள்ள குளங்களை தூர் வாரும் பணியை மேற்கொண்டுள்ளனர்.





**96—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 59631—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் ஊராட்சி, அக்ரஹாரத்தில் புதிதாக ஆழ்துளைக் கிணறு அமைத்து மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் ஊராட்சியைச் சார்ந்த வைகுந்தம் அக்ரஹாரத்தில் ஆழ்துளைக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் உள்ளது. 11/2003 முதல் இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் காவிரி குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வேண்டிய அவசியம் இல்லை.

**97—**

## தரைப் பாலம்

**வினா எண் 60246—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கிழக்கு தொகுதியில் இஸ்மாயில்புரம் 12-வது தெருவிலிருந்து தொடங்கி இராமராயர் மண்டகப்படி வரை வைகை ஆற்றில் தரைப்பாலம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாநகராட்சி கிழக்குத் தொகுதியில் இஸ்மாயில்புரம் 12-வது தெருவிலிருந்து தொடங்கி இராமராயர் மண்டகப்படி வரை வைகை ஆற்றில் தரைப்பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**98—**

**மகளிர் சுய உதவிக் குழுவிற்குக் கட்டடம்**

**வினா எண் 61754—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மயிலக்கோயில், மேல்மாத்தூர் ஆகிய கிராமங்களில் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மகளிர் சுய உதவிக் குழு கட்டடம் தற்போது ஓர் ஊராட்சிக்கு ஒன்று மட்டுமே கட்டிக் கொடுக்கப்பட்டு வருகிறது. சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், நல்ல வினாயகபுரம் ஊராட்சி, கடைக்கண் வினாயகநல்லூர் என்கிற கிராமத்தில் 2003-2004ஆம் ஆண்டு சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத்



திட்டத்தில் ஒரு மகளிர் சுய உதவிக் குழு கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளமையால், மேற்படி ஊராட்சியை சேர்ந்த மயிலக்கோயில் என்கிற கிராமத்தில் தனியே ஒரு மகளிர் சுய உதவிக் குழு கட்டடம் கட்ட இயலாது. இதுபோன்று குன்னம் ஊராட்சி, குன்னம் கிராமத்தில் 2003-2004ஆம் ஆண்டு சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தில் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளமையால், மேற்படி ஊராட்சி மேல்மாத்தூர் கிராமத்திற்கு தனியே ஒரு மகளிர் சுய உதவிக் குழு கட்டடம் கட்டிக் கொடுக்க இயலாது.

**99—**

**பேருந்து நிலையம்**

**வினா எண் 64377—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மேற்பனைக்காடு, சுப்பிரமணியபுரம், கட்டுமாவடி, கோட்டைப்பட்டினம், ஆவனத்தான்கோட்டை ஆகிய இடங்களில் பேருந்து நிலையம் கட்டித் தரும் கருத்துரு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இந்த ஊராட்சிகளிடம் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் பேருந்து நிலையம் கட்டித் தரப்படவில்லை. எனவே, இது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

100—

## நீர் விளையாட்டை மேம்படுத்துதல்

**வினா எண் 48215—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு, குளவாய் ஏரியில் முறையான பயிற்சியாளரை வைத்து நீர் விளையாட்டுகளை மேம்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு குளவாய் ஏரியில் முறையான பயிற்சியாளரை வைத்து நீர் விளையாட்டுகளை மேம்படுத்த அரசிடம் திட்டம் எதுவும் இல்லை. ஏனெனில், தற்பொழுது இந்த ஏரியில் போதிய நீர் வசதியில்லாததால் படகு சவாரி நடைபெறவில்லை. மேலும் இங்கே மோட்டார் இயந்திரத்துடன் அமைந்த படகு ஓட்டுவதற்கு மீன்வளத் துறை தடை விதித்துள்ளதால் படகு சவாரியும் தற்செயலாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.



# ஆறாவது பட்டியல்

1—

## பகுதி நேர நியாய விலைக் கடை

**வினா எண் 65653—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, காட்டு வெங்கடபுரம் ஊராட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் பகுதி நேர நியாயவிலைக் கடை திறக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) பேரணாம்பட்டு தொகுதி காட்டு வெங்கடபுரம் ஊராட்சியில் 40 குடும்ப அட்டைகளே உள்ளன. இக்குடும்ப அட்டைகள் 2 கி.மீ. தூரத்திலுள்ள காரப்பட்டு முழு நேர அங்காடியுடன் இணைக்கப்பட்டு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை துவங்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகவில்லை. மேலும் மேற்கண்ட கிராமத்தில் சுய உதவிக்குழு மூலம் நியாய விலைக் கடை ஏதும் நடத்தப்படவில்லை. இக்கிராமத்திலிருந்து சுய உதவிக் குழு மூலம் நியாய விலைக் கடை நடத்த கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை. அவ்வாறு மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் காட்டு வெங்கடபுரம் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க கோரிக்கை பெறப்பட்டால் மாவட்ட ஆட்சித் தலைவர் அளவில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2—

## கடன் வழங்குதல்

**வினா எண் 66261—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள அர்பன் கூட்டுறவு வங்கியில் கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வால்பாறை நகரக் கூட்டுறவு வங்கியில் 28-2-2005-ல் 2,876 தவணை தவறிய கடன்கள் ரூ. 101.86 லட்சம் கடன் தொகையுடன் நிலுவையாக உள்ளன. இவற்றினை சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொண்டு வசூலிக்கும் பணி நடைபெற்று வருகிறது. வங்கியில் தற்போது நகைக்கடன் வழங்குதல் மற்றும் முதிர்வடைந்த வைப்புத் தொகைகளைத் திரும்ப வழங்குதல் ஆகியவை மட்டுமே நடைபெற்று வருகின்றன. இந்திய ரிசர்வ் வங்கி விதிமுறைகளின்படி நீர்மையச் சொத்து, ரொக்க இருப்பு, பராமரிக்கப்பட வேண்டியுள்ளதால் நிதிநிலை சீரடைந்த பின்னர் மற்ற கடன்கள் வழங்கப்படும்.

3—

## நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 71148அ—திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், லால்குடி தொகுதியிலுள்ள ஊட்டத்தூர் கிராமத்தில் கூட்டுறவு நியாயவிலைக் கடைக்கு கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருச்சி மாவட்டம், லால்குடி தொகுதியிலுள்ள ஊட்டத்தூர் கிராமத்தில் ஊட்டத்தூர் 1 மற்றும் ஊட்டத்தூர் 2 என்ற இரண்டு நியாயவிலைக் கடைகளும் பெருவளப்பூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கட்டுப்பாட்டில் முழுநேரக் கடைகளாக செயல்படுகின்றன. ஊட்டத்தூர் 1 நியாயவிலைக் கடை ஊட்டத்தூர் பஞ்சாயத்திற்கு சொந்தமான இலவசக் கட்டடத்திலும், ஊட்டத்தூர் 2 நியாயவிலைக் கடை அரசு நலத் திட்டத்தின் கீழ் கட்டித்தரப்பட்டுள்ள கட்டடத்திலும் செயல்பட்டு வருவதால் மேற்படி நியாயவிலைக் கடைகளுக்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

4—

## கெங்கையம்மன் கோயிலைச் சீரமைத்தல்

**வினா எண் 31036—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி பேருந்து நிலையத்திலுள்ள கெங்கையம்மன் கோயிலைச் சீரமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், பேரணாம்பட்டு அருள்மிகு திருப்பதி கெங்கையம்மன் திருக்கோயிலில் திருப்பணி வேலைகள் "கிராமப்புறத் திருப்பணி நிதியுதவித் திட்டத்தின்" கீழ் ரூ. 25,000 நிதியுதவி வழங்கப்பட்டு திருப்பணி வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன.

5—

## ஆலயம் புதுப்பித்தல்

**வினா எண் 56681—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, திருவாலி ஊராட்சி, பிரதான சாலையில் உள்ள பிடாரியம்மன் ஆலயத்தைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், திருவாலி அருள்மிகு பிடாரியம்மன் திருக்கோயில் துறை நிர்வாகத்திற்கு உட்படாத திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் அமைந்துள்ளது. இதன் நிர்வாகம் கிராம பொதுமக்கள் பொறுப்பில் உள்ளது. மேற்படி திருக்கோயில் திருப்பணி வேலைக்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில் திருப்பணி திட்டத்தின்கீழ் ரூ.25,000/- அனுமதிக்கப்பட்டுள்ளது. ரூ.25,000/-க்கான மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. திருப்பணி வேலைகள் 70% முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகளையும் முடித்து விரைவில் கும்பாபிஷேகம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6—

## கோயில் கட்ட நிதியுதவி

**வினா எண் 56683—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி ஒன்றியம், விளந்திட சமுத்திரம், கீழத் தெருவிலுள்ள அருள்மிகு சீதாளம்மன் கோயிலைக் கட்ட அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சீர்காழி ஒன்றியம், விளந்திட சமுத்திரம், கீழத் தெருவிலுள்ள அருள்மிகு சீதாளம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இதன் நிர்வாகம் கிராம பொதுமக்கள் பொறுப்பில் உள்ளது. இத்திருக்கோயில் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஓர் ஆலயத்திற்கு தலா ரூ.25,000 வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயிலுக்கும் தற்போது நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

7—

## அருள்மிகு பிடாரி அம்மன் கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 56716—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, திருநகரி ஊராட்சியில் உள்ள அருள்மிகு பிடாரி அம்மன் கோயிலை புதிதாகக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, திருநகரி ஊராட்சியில் உள்ள அருள்மிகு பிடாரி அம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இதன் நிர்வாகம் கிராம பொதுமக்கள் பொறுப்பில் உள்ளது. இத்திருக்கோயில் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஓர் ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

**8—**

### கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 56722—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார்கோயில் ஒன்றியம், மாணிக்கப்பங்கு தெருவிலுள்ள கன்னிகாபரமேஸ்வரி கோயிலைப் புதிதாகக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், செம்பனார்கோயில் ஒன்றியம், மாணிக்கப்பங்கு தெருவிலுள்ள கன்னிகாபரமேஸ்வரி திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இதன் நிர்வாகம் கிராம பொதுமக்கள் பொறுப்பில் உள்ளது. இத்திருக்கோயில் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஓர் ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

**9—**

### கன்னிகாபரமேஸ்வரி கோயில் மற்றும் மதுரை வீரன் கோயிலைக் கட்டுதல்

**வினா எண் 56746—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, 54, நெம்மேலி ஊராட்சி, தத்தம்குடியிலுள்ள மகாகாளியம்மன் கோயில், 54 நெம்மேலி கீழத் தெருவிலுள்ள கன்னிகாபரமேஸ்வரி கோயில் மற்றும் மதுரை வீரன் கோயிலை கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 செப்டம்பர் 23

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், 51, நெம்மேலி ஊராட்சி, தத்தம்குடியிலுள்ள மகாகாளியம்மன் கோயில், 51 நெம்மேலி கீழத் தெருவிலுள்ள கன்னிகாபரமேஸ்வரி கோயில் மற்றும் மதுரை வீரன் கோயில் ஆகிய திருக்கோயில்கள் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளன. இவற்றின் நிர்வாகம் கிராம பொதுமக்கள் பொறுப்பில் உள்ளது. இத்திருக்கோயில் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஓர் ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதிக்கு உரிய ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**10—**

## காளியம்மன் கோயிலைப் புதியதாகக் கட்டுதல்

**வினா எண் 56761—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பச்சைபெருமாநல்லூர் ஊராட்சி, மத்தலமையான் தெருவிலுள்ள காளியம்மன் கோயிலை புதியதாகக் கட்டி முடிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 செப்டம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், பச்சைபெருமாநல்லூர் ஊராட்சி மத்தலமையான் தெருவிலுள்ள காளியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இதன் நிர்வாகம் கிராம பொதுமக்கள் பொறுப்பில் உள்ளது. இத்திருக்கோயில் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஓர் ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

**11—**

## கோயில் கட்ட நிதியுதவி

**வினா எண் 58695—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதிரிவேளூர் ஊராட்சி, பூங்குடி தெரு மற்றும் மத்தலமடையான் தெருவில் தொட்டிச்சியம்மன் கோயில் கட்ட நிதியுதவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம் கொள்ளிடம் ஒன்றியம், மாதிரிவேளூர் ஊராட்சி, பூங்குடி தெரு மற்றும் மத்தலமடையான் தெருவில் தொட்டிச்சியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இதன் நிர்வாகம் கிராம பொதுமக்கள் பொறுப்பில் உள்ளது. இத்திருக்கோயில் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஓர் ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

**12—**

## கோயில் கட்டுவதற்கு நிதியுதவி

**வினா எண் 58697—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோயில் பேரூராட்சி, காந்தி நகரிலுள்ள மாரியம்மன் கோயில் கட்டுவதற்கு நிதியுதவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், வைத்தீஸ்வரன் கோயில் பேரூராட்சி காந்திநகரில் உள்ள மாரியம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இதன் நிர்வாகம் கிராம பொதுமக்கள் பொறுப்பில் உள்ளது. இத்திருக்கோயில் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஓர் ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

**13—**

## அய்யனார் கோயில் கட்டுதல்

**வினா எண் 59669—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, ஆதமங்கலம் ஊராட்சி, ஆதமங்கலம் கிராமத்தில் அய்யனார் கோயில் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி வட்டம் ஆதமங்கலம் ஊராட்சி, ஆதமங்கலம் கிராமத்தில் அய்யனார் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இதன் நிர்வாகம் கிராம பொதுமக்கள் பொறுப்பில் உள்ளது. இத்திருக்கோயில் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஓர் ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

**14—**

## சீருடைகள்

**வினா எண் 24325—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்ட சமூக நல அலுவலகத்திற்கு எவ்வளவு மீட்டர் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) நடப்பு கல்வியாண்டிற்கு எவ்வளவு மீட்டர் சீருடைகள் வழங்கப்படவுள்ளது?



**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்ட சமூகநல அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட சீருடைத் துணிகள் விவரம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| காக்கி | — | 119713.00 மீட்டர் |
| நீலகேஸ்மண்ட் | — | 171094.00 மீட்டர் |
| வெள்ளைத்துணி | — | 223863.00 மீட்டர் |
| தாவணி | — | 46492.50 மீட்டர் |
| மொத்தம் | — | 561162.50 மீட்டர் |

சேலம் மாவட்டத்திற்கு 2000-2001 ஆம் ஆண்டில் மொத்தம் 5,61,162.50 மீட்டர் சீருடைத் துணிகள் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) சேலம் மாவட்டத்திற்கு 2002-2003 ஆம் கல்வியாண்டில் வழங்கப்பட்ட சீருடைத் துணிகள் விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| காக்கி | — | 132294 மீட்டர் |
| நீலகேஸ்மண்ட் | — | 200800 மீட்டர் |
| வெள்ளை | — | 257804 மீட்டர் |
| தாவணி | — | 52845 மீட்டர் |
| மொத்தம் | — | 643743 மீட்டர் |

மேலும் கல்வி ஆண்டு 2004-2005-க்கு மொத்தம் 5,74,428 மீட்டர் சீருடைத் துணி வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு:—

| | | |
|---|---|---|
| காக்கி | — | 117263 மீட்டர் |
| நீலம் | — | 177792 மீட்டர் |
| வெள்ளை | — | 231331 மீட்டர் |
| தாவணி நீலம் | — | 48042 மீட்டர் |
| மொத்தம் | — | 574428 மீட்டர் |

15—

## அங்கன்வாடிக் கட்டடங்கள்

**வினா எண் 33123—டாக்டர். சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம் ஒத்தங்காடு அண்டனூர் ஊராட்சியில் மஞ்சம்பட்டி, வேலாடிப்பட்டி ஆகிய கிராமங்களில் அங்கன்வாடிக் கட்டடங்கள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டாரம், ஒத்தங்காடு அண்டனூர் ஊராட்சியில் உள்ள மஞ்சம்பட்டி மற்றும் வேலாடிப்பட்டி ஆகிய கிராமங்களில் 2004-05 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தின்கீழ் தலா ரூ. 1,00,000/- செலவில் அங்கன்வாடிக் கட்டடம் கட்டப்பட்டு விட்டது.

16—

## இலவச சீருடை வழங்கும் திட்டம்

**வினா எண் 35704—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலவச சீருடை வழங்கும் திட்டத்தை 10 ஆம் வகுப்பு வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டத்தை 10 ஆம் வகுப்பு வரை நீட்டிப்பது தொடர்பாக கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. தற்போது இத்திட்டத்தின்கீழ் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு ஒவ்வோராண்டும் இணை பாலியஸ்டர் பருத்தி இழை கலந்த இலவச சீருடை வழங்கப்பட்டு வருகிறது.

17—

## சத்துணவு மையத்திற்குக் கட்டடம்

**வினா எண் 47284—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, கரூர் ஊராட்சி, குமுளூரில் சத்துணவு மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கரூர் ஊராட்சி குமுளூர் கிராமத்தில் 2004-2005 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய் (Sampoorna Gramin Rojgar Yojana) பகுதி-2 திட்டத்தில் ரூ. 40,000/- மதிப்பீட்டில் பள்ளி சத்துணவுச் சமையல் கூடம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

[2005 செப்டம்பர் 23

**18—**

**சத்துணவுக் கூடம் சீரமைத்தல்**

**வினா எண் 48120—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம் சிறுவாலை ஊராட்சி, செல்லக்கவுண்டன்பட்டியில் உள்ள சத்துணவுக் கூடம் சீர் செய்து கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சமயநல்லூர் தொகுதி, மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், சிறுவாலை ஊராட்சி, செல்லக்கவுண்டன்பட்டி சத்துணவு மையத்தை ரூ. 7,000 மதிப்பீட்டில் பழுதுநீக்கம் செய்ய 30-10-2004 அன்று அனுமதி ஆணை வழங்கப்பட்டபோதிலும் கனமழையின் காரணத்தினால் மேற்படி மையத்தின் சமையற்கூடம் மிகவும் பழுதடைந்ததால் தற்போதுள்ள கட்டடத்தை இடித்துவிட்டு ரூ. 50,000/- மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவேண்டியுள்ளதால் 2005-2006ஆம் ஆண்டில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலமாக, எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தின்கீழ் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**19—**

**அங்கன்வாடியைச் சீரமைத்தல்**

**வினா எண் 55918—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஈச்சங்கருணை அங்கன்வாடியைச் சீரமைத்துத் தர அரசு முன் வருமா?



2005 செப்டம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஈச்சங்கருணை ஊராட்சியில் உள்ள அங்கன்வாடியைப் பழுது பார்த்திடும் பணி நடப்பு 2005-2006 ஆம் நிதியாண்டில் சுமார் ரூ. 40,000/- மதிப்பீட்டில் 11-வது நிதிக்குழு மானிய திட்டத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**20—**

**பாலர் பள்ளி தொடங்குதல்**

**வினா எண் 61674—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், பெருங்காடு ஊராட்சி, வேங்கூர், மேல்மங்கலம் வடக்கு, அத்தாணி ஊராட்சி, கலக்கமங்கலம் மற்றும் ஏகணிவயல் ஊராட்சியிலுள்ள ஏகணிவயல் தெற்கு ஆதிதிராவிடர்களுக்கு பாலர் பள்ளி தொடங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

ஆதி திராவிடர்களுக்கான பாலர் பள்ளி (அங்கன்வாடி மையங்கள்) தொடங்க மக்கள்தொகை 1000 மற்றும் 2-5 வயதுள்ள குழந்தைகள் எண்ணிக்கை 25 இருக்கவேண்டும். ஆனால், அறந்தாங்கி ஒன்றியம், பெருங்காடு ஊராட்சி, அத்தாணி ஊராட்சி மற்றும் ஏகணிவயல் ஊராட்சியில் உள்ள கீழ்க்கண்ட கிராமங்களில் அதற்கெதிரே குறிப்பிட்டவாறு மக்கட்தொகையும், 2-5 வயது குழந்தைகளும் உள்ளனர்.

| வ. எண் | கிராமத்தின் பெயர் | மக்கட்தொகை | குழந்தைகளின் எண்ணிக்கை (2-5 வயது) |
|---|---|---|---|
| 1 | வேங்கூர் | 195 | 13 |
| 2 | மேல்மங்கலம் வடக்கு | 267 | 9 |
| 3 | கலக்கமங்கலம் | 355 | 18 |
| 4 | ஏகணிவயல் தெற்கு | 379 | 94 |

மேற்கண்ட கிராமங்களில் மக்கள் தொகை 1,000-க்கு குறைவாகவும், 2-5 வயது குழந்தைகளின் எண்ணிக்கை 25-க்கும் குறைவாக (ஏகணிவயல் தெற்கு தவிர) உள்ளதாலும், மேலும் ஆதிதிராவிடர் குடியிருப்பில் உள்ள குழந்தைகள் அந்தந்த ஊரில் உள்ள அங்கன்வாடி மையங்களில் பயன்பெற்று வருவதாலும் புதிய மையம் அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

**21—**

## சத்துணவு மற்றும் உணவுப் பொருட்கள் சரிபார்த்தல்

**வினா எண் 62719—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள சத்துணவுக் கூடங்களில் சத்துணவு மற்றும் உணவுப் பொருட்கள் சரியாக உள்ளனவா என்பதை அரசு அலுவலர்களால் ஆய்வு செய்யப்படுகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

அரசு ஆணை (நிலை) எண் 37, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 12-3-2002-ன்படி கண்காணிப்புக்குழு ஏற்படுத்தப்பட்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள், திட்டம்-3 ஆகிய திட்டங்களின்கீழ் செயல்படும் சத்துணவு மையங்களுக்கு தினசரி உணவு பொருட்களை பயனாளிகளின்





வருகைக்கு தக்கவாறு வழங்கப்படுவது குறித்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் அரசு ஆணை (நிலை) எண் 66, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 13-5-2002-ன்படி மாவட்ட/வட்டார/மாநகராட்சி மற்றும் ஊராட்சி அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டு சத்துணவு மையங்களின் செயல்பாடுகளைப்பற்றி கண்காணிக்கப்படுகிறது.

(2) மேலும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் (ம) உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் 3 ஆகிய திட்டங்களின்கீழ் செயல்படும் சத்துணவு மையங்கள்/அங்கன்வாடி மையங்கள் மேலும் சிறப்பாகவும், சீராகவும், செம்மையாகவும், எவ்வித குறைபாடுகளுமின்றி செயல்படவும், மையங்களை தீவிரமாகக் கண்காணிப்பது குறித்து அரசாணை (நிலை) எண் 151, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 13-8-2004-ல் கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன, அதன்படி,

(i) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கிலிருந்து உணவுப்பொருட்களை சத்துணவு மையங்களுக்கு பொருட்போக்குவரத்து வண்டிகள் மூலம் ஏற்றுவதற்கு முன்னர் எடை மற்றும் பொருட்களின் தரத்தை சரிபார்க்க மாவட்ட திட்ட அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களின் நேர்முக உதவியாளர்களால் (சஉதி) கிட்டங்கிகளுக்கு சென்று கண்காணிக்க வேண்டும்.

(ii) மேலும் சத்துணவு மையங்களை பார்வையிடுவது தொடர்பாக குறியீட்டு இலக்கு (Target) நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி

| | |
|---|---|
| (i) மாவட்ட ஆட்சித் தலைவர் | — 10 மையங்கள்/பிரதி மாதம் |
| (ii) மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்கள் (சஉதி) | — 20 மையங்கள்/பிரதி மாதம் |
| (iii) திட்ட அலுவலர்கள் (P.O.) | — 30 மையங்கள்/பிரதி மாதம் |
| (iv) குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள் (CDPO) | — 60 மையங்கள்/பிரதி மாதம் |
| (v) வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (BDO) | — 40 மையங்கள்/பிரதி மாதம் |

சத்துணவு மையங்களை ஆய்வு மேற்கொள்கிறார்கள்.

[2005 செப்டம்பர் 23

(iii) குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள்/வட்டார வளர்ச்சி அலுவலர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கின் (Godown) சம்பந்தப்பட்ட அலுவலரின் தொலைபேசி எண் அறிந்து தொடர்பு கொண்டு, மையங்களுக்கு உணவுப் பொருட்கள் விநியோகம் செய்வதை அறிந்து, அதனை சம்பந்தப்பட்ட அங்கன்வாடி பணியாளர்/ சத்துணவு அமைப்பாளர்களுக்கு தெரியப்படுத்தியும், மையங்களில் பெறப்படுகின்ற அத்தியாவசிய பொருட்களின் எடை மற்றும் தரம் (Quality) சரிபார்த்தும், அதன்பின் ஒப்புகை அளித்தும், இது தொடர்பான பதிவேடுகளில் பதியப்பட்டு பதிவேடுகள் பராமரிக்கப்படுகிறது. மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் திங்கள்தோறும் குறைந்தது 10 மையங்களை ஆய்வு செய்கிறார்கள்.

**22—**

## சமூக நலப் பாதுகாப்பு மையங்கள்

**வினா எண் 65365—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, சங்கராபுரம், கல்வராயன் மலை, கள்ளக்குறிச்சி ஆகிய ஒன்றியங்களில் சமூக நல பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2000-ன்படி கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள், குழந்தைகள் இல்லங்கள் மற்றும் பிற்காப்பு இல்லங்கள் தோற்றுவிக்கப்பட்டு சமூகப் பாதுகாப்பு துறையின்கீழ் செயல்பட்டு வருகின்றன. சங்கராபுரம் தொகுதி, சங்கராபுரம் கல்வராயன்மலை, கள்ளக்குறிச்சி ஆகிய ஒன்றியங்களில் சமூக நலப் பாதுகாப்பு மையங்கள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



2005 செப்டம்பர் 23]

**23—**

## சீர்திருத்தப் பள்ளிக் கட்டடங்கள் புதுப்பித்தல்

**வினா எண் 65666—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், தட்டப்பாறை சீர்திருத்தப் பள்ளிக் கட்டடங்கள் பராமரிப்பின்றி இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதைப் புதுப்பித்து பொதுக் காரியங்களுக்குப் பயன்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) தூத்துக்குடி மாவட்டம், தட்டப்பாறை சீர்திருத்தப் பள்ளி இளைஞர் நீதி குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புச் சட்டம் 2000-ன்படி, குழந்தைகள் இல்லமாக செயல்பட்டு வருகிறது. மேற்காணும் இல்ல கட்டடத்தை பழுது பார்ப்பதற்காக 2003-2004 மற்றும் 2004-2005 ஆண்டுகளில் அரசின் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பழுது பார்க்கும் பணி நடைபெற்று வருகிறது.

(ஆ) மேற்படி இல்லத்தில் இல்லவாசிகள் உள்ளேயே தங்கி இருப்பதால் பொதுக் காரியங்களுக்கு கட்டடங்களை பயன்படுத்த இயலாது.

**24—**

## சேவை இல்லம்

**வினா எண் 70183—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதியில் அரசு சேவை இல்லம் அமைத்திட செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டத்தில் பெண்ணாகரம் தொகுதியில் புதியதாக அரசு சேவை இல்லம் துவங்கிட திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**25—**

**ஊரக நூற்பு நிலையங்கள்**

**வினா எண் 70291—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப்பகுதியில் ஊரக நூற்பு மையங்கள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை மலைப்பகுதியில் அரசு சார்பில் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் மூலம் ஊரக நூற்பு மையங்களை ஏற்படுத்துவதற்கு திட்டம் எதுவும் தற்போது இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**26—**

**"கக்கூன்" பட்டுக்கூடுகள் விற்பனை**

**வினா எண் 71972—திரு. சி. சண்முகவேலு :** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) "கக்கூன்" பட்டுக்கூடுகளை தமிழ்நாட்டில் விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழநாட்டில் கீழ்க்காணும் 17 அரசு பட்டுக்கூடு அங்காடிகள் மூலம் பட்டுக்கூடுகள் விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

| வ. எண் | பட்டுக்கூடு அங்காடி அமைந்துள்ள | |
|---|---|---|
| | இடம் | மாவட்டம் |
| (1) | ஓசூர் | கிருஷ்ணகிரி |
| (2) | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி |
| (3) | தருமபுரி | தருமபுரி |
| (4) | பாலக்கோடு | தருமபுரி |
| (5) | சேலம் | சேலம் |
| (6) | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |
| (7) | ஈரோடு | ஈரோடு |
| (8) | தாளவாடி | ஈரோடு |
| (9) | வாணியம்பாடி | வேலூர் |
| (10) | திருச்சி | திருச்சி |
| (11) | திருச்சி | புதுக்கோட்டை |

| | | |
|---|---|---|
| (12) | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| (13) | சிவகங்கை | சிவகங்கை |
| (14) | தேனி | தேனி |
| (15) | நன்னகரம் | திருநெல்வேலி |
| (16) | திருவில்லிபுத்தூர் | விருதுநகர் |
| (17) | நாகர்கோவில் | கன்னியாகுமரி |

(ஆ) ஏற்கனவே போதுமான அளவு பட்டுக்கூடு விற்பனை அங்காடிகள் உள்ளதால் இவ்வினா எழவில்லை.

**27—**

## நீர்ப் பாசனத்திற்கு மானியம்

**வினா எண் 71975—திரு. சி. சண்முகவேலு :** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டு வளர்ச்சிக்கு உதவும் வகையில் நீர்ப் பாசனத்திற்கு மாநில அரசு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

பட்டு வளர்ச்சிக்கு உதவும் வகையில் நீர்ப் பாசனத்திற்கு மத்திய, மாநில அரசு மூலம் 1998-1999 முதல் 2004-2005 ஆண்டு வரை, 2,188 ஏக்கர் மல்பரி தோட்டங்களில் சொட்டு நீர் பாசன அமைப்பு நிறுவிட உதவும் வகையில் மொத்தம் ரூ. 289.45 லட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. அதில் ரூ. 28.945 லட்சம் மாநில அரசின் மானியத் தொகையாகும். நடப்பு 2005-2006 ஆம் ஆண்டில் 400 ஏக்கரில் சொட்டு நீர்ப் பாசன அமைப்பு அமைத்திட மல்பரி தோட்டங்களுக்கு ரூ. 55.20 இலட்சம் மானியம் வழங்கிடவும், அதில் மாநில அரசின் பங்காக ரூ. 5.52 இலட்சம் செலவினம் மேற்கொள்ளவும் திட்டம் உள்ளது.



**28—**

## ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி

**வினா எண் 20976—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூவிருந்தவல்லி தொகுதி, திருமழிசை பகுதியிலுள்ள மாணவர் விடுதி பழுதடைந்த கட்டடத்தில் நடைபெற்று வருவது, குறைந்த மாணவர் எண்ணிக்கையை வைத்துக்கொண்டு அதிக மாணவர்கள் கணக்கு காட்டி வருவது ஆகியவை அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இதனை செப்பனிட அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பூவிருந்தவல்லி தொகுதி, திருமழிசை ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிக்கு அரசு கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. இந்த விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ள அளவு மாணவர்கள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். மாணவர் எண்ணிக்கையில் முறைகேடு ஏதும் நடக்காதவாறு விடுதி கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**29—**

## அரசுப் பண்ணைகள்

**வினா எண் 42543—திரு. அ.இரா. மலையப்பசாமி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோட்டக்கலைத் துறை மூலம் இயங்கி வரும் அரசுப் பண்ணைகள் எத்தனை?

(ஆ) அதன் மூலம் ஈட்டப்படும் வருமானம் எவ்வளவு?

(இ) ஆண்டுக்கு ஆகும் செலவினம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தோட்டக்கலைத் துறை மூலம் இயங்கி வரும் அரசுப் பண்ணைகள் மொத்தம் 55 ஆகும்.

(ஆ) அதன் மூலம் ஈட்டப்படும் வருமானம் 2002-2003 ஆம் ஆண்டு ரூ. 866.419 இலட்சம் ஆகும். 2003-2004-ல வருமானம் ரூ. 1,122.024 இலட்சம் ஆகும்.

(இ) அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் ஆண்டுக்கு ஆகும் செலவினம் 2002-2003-ல் ரூ. 807.587 இலட்சம், நிகர வருவாய் ரூ. 58.832 இலட்சம், 2003-2004-ல் செலவினம் ரூ. 822.42 இலட்சம், நிகர வருவாய் ரூ. 299.601 இலட்சம்.

**30—**

**மலர்க் கண்காட்சி**

**வினா எண் 44219—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002 ஆம் ஆண்டு ஊட்டியில் நடந்த மலர்க் கண்காட்சி மூலம் அரசுக்கு எவ்வளவு வருமானம் கிடைத்தது?

(ஆ) ஊட்டியை மேலும் அழகுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 2002 ஆம் ஆண்டு ஊட்டியில் நடந்த மலர்க் கண்காட்சி மூலம ரூ. 5.578 இலட்சம் அரசுக்கு வருவாய் கிடைத்தது.

(ஆ) ஊட்டி நகரை அழகுபடுத்திட பிரதிமாதம் 1 ஆம் தேதி துப்புரவு நாளாக அனுமதிக்கப்பட்டு சிறப்பு துப்புரவு இயக்கம் நடத்தப்பட்டு அனைத்து பகுதிகளிலும் குப்பைகள் அகற்றப்பட்டு வருவதுடன் தூக்கி எறியும் பிளாஸ்டிக் பைகள், கப்கள் பயன்படுத்துதல் தடை செய்யப்பட்டுள்ளது. முக்கிய இடங்களில் குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. சாலையோர பூங்காக்கள் மற்றும் சாலை சந்திப்புக்களில் உள்ள போக்குவரத்து தீவுகள் ஆகியன தனியார் வசம் பராமரிக்க ஒப்படைக்கப்பட்டுள்ளன. நகரின் முக்கிய இடங்களில் பொது கழிப்பிடங்கள் கட்டி சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்திட வகை செய்யப்பட்டுள்ளது.



**31—**

**மகளிர் தொழில்நுட்பப் பயிற்சி**

**வினா எண் 65644—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் மகளிர் தொழில் செய்ய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறையின் மூலம் மகளிர் தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) சேலம் மாவட்டத்தில் நடப்பாண்டில் (2004-2005) பல்வேறு பகுதிகளைச் சார்ந்த 150 மகளிர்களுக்கு ரூ.75,000/- செலவில் காளான் சாகுபடி பயிற்சி அளிக்கப்பட்டு காளான் தொழில் செய்ய வழி வகுக்கப்பட்டுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**32—**

**மாணவர் விடுதிக்குக் கூடுதலாகக் கட்டடம்**

**வினா எண் 53402—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி பேரூராட்சியில் அமைந்துள்ள பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்கு கூடுதலாகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

முசிறி பேரூராட்சியிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவர் விடுதிக்கு கட்டடம் கட்ட 2004-2005 ஆம் ஆண்டில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. நிலம் ஒப்படைக்கப்பட்டு கட்டடப் பணி பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட உள்ளது.

**33—**

**புதிய விடுதி துவங்குதல்**

**வினா எண் 69972—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் பிற்பட்டோர் நல மாணவர்களுக்கு புதிய விடுதி துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகரில் தற்போது ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி இயங்கி வருகிறது. வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் விடுதிகளுக்குச் சொந்த கட்டடம் கட்ட பெருந்தொகை ஒதுக்கப்பட்டு உள்ளதாலும், சீர்காழியைச் சுற்றி 7 அரசு விடுதிகள் இயங்கி வருவதாலும், தற்போது சீர்காழி நகரில் மாணவருக்கான புதிய விடுதி துவங்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**34—**

**கால்நடை மருத்துவர் நியமனம்**

**வினா எண் 69643—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி தொகுதி, கோட்டத்தூர் கால்நடை மருத்துவமனைக்கு நிரந்தர கால்நடை மருத்துவர் நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

திருச்சி மண்டலம், முசிறி தொகுதி, கோட்டத்தூர் கிராமத்தைச் சுற்றி 5 கிலோ மீட்டர் தூரத்திற்குள் புத்தனாம்பட்டி, நாகலாபுரம் கால்நடை மருந்தகங்களும் 3 கிலோ மீட்டர் தூரத்தில் கிழக்குன்னுப்பட்டி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. எனவே, கோட்டத்தூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவங்குவதற்கான வாய்ப்புகள் இல்லை. இந்நிலையில், அங்கு நிரந்தர கால்நடை மருத்துவரை நியமனம் செய்ய வேண்டும் என்ற வினா எழாது.

**35—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 69653—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், மருதங்குடி ஊராட்சி ஆலஞ்சேரியில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) நாகை மாவட்டம், சீர்காழி தொகுதி, மருதங்குடி ஊராட்சி ஆலஞ்சேரியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

**36—**

**கால்நடை மருத்துவமனை துவங்குதல்**

**வினா எண் 69983—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 23

எடப்பாடி ஊராட்சியில் ஆடையூர், பக்கநாடு ஆகிய கிராமங்களில் புதிய கால்நடை மருத்துவமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது துறையின்கீழ் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்களை மட்டுமே கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால், சேலம் மாவட்டம், எடப்பாடி ஊராட்சியில், ஆடையூர், பக்கநாடு ஆகிய கிராமங்களில் புதியதாக நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனையை அரசு துவக்க தற்போது வாய்ப்பில்லை.

**37—**

### கால்நடை கிளை மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 70155—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், பிலிக்கல்பாளையத்தில் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கால்நடை கிளை நிலையம் அமைக்க தடையாணை அமலில் உள்ளதால் கபிலர்மலை ஒன்றியத்திலுள்ள பிலிக்கல்பாளையத்தில் கால்நடை கிளை நிலையம் தோற்றுவிக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.



2005 செப்டம்பர் 23]

**38—**

### ஆடு ஆராய்ச்சி நிலையம்

**வினா எண் 70309—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் இரண்டாவது தொகுதி கன்னங்குறிச்சி ஊராட்சியில் ஆடு ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) பல கோடி செலவினம் மேற்கொண்டு கால்நடை மற்றும் மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் ஆடு ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், மாவட்ட அளவில் தனியே ஆராய்ச்சி நிலையம் அமைப்பது உசிதம் அல்ல. எனவே, தற்போது சேலம் இரண்டாவது தொகுதி, கன்னங்குறிச்சி ஊராட்சியில் ஆடு ஆராய்ச்சி நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

**39—**

### பயிற்சி மையம்

**வினா எண் 71107—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற கால்நடை வளர்ப்பில் உள்ள விவசாயிகளுக்கு அறிவியல் தொழில்நுட்பத்தை விளக்க எந்தெந்த மாவட்டங்களில் பயிற்சி மையம் அரசு அமைத்துள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

[2005 செப்டம்பர் 23

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் கீழ்க்காணும் 23 இடங்களில் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களை அமைத்து கால்நடை வளர்ப்பில் விவசாயிகளுக்கு தகவல் பயிற்சி மற்றும் தொழில்நுட்பத்தை அளித்து வருகிறது:—

1. கோயம்புத்தூர்
2. தருமபுரி
3. திண்டுக்கல்
4. ஈரோடு
5. கரூர்
6. மதுரை
7. மேல்மருவத்தூர் (காஞ்சிபுரம் மாவட்டம்)
8. நெய்வேலி (கடலூர் மாவட்டம்)
9. நாகர்கோயில்
10. புதுக்கோட்டை
11. இராஜபாளையம் (விருதுநகர் மாவட்டம்)
12. சேலம்
13. திருச்சி
14. தஞ்சாவூர்
15. திருப்பூர்
16. திருநெல்வேலி
17. வேலூர்
18. காஞ்சிபுரம்
19. தேனி
20. திருவாரூர்
21. சிவகங்கை
22. நாமக்கல்
23. திருவள்ளூர்



2005 செப்டம்பர் 23]

**40—**

**கறவை மாடுகள் இனப் பெருக்கம்**

**வினா எண் 71421—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கால்நடை பராமரிப்புத் துறை மூலமாக புதிய இன கலப்பின கறவை மாடுகள் இனப் பெருக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது கால்நடை பராமரிப்புத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் கொள்கையின் அடிப்படையில் இத்துறையின் ஆளுகைக்குட்பட்ட மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் உயர்ரக ஜெர்சி மற்றும் ஹொல்ஸ்டைன் ப்ரீசியன் பொலிகாளைகளின் மூலம் மட்டுமே விந்து சேகரிக்கப்பட்டு மிகுதியான அளவில் கறவை மாடுகள் இனப்பெருக்கம் செய்யப்பட்டு வருகின்றது. இதனைத் தவிர பிற இன கலப்பினக் கறவை மாடுகள் மூலம் இனப்பெருக்கம் செய்வது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**41—**

**வன மேம்பாட்டுத் திட்டம்**

**வினா எண் 47670—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2002-2003 ஆம் ஆண்டில் வனத் துறையில் வன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் யாவை?

(ஆ) அவற்றுக்கென செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் வன மேம்பாட்டு முகமை மூலம் 2002-2003 ஆம் ஆண்டில் தேசிய காடு வளர்ப்புத் திட்டம் மற்றும் இதர திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை. 2003-2004 ஆம் ஆண்டில மத்திய அரசால் காஞ்சிபுரம் வன மேம்பாட்டு முகமைக்கு தேசிய காடு வளர்ப்புத் திட்டத்திற்கு ரூ.342.19 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு 2003-2004 ஆம் ஆண்டிற்கு ரூ.43.19 இலட்சமும் மற்றும் 2004-2005 ஆம் ஆண்டுக்கு ரூ.105.60 இலட்சமும் விடுவிக்கப்பட்டது. இதுவரை விடுவிக்கப்பட்ட தொகையான ரூ.148.79 இலட்சத்தில் காஞ்சிபுரம் வன மேம்பாட்டு முகமையால் இதுவரை தேசிய காடு வளர்ப்புத் திட்டத்திற்காக ரூ.40.36 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**42—**

**நடமாடும் கண்காட்சி**

**வினா எண் 67954—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகரில் பிளாஸ்டிக்கிற்கு பதிலாக சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களை பயன்படுத்துவது சம்பந்தமாக நடமாடும் கண்காட்சி நடத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

ஆம்.

**43—**

**விலை உயர்ந்த மரங்களை பாதுகாத்தல்**

**வினா எண் 68021—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மற்றும் ஏலகிரி மலைகளிலுள்ள சந்தனம், தேக்கு போன்ற விலை உயர்ந்த மரங்களை காட்டுத் தீயிலிருந்து காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வனத் துறையில் தீ பற்றக்கூடிய காலங்களில் தீ ஏற்படக்கூடிய பகுதிகளில் நெருப்பு பற்றக்கூடிய காய்ந்த பொருட்களை அப்புறப்படுத்தி தீ தடுப்பு கோடுகள் வெட்டப்படுகின்றன. தீ ஏற்படும் காலங்களில் தீ தடுப்பு காவலர்களை டிசம்பர் முதல் மே முடிய பணிக்கு அமர்த்தப்பட்டு தீ ஏற்படாவண்ணம் கண்காணித்து வரப்படுகிறது. வனப்பகுதிக்குள்ளும் வனப்பகுதிக்கு அருகாமையிலுள்ள கிராம மக்களுக்கு தீ தடுப்பு விழிப்புணர்வு முகாம் நடத்தி தீ தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்படுகிறது. திரையரங்குகளில் சிலைடு விளம்பரம், கிராமப் பகுதிகளில டாம், டாம் அடித்தும், துண்டு பிரசுரங்கள் மூலமாகவும், வனத்தில் ஏற்படும் அழிவுகள் மற்றும் வனத்தினை பாதுகாக்க வேண்டியதன் அவசியம் மற்றும் முக்கியத்துவத்தினைப் பற்றியும் கிராம மக்களுக்கு விளக்கப்படுகிறது.

மேலும், ஒவ்வொரு கிராமத்திலும் தீ தடுப்பு குழு ஒன்று அமைக்கப்பட்டு அருகில் உள்ள கிராம மக்களின் உதவி கொண்டு உடனுக்குடன் தீ பரவாமல் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

மற்றும் தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டத்தின்கீழ் கூட்டு வனக் குழுவில் அமைக்கப்பட்ட வனக் குழு உறுப்பினர்களும், தீ தடுப்பு நடவடிக்கைகளிலும், பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் தேவைப்படும்போது பங்கெடுத்து செயல்பட்டு வருகின்றனர்.

[2005 செப்டம்பர் 23

44—

## மரக் கன்றுகள் நடுதல்

**வினா எண் 68358—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் இந்த நிதியாண்டில் வனத் துறை மூலம் புதியதாக மரக் கன்றுகள் நடுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

ஆம். புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வனப் பகுதிகளில் திருச்சி வனக் கோட்டம், வன ஆராய்ச்சி மண்டலம் மற்றும் புதுக்கோட்டை சமூக வனக் கோட்டம் மூலமாக திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை சமூக வனக் கோட்டத்தைப் பொறுத்தமட்டில் இந்த நிதியாண்டில் (2005-2006) வன வளர்ச்சி முகமையின் மூலம் தேசிய வன வளர்ச்சி திட்டத்தின்கீழ் நான்கு கிராமங்களில் 3,33,000 கருவேலக் கன்றுகள் நட்டு தோட்டங்கள் எழுப்பப்படவுள்ளது.

45—

## கருவேல மரங்கள் நடுதல்

**வினா எண் 72062—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, உருளிக்கல் மற்றும் சின்கோனா வனப் பகுதியிலுள்ள பிரதான சாலைகளின் இரு பக்கங்களிலும் கருவேல மரங்கள் நடுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 செப்டம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதி, உருளிக்கல் மற்றும் சின்கோனா வனப் பகுதியிலுள்ள பிரதான சாலைகளின் இரு பக்கங்களிலும் கருவேல மரங்கள் நடுவதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும், கருவேல மரங்கள் நிழல் தரும் மரங்கள் அல்ல. எனவே, இவற்றை சாலைகளின் இருபுறங்களிலும் நடுவதற்கு தேர்வு செய்யப்படுவதில்லை.

(ஆ) வினா எழவில்லை.

46—

## கருவேல மரங்களை நடுதல்

**வினா எண் 72064—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பரம்பிகுளம் மற்றும் டாப்சிலிப் பிரதான சாலைகளின் இரு பக்கமும் கருவேல மரங்களை நடுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதி, பரம்பிகுளம் மற்றும் டாப்சிலிப் பிரதான சாலைகளின் இரு பக்கமும் கருவேல மரங்கள் நடவு செய்யும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**47—**

## மின் ஆக்கி பொருத்துதல்

**வினா எண் 63581—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்மூலம் கட்டப்பட்டுள்ள வீடுகள் உள்ள பகுதிகளுக்கு மின் ஆக்கி (ஜெனரேட்டர்) வாங்கித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமமூலம் கட்டப்பட்டுள்ள வீடுகள் உள்ள பகுதிகளுக்கு மின் ஆக்கி (ஜெனரேட்டர்) பொருத்தும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

**48—**

## நூலகம் திறத்தல்

**வினா எண் 10835—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், நவ்வலடி ஊராட்சி, மரக்காட்டுவிளை கிராமத்தில் நூலகம் திறக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், நவ்வலடி ஊராட்சி, மரக்காட்டுவிளை கிராமத்தில் நூலகம் திறப்பதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்டுள்ள நிபந்தனைகள் இன்னமும் நிறைவேற்றப்படாததால் இதுவரை நூலகம் திறக்கப்படவிலலை:



1. நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

2. எதிர்காலத்தில் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலி மனை நூலக ஆணைக் குழுவின் பொருக்குப் பத்திரப்பதிவு செய்து அளிக்கப்பட வேண்டும்.

3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடச் சாமான்கள் நன்கொடையாக அளிக்கப்பட வேண்டும்.

5. ரூ.1,000/- வீதம் செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

**49—**

## கலை—கைத்தொழில் ஆசிரியர்கள் நியமனம்

**வினா எண் 37936—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு உயர்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள கலை-கைத்தொழில் ஆசிரியர்கள் நியமனம் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2004-2005 ஆம் கல்வியாண்டில் பள்ளிக் கல்வித் துறையில் அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக இருந்த 500 ஓவிய ஆசிரியர்கள், 79 இசையாசிரியர்கள் மற்றும் 204 தையலாசிரியர் பணியிடங்களை நிரப்பிக்கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. இப்பணியிடங்களை இனவாரி சுழற்சி அடிப்படையில் வேலைவாய்ப்பகம் மூலம், பதிவு மூப்பு அடிப்படையில் நிரப்பி அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு சார்ந்த மாவட்ட வேலைவாய்ப்பகங்களில் இருந்து

[2005 செப்டம்பர் 23

பணிநாடுநர் பட்டியல் பெற்று சான்றுகளைப் பரிசீலனை செய்து முதன்மைக் கல்வி அலுவலர்களால் தற்போது நியமனம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனைத்து கலையாசிரியர் காலிப் பணியிடங்களும் உரிய விதிகளின்படி உடனடியாக நிரப்பப்படும்.

**50—**

## புத்தகங்கள் வழங்குதல்

**வினா எண் 62416—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் உள்ள நூலகத்தில் இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, இளநிலை ஆசிரியர் பட்டப் படிப்பு, இந்திய இரயில்வே பணி மற்றும் தமிழ்நாடு தேர்வாணையப் பதவிகளுக்கு படிக்க புத்தகங்கள், வழிகாட்டும் குறிப்புகள் இல்லையென்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இப்புத்தகங்கள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை கிளை நூலகத்தில் குடிமைப் பணி பிரிவுப் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ள இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, இளநிலை ஆசிரியர் பட்டப் படிப்பு, இந்திய இரயில்வே பணி மற்றும் தமிழ்நாடு தேர்வாணையப் பதவிகளுக்குத் தேவையான 784 நூல்கள் வாசகர்களின் பயன்பாட்டிற்கு வைக்கப்பட்டுள்ளன. 2004ஆம் ஆண்டில் 100 வாசகர்கள் இந்நூல்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

**51—**

## நூலகங்களுக்குப் புத்தகங்கள்

**வினா எண் 65748—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 23]

2003-2004 ஆம் ஆண்டில் கபிலர்மலை தொகுதியிலுள்ள ஒவ்வொரு நூலகத்திற்கும் எவ்வளவு மதிப்பிலான புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதியில் 6 கிளை நூலகங்கள், 9 ஊர்ப்புற நூலகங்கள் மற்றும் 5 பகுதிநேர நூலகங்கள் செயல்படுகின்றன. மேற்படி நூலகங்களுக்குக் கீழ்க்கண்டவாறு 2003-2004 ஆம் ஆண்டில் நூல்கள் வழங்கப்பட்டன:

| வ. எண் | நூலகத்தின் பெயர் | 2003-04 ஆம் ஆண்டில் விநியோகம் செய்யப்பட்ட நூல்களின் எண்ணிக்கை | அதன் மதிப்பு ரூ. |
|---|---|---|---|
| | **கிளை நூலகங்கள்—** | | |
| 1. | பரமத்தி | 3 | 143.75 |
| 2. | வேலூர் | 612 | 9981.49 |
| 3. | மோகனூர் | 470 | 8978.50 |
| 4. | மணியனூர் | 5 | 213.75 |
| 5. | பாண்டமங்கலம் | 5 | 213.75 |
| 6. | வெங்கரை | 6 | 213.75 |
| | **ஊர்ப்புற நூலகங்கள்—** | | |
| 1. | கோலாரம் | — | — |
| 2. | ஜேடர்பாளையம் | 1003 | 34071.82 |
| 3. | பெருமாம்பாளையம் | 3 | 143.75 |
| 4. | கொளக்காட்டுபுதூர் | 1003 | 34071.82 |
| 5. | நன்செய் இடையாறு | 3 | 143.75 |
| 6. | பொன்னேரிப்பட்டி | 6 | 213.75 |
| 7. | கோனூர் | 1006 | 34141.82 |
| 8. | ஜங்கமநாயக்கன்பட்டி | 1003 | 34071.82 |
| 9. | ஒருவந்தூர் | 1005 | 34141.82 |

| | பகுதிநேர நூலகங்கள்— | |
|---|---|---|
| 1. | அணிச்சம்பாளையம் | பகுதிநேர நூலகங்களுக்கு அவை இணைக்கப்பட்டுள்ள நூலகத்திலிருந்து இரண்டு மாதத்திற்கு ஒருமுறை நூல்கள் மாற்றி வழங்கப்பட்டு திருப்ப பெறப்படுகின்றன. |
| 2. | வசந்தபுரம் | |
| 3. | வலையப்பட்டி | |
| 4. | சுள்ளிபாளையம் | |
| 5. | கொண்டரசம்பாளையம் | |

52—

## நவோதயா பள்ளிகள்

**வினா எண் 71522—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நவோதயா பள்ளிகள் மத்திய அரசின்கீழ் இயங்குபவை எந்தெந்த மாவட்டங்களில் நவோதயா பள்ளிகள் நடத்தப்படுகின்றன?

(ஆ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் எந்த மாவட்டத்திலும் நவோதயா பள்ளிகள் இயங்கவில்லை.

(ஆ) அவசியம் எழவில்லை.

53—

## விசைத்தறியாளர்களுக்குத் தடை

**வினா எண் 59217—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, 40, 48, 55 அங்குலம் அகலமுள்ள துணிகளை விசைத்தறியாளர்கள் தயார் செய்து விற்பது தடைசெய்யப்படுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

வால்பாறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அர்த்தநாரிபாளையம், சோமந்துறை, பாறைமடையூர் அரசூர், துறையூர், இரமணமுதலிபுதூர் மற்றும் அங்கலக்குறிச்சி ஆகிய ஊர்களில் விசைத்தறிகள் ஏதும் இல்லை. எனவே, 40 அங்குலம், 48 அங்குலம் மற்றும் 55 அங்குலம் அகலமுள்ள துணிகளை வால்பாறை தொகுதியில் உள்ள விசைத்தறிகளில் உற்பத்தி செய்வது தடை செய்யப்படுமா என்ற வினா எழவில்லை.

54—

## மீன் உலர்களம் அமைத்தல்

**வினா எண் 73395—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, கோட்டைப்பட்டினம் மற்றும் பொன்னகரம் மீனவர் கிராமத்தில் மீன் உலர்களம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, கோட்டைப்பட்டினம் மற்றும் பொன்னகரம் மீனவர் கிராமத்தில் மீன் உலர்களம் கட்டித் தரும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

55—

## மீன் உலர்களம் கட்டுதல்

**வினா எண் 73397—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்பட்டினம் தெற்கு புதுக்குடி மற்றும் வடக்கு புதுக்குடி மீனவர் கிராமத்தில் மீன் உலர்களம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்பட்டினம் தெற்கு புதுக்குடி மற்றும் வடக்கு புதுக்குடி மீனவர் கிராமத்தில் மீன் உலர்களம் கட்டித் தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**56—**

**மீன் உலர்களம் அமைத்தல்**

**வினா எண் 73400—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, அந்தோணியார்புரம் மற்றும் முத்தனேந்தல் மீனவர் கிராமத்தில் மீன் உலர்களம் கட்டித் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, அந்தோணியார்புரம் மற்றும் முத்தனேந்தல் மீனவர் கிராமத்தில் மீன் உலர்களம் கட்டித் தரும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**57—**

**மீன் உலர்களம் கட்டுதல்**

**வினா எண் 73402—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, வடக்கம்மாப்பட்டினம் மற்றும் அழகன்வயல் மீனவர் கிராமத்தில் மீன் உலர்களம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, வடக்கம்மாப்பட்டினம் மற்றும் அழகன்வயல் மீனவர் கிராமத்தில் மீன் உலர்களம் கட்டித் தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



**58—**

**இரசாயனக் கழிவு தொழிற்சாலைகள்**

**வினா எண் 72911—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரில் இரசாயனக் கழிவு தொழிற்சாலைகள் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**59—**

**கூடுதல் வகுப்பறை கட்டுதல்**

**வினா எண் 10240—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சிக்குட்பட்ட சோழம்பேடு ஆவடி நகராட்சித் துவக்கப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது செயல்படத் துவங்கும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆவடி சோழம்பேடு நகராட்சி துவக்கப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறை கட்ட ரூ. 3,50,000 மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மேற்படி பணி 17-11-2003-ல் முடிக்கப்பட்டு பள்ளிக் கட்டடம் நல்ல முறையில் பயன்பாட்டில் உள்ளது.

60—

## குடிநீர்த் தொட்டி புதுப்பித்தல்

**வினா எண் 10509—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், நரசமங்கலம் கிராம குடிநீர்த் தொட்டி பழுதடைந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது குடிநீர்த் தொட்டி புதுப்பித்துத் தரப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடம்பத்தூர் ஒன்றியம், கோட்டையூர் ஊராட்சி, நரசமங்கலம் குடியிருப்பில் புதிதாக 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, 2002 ஆம் ஆண்டு ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

61—

## ஆழ் குழாய்க் கிணறு அமைத்தல்

**வினா எண் 12558—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர், காந்தி நகரில் ஆழ்க் குழாய் கிணறு அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி ஒன்றியம், காடாம்புலியூர் ஊராட்சியைச் சேர்ந்த காந்தி நகர் குடியிருப்பிற்கு மக்கள் பங்கேற்புடன் கூடிய பகுதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் மூலம் தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

62—

## வாரச் சந்தைக்கு அடிப்படை வசதிகள்

**வினா எண் 15288—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி வாரச் சந்தைக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, சிறப்பு நிலை ஊராட்சிப் பகுதியில் சிறப்பு நிலை ஊராட்சிக்குச் சொந்தமான வாரச் சந்தை ஏதும் இல்லை. எனவே, வாரச் சந்தைக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பது தொடர்பான கேள்வி எழவில்லை.

63—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 15616—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, பீமாபுரம் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், பீமாபுரம் கிராம குடியிருப்பிற்கு தற்போதுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டத்தின் மூலம் தற்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. மக்கள் தொகைக்கேற்ப மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளதால், கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

**64—**

## குழாய்க் கிணறு அமைத்தல்

**வினா எண் 19120—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அழகப்ப சமுத்திரம் கிராமத்தில் குடிதண்ணீர் போர் ஒன்று அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆமெனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த அழகப்ப சமுத்திரம் கிராமத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் 1/2003-ல் முடிக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. எனவே, குழாய்க் கிணறு அமைக்கத் தேவையில்லை.



**65—**

## மிதி வண்டிகள் நிறுத்துமிடம்

**வினா எண் 20263—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி எல்லையில் தனியார் நடத்தும் மிதி வண்டிகள் நிறுத்துமிடம், எத்தனை இடங்களில் நடத்தப்படுகின்றன?

(ஆ) மாநகராட்சி உரிமம் பெற்று தனியார் நடத்துகிறார்களா?

(இ) ஆம் எனில், ஆண்டு வருமானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகராட்சியில் 53 மிதிவண்டி நிறுத்தும் நிலையங்கள் தனியாரால் நடத்தப்பெறுகின்றன.

(ஆ) வருவாய்ப் பெருக்குத் திட்டத்தின்கீழ் தனியார் மிதிவண்டி நிறுத்தங்களுக்கு உரிமம் வழங்குதல் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(இ) இதன்மூலம் கிடைக்கும் ஆண்டு வருமானம் ரூ. 63,600/- ஆகும்.

**66—**

## மேல்நிலைத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 23485—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி ஊராட்சி, பேக்காடு பகுதியில் குடிநீர்ப் பற்றாக்குறையைக் களைய மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி ஊராட்சிக்கு உட்பட்ட ராஜாகவுண்டன் வளவு குடியிருப்பின் ஒரு பகுதி பேக்காடு ஆகும். ராஜாகவுண்டன் வளவு குடியிருப்பில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து பகிர்மானக் குழாய்கள் மூலம் இப்பகுதிக்கு 1990 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் தற்போது காவிரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தனியாக மேல்நிலைத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

**67—**

## ஆழ்துளைக் கிணறுகள்

**வினா எண் 25657—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002-ல் ராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டத்தின் மூலம் சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் எத்தனை ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டன?

(ஆ) அதன் விவரம் ஊராட்சி ஒன்றியம் வாரியாக அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 2001-2002-ல் விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:



| | | | |
|---|---|---|---|
| (1) | எடப்பாடி ஊராட்சி ஒன்றியம் | — | 3 |
| (2) | கொங்கணாபுரம் | — | 12 |
| (3) | மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம் | — | 20 |
| | | | 35 |

**68—**

## நீர்த்தேக்கத் தொட்டிகள்

**வினா எண் 25724—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ. 24.84 கோடி செலவில் கட்டப்படும் திட்டம், நிதிச் சுமையாக உள்ள காரணத்தால் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஹட்கோமூலம் நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்ட ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியின் இணைக்கப்பட்ட பஞ்சாயத்துப் பகுதிகள் மற்றும் பழைய நகராட்சிப் பகுதிகளில் காவிரி குடிநீர் வழங்கிட 18 மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் பகிர்மானக் குழாய்கள் அமைத்திட ரூ. 24.84 கோடி அனுமதியளிக்கப்பட்டதன் பேரில் முதலில் குடிநீர் அவசியம் கருதி மாநகராட்சி நிதியில் இருந்து நரசோதிப்பட்டியில் 20 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்டதும், குகைப் பகுதியில் 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்டதும் இரண்டு மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் பகிர்மானக் குழாய்கள் ரூ. 6.50 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் அமைக்கப்பட்டு பொது மக்களது பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. தற்பொழுது ஹட்கோ நிறுவனம் மாநகராட்சிக்குக் கடன் வழங்க முன் வராததால் மீதமுள்ள

16 மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் பகிர்மானக் குழாய்கள் அமைத்திட மாநகராட்சி மாமன்ற ஒப்புதலின் பேரில் மேற்படி திட்டத்திற்குத் தேவையான ரூ. 24.84 கோடியினை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி நிறுவனத்தினர் மானியத்துடன் கூடிய கடனாக வழங்க முன் வந்துள்ளதன் பேரில் இத்தொகையினை ரூ. 16.84 கோடி கடனாகவும், ரூ.3.00 கோடி மானியமாகவும். ரூ. 5.00 கோடி மாநகராட்சி நிதியாகவும் கொண்டு திட்டத்தினை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மேற்படி மேல்நிலைத் தொட்டிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலமாகக் கட்ட திட்டமிடப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி நிறுவனத்தினர் நிர்ணயிக்கும் காலக் கெடுவிற்குள் பணிகளை முழுமையாக நிறைவேற்றிட விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**69—**

## ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

**வினா எண் 27253—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி, சமுத்திரம் கிராமம், கேங்காரமாரிவளவு என்ற பகுதிக்கு ஆழ்துளைக் கிணறு அமைத்துக் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், சமுத்திரம் ஊராட்சியின் கேங்காரமாரிவளவு பகுதிக்கு வெள்ளப்பாறை விசைப்பம்பு மேல்நிலைத் தொட்டியில் இருந்து பைப் லைன் விஸ்தரிப்பு செய்யப்பட்டு விசைப்பம்பு மற்றும் ஆற்றுநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதால் குடிநீர்த் தட்டுப்பாடு ஏதும் இல்லை. எனவே, இப்பகுதிக்கு ஆழ்துளைக் கிணறு தற்போது தேவையில்லை.



**70—**

## சாலை வசதி

**வினா எண் 28176—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் அக்காமலை 4-வது டிவிசன் சாலை வசதி இல்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அக்காமலை 4-வது டிவிசன் சாலை "தி பெரிய கருமலை டீ எஸ்டேட்" என்ற தனியார் நிறுவனத்திற்குப் பாத்தியப்பட்ட பகுதியாகும். இச்சாலை நகராட்சிக்குச் சொந்தமான சாலை அல்ல. எனினும், இச்சாலையை உடன் சரி செய்யும் பொருட்டு "தி பெரிய கருமலை டீ எஸ்டேட்" நிறுவனம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**71—**

## வேலை உறுதியளிப்புத் திட்டம்

**வினா எண் 30316—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திற்கு 2001-2002 ஆம் ஆண்டில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் எவ்வளவு மதிப்புள்ள தானியம் அரசு வழங்கியது?

(ஆ) இத்தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு அரசு என்ன விலையில் அரிசி வழங்கி வருகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 28.560 இலட்சம் மதிப்புள்ள

50.5.50 டன் அரிசி ஒதுக்கப்பட்டு வேலை உறுதியளிப்புத் திட்டப் பணிகளில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது. வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் அரிசியின் விலை ஒரு கிலோ ரூ.5.65 என்ற வீதத்தில் எவ்வித மாறுதலும் இன்றி இன்று வரையில் வழங்கப்பட்டு வருகிறது.

**72—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி செப்பனிடல்

**வினா எண் 30733—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கொளப்பாக்கம் கிராமத்தில் உள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளதை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த கொளப்பாக்கம் ஊராட்சியிலுள்ள கொளப்பாக்கம் குடியிருப்பின் மின்விசைத் திட்டத்தில் தற்பொழுது பழுதற்ற 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

**73—**

## குடிநீர்க் குழாய்கள் கூடுதலாக அமைத்தல்

**வினா எண் 30794—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, இலந்தம்பட்டு கிராமத்தில், கூடுதலாக தெருவில் குடிநீர்க் குழாய்கள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த இலந்தம்பட்டு ஊராட்சியிலுள்ள இலந்தம்பட்டு குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, ஊராட்சியின் பராமரிப்பில் தற்பொழுது இயங்கி வருகின்றது. இத்திட்டத்தின்மூலம் அத்தியாவசியத் தேவைகளுக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, தெருக்களில் கூடுதலாகக் குடிநீர்க் குழாய்கள் அமைப்பது பற்றி பரிசீலனையில் இல்லை

**74—**

## பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம்

**வினா எண் 35212— திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் பொன் விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், 2002-2003 ஆம் ஆண்டில் பயனடைந்தோர் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ், 757 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி விடுவிக்கப்பட்டு, இதன்மூலம் 9,084 நபர்கள் பயனடைந்துள்ளார்கள். மேலும் 201 சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதாரக் கடன் வசதி அளிக்கப்பட்டு (கடன் மற்றும் மானியம்) இதன் மூலம் 3,492 குடும்பங்கள் பயனடைந்துள்ளார்கள்.

[2005 செப்டம்பர் 23

75—

## ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

**வினா எண் 41346—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியம், காவேரிப்பட்டு, சாமுண்டீஸ்வரி கோயிலுக்கு அருகில் ஆழ்துளைக் கிணறு அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த காவேரிப்பட்டு ஊராட்சியிலுள்ள காவேரிப்பட்டு குடியிருப்பிற்கு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும், பிரதம மந்திரியின் சுதந்திர தின அறிவிப்புத் திட்டத்தின்கீழ் தற்போது சாமுண்டீஸ்வரி கோயில் அருகில் புதிய ஆழ்துளைக் கிணற்றுடன் கூடிய கையிறைப்பான் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

76—

## கூடுதல் மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 41442—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, ஆரியப்பட்டி ஊராட்சி, இராமநாதபுரம் பகுதி மக்களுக்குக் கூடுதல் மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு முன்வருமா?



2005 செப்டம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி ஒன்றியம், ஆசிரியப்பட்டி ஊராட்சியைச் சார்ந்த இராமநாதபுரம் குடியிருப்பிற்கு புதிய 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்கும் கொண்டுவரப்பட்டு, தற்போது பராமரிப்பிற்காக ஊராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

77—

## மேல்நிலைத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 41453—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, கல்லூத்து பஞ்சாயத்து, பாறைப்பட்டியிலுள்ள இடிந்துள்ள மேல்நிலைத் தொட்டியை மாற்றி புதிய மேல்நிலைத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டி ஒன்றியம், கல்லூத்து ஊராட்சியைச் சார்ந்த கே. பாறைப்பட்டி குடியிருப்பிற்கு 'சுவஜல்தாரா' குடிநீர்த் திட்டத்தின்கீழ் புதிய 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் முடிக்கப்பட்டு மக்கள் பயனில் உள்ளது.

78—

## கட்டடவசதி

**வினா எண் 44295—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரி ரெங்கபுரம் ஊராட்சி, புத்துக்குறிச்சி காலனி பகுதியில செயல்பட்டு வரும் உச்சிமாகாளி அம்மன் சுய உதவிக் குழுவினருக்கு கட்டட வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கஸ்தூரி ரெங்கபுரம் ஊராட்சி, புத்துக்குறிச்சி கிராமத்தில் 2003-04 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழு கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஓர் ஊராட்சியில் ஒவ்வொரு சுய உதவிக் குழுவுக்கும் தனித்தனியாக சுய உதவிக் குழு கட்டடம் கட்டிக் கொடுக்க நிதி ஒதுக்கீடு இல்லை. கஸ்தூரி ரெங்கபுரம் ஊராட்சியிலுள்ள 13 சுய உதவிக் குழுககளுக்கும் பயன்படும் வகையில் புத்துக்குறிச்சியில் சுய உதவிக் குழு கட்டடம் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது.

79—

## சாலை செப்பனிடல்

**வினா எண் 48181—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலுள்ள மார்க்கெட் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையிலுள்ள மார்க்கெட் சாலை 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.3,00,000 நிதி ஒதுக்கீடு செய்து சாலை முழுவதும் கான்கிரீட் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. தற்போது இச்சாலையில் வாகனங்களும், பொது மக்களும் நடந்து செல்வதற்கு ஏதுவாக உள்ளதால் இச்சாலையினை தற்போது செப்பனிட அவசியம் இல்லை.

80—

## குடிநீர் வழங்கல்

**வினா எண் 49647—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, ரொட்டிக்கடை பகுதிக்குக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், வால்பாறை நகராட்சி ரொட்டிக்கடை பகுதியின் மொத்த மக்கட்தொகை 1500. இவர்களுக்கு திறந்தவெளி கிணற்றிலிருந்து சுமார் 25,000 லிட்டர் கொள்ளளவு குடிநீர் தினசரி விநியோகிக்கப்படுகிறது. மேலும், இப்பகுதியில் அமைந்துள்ள இயற்கை நீரூற்றுக் கிணறுமூலம் தினசரி 37,000 லிட்டர் குடிநீரும் வழங்கப்பட்டு வருகிறது.

81—

## தடுப்புச் சுவர் கட்டுதல்

**வினா எண் 49662—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 23

(அ) கோவை மாவட்டம், வால்பாறை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு முன்புறமுள்ள மயானத்தைச் சுற்றிலும் தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி—வால்பாறை சாலையில் அரசு உயர்நிலைப் பள்ளியிலிருந்து 1 கி.மீ. தொலைவில் தீயணைப்பு நிலையம் அருகில் 1 ஏக்கர் நிலத்தில் மயானம் அமைந்துள்ளது. தற்போது தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

2005-2006 ஆம் நிதியாண்டில் வால்பாறை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மயானம் மேம்பாடு மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**82—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 49668—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை ஹைபாரஸ்ட் மேல்டிவிசன், கீழ்டிவிசன், பள்ளிகள் அருகிலும், மைதானம் அருகிலும் தெருவிளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை ஹைபாரஸ்ட் மேல்டிவிசனில் 4 அடி குழல் விளக்குகள் 16-ம், ஹைபாரஸ்ட் கீழ்டிவிசனில் 4 அடி குழல் விளக்குகள் 16-ம், சோடியம் ஆவி விளக்கு 1-ம், அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் நகராட்சி பகுதிகளில் முதல் கட்டமாக 300 தெரு விளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டு



2005 செப்டம்பர் 23]

சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தொகுதி மேம்பாட்டு நிதி பெறப்பட்டவுடன் தெரு விளக்குகள் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) வினா எழவில்லை.

**83—**

## தெரு விளக்கு அமைத்தல்

**வினா எண் 49669—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், இஞ்சிப்பாறை எஸ்டேட் பகுதியில் உள்ள கேன்டின் மற்றும் மைதானத்திற்கு அருகிலும் தெரு விளக்கு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், இஞ்சிப்பாறை எஸ்டேட் பகுதியில் உள்ள கேன்டின் அருகில் வால்பாறை நகராட்சி மூலம் தெரு விளக்கு அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. இஞ்சிப்பாறை மைதானத்திற்கு அருகில் தெரு விளக்கு அமைக்க 2005-2006 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் தெரு விளக்கு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**84—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 54065—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, வெலக்கல்நத்தம், பணியாண்டப்பள்ளி, மல்லப்பள்ளி ஊராட்சிகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை.—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டை ஒன்றியம், வெலக்கல்நத்தம் ஊராட்சியிலுள்ள 23 குடியிருப்புகளில் [illegible] குடியிருப்புகள் முழுமையாக குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகளாகவும் 12 குடியிருப்பு அத்தியாவசியத் தேவைக்கான குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகளாகவும் உள்ளன. மீதமுள்ள 5 குடியிருப்புகளில் வீரகவுண்டனூர் குடியிருப்புக்கு நடப்பாண்டில் தனி மின் விசைத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.*

*2. பலரியாண்டப்பள்ளி ஊராட்சியிலுள்ள 21 குடியிருப்புகளில் 2 குடியிருப்புகள் முழுமையான குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகளாகவும் 15 குடியிருப்புகள் அத்தியாவசியத் தேவைக்கான குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகளாகவும் உள்ளன.*

*3. மல்லப்பள்ளி ஊராட்சியிலுள்ள 18 குடியிருப்புகளில் 5 குடியிருப்புகள் முழுமையாக குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகளாகவும், 11 குடியிருப்புகள் அத்தியாவசியத் தேவைக்கான குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகளாகவும் உள்ளன. ஏனைய குடியிருப்புகளுக்கு வரும் நிதியாண்டுகளில் நிதிநிலை, தகுதி மற்றும் முன்னுரிமை அடிப்படையில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயலாக்க நடவடிக்கை எடுக்கபபடும்.*

**85—**

## தார்ச்சாலை அமைத்தல்

**வினா எண் 54166—திரு. மு. கார்த்தி:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாநகர், 25-வது பகுதி பள்ளப்பட்டி மயானத்திற்கு தார் சாலை அமைக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகர், 25-வது பகுதி பள்ளப்பட்டி மயானத்திற்கு தார்ச்சாலை அமைக்கும் பணிக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வரும் (2005-2006) நிதியாண்டில் நிதி நிலையினைப் பொறுத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**86—**

## சிமெண்ட் நெற்களம் அமைத்தல்

**வினா எண் 55587—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அறந்தாங்கி ஒன்றியம், மொட்டையாண்டி, அல்லம்பட்டி, பெருமாள்பட்டி மற்றும் கூத்தாடிவயலில் சிமெண்ட் நெற்களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*ஊராட்சிக்கு ஒரு நெற்களம் கட்டுதல் என்ற அரசின் திட்டப்படி, மொட்டையாண்டி, அய்யம்பட்டி, பெருமாள்பட்டி, கூத்தாடிவயல் கிராமங்கள் உள்ள ஊராட்சிகளில் நெற்களம் அமைக்கப்பட்டுள்ளது.*

**87—**

## சிமெண்ட் நெற்களம் அமைத்தல்

**வினா எண் 55777—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோயில் ஒன்றியம், கண்ணமங்கலம், பழையத்தூர், இடையூர், குளத்தூர், அடம்பூர், பாண்டிபத்திரம், பூவளூர் மற்றும் பொன்பேத்தியில் சிமெண்ட் நெற்களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

[2005 செப்டம்பர் 23

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சிக்கு ஒரு நெற்களம் அமைக்கும் திட்டப்படி ஆவுடையார் கோயில் ஒன்றியம், கண்ணமங்கலம், பழையத்தூர், இடையூர், குளத்தூர், அடம்பூர், பாண்டிபத்திரம், பூவளூர், பொன்பேத்தி கிராமங்கள் உள்ள ஊராட்சிகளில் சிமெண்ட் நெற்களம் அமைக்கப்பட்டுள்ளது.

**88—**

**குடிநீர்க் குழாய் செப்பனிடல்**

**வினா எண் 58702—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் உள்ள சுவர்க்கல் 2-வது டிவிசன் பேருந்து நிலையத்தில் குடிநீர் தொட்டியில் குடிநீர் ஏறுவது இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பழுது அடைந்துள்ள அக்குடிநீர்க் குழாய் உடனடியாக சீர் செய்யப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை நகராட்சி பகுதிக்குட்பட்ட சுவர்க்கல் 2-வது பிரிவில் பயணிகள் நிழற்குடை அருகில் ஏற்கெனவே 1999-2000 ஆம் ஆண்டில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு கம்ப்ரஸர் மின்மோட்டார் பொருத்தி கொடுக்கப்பட்டது. மேற்படி ஆழ்குழாய்க் கிணற்றில் தண்ணீர் வற்றி விட்டதால் மின் மோட்டார் இயக்க முடியவில்லை. மேலும் மேற்படி பகுதியில் மூன்று கடைகள் மட்டுமே உள்ளதால் அருகிலுள்ள தேயிலைத் தோட்ட நிறுவன குடியிருப்பிலிருந்து குடிநீர் எடுத்து பயன்படுத்தி வருகிறார்கள்.

(ஆ) வினா எழவில்லை.



2005 செப்டம்பர் 23]

**89—**

**கழிப்பிட வசதி**

**வினா எண் 58704—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, பெரியகல்லாறு காவிடிபள்ளம் அருகில் உள்ள குடியிருப்புப் பகுதிக்கு கழிப்பிட வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரிய கல்லாறு மற்றும் காவிடிபள்ளம் அருகில் உள்ள குடியிருப்புகளுக்கு குடும்பம் ஒன்றுக்கு ஒரு கழிப்பிடம் வீதம் அனைத்து குடும்பங்களுக்கும் அரசு நிறுவனமான டான்டீ நிர்வாகத்தால் கழிப்பிடங்கள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, இப்பகுதிகளில் கழிப்பிடம் கட்ட வேண்டிய அவசியம் இல்லை.

**90—**

**தெரு விளக்கு அமைத்தல்**

**வினா எண் 58708—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, பிளாட்ஸ் வேலி மற்றும் புதுப்பாடி எஸ்டேட் குடியிருப்புப் பகுதிகளுக்கு தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், மூன்று தெரு விளக்குகள் ஏற்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை, பிளாட்ஸ் வேலி மற்றும் புதுப்பாடி எஸ்டேட் குடியிருப்புகளில் மொத்தம் 18 குடியிருப்பு வீடுகளே உள்ளன. இக்குடியிருப்புக்கு தேவையான மூன்று 4 குழல் விளக்குகள் நகராட்சி மூலம் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளுக்குக் கூடுதலாக தெருவிளக்கு அமைக்க அவசியம் எதுவும் ஏற்படவில்லை.

91—

## பால்வாடி ஏற்படுத்துதல்

**வினா எண் 59584—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் உள்ள சோலையாறு அணைப் பகுதியில் பால்வாடியை பேரூராட்சி மூலம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சோலையாறு அணை பால்வாடி அரசு துறையான ஐ.சி.டி.எஸ். நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. எனவே, நகராட்சியிலிருந்து பால்வாடி ஏற்படுத்த வழிவகை இல்லை.

92—

## சுரங்கப் பாதை அமைத்தல்

**வினா எண் 61989—திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) கோயம்புத்தூர், காந்திபுரம் பேருந்து நிலையம் அருகிலும் டவுன் ஹால் உக்கடம் பகுதியிலும் சுரங்கப் பாதைகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானத்தின்படி காந்திபுரம் மற்றும் உக்கடம் பேருந்து நிலையம் அருகில் சுரங்க நடைபாதை அமைக்கும் திட்டம் நடவடிக்கையில் உள்ளது. டவுன் ஹால் பகுதியில் சுரங்க நடைபாதை அமைக்க போதுமான இடவசதி இல்லாததால் இங்கு சுரங்கப் பாதை அமைக்க வாய்ப்பில்லை.

93—

## மனித நுழைவாயில் மூடிகள்

**வினா எண் 66518—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் மழைநீர் கால்வாயில் எத்தனை மீட்டர் இடைவெளியில் மனித நுழைவாயில் மூடிகள் பொருத்தப்படுகின்றன?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மூன்றாம் நிலை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள அனைத்து மழைநீர் கால்வாய்களுக்கும் 6 மீட்டருக்கு ஒன்று வீதம் மனித நுழைவாயில் மூடிகள் பொருத்தப்பட்டுள்ளன.

**94—**

**கிணற்றுக்கு மேல்மூடி அமைத்தல்**

**வினா எண் 66543—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, சோலையாறு அணை இக்கரை கிணற்றுக்கு மேல்மூடி போட்டுத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சோலையாறு அணை இடது கரையில் அமைந்துள்ள கிணறு ரூ. 3.20 இலட்சம் மதிப்பீட்டில் நன்முறையில் அமைக்கப்பட்டு அங்குள்ள பொது மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் கிணற்றிற்கு மேல்மூடி போட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**95—**

**தங்கும் விடுதி கட்டுதல்**

**வினா எண் 67222—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் கூடுதலாக நகராட்சி சார்பாக தங்கும் விடுதி ஒன்றைக் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகராட்சிக்குட்பட்ட நகரப் பகுதியில் நகராட்சிக்குச் சொந்தமான கண்ணாடி மாளிகை, தொழிலாளர் நல வாரியத்தின்மூலம் தங்கும் விடுதி, பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஆய்வு மாளிகை மற்றும் தனியாருக்குச் சொந்தமான ஆறு தங்கும் விடுதிகளும் உள்ளன. வால்பாறை நகரப் பகுதியில் கூடுதலாக தங்கும் விடுதி கட்டினால் வருவாய் இழப்பு ஏற்படும் வாய்ப்புள்ளதால் வால்பாறையில் கூடுதலாக நகராட்சி சார்பாக தங்கும் விடுதி கட்டும் நடவடிக்கை ஏதுமில்லை.

**96—**

**சாண எரிவாயு தயாரித்தல்**

**வினா எண் 67223—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை நகராட்சிமூலம் சாண எரிவாயு தயாரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகராட்சி மலைப் பிரதேச பகுதியாகும். பெரும்பாலான பகுதி தனியார் தேயிலைத் தோட்ட நிறுவனங்களைச் சார்ந்ததாகும். இப்பகுதியில் போதுமான மாடுகள் வளர்க்கப்படுவதில்லை எனவே, நகராட்சியில் சாண எரிவாயு தயாரிக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2005 செப்டம்பர் 23

97—

## இலவச விளையாட்டுச் சாதனங்கள்

**வினா எண் 65243—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை அரசு மேல்நிலைப் பள்ளிக்கு விளையாட்டுச் சாதனங்களை இலவசமாக அரசு வழங்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறை அரசு மேல்நிலைப் பள்ளிக்கு விளையாட்டுச் சாதனங்களை இலவசமாக வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

98—

## விளையாட்டுத் திடல்

**வினா எண் 65509—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதி, கன்னங்குறிச்சி, செட்டி சாவடி, தொண்டப்ப நாயக்கன்பட்டி பகுதிகளில் விளையாட்டுத் திடல் அரசு அமைத்துத் தருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 செப்டம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் 2-வது தொகுதி, கன்னங்குறிச்சி, செட்டி சாவடி, தொண்டப்ப நாயக்கன்பட்டி பகுதிகளில் விளையாட்டுத் திடல் அமைப்பது பற்றிய கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

99—

## கால்பந்து மைதானம் செப்பனிடுதல்

**வினா எண் 66512—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, பன்னிமேடு டிவிசனில் உள்ள கால்பந்து மைதானத்தைச் சீர்படுத்திச் செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, பன்னிமேடு டிவிசனில் உள்ள கால்பந்து மைதானத்தைச் சீர்படுத்திச் செப்பனிடுவது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**100—**

## விளையாட்டுப் பள்ளிகள்

**வினா எண் 66734—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எந்தெந்த இடங்களில் விளையாட்டுப் பள்ளிகளை அரசு ஏற்படுத்தி உள்ளது?

(ஆ) இதில் எத்தனை மாணவ மாணவிகள் பயின்று வருகிறார்கள்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட மூன்று இடங்களில் விளையாட்டுப் பள்ளிகளை அரசு ஏற்படுத்தியுள்ளது—

1. ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டுப் பள்ளி, நந்தனம், சென்னை.

2. சுவாமி சிவானந்தா மேல்நிலை விளையாட்டுப் பள்ளி, கோவை.

3. நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழக விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி.

(ஆ) ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டுப் பள்ளியில் 121 மாணவர்களும், சுவாமி சிவானந்தா விளையாட்டுப் பள்ளியில் 108 மாணவர்களும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி விளையாட்டுப் பள்ளியில் 92 மாணவர்களும் ஆக மொத்தம் 321 விளையாட்டு வீரர்கள் தங்கி பயிற்சி பெற்று வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

**[குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. கவன ஈர்ப்பு

### (அ) ஆதனக்கோட்டை மற்றும் கந்தர்வக்கோட்டை துணை மின் நிலையங்கள்மூலம் விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை (குறுக்கீடுகள்) மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். (குறுக்கீடுகள்) டாக்டர் விஜயபாஸ்கர். (குறுக்கீடுகள்) அதெல்லாம் அரசின் ஆய்வில் இருக்கிறது, உட்காருங்கள், உட்காருங்கள். டாக்டர் விஜயபாஸ்கர். (குறுக்கீடுகள்) தாங்கள் கொடுத்ததெல்லாம் அரசின் ஆய்வில் இருக்கிறது. திரு. விஜயபாஸ்கர். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை தொகுதி, ஆதனக்கோட்டை மற்றும் கந்தர்வக்கோட்டை துணை மின்நிலையங்கள் மூலம் விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் அதிக நேரம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

அரசாணை எண் 1192 (பொதுப் பணித் துறை), நாள் 16-6-1989 மூலம் கீழ்க்கண்ட காவிரி டெல்டா பகுதிகளுக்கு 20 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

(அ) தஞ்சாவூர் மாவட்டம்

(ஆ) திருச்சி மாவட்டம் (குளித்தலை, முசிறி மற்றும் லால்குடி தாலுக்காகள்)

(இ) தென்னாற்காடு மாவட்டம் (சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்கோயில்

(ஈ) புதுக்கோட்டை மாவட்டம் (ஆலங்குடி பகுதி)

மேலும், அரசு கடித எண் 60 (எரிசக்தித் துறை), நாள் 26-7-2005 மூலம் மேற்படி அரசாணைக்கு கீழ்க்கண்ட திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

"ஆலங்குடி பகுதியுடன் காவிரி ஒட்டுமொத்தக் கொள்முதல் பகுதி (Cauvery Monopoly Procurement Area) என்ற வார்த்தைகளை சேர்க்கும்படி திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது."

ஆதனக்கோட்டை 110/33-22-11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் செய்யப்படும் பகுதிகள் காவிரி ஏகபோக கொள்முதல் பகுதிக்கு உட்பட்ட பகுதி இல்லையென்பதால், தற்சமயம் 20 மணி நேரம் மும்முனை மின் விநியோகம் வழங்கப்படவில்லை.

கந்தர்வக்கோட்டை ஆளில்லா துணை மின் நிலையத்திலிருந்து 24 மணி நேரமும் மும்முனை மின் விநியோகம் வழங்கப்படுகின்றது.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையினைப் படித்துப் பார்த்தேன். "நீங்கள் நல்லா இருக்கணும் நாடு முன்னேற, நாட்டிலுள்ள ஏழை மக்கள் வாழ்வு முன்னேற" என்று புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் பாடிச் சென்றாரே, அதேபோல் இன்றைக்கு நாட்டிலுள்ள ஏழை மக்கள் மட்டுமின்றி, நாட்டிலுள்ள ஏழை விவசாயத் தொழிலாளர்களும், வாழ்வு முன்னேறுகின்ற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலம், விவசாயிகளுடைய பொற்காலம் என்று வரலாறே வாழ்த்துகின்ற வண்ணமாக, சுதந்திர தினத்தன்று நம் கோட்டை கொத்தளத்திலே கொடியேற்றி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஓர் அறிவிப்பை வெளியிட்டார்களே; மக்களுடைய மனதிலே மகிழ்ச்சியாய், உள்ளத்திலே உவகையாய், வாழ்க்கையிலே வசந்தமாய், வரலாறு வாழ்த்துகின்ற வண்ணமாக ஒரு கோடியே 37 இலட்சம் சிறு, குறு விவசாயத் தொழிலாளர்கள் வாழ்வில் முன்னேறுகின்ற வகையிலே முதலமைச்சருடைய உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற திட்டத்தை அறிவித்த ஒரே முதலமைச்சர் இந்தியாவிலேயே புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமின்றி சொல்வார்களே, மண்ணைப் பொன்னாக்குகின்றவர்கள் விவசாயிகள் என்று; கடந்த கால ஆட்சியிலே மண்ணைப் பொன்னாக்குகின்ற விவசாயிகளுடைய வாழ்வு மண்ணாகிப் போயிருந்தது. 1996-லே சொன்னார்களே. நாங்கள் ஆட்சிக்கு வந்தால், கரும்புக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்போம்



என்று அறிக்கை விட்டார்களே, கொடுத்தார்களா? விவசாயிகள் கேட்டார்கள், கிடைக்கவில்லை; விவசாயிகள் கெஞ்சினார்கள், கிடைக்கவில்லை; மக்கள் போராடினார்கள், கிடைக்கவில்லை; ஆர்ப்பாட்டம் செய்தார்கள், கிடைக்கவில்லை; விவசாயிகளுக்கு கரும்புக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் என்பது கானல் நீராகக் காட்சியளித்தது. வார்த்தை ஜாலத்தாலே முன்னாள் முதலமைச்சர் அதிலே வர்ணம் பூசிக் கொண்டிருந்தார். ஆனால், கானல் நீரை இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (குறுக்கீடுகள்) காவிரி நீராக மாற்றி, கரும்புக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாயை இன்றைக்கு அள்ளித் தந்த ஒரே முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னார்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலவச மின்சாரத்தைக் கொடுத்தார்கள். (குறுக்கீடுகள்) விவசாயக் கடனை 645 கோடி ரூபாய் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், புகழேந்தி. (குறுக்கீடுகள்)

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுகிறபோது சொல்லலாம், அது ஒன்றும் இல்லை, உட்காருங்கள். கேள்வியாய்க் கேளுங்கள், உட்காருங்கள், உட்காருங்கள். டாக்டர் விஜயபாஸ்கர் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளினுடைய உணர்வைப் புரிந்துகொண்ட ஒரே முதலமைச்சராக விவசாயிகளினுடைய பிரச்சினைகளை இந்த அரசினுடைய பிரச்சினை என்பதாக எடுத்துக்கொண்ட ஒரே முதலமைச்சராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருவர் மட்டுமே இருந்துகொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) இதுபோலத்தானே விவசாயிகள் அன்றைக்கு கத்தினார்கள். இதுபோல அன்றைக்கு விவசாயிகள் கத்தினார்களே, கரும்புக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் இவர்களாலே கொடுக்க முடிந்ததா? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) டாக்டர் விஜயபாஸ்கர், கேள்விக்கு வாருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். எப்போதுமே வழக்கம் வந்து (குறுக்கீடுகள்) இல்லை, புகழேந்தி, எப்போதுமே கேள்விகள் கேட்கும்போது நேரடியாக யாருமே கேள்வியைக் கேட்பது இல்லை. அந்த மரபைப் பின்பற்றுவதில்லை யாருமே. (குறுக்கீடுகள்) யார் பேசுவதாக இருந்தாலும், ஒரு முன்னுரையைச் சொல்லித்தான் கேள்வி கேட்கிறார்கள். அந்தமாதிரி சொல்கிறார், அதிலே ஒன்றும் தவறு இல்லை. விஜயபாஸ்கர், கேள்விக்கு வாருங்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது விவசாயிகள் ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பொன்முடி, உட்காருங்கள். யாராவது ஒருவர் சொல்லுங்கள், உட்காருங்கள். புகழேந்தி, சொல்லுங்கள். என்னவென்று சொல்லுங்கள். புகழேந்தி. (குறுக்கீடுகள்) யாராவது கேட்கட்டும்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியது, அவருக்கு விவரம் தெரியாமல் பேசுகிறார். இந்த அரசு செய்ததை எதிர்த்து, இன்றைக்கு பெரம்பலூரிலே மிகப் பெரிய அளவில் விவசாயிகளின் ஆர்ப்பாட்டமும், போராட்டமும் நடைபெறுகிறது. இது தேர்தலுக்காகக் கொடுத்த அறிவிப்பு என்று அங்கே போராட்டம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணை நிதிநிலை அறிக்கையில் பேசும்போது சொல்லுங்கள். விஜயபாஸ்கர் பேசுங்கள், பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. சி. ஞானசேகரன்:** பாயின்ட் ஆப் ஆர்டர்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஞானசேகரன், ஒரு நிமிடம். (குறுக்கீடு) ஞானசேகரன், ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. உண்மை உறுத்துகிறது. உண்மை என்ன? விவசாயிகள் வயிற்றில் அடித்தீர்கள். வாக்குறுதி தந்தீர்கள், நீங்கள் ஈடேற்றவில்லை. அதைத்தானே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். போராட்டம் என்று சொல்கிறீர்கள். விவசாயிகள் எல்லாம் அம்மா அவர்களை இதய தெய்வமாக வாழ்த்துகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மாறாக உங்களுக்கு ஆத்திரம், பொறாமை, வயிற்றெரிச்சல். அதனால், இங்கு கூக்குரல் போடுவது அழகல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி., என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரமாக இருந்தாலும், குறிப்பாக கவன ஈர்ப்புகள், ஏற்றுக்கொள்ளப்பட்ட கவன ஈர்ப்புகளைப் பற்றி அவையில் எழுப்பும்போது, இதிலே குறிப்பிட்டுள்ள இந்தப் பகுதியைத் தவிர வேறு எதுவும் எழுப்பக்கூடாது, பேசக்கூடாது என்பதுதான் விதியாக, மரபாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. இதிலே இருப்பது, 'புதுக்கோட்டை தொகுதி, ஆதனக்கோட்டை மற்றும் கந்தர்வக்கோட்டை துணை மின் நிலையங்கள்மூலம் விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் அதிக நேரம் வழங்க வேண்டிய அவசியம் குறித்து' இதை மட்டும் படித்துவிட்டு அவர் அமர்ந்திருக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதற்குப் பதிலாக ஒரு பேச்சை, முழுமையான ஒரு பேச்சை அவர் பேசியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பதில் சொல்லிவிட்டார்கள் என்றால் அப்புறம் எதற்கு இது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குப் பிறகு கேள்வி கேட்கிறார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** கேள்வியைத்தானே கேட்க வேண்டும். இது எதற்கு? கேள்வியைத்தானே கேட்க முடியும். கேள்வியைத்தானே கேட்க முடியும். கேள்வி கேட்காமல் ஒரு கருத்தை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) பொதுவாகவே... (குறுக்கீடு) இல்லை, எஸ்.ஆர்.பி. அவர்களுடைய கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள், சொல்கிறேன். எஸ்.ஆர்.பி. அவர்கள் சொல்லக்கூடிய கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். கவன ஈர்ப்பு கொண்டு வருகின்றபோது, அதிலே இரண்டு கேள்விகள் கேட்பதற்குத்தான் அனுமதி. ஆனால், எல்லோருமே எதிர்க்கட்சிகள் உட்பட யாருமே அந்த மரபைப் பின்பற்றுவது இல்லை. (குறுக்கீடுகள்) ஏதோ ஒரு முன்னுரையைச் சொல்லித்தான் கேட்கிறார்கள் எல்லோருமே அதைப் பின்பற்றுவதாக இருந்தால் அதையே நாம் நடைமுறைப்படுத்தலாம். ஒரு முன்னுரையைச் சொல்லித்தான் அதற்குப்பிறகு கேள்வி கேட்கிறார்கள். இது வழக்கமாகவே இருந்து வருகிறது. அந்த வகையில்தான் அவர் கேட்கிறார். கேள்விக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் விதியைப் பின்பற்ற வேண்டும். நீங்கள் இரண்டு கேள்விகள் மட்டுமல்ல, அதிகம்கூட பேசிக் கொள்ளட்டும். ஆளும் கட்சி பாராட்டிக்கொள்ளட்டும், பேசிக்கொள்ளட்டும், அதைக்கூட நான் சொல்லவில்லை. மற்ற கட்சி, முன்னாள் ஆட்சியைக் குறை சொல்லிப் பேசுவது மற்றும் குத்திப் பேசுவது எப்படிப் பொருத்தமாக இருக்கும்? மரபைக் கடைப்பிடிக்க வேண்டும். அதை கடைப்பிடிக்க வேண்டுமேதவிர, குற்றச்சாட்டுக்காக, கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் பயன்படுத்தக்கூடாது. இது தாங்கள் அறிந்தது, நீங்கள்தான் சொலல் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இதை நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். கேள்வி கேட்க வேணடும் என்பதுதான் மரபு. ஆனால், எல்லா உறுப்பினர்களும், நீங்கள் பலமுறை கவன ஈர்ப்பு கொண்டு வந்திருக்கிறீர்கள், நீங்களும் அதைப் பின்பற்றுவது இல்லை. முன்னுரையாக ஏதாவது ஒன்றைச் சொல்லி, அதற்குப்பிறகு கேள்வி கேட்கிற ஒரு வழக்கம் இருக்கிறது. முன்னுரையாக ஒரு கருத்தைச் சொல்லி, அதனுடைய தொடர்ச்சியாக கேள்வி கேட்கிறமாதிரி ஒரு



வழக்கத்தை நாம பின்பற்றிக் கொண்டிருக்கிறோம். எலலா உறுப்பினர்களுமே அந்த முறையைத்தான் கடைப்பிடிக்கிறார்கள். அந்த முறையைத்தான் அவரும் கொண்டு வந்திருக்கிறார். (குறுக்கீடு) இல்லை, எஸ்.ஆர்.பி. அவர்கள் எதிர்க்கட்சிகளின் சார்பாக எனக்கு ஒரு வாக்குறுதியைத் தரட்டும். இனிமேல் கவன ஈர்ப்பு கொண்டு வருகிறபோது. அதற்குத் தொடர்புடையதைத்தவிர, வேறு எந்த வகையிலும், வேறு எதையும் கேட்க மாட்டோம், கேள்வியை மட்டுமே நாம் கேட்போம் என்கிற ஒரு வாக்குறுதியை நீங்கள் தாருங்கள். அதை எல்லோரையுமே நான் பின்பற்றச் சொல்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னுரை என்கின்ற பெயரால் நீண்ட ஒரு பிரசங்கமே செய்வதும, அதிலே எதிர்க்கட்சிகளைச சாடுவதும் முறையாக இருக்குமா என்றுதான நான கேட்கிறேன். அதாவது. எதுவுமே பேசக்கூடாது என்பது வேறு. முன்னுரையாக...

நண்பகல் 12–00

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையைச் சொன்னால் அதற்கு சாடுவது என்று பெயரா? மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினர் பேசுகின்றபோது யாரையும் சாடவில்லை. நடந்த உண்மையைச் சொன்னார். தி.மு.க. ஆட்சிக் காலத்தில், கரும்புக்கு டன்னுக்கு 1,000 ரூபாய் தருவோம் என்றார்கள், கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) நாங்கள் செய்திருக்கிறோம். 1,000 ரூபாய் அல்ல, 1,014 ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். அதைத்தான் சொல்லியிருக்கிறார். இதிலே என்ன தவறு? (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் 1,014 ரூபாய் கொடுத்திருக்கின்றோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நான்கரை ஆண்டு காலமாக என்ன செய்து கொண்டிருந்தார்கள்? (குறுக்கீடுகள்) இன்றையதினம் (குறுக்கீடுகள்) இன்றையதினம்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கு ஆண்டு காலமாக என்ன செய்து கொண்டிருந்தோம் என்று திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கேட்டிருக்கிறார். முன்பு ஆட்சியில் இருந்த தி.மு.க. சீரழித்துவிட்ட நிதிநிலையைச் சரி செய்து கொண்டிருந்தோம் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) கடந்த நான்கு ஆண்டு காலமாக... (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** அதற்கா நான்கரை வருடம்? (குறுக்கீடு) அதற்கா நான்கரை வருடம்? இன்னும் நான்கு மாதம் இருக்கும்போது அறிக்கை விட்டிருக்கிறார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான கூட்டுறவு ஆலைகள் மூடப்பட்டுவிட்டன. தனியார் ஆலைகள்... (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** நான்கரை வருடங்களாக முடியாதபோது, நான்கு மாதங்களில் என்ன செய்யப் போகிறார்கள்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு ஆலைகள், கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் மூடப்பட்டதற்குக் காரணம், உங்களது தற்போதைய பங்காளிகள் அந்தக் காலத்தில் அடித்த கொள்ளைதான் காரணம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், விதிமுறையைப்பற்றி நீங்கள் கேட்டீர்கள். அதற்குப் பதில் சொல்லிவிட்டேன். இதை விவாதமாக நீங்கள் ஆக்குவதற்கு நான் அனுமதிக்க முடியாது. டாக்டர் விஜயபாஸ்கர், கேள்வி கேளுங்கள். (குறுக்கீடுகள்) டாக்டர் விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். கேட்டதற்குப் பதில் சொல்லிவிட்டேன். டாக்டர் விஜயபாஸ்கர். (குறுக்கீடுகள்)

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஏதோ சொல்ல விரும்புகிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசட்டும்.

***மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், நான்கரை ஆண்டு காலமாக... (குறுக்கீடுகள்)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) அவர் பேசி முடித்தவுடனே நான் உங்களைக் கூப்பிடுகிறேன். உட்காருங்கள், அவர் பேசி முடிக்கட்டும், நான் கூப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கரை ஆண்டு காலமாக இந்த அரசு விவசாயிகளுக்காக என்ன செய்தது என்று கேட்டார்கள். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பு ஏற்றுக்கொண்டவுடன் முதன் முறையாக வட்டி மற்றும் அபராத வட்டி நிவாரணத் திட்டத்தின்கீழ் 2001 ஆம் ஆண்டு 310.51 கோடி ரூபாய் வட்டிச் சலுகை அளித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வட்டித் தள்ளுபடியாக 2002 ஆம் ஆண்டு 61.05 கோடி ரூபாய் வட்டிச் சலுகை அளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு 2002 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட குறுகிய கால பயிர்க் கடனை மத்திய காலக் கடனாக மாற்றி அமைத்ததில் வட்டி இழப்புக்காக மாநில அரசின் பங்கு 15 சதவீதமாக 20 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நீலகிரி மாவட்ட தேயிலை விவசாயிகளுக்கு அபராத வட்டித் தள்ளுபடிக்காக 1.8 கோடி ரூபாயை 2003 ஆம் ஆண்டு வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 2003–2004 ஆம் ஆண்டு கூட்டுறவு வங்கிகளில் பெற்ற பயிர்க் கடன் மீதான வட்டித் தள்ளுபடிக்காக சிறு, குறு, அனைத்து விவசாயிகளுக்கும் 62 கோடி ரூபாய் சலுகை அளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இவை எல்லாவற்றிற்கும் மேலாக 1999 ஆம் ஆண்டுக்கு முன்னர் மாற்றியமைக்கப்பட்ட கடன்களில் அப்போதைய முதல்வர் அறிவித்த வட்டி ஊக்கத் திட்டத்திற்கான தொகையை அவர் கொடுக்காமல் போனதற்கான அரசு ஆணையை 2004 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்து, 34 கோடி ரூபாயை இப்பொழுது அளித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு சென்ற ஆட்சியாளர்களுடைய காலத்தில் ஏற்பட்ட சீர்கேடுகளைச் சரி செய்வதற்காக, பங்கு மூலதனமாக 12.5 கோடி ரூபாயை சென்ற மாதம் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பயிர்க் கடன் வழங்க ஏதுவாக தஞ்சாவூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிககு இந்த ஆண்டு ரூபாய் 10 கோடியை முதல்வர் அம்மா அவர்கள் அரசின் சார்பாக வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–05*

நில வள வங்கிகளுக்கான வட்டிக் குறைப்புத் திட்டத்திறகு ஒட்டுமொத்த கடன் தீர்வுத் திட்டத்திற்காக இதுவரை 15 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். இன்னும் தேவையானால் வழங்க இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவையெல்லாவற்றுக்கும் மேலாக, இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் இல்லாத வகையில், விவசாயிகள் வாங்கிய ஒட்டுமொத்த பயிர்க் கடனை இரண்டாண்டுகளுக்கு வசூல் செய்வதில்லையென்றும், அதற்குப் பிறகு மூன்றாம் ஆண்டு வசூல் செய்துகொள்ளலாம் என்றும் 2,598 கோடி ரூபாயை ஒட்டுமொத்தமாக தள்ளி வைத்து, இந்தியாவுக்கே வழிகாட்டியவர் எங்களுடைய இதயதெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவை மட்டுமல்லாமல், 1998 ஆம் ஆண்டு முதல் கொடுக்கப்பட்ட கடன்களுக்கான வட்டித் தள்ளுபடியை, இன்று வரைக்கும் மட்டுமல்லாமல், 2006 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதி வரை .. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி, உட்காருங்கள், அமைச்சர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) பரிதி, உட்காருங்கள். அமைச்சர் பேசி முடிந்த பிறகு திரு. வீராசாமி அவர்களைப் பேசச் சொல்லப் போகிறேன், ஏன் அவசரப்படுகின்றீர்கள்?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** 2001 ஆம் ஆண்டு முதல் வறட்சி, தொடர் வறட்சி, மூன்றாண்டுகால வறட்சி. எனவே, விவசாயிகள் வட்டியைச் செலுத்த இயலாது என்பதன் காரணமாக, வட்டி, அபராத வட்டி, தண்ட வட்டி ஆக அனைத்தையும் கூட்டி, 2006 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதி வரையிலே எல்லாவகையான வட்டியையும் தள்ளுபடி செய்து, 7.25 இலட்சம் விவசாயிகளுக்கு ரூபாய



615 கோடி அளவில் மிகப் பெரிய உபகாரத்தை செய்திருக்கின்ற மாபெரும் தலைவி, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இவையெல்லாவற்றுக்கும் மேலாக, உலகத்திலேயே இல்லாத மிகப் பெரிய கூட்டுறவு ஊழலை ஐந்தாண்டுகாலத்தில் செய்து, கூட்டுறவுத் துறையையே சீர்குலைத்தவர்களை, சீர்குலைத்து பல கோடி ரூபாய் கொள்ளையடித்ததைச் சரிசெய்து, இன்றைக்கு அந்தத் துறையை தலைநிமிரச் செய்திருப்பவர், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, விவசாயிகள்மீது அக்கறை உள்ளவர்கள், விவசாயிகளுக்காக செயலாற்றுகின்றவர்கள், விவசாயிகளுக்காகவே அரசாங்கததை நடத்துகின்றவர்கள், இதயதெய்வம் புரட்சித் தலைவி அமமா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கரும்புக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் தரவேண்டும், தரவேண்டும் என்று நூறாண்டு காலமாக கோரிக்கை வைத்ததை, 1,014 ரூபாயாக இதயதெய்வம் அம்மா அவர்கள் உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இந்தியா முழுவதும் இருக்கின்ற விவசாயிகள் இந்தச் சேவையைப் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள். தமிழகத்திலே இருக்கின்ற நல்லெண்ணம் கொண்ட அனைத்து மக்களும் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள். நாடே இன்றைக்கு அம்மாவுக்கு பின்னாலே அணி வகுத்து நின்று கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்த விளக்கங்களை ஏற்று, அனைவரும் பாராட்ட வேண்டிய இந்த நல்ல கருத்தை, அருள்கூர்ந்து பாராட்ட வேண்டுமென்று கேட்டு, இதற்காக வயிற்றெரிச்சல் படவேண்டாமென்று சொல்லி, அமர்கின்றேன், நன்றி, வணக்கம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கரும்பு 10 சதவிகித பிழிதிறன் இருந்தால், ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படும் என்று அறிவித்து,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 8.3 சதவிகிதம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கின்றோம். தி.மு.க. ஆட்சியில் கரும்புக்கு 10 சதவிகிதம் பிழிதிறனுக்கான கரும்புக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கின்றோம். இரண்டாவது, பொறுப்பில்லாமல் அமைச்சர்கள் ...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் பிழிதிறனைக் கணக்கிடாமல் recovery rate எதுவாக இருந்தாலும், எல்லாவிதமான கரும்புக்கும், டன்னுக்கு 1,014 ரூபாய் இப்போது கொடுக்க உத்தரவிட்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. வீராசாமி, சொல்லுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விவரங்களைச் சரியாகத் தெரிந்துகொள்ளவேண்டும். இந்த அரசு வெளியிட்ட உத்தரவில் எந்தவகையான கரும்பாக இருந்தாலும், டன்னுக்கு 1,014 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கின்றோம். 9 சதவிகிதத்திற்கு மேல், (குறுக்கீடு)• கேளுங்கள், உங்களுக்காகத்தான் சொல்லிக் கொண்டிருக்கின்றேன்; 9 சதவிகிதத்திற்கு மேல் recovery rate பிழிதிறன் இருந்தால், அதற்கு ஒவ்வொரு சதவிகிதத்திற்கும் 88 ரூபாய் கூடுதலாக வழங்கப்படும் என்று உத்தரவிட்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொல்ல வந்தது, தி.மு.க. ஆட்சியிலேயும் ஆயிரம் ரூபாய் கரும்புக்கு ஒரு டன்னுக்குக் கொடுத்தோம், 10 சதவிகிதம் recovery இருந்தால். ஆனால் ...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய நிலையில் 10 சதவிகிதம் recovery rate உள்ள சர்க்கரை ஆலைகளே இல்லை. அத்தகைய ஒரு சூழ்நிலையே இல்லை. ஆகவே, அவர்கள் போகாத ஒரு ஊருக்கு வழி சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி எதுவுமே நடைபெறவில்லை, நடைபெறாது. நாங்கள் இன்றைக்கு என்ன உத்தரவிட்டிருக்கின்றோம். எல்லா விவசாயிகளும் பயனடையவேண்டும். எல்லா கரும்பு விவசாயிகளும் இலாபம் அடையவேண்டும். அதற்காக பிழிதிறனுக்கும் இந்தக் கொள்முதல் விலைக்கும் நாங்கள் எந்தத் தொடர்பும் வைக்கவில்லை. பிழிதிறன் எதுவாக இருந்தாலும், கரும்புக்கு டன்னுக்கு 1,014 ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 9 சதவிகிதத்திற்கு மேல் பிழிதிறன் இருந்தால், ஒவ்வொரு கூடுதலான சதவிகிதத்திற்கும் கூடுதலாக 88 ரூபாய் வழங்கப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதுதான் உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) பத்து சதவீத பிழிதிறன் உள்ளதற்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க சொன்னோம் என்று சொல்லிவிட்டீர்கள். முதலமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, முதலிலே தி.மு.க. ஆட்சியிலே ஆயிரம் ரூபாய் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். நாங்கள் கொடுத்ததற்குப் பிறகு 9 சதவீதத்திற்கு மேல் இப்போது ரூ.1,014 கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். நாங்கள் அதை மறுக்கவில்லை. ஆனால், தி.மு.க. ஆட்சியிலே கொடுக்கவே இல்லையென்று சொல்வது உண்மைக்கு மாறானது. ஆதாரங்கள் இருக்கின்றன. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. வீராசாமி அவர்கள் தவறான தகவலை அவைக்குத் தர வேண்டாம். பிழிதிறனோடு ஒப்பிட்டு 10 சதவீதத்திற்கு ஆயிரம் ரூபாய் கொடுத்தோம் என்று சொல்வது விவசாயிகளை நீங்கள் ஏமாற்றுகிறீர்கள். Productivity increase, productivity — எப்போதுமே தரவில்லை. எந்தக் காலத்திலும் நீங்கள் தரவில்லை. (குறுக்கீடு) productivity இங்கே எதுவாக இருந்தாலும் சரி, பிழிதிறன் எதுவாக இருந்தாலும் சரி, டன்னுக்கு 1,014 ரூபாய் என்று இந்தியாவிலேயே இப்படி விவசாயிகள் வயிற்றிலே பாலை வார்த்திருக்கிற அரசு அம்மாவின் அரசு ஒன்றுதான். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றும் இல்லை. அதாவது 10 சதவீதம் பிழிதிறன் என்று நீங்கள் சொன்னீர்கள். 10 சதவீதப் பிழிதிறனுக்குக் கொடுத்திருக்கிறோம் என்று. முதலமைச்சர் அவர்கள் 10 சதவீதப் பிழிதிறனுள்ள ஆலைகளே இல்லையென்று சொல்கிறார்கள். அவ்வளவுதான், வேறென்ன?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, அதை நான் மறுக்கவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்லி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் ஒரு விளக்கம் சொல்கிறார். நீங்கள் சொன்னதற்கு அமைச்சர் விளக்கம் சொல்கிறார். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொல்லிவிடுகிறேன். தயவுசெய்து..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொல்லி முடித்துவிடட்டும். (குறுக்கீடு) முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000 ஆம் வருடம் ஏப்ரல் ஆறாம் தேதி முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள் இந்த சட்டமன்றத்தில் பேசும்போது, டன்னுக்கு ஆயிரம் ரூபாய் வேண்டும் என்று விவசாய மக்கள் சார்பாக கேட்டபோது, அவர் சொன்ன பதில், "ஐயா, ஐந்து வருடம் ஆளவிடுங்கள், ஐயா. ஒரு ஆட்சி பொறுப்பேற்ற உடனே இரண்டு ஆண்டுகளிலோ மூன்று ஆண்டுகளிலோ உடனடியாகச் செய்ய முடியாது" என்று சொன்னவர்தான் முன்னாள் முதல்வர் கருணாநிதி. ஆனால், எந்தவிதமான — ஆயிரம் ரூபாய் டன்னுக்கு அவர்கள் கொடுக்கவில்லை. 10 சதவீதக் கரும்புப் பிழிதிறன் எந்த ஆலையிலும் இதுவரையிலும் இல்லை. அதுமட்டுமல்ல. அன்றைக்கு மத்திய அரசு அறிவித்த அந்த படியைக்கூட 174 கோடி ரூபாய் 2001 ஆம் ஆண்டு அவர் ஆட்சி முடிந்து செல்கிற நிலையில் 174 கோடி ரூபாய் பாக்கி வைத்துவிட்டுச் சென்றார்கள். அதையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்தவுடனே வழங்கினார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்ல வேண்டிய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். ஆளும் கட்சித் தரப்பிலே விளக்கம் சொல்லிவிட்டார்கள். முடிந்தது வேறென்ன ? (குறுக்கீடு) கொடுக்கவில்லையென்ற அந்தக் கருத்தைத்தான் சொல்கிறார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அது தவறு. நாங்கள் கொடுத்தோம். ஈரோட்டிலே இருக்கிற பல கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், தனியார் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளெல்லாம் அவர்கள் பயனடைந்தார்கள். அதுமட்டுமல்ல. ஆட்சியிலே இருக்கிற ஓர் அமைச்சரே தி.மு.க. ஆட்சியில் கூட்டுறவுச் சங்கங்களிலே கொள்ளையடித்தார்கள் என்று சொல்கிறார்கள். ஆதாரத்தோடு சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே அதைப் பல முறை சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அபாண்டமாக (குறுக்கீடு) அபாண்டமாக சொல்வதை நாங்கள் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம்.



**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** திரு. ஆற்காடு வீராசாமி அவர்களே ஆகாரமில்லாமல் அமைச்சர் படிக்கிறார். கேட்டுவிட்டு வெளிநடப்புச் செய்யுங்கள். ஜொலிச்சிட்டீர்களே. வேண்டாம். இருந்து கேட்டுவிட்டுச் செல்லுங்கள்.

*(தி.மு.க. உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருத்த அளவில் நடைபெற்ற முறைகேடுகள் விவரம். ஒன்று, தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி. முறைகேடு புரிந்த நபர்கள் அவர்களின் பதவிகளும். திரு. சி.டி. தண்டபாணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர். முறைகேடுகளின் விவரம். திரு. சையது கலீமுல்லா என்பவருக்கு போலி சொத்து ஆவணங்களின் அடிப்படையில் வாங்காத பேருந்துகளுக்கு ரூ.1.65 கோடிக்கு கடன் அனுமதித்து ரூ.92 இலட்சம் கடன் வழங்கப்பட்டது.

மதுரை நகர கூட்டுறவு வங்கி, மதுரை மாவட்டம், செயலாளர் திரு எம். மாயன், தலைவர் திரு. சி.எஸ். இராமசுப்பிரமணியன், 1998 முதல் 2001 வரையிலான காலகட்டத்தில் முறைகேடாக 172 பணியாளர்களை ஒரே சமயத்தில், அவர்கள் அமர்ந்து நாற்காலி போடுவதற்குக்கூட இடம் இல்லாத ஒரு நகர வங்கியில் 172 பணியாளர்களை ஒரே சமயத்தில் பணியமர்த்தம் செய்தது. கடன்கள் வழங்கியதில் பொய்க் கணக்கு எழுதி கையாடல் செய்தது, மேற்கூறியவற்றில் ரூ.16 கோடி வங்கிப் பணம் முறைகேடு செய்யப்பட்டு கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. அந்த வங்கிப் பணத்தை டெபாசிட் செய்தவர்கள் மதுரை மாவட்டத்திலே இருக்கிற 30 ஆயிரம் ஏழை எளிய சாதாரண தொழிலாளர் மக்கள்.

மூன்றாவது, கிருஷ்ணகிரி நகர கூட்டுறவு விற்பனைச் சங்கம், தருமபுரி மாவட்டம் சங்கத் தலைவர் மற்றும் நிர்வாகிகள் 1998–1999 ஆம் ஆண்டுகளில் மோசடி எண்ணத்துடன் தனியார் வியாபாரிகளுக்கு கடன் அடிப்படையில் பருத்தி விற்பனை செய்ததன் மூலம் 101 இலட்சத்து 1 ஆயிரம் ரூபாய் நிதியிழப்பு ஏற்படுத்தியது.

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்][2005 செப்டம்பர் 23 பிற்பகல் 12–15

நான்காவது, வையம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, தலைவர் திரு. நாராயணசாமி, 1998 ஆம் ஆண்டில் கையாடல் செய்த தொகை 40 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய்;

பழையபேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, திருநெல்வேலி மாவட்டம், பழையபேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, – அனைவரும் அந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் கூட்டுறவுச் சங்கங்களுடைய தலைவர்களாக இருந்தார்கள்.– பழையபேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, திருநெல்வேலி மாவட்டம், சங்கத் தலைவர் திரு. தங்கவேலு, நிர்வாக முறைகேடு நடந்த ஆண்டு 1996 முதல் 2001, முறைகேடு நடந்த தொகை 16 கோடியே 6 இலட்சம்.

மருங்கம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, தஞ்சாவூர் மாவட்டம், தலைவர் திரு. ஏகாம்பரம், செயலர் திரு. சொ. சுப்பிரமணியம், முறைகேடு நடந்த ஆண்டு 1999–2000, அவ்வாண்டுகளில் முறைகேடு நடந்த தொகை 10 இலட்சத்து 60 ஆயிரம்;

புதுப்பேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, தலைவர் திரு. குமார், முறைகேடு நடந்த ஆண்டு 1998–2001–ல் நிரந்தர வைப்பு ரசீதுகள்மீது கடன்கள் வழங்கியதாக போலி ஆவணங்கள் தயாரித்து 13 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாய் முறைகேடுகள் நடந்துள்ளன.

9. ஓசூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, தருமபுரி மாவட்டம், தலைவர் திரு. கே.ஏ. மனோகரன், 1998–2000 ஆம் ஆண்டுகளில் இட்டு வைப்புத் தொகை சேகரித்தல் மற்றும் இட்டு வைப்புகளின்மீது கடன் வழங்கியதில் ஊழல் (குறுக்கீடு) –உலகத்திற்குத் தெரியட்டும் – இட்டு வைப்புகள்மீது கடன் வழங்கியதில் ஊழல், ஓசூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி. (குறுக்கீடு)

இவை போல கோடிக்கணக்கான ரூபாய் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், நகர வளர்ச்சி வங்கிகள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், வீட்டு வசதி கூட்டுறவு வங்கிகள் போன்றவற்றில் ஆயிரம் கோடி ரூபாய்க்குமேல், கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவினுடைய தலைவர்களுடைய ஈடுபாட்டின்பெயரில் அவர்களால் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு உரிய புத்தகம் தயார் செய்து இந்த அவையில் வைப்பதற்கு நாங்கள் தயார் நிலையில் இருக்கின்றோம் என்கின்ற பதிலைச் சொல்லி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைர் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர், கேள்வியைக் கேளுங்கள்.



2005 செப்டம்பர் 23]

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளுடைய சிறிய பிரச்சினை. ஆகையினால், இந்த விவசாயிகளுடைய பிரச்சினையைப் பேசுகின்றபோது மாவட்ட விவசாயிகள் மட்டுமின்றி மாநிலத்திலுள்ள விவசாயிகள் இந்த அரசின்மீது, அம்மா அவர்களுடைய அரசின்மீது என்ன எண்ணத்திலே இருக்கிறார்கள் என்ற கருத்தை மாண்புமிக்க, மதிப்புமிக்க, மரபுமிக்க இந்தச் சட்டமன்றத்திலே சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், மக்கள் பிரதிநிதி என்ற பொறுப்புணர்வோடு மக்கள் இந்த அரசை என்ன நினைக்கின்றார்கள் என்பதை எடுத்துச் சொல்வதற்காக, நான் அந்த விவசாயிகளுடைய எண்ணத்தை இந்த அவையிலே பதிய வைத்தேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் அழகாக ஒரே ஒரு வார்த்தையிலே இங்கே சொன்னார்கள். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்று சொன்னார்கள். அன்றைக்கு மனமும் இல்லை, மார்க்கமும் இல்லை, கரும்புக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாயும் இல்லை. இன்றைக்கு எங்களுடைய அம்மா அவர்களுடைய ஆட்சியிலே அம்மா அவர்களுக்கு தாயுள்ளத்தோடு மனம் இருந்திருக்கின்றது. ஆக மார்க்கமும் கிடைத்திருக்கின்றது. கரும்புக்கு டன்னுக்கு 1,014–ம் கிடைத்திருக்கிறது என்பதைப் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியிலே ஆதனக்கோட்டை மற்றும் கந்தர்வக்கோட்டை பகுதி விவசாயிகளுக்கு ஒரு நாளைக்கு 14 மணி நேரம் இன்றைக்கு மின்சாரம் கிடைத்திருக்கிறது விவசாயத்திற்கு. நெல்லையும் கரும்பையும் அவர்கள் விவசாயம் செய்து வருகின்றார்கள். புதுக்கோட்டைக்கு பக்கத்திலுள்ள ஆலங்குடி தாலுகாவிலே 20 மணி நேரம் மும்முனை மின்சாரம் அந்த விவசாயிகளுக்குக் கிடைக்கின்றது. ஆலங்குடி பகுதி, Cauvery Monopoly Procurement Area என்ற அந்த வகைப்பாட்டின் கீழே வருகின்றது. அதேபோல நம்முடைய புதுக்கோட்டை மாவட்டத்திலே ஆதனக்கோட்டை துணை மின் நிலையத்தின்மூலம் பயன்படுகின்ற அந்த கிராமங்களுக்கும் அதே அடிப்படையிலே மும்முனை மின்சாரம் வழங்க ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களுடைய கோரிக்கையில் அந்த ஆதனக்கோட்டை பகுதிக்கு 20 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டிருக்கிறார். பொதுவாக அரசாணை எண் 1192, பொதுப் பணித் துறை, நாள் 16–6–1989–ன் மூலம் கீழ்க்கண்ட காவிரி டெல்டா பகுதிகளுக்கு மட்டுமே 20 மணி

நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. - தஞ்சாவூர் மாவட்டம், - திருச்சி மாவட்டத்தில் குளித்தலை, முசிறி மற்றும் லால்குடி தாலுகாக்கள், தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்கோயில். புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி ஆகிய பகுதிகளிலே மட்டும் மும்முனை மின்சாரம் 20 மணி நேரம் வழங்கப்பட்டு வருகிறது. அது. இந்த அரசாணையின்படி காவிரி டெல்டா பகுதி என்று இருந்தால் மட்டுமே 20 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்பட முடியும். தாங்கள் குறிப்பிட்டிருக்கிற பகுதி காவிரி டெல்டா பகுதியில் வரவில்லை என்பதால் அதிலே, அந்த மும்முனை மின்சாாம் வழங்குவதற்கு வாய்ப்பில்லை என்பதை அன்போடு தெரிவிதத்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12--20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம், அரசாணைப்படி இருந்தாலும்கூட மக்களுடைய வசதிக்கு சில அரசாணைகள் இடையூறாக இருந்தால் அந்த அரசாணையையும் தளர்த்தி நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட அந்தக் கோரிக்கையை மாண்புமிகு விவசாயிகளினுடைய நலன் கருதி அம்மா அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்று சொல்வார்கள். தட்ட தட்ட திறந்து கொண்டிருக்கின்ற அரசாக இருக்கக்கூடிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசிற்கு என்னுடைய புதுக்கோட்டை மாவட்ட மக்களுடைய சார்பிலே, விவசாயிகளுடைய சார்பிலே, மிகப் பணிவான நன்றியைத் தெரிவித்து அமைகின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

## (ஆ) வேட்டைக்காரன்புதூர் மற்றும் சேத்துமடை பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கலவி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. கோவை தங்கம்.



**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர், சேத்துமடை பள்ளிகளுக்குப் போதிய ஆசிரியர்கள் மற்றும் அடிப்படை வசதிகள் இல்லாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அறிக்கை

வேட்டைககாரன்புதூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு திட்டம் பகுதி VI–ன்மூலம் ஆய்வகம், கழிப்பிட வசதி மற்றும் குடிநீர் வசதி ஏற்படுத்த நபார்டு வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ள நிதியுதவி கோரும் கருத்துருக்கள் மீது வங்கியின் ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது.

சேத்துமடை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி 22–06–2005 முதல் உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது. இப்பள்ளியில் 6 ஆம் வகுப்பில் 84 பேரும், 7 ஆம் வகுப்பில் 99 பேரும், 8 ஆம் வகுப்பில் 86 பேரும், 9 ஆம் வகுப்பில் 56 பேரும் ஆக மொத்தம் 325 மாணவ, மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். 6, 7, 8 வகுப்புகளுக்கு ஏற்கெனவே கழிப்பிட வசதிகள் உள்ளன. 9 ஆம் வகுப்பிற்கு கழிப்பிட வசதிகள் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் ஏற்படுத்தபபட்டுள்ளது. கட்டட வசதி போதுமானதாக உள்ளது. மேற்படி பள்ளிகளுக்கு தடுப்புச்சுவர் சட்டமன்ற உறுப்பினர் / பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வேட்டைக்காரன்புதூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் காலியாக இருந்த முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் 2 (தாவரவியல் 1 மற்றும் விலங்கியல் 1) தமிழ் ஆசிரியர் பணியிடம் 1, ஆகிய மூன்று பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன. காலியாக உள்ள ஒரு இசை ஆசிரியர் மற்றும் ஒரு ஓவிய ஆசிரியர் பணியிடத்தினைப் பூர்த்தி செய்ய ஏதுவாக கோவை முதன்மைக் கல்வி அலுவலருக்கு அனுமதி வழங்கப்பட்டு, மேற்படி பணியிடம் வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் பெறப்படும் பட்டியலில் உள்ள மூத்த நபரால் விரைவில் பூர்த்தி செய்யப்படும்.

சேத்துமடை அரசினர் உயர்நிலைப் பள்ளியில் ஆனைமலை மகளிர் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் திருமதி எம். முத்துரத்தினம் பொறுப்புத் தலைமையாசிரியராக பணியாற்றி வருகிறார். விரைவில் முறையான தலைமையாசிரியர் நியமிக்கப்படுவார். 6, 7, 8 வகுப்புகளுக்கு ஏற்கெனவே பள்ளியில் பணியாற்றும் நான்கு இடைநிலை ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகின்றனர். உடனடி நடவடிக்கையாக ஆனைமலை அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 2 இடைநிலை ஆசிரியர்கள் – ஒருவர் வாரத்தில் இரு நாட்களும், மற்றொருவர் மூன்று நாட்களுக்கும் மாற்றுப் பணி மூலம் பணியாற்றி 9 ஆம் வகுப்புப் பாடங்களை கற்பிக்கின்றனர். தற்போது ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பட்டதாரி ஆசிரியர் (கணிதம்), பள்ளி உதவி ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும், கோவை மாவட்டம், பொள்ளாச்சி கல்வி மாவட்டம், வால்பாறை, சட்டப்பேரவைத் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் உள்ள உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள் தற்போது ஆசிரியர் தேர்வு வாரியத் தேர்வாளர்களைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். விவரம் அறிந்தேன். வால்பாறை சட்டமன்றத் தொகுதி தாழ்த்தப்பட்ட தொகுதி. இங்கு தாழ்த்தப்பட்ட மக்களும், தேயிலை தோட்டத் தொழிலாளர்கள், விவசாயப் பெருமக்கள், விவசாயக் கூலிகள் 99 சதவிகிதம் பேர்கள் வசிக்கிறார்கள். வால்பாறை தொகுதியிலுள்ள சேத்துமடை, வேட்டைக்காரன்புதூர் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு போதுமான ஆசிரியர்கள் மற்றும் அடிப்படை வசதிகள் இல்லை என்று பொதுமக்கள் கூறினார்கள். சென்ற மாதம்கூட நான் சேத்துமடையிலுள்ள உயர்நிலைப் பள்ளியில் எனது சட்டமன்ற நிதியில் கட்டிய கூடுதல் வகுப்பறைகளை திறந்து வைக்க சென்றிருந்தேன். அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளும், விவசாயக் கூலித் தொழிலாளர்களும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் சிறுபான்மை மக்களும் போதுமான ஆசிரியர்கள் இல்லை, கழிப்பிடம், குடிநீர், உட்கார்ந்து படிக்க bench-கள், பள்ளிக்குத் தடுப்புச் சுவர் இல்லை என்று கூறினார்கள். வால்பாறை சட்டமன்றத் தொகுதியிலுள்ள சேத்துமடை, வேட்டைக்காரன்புதூர் பள்ளிகளுக்கு கழிப்பிடம், குடிநீர், உட்கார்ந்து படிக்க bench-கள், பள்ளிக்குத் தடுப்புச்



சுவர் கட்டித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேட்டைக்காரன்புதூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு தற்போது நபார்டு வங்கியின்மூலம், ஆறாவது Phase மூலம் 24 வகுப்பறைகளும், ஓர் ஆய்வகமும், ஆறு கழிப்பறைகளும், குடிநீர் வசதியும்கொண்ட அந்தத் திட்டம் சேர்க்கப்பட்டு 99 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாயிலே மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. அந்தப் பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதுமட்டுமல்லாமல், வேட்டைக்காரன்புதூரில் இருக்கின்ற அரசு மேல்நிலைப் பள்ளிக்கு இருக்கின்ற ஆசிரியர் பணியிடங்களும்,—2 P.G. ஆசிரியர்கள், முதுநிலை ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு விட்டன; ஒரு தமிழ் ஆசிரியர் பணியிடமும் நிரப்பப்பட்டு விட்டது. இன்னும் இருக்கின்ற 2 ஆசிரியர் பணியிடங்கள், ஒன்று, இசை ஆசிரியர், இன்னொன்று ஓவிய ஆசிரியர்; அந்த இரண்டு ஆசிரியர் பணியிடங்களும் இன்றைக்கு அந்தப் பணியிடங்களை நிரப்பிக்கொள்வதற்கு முதன்மை கல்வி அலுவலருக்கு அனுமதி அளிக்கப்பட்டு, வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் பணி மூப்பின் அடிப்படையிலே அந்தப் பணி நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதுமட்டுமல்லாமல், சேத்துமடை அரசு நடுநிலைப் பள்ளி இந்த ஆண்டு உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றது. அந்தப் பள்ளிக்கு தற்போது தலைமை ஆசிரியர் இல்லாமல் இருந்தார். பொறுப்பு ஆசிரியர் இருந்திருந்தார். அதற்கும் இரண்டு நாட்களுக்கு முன்பு தலைமை ஆசிரியர் நியமிக்கப்பட்டுவிட்டார். அங்கு இருக்கின்ற ஒரு ஆசிரியர் பணியிடம், உதவி பட்டதாரி ஆசிரியர் பணிக்கு நியமனம் செய்யப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சேத்துமடை உயர்நிலைப் பள்ளிக்கு தேவையான கட்டட வசதிகள் இருக்கின்றன. அந்த கழிப்பறை வசதிகளை செய்து தருவதற்கும், கூடுதலான கட்டடங்களைக் கட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அதுமட்டுமல்லாமல், சேத்துமடை உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்ட வேண்டுமென்று கூறியிருக்கின்றார்கள். அதைச் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை சட்டமன்றக் கூட்டத் தொடரிலே வால்பாறை அரசு முடீஸ் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க வேண்டுமென்றும் சேத்துமடை இடைநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்க வேண்டுமென்றும் இந்த சட்டமன்றத்திலே நான் வேண்டுகோள் வைத்தேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் என் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு வால்பாறை அரசு உயர்நிலை முடீஸ் பள்ளியைத் தரம் உயர்த்தி மேல்நிலைப் பள்ளியாக்கியதற்கும் சேத்துமடை இடைநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கியதற்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல வால்பாறை அரசு மேல்நிலைப் பள்ளி, முடீஸ் அரசு மேல்நிலைப் பள்ளி, சின்கோனா, சோலையாறு அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, கோட்டூர் அரசு மேல்நிலைப் பள்ளி, செல்லமுத்து பெண்கள் உயர்நிலைப் பள்ளி இதுபோன்ற உயர்நிலைப் பள்ளிகளுக்குப் போதுமான ஆசிரியர்கள் இல்லை; கூடுதல் வகுப்பறைகள் இல்லை என்பதையும் மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து – மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறிது நேரத்திற்கு முன்பு சொன்னார்கள், மனமிருந்தால் மார்க்கம் இருக்குமென்று கூறினார்கள் – அதைப்போல தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கின்ற வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் வால்பாறைக்கு ஒரு கல்லூரியை அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மனமுவந்து முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே 2005–2006 ஆம் கல்வியாண்டு தொடக்கத்தில் 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் 179 பணியிடங்கள் காலியாக இருந்தன. இதில் செப்டம்பர் மாதத்தில் ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலம் தேர்வு செய்யப்பட்டு 99 இளநிலை பட்டதாரி ஆசிரியர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றது. மீதியிருக்கின்ற அந்த இடங்களும் இன்னும் ஓரிரு தினங்களில் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2006 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 119 மற்றும் 120–வது அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். திருமதி வளர்மதி ஜெபராஜ்.

***திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2006 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 60–வது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாயத் துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலே காங்கிரஸ் கட்சி எதிர்க்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறைக்கான இந்தச் சட்டமுன்வடிவை பாட்டாளி மக்கள் கட்சி அறிமுக நிலையிலேயே கடுமையாக எதிர்க்கிறது.





*திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அறிமுக நிலையிலேயே இதை நான் எதிர்க்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2001-லேயே தேர்தல் நடத்துவதாக அறிவிக்கப்பட்டதற்குப் பிறகு இன்னும் தேர்தல் நடத்தப்படாமல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கிறேன் என்று மட்டும் சொல்லுங்கள். மற்றதையெல்லாம் ஆய்வுக்கு வரும்போது பேச வேண்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தனி அதிகாரிகளுடைய காலத்தை நீட்டித்துச் செல்வதை நாங்கள் கடுமையாக ஆட்சேபித்து, இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதையே ஆட்சேபிக்கிறோம்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை ஆரம்பக் கட்டத்திலேயே நாங்கள் எதிர்க்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

பிற்பகல் 12-30

## (இ) தமிழ்நாடு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு ஆண்டு தமிழ்நாடு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

# 5. அறிவிப்புகள்

## (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 (ஆ.இ.)

**மாண்புமிகு போரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.





# 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

## (ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (உ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி ( திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.





**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஊ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசமைப்புச் சட்டப் பிரிவுகளுக்கும், அரசு ஊழியர்கள் தொடர்பான அடிப்படை விதிகளுக்கும் எதிரானதாக, அவசரச் சட்டம், அதற்கு மாற்றாக கொண்டுவரப்படும் இந்த சட்டமுன்வடிவு அமைந்து இருப்பதால், அதனை அறிமுக நிலையிலேயே காங்கிரஸ் கட்சி எதிர்க்கிறது.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அறிமுக நிலையிலேயே அந்தச் சட்டமுன்வடிவை எதிர்க்கிறோம்.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சித் திருத்த சட்டமுன்வடிவை பாட்டாளி மக்கள் கட்சி அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இச்சட்டத்தை எதிர்க்கிறது.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தின் வேர்களைப் பறிக்கக்கூடிய இந்த சட்டமுன்வடிவை ஆரம்பத்திலேயே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எதிர்க்கின்றோம்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே பாரதிய ஜனதா கட்சி எதிர்க்கிறது. (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (எ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே காங்கிரஸ் கட்சி எதிர்க்கிறது.



**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்தச் சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கின்றோம்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஊராட்சிகள் மூன்றாம் திருத்தச் சட்டமுன்வடிவை பாட்டாளி மக்கள் கட்சி அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறது.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையில் மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் எதிர்க்கிறோம்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுனவடிவை அறிமுக நிலையிலேயே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எதிர்க்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஏ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே நாங்கள் அதை எதிர்க்கிறோம்.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே அறிமுக நிலையில் எதிர்க்கிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தி.மு.க. ஆதரிக்கிறதா? (சிரிப்பு)

பிற்பகல் 12-35

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எதிர்க்கிறோம்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கிறது.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவு (திரும்பப் பெறுதல்)

### மதராஸ் பல்கலைக்கழகம் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (திரும்பப் பெறுதல்). 2005 ஆம் ஆண்டு மதராஸ் பல்கலைக்கழகம் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2005). மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"22-9-2005 ஆம் நாளன்று நிறைவேற்றப்பட்ட, 2005 ஆம் ஆண்டு மதராஸ் பல்கலைக்கழகம் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2005) திரும்பப்பெற அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைத் திரும்பப் பெறுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் விவாதத்திற்கெல்லாம் அனுமதி கிடையாது. (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** அமைச்சர் விதி 110-ன்கீழ் படித்திருந்தால்தான், கேள்வி கேட்க அனுமதி இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005-2006 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார்கள். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** Madras University பற்றி சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** Withdrawal பற்றி தானே? அதைப் பற்றிதான் நான் சொல்லப்போகிறேன்.

**திரு. துரைமுருகன்:** நீங்கள் வியாக்கியானம் பண்ணப் போகிறீர்களா?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** இல்லை. நீங்கள் வேண்டுமானால் கேள்வி கேளுங்கள். நான் பதில் சொல்கிறேன். நீங்கள் கேள்வி கேளுங்கள். நான் சொல்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** நாங்கள் ஒன்றும் கேள்வி கேட்கவில்லை. இதிலே நேற்று பூராவும் எதிர்க்கட்சிகள் எல்லாம் எடுத்தெடுத்து, பன்முறை எடுத்துச் சொல்லியும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனால்தான், இப்போது திரும்பப் பெறும்போது ஒரு நன்றி சொல்ல வேண்டாமா? என்ன எதிர்க்கட்சி நீங்கள்? அதற்குதான், முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்த University of Madras அல்லது சென்னைப் பல்கலைக்கழகம் என்ற பெயர் மாற்றத்தைப் பற்றி நீண்ட விவாதம் இங்கே நடைபெற்றது. இன்றைக்கு சில புதிய விவரங்கள் எனக்குக் கிடைத்திருக்கின்றன. மூன்று முக்கியமான விவரங்களை இந்த அவைக்குத் தெரிவிப்பது எனது கடமை என்று கருதுகின்றேன்.

முதலாவதாக, 1980 ஆம் ஆண்டில் இந்தப் பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அதன்படி ஆங்கிலத்தில்



University of Madras என்றும் தமிழில் சென்னைப் பல்கலைக்கழகம் என்றும் இந்தப் பல்கலைக்கழகம் அழைக்கப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. இந்தப் பழக்கம் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் நடைமுறையில் இருக்கிறது. ஆகவே 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி இந்தப் பல்கலைக்கழகத்தின் பெயர் ஆங்கிலத்தில் University of Madras என்றும், தமிழில் சென்னைப் பல்கலைக்கழகம் என்றும் இருந்து வருகிறது.

இரண்டாவதாக, இப்போது கிடைத்துள்ள தகவல்படி கல்கத்தா மாநகரத்தின் பெயரை கொல்கத்தா என்று மாற்றினார்கள். ஆனால், University of Calcutta என்ற பல்கலைக்கழகம் இன்றுவரை University of Calcutta என்ற பெயரிலேயே அழைக்கப்படுகிறது. கொல்கத்தா என்று மாற்றவில்லை. அதேநேரத்தில் பாம்பே என்று இருந்ததை, அந்த மாநகரத்தின் பெயரை மும்பை என்று மாற்றினார்கள். ஆனால், மும்பையில் University of Bombay என்ற பெயரை University of Mumbai என்று மாற்றியிருக்கிறார்கள். ஆகவே, இரண்டுக்கும் முன்மாதிரிகள் உள்ளன. University of Calcutta அதே பெயரில் அழைக்கப்படுகிறது. University of Bombay, University of Mumbai ஆகிவிட்டது.

*பிற்பகல் 12-40*

எல்லாவற்றையும்விட முக்கியமான தகவலை இப்போது நான் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். குறிப்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். எங்கள்மீது சுமத்திய குற்றச்சாட்டை அவர்களே செய்திருக்கிறார்கள். அதாவது ஒரு குற்றம் புரிந்ததாக எங்கள்மீது பழி சுமத்தினார்கள். ஆனால், நாங்கள் அதைச் செய்யவில்லை. மாறாக எதிர்க்கட்சி ஆட்சியில் இருந்தபோது அவர்களே அந்தக் குற்றத்தைச் செய்திருக்கிறார்கள். நேற்றையதினம் இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் தமிழில் இருக்கின்ற பெயரை ஆங்கிலப் பெயருக்கு மாற்றக்கூடாது என்று சொன்னார்கள். ஆனால், முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் Madras Medical College and Research Institute என்று இருந்ததை சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சென்னை என்று பெயர் மாற்றம் செய்தார்கள். அதன் பின்னர், மீண்டும் அவர்களாகவே அந்த முடிவை மாற்றிக்கொண்டு, 21-5-1999-ல் இதற்காகவே ஒரு அரசாணையை அவர்கள் வெளியிட்டு, தமிழில் இருந்த பெயரை மீண்டும் Madras Medical College and Research Institute, Chennai என்று அவர்களே அரசாணை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அரசாணையில் என்ன

கூறியிருக்கிறார்கள் என்றால், அதையும் நான் வாசித்துக் காண்பிக்கிறேன். "Government of Tamil Nadu, Abstract, Health and Family Welfare Department, G.O.Ms.No.215, Dated 21-5-1999. According to the City of Madras Alteration of Name Act, 1996, The City of Madras has been called as Chennai with effect from 30-9-1996 as notified in the Government Order 1st read above. In order to convert the Chennai Medical College as Deemed University, the Chennai Medical College was registered as a Society under the Tamil Nadu Society Registration Act, 1975 on 7-7-1997 under the name, Chennai Medical College and Research Institute. Since then the Chennai Medical College is called in English as Chennai Medical College and Research Institute, Chennai and in Tamil, as சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சென்னை. Chennai Medical College and Research Institute, Chennai is a premier Institution and has accredited International recognition. The Government have, therefore, reconsidered the question of restoring the name of the Institution particularly in English and they have decided to call the Institution in English as Madras Medical College and Research Institute, Chennai and in Tamil, as சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சென்னை. The Government issues Orders accordingly and direct that the change of name in English as well as in Tamil as mentioned in para 3 above shall come into effect from the date of issue of this Order."

இதிலிருந்து என்ன தெரிகிறது? நேற்றையதினம் குறிப்பாக தி.மு.க. உறுப்பினர்கள், தமிழில் இருக்கின்ற பெயரை மீண்டும் ஆங்கிலப் பெயராக மாற்றக்கூடாது; அப்படிச் செய்வதைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம் என்று நேற்று வெளிநடப்பும் செய்திருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், Madras Medical College என்றிருந்த ஆங்கிலப் பெயரை, Chennai Medical College என்று மாற்றி, மீண்டும் அவர்களாகவே மறு பரிசீலனை செய்து, அவர்களாகவே மீண்டும் அதற்காக ஓர் அரசாணையையும் பிறப்பித்து, தமிழில் இருந்த பெயரை மீண்டும் ஆங்கிலப் பெயராக மாற்றியிருக்கிறார்கள். இதைத்தான் கவனிக்க வேண்டும். ஆகவே, எங்களைப் பொறுத்தவரை நாங்கள் அதைச் செய்யவில்லை, University of Madras என்று ஏற்கெனவே இருந்தது அப்படியே இருக்கிறது. ஆனால், நீங்கள் ஆட்சியிலிருந்தபோது ஆங்கிலப் பெயரை தமிழாக மாற்றி, மீண்டும் தமிழ்ப் பெயரை ஆங்கிலப் பெயராக மாற்றியிருக்கிறீர்களே, அதை எப்படி நீங்கள் நியாயப்படுத்துகிறீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இதற்கும் முன்மாதிரி இருக்கிறது.





இன்றையதினம் இந்த Bill-ஐ withdraw செய்வதற்காக, வாபஸ் பெறுவதற்காக கொண்டுவரப்பட்ட அந்த Motion-ல் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால், ஆங்கிலத்திலும் பெயர் இருப்பதற்கும், தமிழிலும் பெயர் இருப்பதற்கும் முன்மாதிரி உள்ளது என்று கூறியிருக்கிறோம். அதற்கு வழிவகை உள்ளது என்று கூறியிருக்கிறோம். அதற்கு முன்மாதிரி அமைத்துக் கொடுத்ததே கடந்த தி.மு.க. அரசுதான். ஆகவே, அவர்களுடைய அரசாணையிலேயே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், ஆங்கிலத்தில் Madras Medical College and Research Institute, Chennai என்று இருக்கும்; தமிழில், சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சென்னை, என்று இருக்கும் என்று கூறியிருக்கிறார்கள். இதைப் பற்றிக் கூறுவதற்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு ஏதாவது விஷயம் இருக்கிறதா?

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை மருத்துவக் கல்லூரியினுடைய பெயரை மாற்றுவதைப் பற்றிச் சொல்லிவிட்டு, இதிலிருந்து என்ன தெரிகிறது என்று கேட்டார்கள். என்ன தெரிகிறது என்றால், ஒரு பெயரை ஆங்கிலத்திலிருந்து தமிழிலோ அல்லது தமிழிலேயிருந்து ஆங்கிலத்திலோ மாற்றுகிறபொழுது இவ்வளவு விவரமாக தி.மு.க. ஆட்சியிலே சொல்லப்பட்ட அவ்வளவு காரண காரியங்களோடு விளக்கமாக நீங்கள் நேற்று சொல்லியிருக்க வேண்டும்.

நேற்று அதைக் கேட்டேன் நான். அப்போதுகூட கேட்டேன், என்ன காரணம் என்று. நாங்கள் against அல்ல. சிண்டிகேட் காரண காரியங்களை விளக்கியிருந்தால் நாங்கள் சொல்கிறோம், சொல்லுங்கள் என்று கேட்டோம். அப்போது இதையெல்லாம் சொல்லவில்லை. ஆனால், இப்போதுகூட என்ன சொல்கிறார்கள் என்று கேட்டால், இவ்வளவு தெளிவாக இருக்கிறது என்று சொல்லிவிட்ட முதலமைச்சர் அவர்கள் இன்னும் சொல்கிறார்கள், இந்த அம்சங்களை மேலும் விரிவாக ஆய்வு செய்வதற்கு இன்னும் சற்றுக் கால அவகாசம் தேவை என்று. ஏன்? இன்றைக்குத்தான் முடிந்துபோயிற்றே? நாங்கள் D.M.K. செய்ததுமாதிரி மாற்றியமைத்தோம் என்று சொல்லி, முடிந்துபோய்விட்டது இல்லையா? இன்னும் எதற்கு கால அவகாசம்? இன்னும் இது என்ன? பழைய படத்திலே சொல்வார்கள், 'இது என்ன பீம்சிங் புதுக் குழப்பம்' என்று. அதேமாதிரி ஒரு புதுக் குழப்பத்தைக் கொண்டுவந்து கொடுத்திருக்கிறார்கள். ஆகையினாலே, எது எப்படியோ எதிர்க்கட்சிகளுக்கு ஒரு நாளைக்கு முன்னால் உதயம் ஆகிற ஞானோதயம், ஆளும் கட்சிக்கு ஒரு நாள் லேட்டாக உதிக்கிறது என்பது புரிகிறது.

பிற்பகல் 12-45

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ வேறு யாருக்கும் இல்லாத தமிழ் உணர்வு தங்களுக்குத்தான இருக்கிறது என்பதைப்போல [illegible] இங்கே தி.மு.க. உறுப்பினர்கள் பேசினார்கள். குறிப்பாக, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இங்கே பேசினார். இன்றைக்கு எங்கள்மீது அவர்கள் பழி சுமத்தப் பார்த்து, அதில் தோல்வி அடைந்து அந்தக் குற்றத்தை அவர்களே புரிந்திருக்கிறார்கள் என்பதை நிரூபித்த பிறகு, அதிலிருந்து நழுவுவதற்காக ஏதேதோ சொல்லி திசை திருப்பப் பார்க்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தமிழ் உணர்வு அந்த அளவுக்கு மேலோங்கி இருப்பவர்கள் ஓர் ஆங்கிலப் பெயரை தமிழாக மாற்றி மீண்டும் ஏன் தமிழ் பெயரை ஆங்கிலமாக மாற்றினீர்கள்?

**திரு. துரைமுருகன்:** அது மாற்றப்பட்டதற்குத்தான் விளக்கமான காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். (சிரிப்பு) ஆனால் நீங்கள் - நான் என்ன கேட்கிறேன் என்றால் — அப்படிப்பட்ட காரணங்களை நீங்கள் சொல்லியிருககிறீர்களா, இல்லை. ஆகையினால் அதைப்போல நீங்கள், அந்தக் காரணத்தை நீங்கள் உணர்ந்த காரணத்தால்தான் இன்றைக்கு Bill-ஐ வாபஸ் பெற்றிருக்கிறீர்கள். இரண்டாவது...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், தி.மு.க.வின் கொள்கை 'மாமியார் உடைத்தால் மண் குடம்; மருமகள் உடைத்தால் பொன் குடம்' (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். துணை நிதிநிலை அறிக்கை. (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அரசின் சார்பிலே இது நிலுவையிலே வைப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதேவேளையில், இதிலே சொல்லப்பட்டிருக்கிற கருத்து, திரும்பப் பெறுவதிலே சொல்லப்பட்டிருப்பது, ஆங்கிலத்தில் 'University of Madras' எனவும், தமிழில் 'சென்னைப் பல்கலைக்கழகம்' என்று பயன்படுத்திக்கொள்ளும் முறை ஒன்றினை ஏற்படுத்திக்கொள்ளும் வாய்ப்பும் உள்ளது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில் மாணவர்கள் அனைவரும் மதராஸ் என்ற பெயரே இருக்க வேண்டும் என்ற நிலை உள்ளதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. அதைப் பற்றி விரிவாக ஆராயும் நேரத்திலே பேசுங்கள் நீங்கள். அப்போது பேசுங்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லிவிடுகிறேன் நான் சொல்லி விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சான்று முதலாக பட்டம் வழங்குகின்றபோது—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அது பிரச்சினையே இல்லை. மறுபடியும் Bill வருகிறது. அப்போது பேசுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். துணை நிதிநிலை அறிக்கை (குறுக்கீடு) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடு) அம்மாவே சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) இருக்கிறது. இருக்கிறது. (குறுக்கீடு) அதனால்தான் இப்போது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படப் போவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, மறுபடியும் Bill வருகிறபோது பேசலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

## 7. கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2005–2006, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005-2006 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கின்றேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை@ இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் ரூபாய் 1919.25 கோடி நிதியினை ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில், ரூபாய் 1374.62 கோடி வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூபாய் 544.63 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

@. அறிக்கையில் கோரப்பட்ட மானியக் கோரிக்கைகள் 638-641 ஆம் பக்கங்களில் அச்சிடப்பெற்றுள்ளது.

2. 2005 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21 ஆம் நாளன்று கடந்த நிதியாண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகள் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணங்கள் பெற்று "புதுப்பணிகள்" குறித்து செய்யப்பட்ட செலவுகளுக்குச் சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறவும் எதிர்பாராச் செலவு நிதியை ஈடுசெய்யும் பொருட்டும், இந்தத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன. 2005–2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த பின்னர், தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக இவ்வரசு மேற்கொண்ட சில புதிய செலவுப் பொறுப்புகளுக்காக, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறும் பொருட்டும் இவை தாக்கல் செய்யப்படுகின்றன. மாநில வரி வருவாயில் ஏற்பட்ட உயர் வளர்ச்சி மற்றும் வருவாய்க் கணக்கில் செலவினங்களை சிறந்த முறையில் நிருவாகம் செய்தல் ஆகியவற்றின்மூலம் இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்ட கூடுதல் செலவு ஈடு செய்யப்படும்.

3. அரசு மற்றும் அரசு மானியம் பெறும் அனைத்து பள்ளிகளிலும், 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் ஏனைய வகுப்பினைச் சேர்ந்த அனைத்து மாணவர்களுக்கும், ரூபாய் 80.00 கோடி செலவில், இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை அரசு விரிவுபடுத்தியுள்ளது. இச்செலவுத் தொகையானது 'மானியக் கோரிக்கை எண் 4 – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை', 'மானியக் கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை' மற்றும் 'மானியக் கோரிக்கை எண் 41 – பள்ளிக் கல்வித் துறை' என்பவற்றின்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 12–50

4. குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதைக் கருத்திற்கொண்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு உதவித் தொகையாக ரூபாய் 200 கோடி கூடுதலாக வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இத்தொகை 'மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. கரும்பாலைகளுக்கு கரும்பை வழங்கும் விவசாயிகளுக்கு ஆதாயம் தரத்தக்க விலை கிடைக்கச் செய்யும் நோக்குடன், கரும்பிற்கு, மெட்ரிக் டன் ஒன்றுக்கு, மாநில அரசின் பரிந்துரை விலையை ரூபாய் 1,014/– ஆக நிர்ணயம் செய்யவும், 9 சதவீதம் என்ற சராசரி



சர்க்கரை கட்டுமானத்தைவிட அதிகமாக இருக்கும் ஒவ்வொரு 0.1 சதவீதத்திற்கும், மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.8.80 ஊக்கத் தொகை வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக, கூட்டுறவு மற்றும் பொதுத் துறையைச் சேர்ந்த சர்க்கரை ஆலைகளுக்கு வழிவகை முன்பணமாக ரூபாய் 75.27 கோடி 'மானியக் கோரிக்கை எண் 26 – தொழில் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

6. ரூபாய் 400.80 கோடி மொத்தச் செலவில் மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் உள்ள சாலைகளை வலுப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக அரசு, மாநகராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும், ரூபாய் 75 கோடி மானியம் அனுமதித்துள்ளது. இத்தொகை 'மானியக் கோரிக்கை எண் 33 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை' என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

7. மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதை உறுதி செய்வதற்காக, 'மானியக் கோரிக்கை எண் 35 – திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 250 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

8. ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஊரகப் பகுதிகளில் உள்ள சாலைகளை வலுப்படுத்துவதற்கு அரசு, கூடுதலாக ரூபாய் 400 கோடி அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 40 – ஊரக வளர்ச்சித் துறை' என்பதன்கீழ் ரூபாய் 115 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

9. அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் பயிலும் 12 ஆம் வகுப்பு வரையிலான அனைத்து மாணவர்களுக்கும் இலவச பாட புத்தகங்கள் வழங்கும் திட்டத்தை அரசு விரிவுபடுத்தியுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு, முதற்கண் ரூபாய் 50 கோடி அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 41 – பள்ளிக் கல்வித் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 23.52 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

10. நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு அளவில் தேயிலை பயிரிடுவோரின் பயனுக்காக சிறு தேயிலை பயிரிடுவோர் பாதுகாப்புத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு, ரூபாய் 28 கோடி அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூபாய் 20 கோடி வழங்கப்பட்டுள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 42 – சிறு தொழில்கள் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் ஒட்டுமொத்தத் தொகை ரூபாய் 28 கோடியும் சேர்க்கப்பட்டுள்ளது.

11. மாணவர்களுக்கு இலவச மற்றும் சலுகை விலையிலான பேருந்து பயணச் சீட்டுகளை வழங்குவதற்காக மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு கூடுதல் உதவித் தொகையாக ரூபாய் 108 கோடி 'மானியக் கோரிக்கை எண் 46 - போக்குவரத்துத் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

12. நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கும், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்புறுதி வளையம் ஒன்றை ஏற்படுத்தும் நோக்குடன், தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தை அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள், சிறு மற்றும் குறு விவசாயிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு கல்வி நிதியுதவி, திருமண நிதியுதவி, மகப்பேறு நிதியுதவி, முதியோர் ஓய்வூதியம், உறுப்பினர்கள் இறந்துபோகும் நேர்வில் நிவாரணம் அளித்தல் மற்றும் அவர்களின் ஈமச் சடங்குகளுக்கான செலவுகளை வழங்குதல ஆகியவற்றிற்கு நிதியுதவி அளிக்கப்படும். உரிய மானியக் கோரிக்கைகளில் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 100 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

13. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 2005-2006 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை, இம்மாமன்றம் ஏற்று, இசைவளிக்க வேண்டுகிறேன்.

(635 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

**2005-2006 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்—**

(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை | துறை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 5,00 | ... | ... |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 1,22,28 | ... | ... |
| 3 | நீதி நிருவாகம் | 2,20,23 | ... | ... |
| 4 | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 24,22,24 | ... | ... |



| கோரிக்கை | துறை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 5 | வேளாண்மைத் துறை | 6,31,03 | ... | ... |
| 6 | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை–கால்நடை பராமரிப்பு | 1,36,07 | 16,00,00 | ... |
| 7 | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் | 97,08 | 1,00,00 | ... |
| 8 | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை–பால்வளம் | 12,00,34 | ... | ... |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 58,35,27 | ... | ... |
| 10 | வணிக வரித் துறை–வணிக வரிகள் | 50,01 | ... | ... |
| 11 | வணிக வரித் துறை–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு | 50,00 | ... | ... |
| 12 | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 361,53,20 | 2,53,88 | 3,46,70 |
| | | 1 | ... | ... |
| 13 | எரிசக்தித் துறை | 1,04,63 | 7,20,00 | ... |
| 14 | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 25,00 | ... | ... |
| 15 | நிதித் துறை | | | |
| 16 | கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை–கைத்தறி மற்றும் துணி நூல் | 35,27,84 | 8,00,00 | 36,87,04 |
| 18 | மக்கள் நலவாழ்வு மற்றும் | 38,13,71 | 1,04,00 | ... |
| | குடும்ப நலத் துறை | 22,29,49 | ... | ... |
| 19 | உயர் கல்வித் துறை | 79,45 | 5,00,07 | ... |
| 20 | நெடுஞ்சாலைகள் துறை | 38 | 10,00,00 | ... |
| 21 | உள் துறை–காவல் | | | |

| கோரிக்கை | துறை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 22 | உள் துறை–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 23,69,02 | ... | ... |
| 23 | உள் துறை–சிறைச்சாலைகள் | 1 | 9,98,26 | ... |
| 24 | உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் | 12,90,00 | ... | ... |
| 25 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 17,07,86 | 5,00,00 | ... |
| 26 | தொழில் துறை | 37,00 | ... | 75,27,00 |
| 27 | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–செய்தி மற்றும் விளம்பரம் | 5,00 | ... | ... |
| 30 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 1 | ... | ... |
| 31 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 91,70 | 30,88 | ... |
| 32 | சட்டத் துறை | 1,10,00 | ... | ... |
| 33 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 78,32,01 | 9,00,00 | 117,75,00 |
| 35 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 250,09,36 | 63,00 | ... |
| 37 | பொதுத் துறை | 9,72,07 | ... | ... |
| 38 | பொதுப் பணித் துறை | 3,64,16 | 33,33,00 | ... |
| 39 | வருவாய்த் துறை | 80,47,22 | ... | ... |
| 40 | ஊரக வளர்ச்சித் துறை | 76,87,98 | 188,00,03 | ... |
| 41 | பள்ளிக் கல்வித் துறை | 33,08,69 | ... | ... |
| 42 | சிறு தொழில்கள் துறை | 28,72,80 | ... | 1,72,61 |
| 43 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 80,82,18 | ... | ... |



| | | | |
|---|---|---|---|
| தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு | 72,00 | ... | ... |
| போக்குவரத்துத் துறை | 108,00,00 | 10,00,00 | ... |
| இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 1,00,00 | ... | ... |
| பெருமொத்தம் | 1,374,62,33 | 307,03,12 | 235,08,35 |

## 5. அறிவிப்புகள்–தொடர்ச்சி

### கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2005-2006, வெட்டுத் தீர்மானங்கள் அளிப்பது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2005–2006 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படும் மானியக் கோரிக்கைகளின்மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் அவற்றைப் பேரவை விதி 190–ல் உள்ளவாறு 24–9–2005 சனிக்கிழமை மாலை 3–00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் சேர்ப்பிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 26–9–2005 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12–54 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

23. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை. [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) 16 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

21. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

14. 2004 ஆம் ஆண்டு வரிவிதிப்புத் தனித் தீர்ப்பாய (நீக்கறவுச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31/2004) 13-7-2005 முதல் செயலுக்கு வருவதாக அறிவித்து வணிக வரிகள் துறையின் 13-7-2005 ஆம் நாளிட்ட 82 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

15. பேரவை விதிகள் குழுவின் அறிக்கை. (2003–2006)

16. மனுக்கள் குழுவின் நூற்றுப் பத்தொன்பதாவது அறிக்கை. (2003–2006)

17. மனுக்கள் குழுவின் நூற்று இருபதாவது அறிக்கை. (2003–2006)

18. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஆறாவது அறிக்கை. (2003–2006)

19. 2005–2006 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினையொட்டி வரவுகள் மற்றும் செலவுகளின் நிலை குறித்த ஆய்வு (தமிழ், ஆங்கிலம்)

20. உடுக்குறியிடாத வினாக்கள் – விடைகள் பட்டியல் (நான்காம் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

21. உடுக்குறியிடாத வினாக்கள் – விடைகள் பட்டியல் (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை).

22. உடுக்குறியிடாத வினாக்கள் – விடைகள் பட்டியல் (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை).

3.84

❖❖❖❖

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
226999.
சென்னை-600 008